உ

கடவுள் துணை.

யூநாநி பதார்த்தகுண விளக்க

# சாரசங்கிரகம்.

இஃது.

ம-ா-ா-ஸ்ரீ,

ஹக்கிம் செய்யிது அப்துர்றகிமான் சாகிபு

அவர்களால்

பற்பல யூநாநி நூற்களைக்கொண்டும்

அச்சிட்ட பிரதிகளைக்கொண்டு இயற்றப்பட்டு,

காரைக்கால்

முகம்மதுசமதானி அச்சியந்திரசாலையிற்

பதிப்பித்த பிரதிக்கிணங்க


பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்

அவர்களால்,

சென்னை,

புவனேஸ்வரி அச்சுகூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1929.


இதன் விலை] [ரூபா 1-8.


T.4282

# அயக்காந்த திராவகம்

மித்திரர்களே இந்த அபூர்வமருந்தானது அநேக சோதனை [illegible] களை ஆச்சரியமாய் கண்டிக்கக்கூடியது இதை அனேக ஆயிர [illegible] கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர் வியாதி [illegible] வது கெட்ட சகவாசத்தினலாவது இளைத்துப்போயிருக்கும் [illegible] தைப்புஷ்டியாக்கி பலவிருத்தி தருவதில் இது நிகரற்ற மருந் [illegible] ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந் [illegible] பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும் இருமல் நோய்கண்டு அவ [illegible] படுபவர்கள் இதையுட்கொண்டால் இரண்டே வேளையில் ஆ [illegible] மான சுகத்தைய் அடைவார்கள் இதனால்தீரக்கூடிய அநேக வியாதிகளில் முக்கியமான சிலவற்றை இங்கே குறித்திருக்கிறோம்.

நரைத்த மயிரைக் கறுப்பாக்கும் உஷ்ணத்தினலாவது புழுவெ [illegible] டினலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும் நீர் வியாதிகள் தீரும் [illegible] ணெரிச்சல் கைகால் காந்தல் இவைதீரும் மூளைவிகாரத்தை [illegible] கும் தேக அசதியையோட்டும் ஜீரணசக்தியையும் நல்ல பசி [illegible] உண்டாக்கும் மனதை அதிக உற்சாகப்படுத்தும் நரம்புகளுக்கு [illegible] வலுவைத்தரும் தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும் [illegible] ரோகத்தை நீக்கும் க்ஷணத்தில் வாதபித்த சிலேத்துமத்தா [illegible] கும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்ததாதுக்களுக்கும் [illegible] தைத்தரும் மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் இவைதீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 20-நாள் [illegible] டால் இணையில்லாத ஆனந்தத்தைத் தரும் இழந்துபோன தேக [illegible] தைப் பழையபடியடைவதற்கு இதைவிட வேறு மருந்தே [illegible] 40-நாள் மருந்து உட்கொள்ளும் பக்ஷத்தில் வியாதி என்ப [illegible] மனிதனின் நிழலைக்கூட அணுகாது பத்தியமும் கிடையாது.

இந்த திராவகத்தை உட்கொள்ள வேண்டிய முறை அ [illegible] ஆழாக்கு சுத்த ஜலத்தில் திராவகத்தை 5-துளி அல்லது 7 துளி [illegible] விட்டுக் கலக்கிக்குடித்துவிட வேண்டும் பத்தியமேகிடையாது. [illegible] பற்றிய விவரங்கள் பார்சலோடு வைத்துவரும்.

| | |
|---|---|
| அரைமண்டலம் 20-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டி | 1 [illegible] |
| ஒருமண்டலம் 40-நாளைக்கு வரக்கூடிய ஒருபுட்டி | 2 [illegible] |

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, சென்னை.

உ

கடவுள் துணை. 4282.

# முகவுரை.

ஆதியாகிய கடவுள் சிருட்டித்த நெடியகடல்சூழ்ந்த உலகின்கண் மக்களுயிர் வாழ்க்கைக் கிடையூறியற்றும் பிணிக்குலங்களை நீக்கற பொருட் டென்னாட்டினும் வழங்கும் பாஷையினுண்டாகிய வயித்திய நூற்களையும் அவற்றிற்குத் துணைக்காரணமாகிய பதார்த்த குண லெக்கணங்கூறிய நூற்களையும் இப்பதார்த்தகுண விளக்கசாராசங்கிர த்தை வாசிப்போ ரறியவேண்டியது.

## யூநாநிவயித்தியசாரங்களின் வரலாறு.

கடவுள் முதன்மையில் மனிதனைப் படைக்கப்பட்ட ஆதமென் பருக்கு மருத்துவநூலில் சொல்லப்பட்ட ரோகங்க ளனைத்துநேரிட் டன. அப்போது அவ்வியாதிகட்கு ஆண்டவ னுபதேசிக்கப்பட்ட உரோக நிவாரணங்களை பரம்பரையாக வழங்கிவந்தன, அவைகளைத் திரட்டி முன்னுள்ள பண்டிதர்கள் யூநாநிபாஷையில் நூலாகச் செய்த னர் அதற்குப்பின் அந்த யூநாநிப்பாஷையிலுள்ள ஹக்கீம் பொருத் தென்னும் ஒருபண்டிதர் சரீரலட்சணம் ரோகநிதானம் நாடி முதலிய பரீக்ஷை வயித்தியகிரமம் முதலியவைகளைச் சேர்த்து மிகத்தெளிவாக வும் விரிவாகவும் ஒருநூற்செய்தனர். அந்நூலிக்காலத்து மிகச் சிறந்த தாகவே இருக்கின்றது. பின்பு ஹக்கீம் முதலிய பண்டிதர்கள் அநேக விஷயங்களைச் சேர்த்துப் புதிதாகச் சிலநூற் செய்தார்கள் ஹக்கீம் திஸ்கூரி தூஸ் என்னும் பண்டிதர் பதார்த்தகுண விளக்கசாஸ்திரத் தைச் செய்தனர், அதன்பின்பு ஹக்கிம்போலீஸ் என்பவர் கண்ணுக் குபயோகமான பதார்த்தங்களையும் சில வயித்தியங்களையுஞ் செய்த னர். இவ்வகையாக அனேகவயித்தியர்கள் பல விஷயங்களைச்சேர்த்துப் பலவகையான பதார்த்தகுண நூற்களைச்செய்தனர்கள். சமஸ்கிருத பாஷையிலிருந்த சில பதார்த்த குணங்களையும் பாரிசு பாஷையில் மொழி பெயர்த்தார்கள்.

## யூனானிவயித்திய சாத்திரப்பிரிவுகள்.

வயித்தியமென்பது வந்தநோயை நீக்கவும் இதனைக் குறைக்கவும் சௌக்கியத்தைக் கூடியவரையில் மறுபடியுண்டாக்கவும் ஏற்பட்டிருக்கின்ற விதியாகவிருக்கின்றது; அவ்வயித்தியம் (நஜரி) காட்சி அமலி சிகிச்சாக்கிரமம் (ஃகரபாதீன்) அவுஷதமுறையென மூன்றாகவகுக்கப்பட்டிருக்கின்றது, அவற்றுள் சரீரலட்சணம் நாடிப்பரீட்சை மூத்திரப்பரீட்சை முதலியவைகளைச் சொல்லுவது நஜரியென்றும் ரோகவிதனம் சிகிச்சாக்கிரமம் இவற்றைச் சொல்லுவது அமலியென்றும் அவுஷதமுறை அவற்றின் செய்பாக முதலியவைகளைச் சொல்லுவது ஃகராபாதீனென்றுஞ் சொல்லப்படும்.

## யூனானிவைத்திய விஷயங்கள்.

வயித்தியத்திற் கர்த்தாவாகியது (தபியத்) தேகசுபாவமாம் அது அசைவிற்கும் அமரிக்கைக்குங் காரணமாகிய மூலப்பொருளுதவியின்றித் தனக்குத்தானே தேகத்திற்குவருந் தீமையை நீக்கி நன்மையைத்தருவதற்குக் கருத்தாவாகிய சக்தியாம் அது [illegible] கருதி (அம்ஜஜா) குணம் (அஃலாத்) சத்து (அஹ்ராஜா) உறுப்பு [illegible] சக்தி (அர்வாஃ) ஆன்மா (அப்ஹான்) தொழில் என்னும் ஏழுகாரணத்தை யுடையதாகவிருக்கின்றது இத்துடன் (அஸ்னான்) வயது (அல்வான்) நிறம் (ஸஹனா) தேகப்பரிமாணம் (பாஃ) ஆண்பெண் என்னும் இரண்டையுங்கூட்டிப் பதினொன்றாகப் பின்னோர்களாற் சொல்லப்பட்டிருக்கின்றன அவற்றுள் அர்க்கான் என்பது சரீரத்திற்கு மூலகாரணமாயும் விரிவாயும் இலகுவாயுமிருக்கின்ற தேயுமுதலிய நான்குபூதங்களாம் அவற்றுள் தேயு அதி லகுவாயும் வாயு லகுவாயும் அப்புக்குருவாயும் பிருதிவி அதிகுருவாயுமிருப்பது காண்க, அம்ஜஜா என்பது பூதங்கள் நான்கின் குணங்களாகிய (ஹறாறத்) சூடு (புறூத்) குளிர்ச்சி றுதூபத் கொழுமை யுபூஸத் வறட்சியாகிய நான்குமாம்.

---

ஆகாயத்திற்கு உருவமில்லாமையாலும் எந்தப்பூதத்தோடு சேருகின்றதோ அதின் குணமேயல்லாது வேறுகுண மொன்றுமில்லாமையாலும் அதைப் பூதமன்றென வொழித்து நான்கு பூதமெனச் சொல்வது யூனானி சாஸ்திர சம்மதம்.

## முகவுரை.

அஃலாத் என்பது பக்குவாசயத்திற் சீரணித்த அன்னரசத்தினின்று
பிரிந்து திரவரூபத்தையுடைய ஃகூன் இரத்தம் ஷப்ரா பித்தம்
பய்கம் இரசம் அல்லது சிலேத்துமம், சவுதா வண்டல் அல்லது
வாயுமாகிய நான்கு சத்துக்களுமாம். அஹஜாவென்பது கைகால் முத
லிய வெளியுறுப்புக்களும் ஈரல் குடல் முதலிய உள்ளுறுப்புகளுமாம் அர்
வாஃஎன்பது றாஹே ஹைவாணி ஜீவான்மா றாஹெ நபாயி அல்
லது நபாத்தி தேகான்மா ரூஹே நப்ஷானி அறிவான்மாவாகிய
மூன்றான்மாக்களுமாம் குவாஎன்பது பார்க்குதல் கேட்குதல் உணர்
தல் முதலிய சத்திகளாம் அப்ஹால் என்பது ஆன்மாக்களின்தொழில்
களாம் இவ்வேழுங்கூடியதே தேகசுபாவமாம்.

## ஆன்மாக்களின் றொழில்கள்.

சரீரகுணத்தை நடத்தும் ஆன்மாக்கள் மூன்றில் றாஹே ஹை
வானி என்னுஞ் சீவான்மா இருதயத்தை இடமாகப்பொருந்தி நின்று
தேகவியக்கம் பகுத்தறிவுகோபம் பயம் சந்தோஷம் துக்கம் யூகை
இவைகளையுண்டாக்கும் றாஹே நபாயி அல்லது நபாத்தி என்னுந்
தேகான்மா ஈரலை யிடமாகப் பொருந்திநின்று தேகத்தைப் போஷிக்கும்
றாஹே நப்ஷானி என்னும்அறிவான்மா தலைமூளையிடமாகப் பொருந்தி
நின்று சிந்தித்தல் முதலிய உள்ளுணர்வுகளையும் பார்க்குதல் கேட்கு
தல் முதலிய வெளியுணர்வுகளையும் அறைவையும் உண்டாக்கும்
இவையே ஆன்மாக்களின் றொழில்களாம்,

## ஆன்மாவின் வரலாறு.

ஆன்மாவென்றுரைக்கின்றது உதிரத்தின் கொழுமையினின்
றெழுகின்ற ஆவியாகிய விருக்கின்றது அவ்வான்மாவின் சிகையே
அரூபதேகக்ஜி தேககூடாகவிருக்கின்றது ஆன்மா உண்டாவதற்கு
முதற்காரணமாகிய இரத்தத்திற்குந் தேகத்திற்குஞ் சம்பந்தத்தையுண்
டாகுவது றதூபத்தேஃகரீபி சிலேத்தும ரோகவிக்கிருன்றது ஆம்

மூன்றும் தேகத்தில் செய்திரி திசேர்ந்த விளக்கிற்கொப்பாக விருக்கின்றன, தீய்க்கும் நெய்க்குஞ் சம்பந்தத்தையுண்டாக்கிய திரியையொத்த சிலேத்துமம் ஏதிகப்படுவதால் இரத்தத்தின் கொழுமை குறைந்து அதனால் ஆன்மசத்திகுறைந்து அதனால் தேகபுஷ்டி குறைந்து சுகிர்க்கு நசிக்கும்.

## சரீரத்தை நடத்துகின்ற முதன்மைக்கருவிகளும் அவற்றின் செய்கைகளும்.

சரீரத்தின் உள்ளுறுப்புகளுள் ஜீவஸ்தானமாகிய இருதயகமலம் [திமகீ] தலைமூளை (உன்சயின்) குண்டிக்காய் இரண்டும் (அஹூ ஜர்மெறயின்ஸ்) இராசக்கருவிகளெனவும் இவற்றிற்கு முறையே (வரிதுக) புழுநரம்பு (வாரிஸ்) நாடிநரம்பு (அஹஷரப்) வெள்ளைநரம்பு (அஸப) சக்கிலநரம்பு இவ்வைந்தும் (ஃகாதிமேறயின்ஸ்) ஏவற்கருவிகளெனவும் (மேதா) இரப்பை (மஃசார்) துணைக்கருவியெனவும் சொல்லப்படும் இவற்றுள் துணைக்கருவியாகிய இரப்பையின் தொழிலாவது மலம் நீங்கிப்பக்குவமடைந்த அன்னரசத்தை சாலிழுத்து இரத்தமாக்கித் தனது ஏவற்கருவியாகி புழுநரம்புகளின் வழியாக உடலெங்குமேற்றிச் சரீரத்தை போஷிப்பதாயும் இருதயகமலந்தனது ஏவற்கருவியாகிய நாடிநரம்புகளின் வழியாக ஆன்மசத்தியை உடலெங்கும் பரவச்செய்து உயிர்ப்பிக்கிறதாயும் தலைமூளை தனது ஏவற்கருவியாகிய வெள்ளைநரம்புகளின் வழியாக உணர்வையுடலெங்கு நிறைத்து இயக்குவதாயும் குண்டிக்காய்கள் இரத்தத்தோடு கலந்து சாலிலுள்ள நீரைப் பிரிப்பதுமன்றித் தனது ஏவற்கருவியாகிய சுக்கில நரம்புகளின் வழியாக இரத்தத்தின் சத்துகளையிழுத்துப் பீசத்திற்சேர்த்து விந்துவைப் பெருக்கச்செய்கிறதாயு மிருக்கின்றன, ஆதலால் சாலின் றன்மையை மூத்திரத்தாலும் இருதயத்தின்மையை நாடியாலும் தலைமூளையின் றன்மையை யியக்கத்தாலும் இரப்பையின் றன்மையை மலத்தினாலு மறியவேண்டும், அசுவினிதேவர் ஆயுள்வேதத்திற் றெளிவாய்க் காட்டப்படும்.

## பதார்த்தகுணங்களின் வரலாறு.

பூவுலகத்தில் சிருட்டிக்குத் தோன்றுகின்ற தாதுமூல சீவப் பொருள்களாகிய பதார்த்தங்களனைத்தும் தேயுவாகியும் வாயுவாகியும் அப்புவாகியும் பிருதிவாகியுமியங்கும் நான்கு பூதங்களின் அமிதமே யாதலால் அப்பூதங்களுக்காதாரமாகிய சூடுகொழுமை குளிர்ச்சிவறட்சி ஆகிய நான்கையுமே சுபாவகுணமாகப் பெற்றிருக்குன்றன இதனைத் தனிக்குணமென்று சொல்லப்படும் ஆனல் சூட்டின் விகற்பமே வறட்சி யின் குளிர்ச்சியின் விகற்பமே கொழுமையுமாதலால் சூடு குளிர்ச்சி இரண்டுங் கருத்தாவும் வறட்சி கொழுமையிரண்டுஞ் செய்ப்படுப் பொருளுமாக விருப்பதால் தேரி சூட்டுடன் வறட்சியையும், வாயு சூட்டுடன் கொழுமையையும் அப்பு குளிர்ச்சியுடன ஈரத்தையும் பிரு திவு குளிர்ச்சியுடன் வறட்சியையும் பெற்றிருக்கின்றன போற் சகல பதார்த்தங்களும் ஒவ்வொரு பூதத்திற்குரிய இரண்டு குணங்களையே பெற்றிருக்கின்றனவாம், இவற்றைக்கூட்டு குணமெனச் சொல்லப்படும் இக்குணங்களி லொன்றுக்கொன்று றுயர்வுதாழ்வின்றிச் சமமாகப் பொருந்தியிருக்கிற சமரசகுணமென்று சொல்லப்படும் இக்குணங் களை யின்னூலுட் கண்டுகொள்க.

## பதார்த்தகுணங்களை யறியும்வகை.

பதார்த்த குணங்களை உரிசைகளாலும் வடிவங்களாலும் தன்மைக ளாலும் தெரியப்படும், அவைகள் வருமாறு—காரியபோளம் வாலேந் திரபோளம் போன்ற கசப்புகள் அதிகச்சூடும் வறட்சியுமென்று கடுகு மிளகு திப்பிலிபோன்ற காரங்களும் கல்லுப்பு இந்துப்புபோன்ற உவர்ப்புகளும் நல்லவெல்லம் காட்டுச்சக்கரை கருப்பஞ்சாறு கற் கண்டுசீனி மலைத்தேன்போன்ற தித்திப்புகளும் மேற்சொன்ன சூட்டி லும் வறட்சியிலும் ஒன்றுக்கொன்று கிரமாகக் குறைவென்றும் பேரீச் சம் பழம் கொடிமுந்திரிக்கைப்பழம் சீமையத்திப்பழம்போன்ற தித் திப்புகள் சூடுங்கொழுமையுமென்றும் திணம் அல்லதுநெய்யிணங்களை யொத்த இனிப்புகள் கொழுமையுஞ் சொற்பச்சூடுமென்றும் காடினலு மிச்சம்பழம் போன்ற புளிப்புகள் குளிர்ச்சியும் வறட்சியுமென்றும்

கடுக்காய் தான்றிக்காய் மாசிக்காய் கொட்டைப்பாக்கு களிப்பாக்குபோன்ற துவர்ப்புகள் மேற்சொல்லிய குளிர்ச்சியிலும் வறட்சியிலும் ஒன்றுக்கொன்று கிரமமாகக் குறைவென்றும் சுவையற்ற இலைப்புகள் குளிர்ச்சியும் ஈரமுமென்றும் அறிக, பதார்த்தங்களுள் அதிக சுவையையுடையது அதிககுணத்தை யுடையதென்றும் குறைந்தசுவையை யுடையது குறைந்த குணத்தை யுடையதென்று மறிக.

மாக்கள் கருப்பத்தைப்போல் நாட்டென்றழைக்கிற நெல்கேழ்வரகு முதலிய தானியங்கள் மனிதர்சரீரத்திற்குக் குளிர்ச்சியையும்பலத்தையுங் கொடுக்குமென்றும், சொற்பகாலில் விளைவது சூடுள்ளதென்றும், கற்களினங்கள் யாவும் அதிககொழுமையு மீரத்தோடு சொற்பச் சூட்டையும் ஆற்றலையுமுடையதென்றும், சீவராசிகளினத்துள் சமமாகிய சூடுகொழுமை குளிர்ச்சி வறட்சிகளையுடையதென்று மறிக

வெள்ளுள்ளி ஈருள்ளி சுக்கு மிஞ்சி சாரிகூன் இலைபோன்ற சல்லிவேர்களுடைய பூடுகள் கட்டிகொப்புளம் சிரங்கு புண் முதலியவைகளையாற்றுமென்றும் கர்பிஸ்போன்ற கிழங்குகளுள்ள வேர்கள் கட்டிகளை நீக்குமென்றும் சீமைத்துத்திபோன்ற வழுவழுப்புள்ள பூண்டுகளுங் கரிபபோளப் தாமிமஸ்தகிபோன்ற பிசின்களுங் வெக்காடுகளையும் புண்களையும் ஆற்றுமென்றும் பிரிவுள்ளதாயுங் கடினமாயுமிருக்கிற பூண்டுகள் இனவுசெறி படைகளை நீக்குமென்றும் செந்துக்கள் போன்ற பூண்டுகள் செந்துக்களின் விஷங்களை நீக்குமென்று மறிக, இதன்றி ஔஷதிகளில் வன்மையெல்லாம் பாதரசத்தாலும் மணமெல்லாம் கந்தகத்தாலும் சுவையெல்லாம் உப்பாலுமுண்டாகின்றதால் பாதரசம் கந்தகம் உப்பு இம்மூன்றில்லாத பூண்டுகளில்லை யென்றறிக. வன்மை முதலியதின் உயர்வு குறைவால் பாதரசமுதலிய இவ்வுயர்வு குறைவை யறிந்துகொள்க.

## பதார்த்தங்களின் முக்கியகுணங்கள்.

பதார்த்தங்களுக்குரிய இயல்பான குணங்களோடு காந்தமயத்தை யிழுப்பதுபோலும் சஹ்ருபா பொன்னம்மா துரும்பையிழுப்பது போலும் ஆகருடித்தல்—பாஷாணத்தைப்போல விஷமாதல்—பாலைப் போல் விஷமுறித்தல்—சேர்வாளத்தைப் போல் விரேசித்தல்

ங்கா மாசிக்காயைப்போல் விரோசனத்தைக் கட்டுதல்—தேத்தான் பழத்தைப்போல் வமனமாதல்—மயிற்பீலியைப்போல வமனத்தை நிறுத்தல்—அபீனி கஞ்சாவைப்போல் மயக்கமுண்டாதல்,—இவைபோன்ற விசேஷகுணங்களு மனேகபதார்த்தங்களுக் கிருக்கின்றன.

## பதார்த்தங்களின் பிரிவுகள்.

முன்சொன்ன இரண்டுவித குணங்களையுடைய சகலபதார்த்தங்களும் ஆகாரபதார்த்தம் அவுஷதபதார்த்தம் விஷபதார்த்தமென மூன்றாக வகுக்கப்படும் அவற்றுள் ஆகாரபதார்த்தங்கள் சுத்த ஆகாரம் அவுஷத ஆகாரமென விருவகையாகவும் விஷபதார்த்தங்கள் சுத்தவிஷம் அவுஷதவிஷமென விருவகையாகவும் வகுக்கப்படும் அவைகளுள் யாவன தேகசுபாவத்திற்கொத்து வேறு குணத்தைத்தராமல் விரோதமின்றிச் சீக்கிரத்திற் சீரணித்து நல்லுதிரமாகித் தேகத்தைப்போஷித்துச் சுகத்தைத்தருவதாகிய அரிசி கோதுமை முதலியவைபோன்ற ஆகாரத்திற்கே யுரிய பதார்த்தங்கள் சுத்த ஆகாரமாம். முன்சொன்ன குணங்களோடு சத்துக்களின் குற்றங்களை நீக்கிக் குணத்தைத்தரும் வெள்ளுள்ளி மணத்தக்காளிபோன்ற பெரும்பான்மை யாகாரத்திற்குஞ்சிறுபான்மை அவுஷதத்திற்கு முரிய பதார்த்தங்கள் அவுஷத ஆகாரமாம் தேகசுபாவத்தைத் தொவ்வாமல் அசுபாவசத்துக்களாலுண்டாகும் வியாதிகளைமாற்றிச் சுகத்தைத்தரும் திப்பிலி திப்பிலிமூலம் கோஷ்டம்போன்ற அவுஷதத்திற்கேயுரிய பதார்த்தங்கள் சுத்த அவுஷதமாம்—மேற்சொன்ன அவுஷதத்திற் குதவியாகிச் சுகத்தைக் கொடுக்கின்றவாற் கோதுமைபோன்ற பெரும்பான்மை அவுஷதத்திற்குஞ் சிறுபான்மை யாகாரத்திற்குமுரிய பாதார்த்தங்கள் ஆகார அவுஷதமாம்—சீரணிக்காமல் தேகசுபாவத்திற்கு விரோதமாகித்தீங்கு செய்வது அவுஷதவிஷமாம் இந்நூலுள் தேகத்தை யதிகமாகப் போஷித்து அதிகவலிமைதருவதை அதிகவுணவென்றும் சொற்பமாகப் போஷித்துச்சொற்ப வலிமைதருவதைக் குறைந்தவுணவென்றும்—சமரசமாக விருப்பதை மத்திம வுணவென்றுஞ் சொல்லியிருக்கின்றன.

## சுபாவச்சத்துகளின் வரலாறு.

உணவு பதார்த்தங்கள் நாமுதலியதுகளின் றொழிலால் மென்று விழுங்கப்பட்டு பக்குவாசயத்திற்சேர்ந்து உட்கருவிகளுக் கிரல்பாக விருக்கும் ஜாசிபா இழுத்தல், மாசிகா இருததல், ஹாஜிமா பதப்

படுத்தல், தாபியா வெளிப்படுத்தல், என்னு நான்குவிதசத்துகளா பக்குவமடைந்து அதிலுள்ள சக்கைமலமாகக் கழித்து பாலைப்போல வெளுத்த அன்னரசத்தை பல்கம் இரசமெனச் சொல்லப்படுகின்றது இதுவே சிலேத்துமநீராம் இது ஈரலிற்சென்று இதிலுள்ள சி நீரைக்குண்டிக்காய்களா விழுக்கப்பட்டபின்பு சிவந்து கொதித்து மேலே நுரைத்தகன்மஷத்தை ஸபார பித்தமென்றும் அடியிற்படிந்த கன்மஷத்தை ஸவுதா வண்டலென்றும் நடுவிற்றெளிந்த சென்னீரை ஃகூன் இரத்தமென்றுஞ் சொல்லப்படுகின்றன, இந்நான்கும் தபயி சுபாவச்சத்தெனப் பெயர்பெறும்

## ஆகாரபதார்த்தங்கள் உடலைப்போஷிக்கும் விதம்.

உண்டி பதார்த்தங்களா லுண்டாகிய சத்துக்களுள் இரத்தமே பிரதானமாம் இதுசிவந்து இனிப்பாய் நன்மணம் பொருந்தி வாயுவின் குணமாகிய சூடுங்கொழுமையையுங்கொண்டு ஈரலிற்றங்கி யிருதுதேகத்திற்சென்று எலும்பு நரம்பு தசைமுதலிய தாதுக்களைப் போஷித்து உயிருக்குறிதிதந்து விந்தூறச்செய்யும் பித்தம் மஞ்சள் நிறமாய்க் கசந்து வெடிப்புமணம் பொருந்தி தேயுவின் குணமாகிய சூடும் வறட்சியையுங்கொண்டு பித்துப்பையிற் றங்கியிருந்து நுரையீரலைப் போஷித்து இரத்தத்தை இளக்கி நரம்புத்தாரைகளிலேற்றி மலத்தை யிளக்கிவெளிப்படுத்தி ஆகாரத்தைப் பானஞ்செய்யும் இரசம் வெண்மையாய்ச் சுவையற்று வெள்ளாவிமணத்துடன் அப்பின் குணமாகிய குளிர்ச்சியையு மீரத்தையுங்கொண்டு துணைக்குக்கியிற் றங்கியிருந்து இரத்தமாகிய ஈரத்தையுமுண்டாக்கித் தலைமூளை வளர்த்துக் குடலிலுந் தீனிப்பையிலும் ஆமமாகி மதசலமாகும் வண்டல் கறுத்துப்புளிப்பையும் துவர்ப்பையும் பொருந்தி பிருதுவியின் குணமாகிய குளிர்ச்சியையும் வறட்சியையுங் கொண்டு மண்ணீரலிற் றங்கியிருந்து சிலிர்ப்பையுண்டாக்கும் இந்நான்கு சுபாவச்சத்துகளுந் தத்தஞ் சுபாவத்தன்மையில் மாறாதிருக்கும் பரியந்தஞ் சரீரத்திற்குச் சௌக்கியமாம்.

## அசுபாவச்சத்துகளின் வரலாறு.

முன்சொன்ன சுபாவச்சத்துகள் தத்தஞ் சுபாவத்தன்மையில் வேறுபடும்போது ஃகயர்தபயி அசுபாவச்சத்தெனப் பெயர்பெறும் அவற்றுள் தலைமைச்சத்தாகிய உதிரம் நான்குவிதமாயும் மற்ற மூன்று சத்துகளும் ஐந்துவிதமாயும் வேறுபடும் அவைவருமாறுஅதி

கரித்தல், தடித்தல், நீர்த்தல், அழுகல், இந்நான்கு மிரத்தத்ன்தி வேறுபாடம் நீர்த்தகொழுமை தடித்தகொழுமை வண்டல் நீர்த்த கொழுமையோடு கலந்தவண்டல்தடித்தகொழுமையோடு கலந்தவண்ட லிவைகளுடன் கலத்தலாகிய விவ்வைந்தும் பித்தத்தின் வேறு பாடாம் இரத்தத்துடன் கலந்தினிப்படைதல் வண்டலுடன் கலந்த பித்தத்துடன் கலந்து கரிப்படைத்தல் சூட்டுடன் கலந்து புளித்தல் வண்டலுடன் கலந்து துவர்ததல் குளிர்ச்சியுடன் கலந்து சுவைநீங்க லாகிய விவ்வைந்து மிரசத்தின் வேறுபாடாம் அதிகப்படல் இரத் ததோடு கலத்தல் இரசத்தோடுகலத்தல் பித்தத்தோடு கலத்தல் தீதல் இவ்வைந்தும் வண்டலின் வேறுபாடாம் இவ்வாறொன்றோ டொன்று சேருகின்ற வேறுபாட்டால் அளவிறந்த வியாதிகளுண்டா கின்றன.

## அவுஷதபதார்த்தங்களின் பயன்.

அவுஷதபதார்த்தங்கள் பக்குவாசயத்திற்சேர்ந்து ஆகாரபதார்த் தத்தைப்போலவே சுத்தரசவானபின்பு அசுபாவச்சத்துகளுடன் சேர் ந்து அவற்றின் வேறுபாடுகளை நீக்கிச் சுபாவத் தன்மையில் நிறுத்தி ரோகங்களைப் போக்கிச் சரீரத்திற்குச் சுகத்தைத்தரும்.

## பதார்த்தகிரகசம்பந்த விவரம்.

கடவுளதாணையால் உபக்கிரகங்களோடு கூடிய சத்தக்கிரகங்க ளின் குணத்திலுண்டான தேயமுதலிய நான்குபூதங்களின் சேர்க்கை யாலும் சுழலுகின்ற ஆகாயத்தினசைவாலும் பிரபஞ்சமூண்டாயின அவற்றுள் பாதரகம் கந்தகம் இவ்விரண்டினது கலப்பின் பரிமாணத் திற்கும் பரிசுத்தத்திற்கும் சத்தக்கிரகங்களின் பார்வைக்குந் தக்கபடி ஔஷதிகளனைத்து முண்டாயின மனிதசஞ்சார மில்லாத விடங்களில் ஔஷதிகளுண்டாகிறதற்கும் வித்தில்லாச்செடிகள் முளைப்பதற்கு மிது வேகாரணமாம் தேயுமுதலியநான்கு பூதங்களைப்போலவே சத்தக்கிர கங்களும் சூடு-குளிர்ச்சி—ஆகிய காரணகுணங்களையும் கொழுமை— வறட்சி ஆகிய காரியகுணங்களையும் பெற்றிருக்கின்றன கிரகங்களுள் சூரியன்—குரு—சனி-அங்காரன் இந்நான்குஞ் சிறந்தனவாம் இவற்றுட் சிறந்தது சூரியனும் இவையொழிந்து நின்ற சுக்கிரன்-புதன்—சந்திரன் இம்மூன்றும் முறையே குரு-சனி-சூரியன்-இம்மூன்றிற்குந் தாழ்வாயு மிருக்கின்றன—சனி-உயிரைப்போக்குந் தன்மையையும், குரு-இரட் சிக்குந்தன்மையையும் அங்காரகன் யுகமுடிக்குந் தன்மையையும் சூரி

யன் ஞானத்தைத்தருந் தன்மையையும் பெற்றிருக்கின்றன—கிரகங்களனைத்தும் நன்னிலையி லிருகையில் நன்மையையுந் தீநிலையிலிருக்கையில் தீமையையுமேதரும்—விஷமுறிவாயும் நன்மையைத தருவதாயுமிருக்கின்ற பதார்த்தங்கள் சுபக்கிரகங்களைச் சார்ந்ததாயும் விஷமாயுந் தீமையைத்தருவதாயு மிருக்கிறபதார்த்தங்கள் அசுபக்கிரகங்களைச் சார்ந்ததாயுமிருக்கின்றன. மித்துருக் கிரகங்களுக்குச் சம்பந்தப்பட்ட பதார்த்தங்கள் ஒன்றுக்கொன்று மித்துருவாகவும் சத்துருக்கிரகங்களுக்குச் சம்பந்தப்பட்ட பதார்த்தங்கள் ஒன்றுக்கொன்று சத்துருவாகவுமே யிருக்கின்றன, உதாரணம் பாதரசம் பொன் வெள்ளியோடும்-காந்தம்-யிரும்போடும் - கஹருபா-திரணத்-தோடும்-உறவாதல் போல் மித்துருவாகவும் - குருந்தக்கல் - வச்சிரக்கல் - முதலிய—கற்களையும் - இரும்பையும் - அறுத்துத் – தேய்ப்பது போலும் – நெருப்பு எல்லாவற்றையுமெரித்து நீறுக்குவதுபோலும்—கந்தகம் எல்லாவற்றையுங் கருக்கி நீறுக்குவதுபோலும்—வெங்காரம் பொன்னை யுருக்குவதுபோலும் செம்பு காந்தத்தை யுறக்குவது போலும் வெண்வங்கம் மணலையுருக்குவது போலும்—சத்துருவாகவு மிருப்பதுகாண்க—நற்கிரகங்களைச் சார்ந்த பதார்த்தங்கள் நன்மையையுந் தீக்கிரகங்களைச் சார்ந்த பதார்த்தங்கள் தீமையையுந்தரும் உதாரணம் நவச்சாரந் தேகத்திலாழ்ந்திருக்கின்ற மாசுகளை யகற்றுவதுபோலும் பூரே அம்மணிஎன்னுமொருவித சவுட்டுமண் படிக்காரம் உப்பு இவைகள்உலோகங்களின் களிம்பகற்றிக் காந்தியைததருவதுபோலும் காரியம்பொன்னையும் பாதரசம் சகலலோகங்களையும் கெடுப்பதுபோலும் காடிதேனை முறிப்பதுபோலுமாம்—எல்லாப் பதார்த்தங்களு மொவ்வொரு கிரகத்தைச் சார்ந்தேயிருந்தாலும் சிலபதார்த்தங்கள் அவற்றின் குணங்களாலிரண்டு கிரகங்களைக்சார்ந்து மிருக்கின்றன உதாரணம் வெங்காயம் தீட்சணியசூட்டைப்பெற்றிருப்பதால் அங்காரகனையும் கொழுமையைப் பெற்றிருப்பதால் சுக்கிரனையும் அபினி குளிர்ச்சியால்சனியையும்

---

யூனானி பண்டித சாஸ்திரத்தில் சுவாமியானவர் உயிரைப் போக்கல் இரட்சித்தல் - யுகமுடித்தல் - ஞானந்தருதல் என்னும் நான்கு தொழில்களையும் - இஜாராயீல் - மீகாயீல் - இஜாராபீல் - ஜிபுரில்-என்னும் நான்கு தேவதூதர்களால் நடத்துகிறதாகச் சொல்லப்படுகின்ற அந்நால்வரும் சனி-குரு-செவ்வா-சூரியன் ஆகிய நான்கு கிரகங்களே யென்று சோதிட சாஸ்திரத்திற் சொல்லப்படுகின்றன.

வறட்சியால் புதனையுஞ்சார்ந்திருப்பதுபோல்—பெருக்கஞ் செடிகொடி முதலிய ஒவ்வோரினமு மொவ்வொரு கிரகத்திற்கே சம்பந்தப்பட்டிருந்தாலும் வேர் இலை பூ பட்டை-பழம்—விரை-முள்-நிறம்-குணம்-உருவம் முதலிய பேதங்களால் பலகிரகங்களுக்குச் சம்மந்தப்பட்டிருக்கின்றன, கிரகங்கள் நட்பாச்சி யுச்சத்தானத்திலிருந்து சுபக் கிரகங்களின் சம்பந்த முநோக்கும் பெற்றுச் சுபச்சமயத்திலிருக்கும்போது அவற்றிற்குரிய பதார்த்தங்களைக் கிரகித்துப் பிரயோகிக்கில் ரோமங்களை லவிர்த்திசெய்து நன்மையைத்தரும் அவ்வாறின்றி பகை நீசத்தானத்திலிருந்து பாபக்கிரக சம்பந்தமுநோக்கும்பெற்று அதிசாரவக்கிரத்தம்பன மிடங்களிலிருக்கும்போது கிரிகித்துப் பிரயோகித்தால் ரோகங்களையும் நிவர்த்தி செய்யாமல் தீமையையுந்தரும் ஆனல் அவ்வாறு செய்வதற்கு அவகாச மில்லாதசமயங்களி லவைகளைப் பார்க்கவேண்டுவதவசியமன்று எந்தரோகத்திற்கு எந்தகிரகமுரியதோ அந்தக்கிரகத்திற்குரிய பதார்த்தங்களையே கொடுத்து நிவர்த்திசெய்ய வேண்டும் சத்தக்கிரக சம்மந்தம் பதார்த்தக்குறிகள் வருமாறு:—

முதலாவது—சீறுயூத்தல் - சாம்பல்நிறம் - கருமை - முள்-காறல் வெருட்டல்-துற்கந்தம்-இவைகளை யுடையதாயும் கடினபூமியி லுண்டாகிறதாயு மிருக்கிற பதார்த்தங்கள் சனிக்குச் சம்மந்தப்பட்டதாம், இவைபிலீகத்திலுண்டாகிற ரோகங்களனைத்தையுந் தீர்க்கும்.

உ-வது—சிவு-நண்மணம் - நற்சுவை - சிவந்த - அல்லது, ஆகாய நிறமானபூ சமனுனஇல்லை - இவைகளையுடையதாயும், கொழுமையான நல்லபூமியிலுண்டாகிறதாயு மிருக்கிற பதார்த்தங்கள் குருவிற்குச் சம்பந்தப்பட்டதாம் இவை ஈரலைப்பற்றிய ரோகங்களை நீக்கும் இரத்தத்தைச்சுத்திசெய்யும் காயம் இரணம்புண் முதலியவைகளையாற்றும்.

ங-வது—சென்னிறம் கடினம் முள்-வேகச்செய்தல்-இவைகளையுடையதாயும் வரண்டபூமியிலுண்டாகிறதாயு மிருக்கிறபதார்த்தங்கள் செவ்வாய்க்குச் சம்பந்தப்பட்டதாம், இவைபித்த ரசத்தைப்பற்றிய ரோகங்களை நீக்கும்.

ச-வது—அதிக வாசனை அதிகருசி சிவந்த பூசிவந்தயிலை இவைகளையுடையதாயும் மறைவில்லாத வெளிகளிலுண்டாகிறதவாயு மிருக்கிற பதார்த்தங்கள் சூரியனுக்குச் சம்மந்தப்பட்டதாம் இவை ஆன்மாவை வளர்க்கும் தலை இருதயம் கண் இவைகளைப்பற்றிய ரோகங்களை நீக்கும்.

ரு-வது—இனிப்பு நன்மணம் - மிருதுவான பூயிலே இவைகளை யுடையதாயும் நல்லபூமியிலுண்டாகிறதாயு மிருக்கிற பதார்த்தங்கள் சுக்கிரனுக்குச் சம்பந்தப்பட்டதாம், இவைசி ணசத்தியை விருத்தி செய்யும் ஸ்ரீகளின்ரோகங்களேயும் கருப்பாயாசம் பெண்குறி ஆண்குறி குளிர்ச்சி கொழுமை இவைகளைப்பற்றிய ரோகங்களையு-நிவர்த்தி செய்யும் சுக்கிலம் நிணம் தசை இவைகளைப் போஷிக்கும்.

சு-வது—தடித்த இலை வெண்மை சுவையில்லாமை யிருது வழு வழுப்பு சாறுள்ளதன்மை இவைகளையுடையதாயும் ஈரபூமியிலும் சலத்திலுமுண்டாகிறதாயுமிருக்கிற பதார்த்தங்கள் சந்திரனுக்குச் சம்பந்தப்பட்டதாம், இவைபிடரி கை கண் இவைகளைப்பற்றிய ரோகங்களை நீக்கும்

எ-வது—இலேசத்துவம் அணுத்துவம் கலந்தசுவை கலந்த நிறம் கருமைகலந்த மஞ்சள் புகைநிறம் இவைகளையுடையதாயும்மணற்பாங்கான பூமியிலுண்டாகிறதாயு மிருக்கிற பதார்த்தங்கள்புதனுக்குச் சம்பந்தப்பட்டதாம்,இவை- நா-கண்-மூக்கு இவைகளைப்பற்றியரோகங்களை யொழிக்கும் நரம்புகளை வலிமைதரும்.

☞ யூநானிவயித்திய சாஸ்திர விஷயங்களை யிதுவரையிலொருவருமித்தேச பாஷைகளில் மொழிபெயர்க்காமையால் அவைகளை யித்தேசத்தாரியாவரு மெளிதிலுணரும் பொருட்டுத்தமிழில் மொழிபெயர்க்கத்தொடங்கி அவற்றுள் பதார்த்தகுணமானது வயித்தியசாஸ்திரங்களுள முக்கியமானதாயும் யாவருமறிய வேண்டியதாயும் பதார்த்தங்களின் குணங்களை மாத்திரமேயன்றி யவற்றின் பிரயோகங்களையுஞ் சொல்வதால் குடும்பவயித்திய சாத்ரமாயு மிருப்பதாலிதனை முன்னர் வெளிபிடக்கருதி மகாசனம் பொருந்தியமகா இராணியவர்களின் ஆதிபத்தியத்திற்குட்பட்ட இந்து தேசத்திற்தனவானுகிய திருநெல்வேலி ஜில்லா சேர்மாதேவியிலிருக்கும் கனம் பொருந்திய ஹக்கீம் செய்யிதுமதாறுசன் சாயபு அவர்களின் குமாரரும் ஹீந்துபாஷையில் வல்லவரும் வயித்திய நூல்களில் பயிற்சியுள்ளவருமாகிய செய்யது அப்துர்றகிமான் சாகிபவர்களால் பாரிகபாஷையில் செய்யப்பட்டிருக்கின்றதொஃகுபதுல்மூமீன் மஃஜனே அதுவியா முதலிய சிறந்த

பதார்த்தகுண நூல்களை யாராய்ந்து ஒருவாறாகத்தொகுத்து ஆகார பதார்த்தம் அவுழ்தபதார்த்தமென இருவகையாகவகுத்து அத்துடன் சிகிச்சாக்கிரமங்களையும் அவுஷ்த முறைகளையும் சேர்த்துத் தமிழில் மொழி பெயர்த்து வசனரூபமாகச்செய்து பதார்த்தகுண சாரசங்கிர மெனப்பெயரீய்ந்து பிழைபறப்பரிசோதித்து அச்சிற் பதிப்பித்தனர்.

பதார்த்தங்களி னிரசத்திற்குத்தக்க விரத்தமும் இரத்தகுணத் திற்குத்தக்க சரீராரோக்கியம் அறிவு, ஆயுள், சந்தானமுமுண்டாகு மென பண்டிதசாஸ்திரங்களிற் கூறுகின்றமையால் வயித்திய சாஸ் திரப் பயிர்ச்சியும அனுபவமு முள்ளவர்களைப்பார்க்கிலும் பதார்த்த குணங்களையும் அப்பதார்த்தங்களின் பிரயோகங்களையும் சந்தேகவிப ரீதமற எளிதிற்றெரிவிக்கும் இந்நூலை யுணர்ந்து நடப்பவர்கள் மேற் சொல்லிய பிரயோசனத்தை யடைவார்களென்று அறிவாளிகளியாவ ரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

முகவுரை - முற்றிற்று.



## சனி சம்மந்தங்கள்,

அதிக குளிர்ச்சி வறட்சி-வண்டல் - வலதுசெவி-தோல்-சத்தப் புலன்-மயிர்-நகம்-கொம்பு-மண்ணீரல்-மலம்-சலம்-கால்-விரல்களி லுண் டாகு மிசிவு உள்ளூறுப்புகளி லுண்டாகும வியாதிகள் காரியம்-குளிர்ச்சி வறட்சி கொடுமைபொருந்திப புற்பூண்டுகள் விரைகள் தென்னமரம் கமுகமரம் ஆமணக்குஞ்செடி மிலகு புளி மாதுளம்பழம் ஆளிவிரை கடுக்காய் மாசிக்காய் கருமையான செந்துக்கள் எலி பெருச்சாளி போன்ற வளைகளிலிருக்குஞ் செந்துக்கள் பூநாகம் பூரான்போன்ற ஊர்வனங்கள் மாடு ஆடு-பூனைபோன்ற வீடுகளில் வாழுஞ்செந்துகள் மனிதர் சலத்தில்வாழும் பறவைகள் கோழி புறு போன்ற வீட்டில்வாழும் பறவைகள் தலையில்லாக்குருவி கருங்காலி நிலவிளா கருவேல் சுக்கான்கீரை குமுசானியோமம் நொச்சிலி புளி ஊமத்தை நெருஞ்சில் கொடி முந்திரிகைப்பழம் தினை இலந்தைப் பழம் இரத்தினபோளம் குதிரைவாலி ஜெபித்தாணெண்ணெய் கோரைக் கிழங்கு நெல்லிக்காய் சூரத்துநிலாவரைத் துளசி சந்தனம் தேங்காய் தாளிசப்பத்திரி மூங்கிலுப்பு பேரீச்சம் பழம் வாழைப் பழம்--முளைக்கீரை மாங்காய் மணத்தக்காளி காளான் கொட்டப் டாக்கு அச்மோதம் பருத்தி மூங்கில் கர்ப்பூரம் கொத்துமல்லி நீலக் கல் இவைமுதலியவைகள் சனிக்குச் சம்மந்தப்பட்டனவாம்.

## குருசம்பந்தங்கள்.

சமரசமான சூடு குளிர்ச்சி பரிசுத்தம் விரத்தம் விந்துதலைமூளை இரத்தத்தாரை எலும்பின் மூளை ஈரல் தினிப்பை குடல் அன்னவாரி தொண்டை இடதுசெவி பரிசப்புலன் வெள்ளீயம் நாகம் வச்சிர நிமிளை கந்தகம் தாளகம் நற்கந்தமு மழருமுள்ளபூ இலைஇலந்தைமரம் தித்திப்பு மாதுளம்பழம் கடலை எள் புறு கவுதாரி மயில் கோழிதானி யங்களைப்புசிக்கு பட்சிகள் வெள்ளைச்சாமந்தி பேரீச்சம்பழம் கும டிப்பழம் தாம்பூலம் ஆப்பிலிபழம் காராட்டுக்கிழங்கு சாரப்பருப் வெந்தியம் கோதுமை சாலான்மிசரி சரக்கொன்றைப்புளி பேரத்தை ரேவல்சீனி திராட்சிப்பழம் நறுவிலிப்பழம் சர்க்கரை எருக்கிலையில் சுனை செம்முள்ளங்கி ஷகாகுல்மிசரி கருவேலம்பிசின் கொடிமுந்தி கைப்பழம் மணத்தக்காளிஇலந்தைப்பழம் பிஸ்தாக்கொட்டை வெள் கரும்பு லவங்கம் செம்பருத்தி கற்கண்டு பூமிச்சருக்கரை கிழங் தாழம்பூ தாழம்வேர் கோவிக்கீரை - பட்டாணி வாதுமைப்பருப்பு

காரமணி - பவழம்-மாலேந்திரபோளம் - தேங்காய் - சிறுநாகப்பூ-ஊசி மல்லி-ரோசாப்பூ-ஆளிவிரை இவை முதலியவைகள் குருவிற்குச் சம்பந்தப்பட்டனவாம்.

## செவ்வாய்ச் சம்பந்தங்கள்.

அதிகச்சூடு - வரட்சி சூட்டைப் பற்றிய பித்தம் பித்துப்பை பீசம் நீர்த்தாரை ஊத்தாம்பிள்ளை வலதுகாசி கந்தப்புலன் சுரம் காமாலை கருப்பச்சின்னம் பீசசம் பெரும்பாடு மூலம் இரூலம் செம்பு காந்தம் சாதிலிங்கம் வெள்ளுள்ளி வெங்காயம் கடுகு மிளகுபோன்ற காரமான வஸ்துக்கள் நெடியுள்ள பூண்டுகள் சேங்கொட்டை மரம் முட்செடிகள் கள்ளியைப்போல பாலுள்ளமரங்கள் கசப்பு வாதுமைக் கொட்டை காப்பிக்கொட்டை புலி கழுதைக்குறத்தி கோனாய் பன்றி பாம்பு முதலிய துஷ்ட செந்துக்கள் சிவந்தபட்சிகள் குளவிகள் முள்ளி வெள்ளைக்குங்கிலியம் வாய்விளங்கம் சேராங்கொட்டை போஜி தான்மிசரி நிறுவிஷம் சீமைச்சிவதைவேர் சாதிக்காய் காக்கட்டான் விரை காட்டுப்புதினா சாயம் ஆற்றுத்துமட்டிக்காய் எட்டிகொட்டை கடுகுரோகணி சிற்றரத்தை ஏலம் திப்பிலி தேட்கொடிக்கிலை அலரி நேபாளம் தேவதாரி பெருஞ்சீரகம் குங்குமப்பூ சுக்கு லவங்கபத்திரி சதாபிலை கோரைக்கிழங்கு பெருலவங்கப்பட்டை கருஞ்சீரகம்சித்திர மூலம் அக்காரகம் காட்டு வெங்காயம் முள்ளங்கி திப்பலிமூலம் மஞ்சிட்டி புதினா லவங்கம் சோஷ்டம் சீரகம் ஓமம் வசம்பு மருவு மருக் கொழுந்து இவைகள் செவ்வாய்க்குச் சம்பந்தப்பட்டனவாம்.

## சூரிய சம்பந்தங்கள்.

சமரசமான - சூடு வரட்சி பித்தம் ஆன்மசூடுதலைமூளை நரம்பு முதுகுப்புயம் தலை மார்பு இருதயம் நுரையீரல் வாய்பற்கள் விலாஎலும்புப் புஜம் வலதுகண் பிதத்தையும் உதிரத்தையும் பற்றியவியாதிகள் பச்சைசெம்பு முதலியவிரத்தினங்கள் தங்கம் இராசவர்த்திக்கல் கந்தகம் பளிங்கு கண்ணாடி சர்க்கரை கரும்பு முதலிய மதுரவஸ்துக்கள் தென்னமரம் கமுகமரம் பேரீச்சமரங்கள் போன்ற, உயர்வையும் உயர்ந்தபின்பு உபயோகப்படுங் காய்களையுமுடைய மரங்கள் கொடி மாதுளம்பழம் சீமை அத்திப்பழம் கொடி முந்திரிக்கைப்பழம் மலாம் பழம் நவதானியம் கோதுமை வெந்தியம் குதிரை ஆடு முதலை நாகம் வரிப்புலி நிலக்கடம்பு உஸ்த்துதூஸ் காட்டுத்துளசி கொச்சில் சால

மிசரி சாதிக்காய் காட்டாத்தி சாரைபருப்பு ஆமணக்கு லவங்கப் பட்டை பேரத்தை ரேவல்சீனி கிச்சிலிக்கிழங்கு தாளிசப்பத்திரி குங்குமப்பூ சதாபிலை சூரத்துகிலாவரை சபாமாஞ்சில் நறுவிலிக்காய் சதகுப்பை தொட்டாற்சுருங்கி கற்றாழை சாம்பிராணி மருக்கொழுந்தின் விரை மஞ்சள் அகிற்கட்டை ஏலக்காய் குசும்பாவிரை நில வேம்பு வெள்ளைக்குங்கிலியம் வாள்மிளகு கொட்டைக்கரந்தை குங்கிலியம் அரிதரிக்கம் கோவை வெட்பாலையரிசி நாரத்தம்பழம் பிஸ்த்தாக்கொட்டை இவை முதலியவைகள் சூரியனுக்குச் சம்பந்தப்பட்டனவாம்,

## சுக்கிர சம்பந்தங்கள்.

சமரகுளிர்ச்சியும் - ஈரமும் இரசதாது நிணம் சுக்கிலம் கருப்பாயாசம் ஆண்குறி நாசித்துளை நீர்த்தாரைகள் சொற்பக்கொழுப்பையுங் குளிர்ச்சியையும் பற்றியவியாதிகள், முத்து மாந்தாளிப்பச்சை புஷ்பராகம் கெம்பு அஞ்சனக்கல் கிமிளை தைலமுள்ள வித்துக்கள் மதுரமும் பலநிறமும் முட்களுமுள்ள மரங்கள் பஞ்சுகளுற்பவிக்கின்ற மரங்கள் வாசனையுள்ளமரங்கள் சீமை அத்திப்பழம் பேரீச்சம்பழம் கொடி முந்திரிகைப்பழம் கோதுமை வெந்தியம் மஞ்சள் அல்லது வெள்ளை நிறத்தையும் குளம்பையுமுடைய மிருகங்கள் காட்டுப்புறா தானியங்களைத் தின்னும் பட்சிகள் சரத்தில் வாழும்பட்சிகள் ஆமணக்கு சாலாமிசரி தாமரைப்பூ வெள்ளைரோசாப்பூ இவை முதலியன சுக்கிரனுக்குச் சம்பந்தப்பட்டனவாம.

## புத சம்பந்தங்கள்.

அதிக வாட்சி குளிர்ச்சி கலந்தவரட்சி இரசங்கலந்த வண்டல் நரம்பு பரிசப்புலன் நாவு - கண்கள் - காது - நாசி - இன்பம் சொற்ப குளிர்ச்சியையும் வரட்சியையும் பற்றியவியாதிகள் பாதரசம் அரிதாரம் சுண்ணம்பு சஹருபா இலைகள் தேவதாரு அகில் சந்தன முதலிய வாசனையுள்ள மரங்கள் மொச்சை பெரும்பயறு உளுந்து [illegible] ஷாவீரா கொத்துமல்லி நாய் குள்ளநரி முசல் சலத்திலும் [illegible] லுஞ் சஞ்சரிக்கிறதும் சிறுவாலையுடையதுமான செந்துக்கள் கிளி நாகணவாய்ப்புள் முதலிய பேசக்கற்றுக்கொள்ளும் பறவைகள் இர[illegible] நிறங்களையுள்ள இறகுகளிற் சித்திரங்களையுமுடைய பட்சிகள் [illegible] ளைச்சாமந்திப்பூ சாதிக்காய் சுணைப்புல் வெள்ளைச்சாட்டரணை இ[illegible] முதலியன புதனுக்குச் சம்பந்தப்பட்டனவாம்.

## சந்திரசம்பந்தங்கள்.

குளிர்ச்சி ஈரம் சிலேத்துமம் தோல் மயிர் நகம் இடதுபக்கம் பிடரி சால் இடதுகண் இரசத்தையுங் கொழுமையையும் குளிர்ச்சியையும் பற்றிய வியாதிகள் முத்து பளிங்கு வெள்ளி கண்ணடி வெள்ளைகற்கள் சுரை பூசணி பீர்க்கு வெள்ளரி முதலிய பூமியிற் படர்கின்ற கொடிகள் தித்திப்புகள் மாதுளை வாதுமைபோன்ற அதிககிளைகளையுடைய சிறுமரங்கள் கோதுமை தினை சுரைக்காய் கல்யாண பூசனிக்காய் வெள்ளரிக்காய் முதலிய கொடிகளிற் காய்க்குங்காய்கள் மாடு ஆடு ஒட்டை முதலிய மனிதரோடு வாழுமிருகங்கள் வாத்துநாரை கொக்கு முதலிய ஜலத்தில் வாழும் பறவைகள் மொச்சக்கொட்டை இஸ்பேரஹோல் விரை வெங்காயம் கோழிக்கீரை மூலாம்பழம் குலேபனப்பிளான் முள்ளுவெள்ளரிக்காய் தாமரை காசினிவிரை இவைமுதலியன சந்திரனுக்குச் சம்பந்தப்பட்டனவாம்.

சத்தக்கிரக சம்பந்த விஷய விபரம் முற்றிற்று.

---

## நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளுக்கும் எளிதிலுணரும்படியான

## மணிக்கடை நூல்.

மணிக்கடைக்குமேல் நான்கு விரல்தள்ளிக் கைசுற்றளவை கயிற்றினலளந்து கண்டநீளம் அவரவர் கையினல் பத்துவிரற்கடையிருந்தாலுடல் வெதும்பும் வாயுவினல் நெஞ்சு கால் கையிற்குத்தும் உளையும் வயிற்றில் வாயுத்திரட்சியுங் குன்மமுமுண்டாம்

ஒன்பதே முக்காலுக்கு அரையாப்புப் பிளவை வரட்சி யிருமலுண்டாகும்.

ஒன்பதரைக்கு உடல்வெதும்பி வீங்கும் சூடுண்டாகும் விழிகாந்தலுட்சுரம் மேகமுண்டாகும் அன்னத்தைத்தள்ளும்.

ஒன்பதேகாலுக்கு விழிகாந்தும் நீர்க்கடுத்து சிறுத்திறங்கும் நித்திரவராது பீனிசமுண்டாம்

ஒன்பதுக்கு செவிமந்தமாயுங் கண்புகைச்சலாயுமிருக்கும் குருக்காயு இறங்கிவலிக்கும் இருதுடையும் அயரும்நடக்க வொட்

எட்டேமுக்காலுக்கு - உடல்காயும, சில விஷத்தால் குட்டம் போலுண்டாகும், மூலவாய்வினுல் வயிறுபொருமும் கணகாசமும் பீனிசமுமுண்டாம்,

எட்டரைக்கு தேகவெதுப்பு வெட்டை கிரந்தி குஷ்டம் சொரி குடல் வாதம் தாது நஷடமுண்டாம்

எட்டே காலுக்கு உடல் பெருத்து வலித்துளேயுந் தலைவரட்சி வலி பீனிசம் வியர்வை விஷத்தினல் இளைப்பிருமலுண்டாகும.

எட்டுக்கு - மேககாங்கை வயிற்றில் மந்தம் பொருமல் வாயுத்திரட்சியுண்டாகும் அன்னத்தை ஒருக்குஞ் சுகமிராது வேற்றுடற்படும்.

ஏழேமுக்காலுக்கு- மூலமெழும்பிக் கைகால் காந்தும் தலைபிடிக்கும் மனம் திகைக்கும் இரண்டு வருடத்திற் கண்டமாலை நாட்செல்லச்செல்ல நாசியிலிரத்தமுண்டாம்

ஏழரைக்கு – எலும்புருக்கி மேகம் வயிற்றுப்பொருமல் கண்ணெரிவு ஆறுநாளில் உடம்பிற் காந்தல் கால் கை சந்துளைவு விப்புருதி யுண்டாம்.

ஏழேகாலுக்கு - இடுப்பில் வாய்வு குத்துவலி பிடிப்பு சிரசிற்பித்தம் கண்வலி பாண்டுசோகை கைகால் காந்தல் அதிக நித்திரையுண்டாகும்.

ஏழுக்கு–பித்தஞ் சிரசிலேறும் வாயினுலிரத்தம் விழும் க்ஷயம் கால்கைகாந்தல் சிலந்தி புண்ணுண்டாம் உஷ்ணமிகும் மலங்கீயும்.

ஆறேமுக்காலுக்கு-அண்டவாயு கண்வலி மயக்கம் மூன்று வருடத்தில் நீரடைப்பு கல்லடைப்பு கைகால் காந்தல் வலியுளைவு முகத்தில் வியர்வைபுண்டாம்

ஆறரைக்கு - உடலில் வெதுப்பு குத்தல் தாகம் அன்னத்துவேஷம் சூடு வாதமுண்டாம்-

ஆறேகாலுக்கு - மூலக்கிராணி புளித்தேப்பம் சத்தி துடைவாழையுண்டாம் அறைசோறு போற்கழியும்.

ஆறுக்கு - இளைப்பும் நெற்சிற்கபமுமுண்டாம் இருபது நாளில் மாணம்,

ஐந்தேமுக்கால் முதல் நான்கு விரற்கடை வரையில் தேக கண்டபிணிகள் மீறி ஜீவன்பிரியும.

மணிக்கடை நூல் முற்றிற்று.

———

உ

கடவுள் துணை.

யூநாநி பதார்த்தகுண விளக்க

# சாரசங்கிரகம்.

## காப்பு-விருத்தம்.

சீர்பூத்தபதார்த்தகுண சாரசங்கிரகந்தனைத்தெண்டிரைநீர்சூழும்
பார்பூத்தமனுக்குலங்களினிதுவக்கவண்டமிழாற்பகருதற்கு [பொ
பேர்பூத்தமுத்தொழிலும்எண்குணமுமுடையவொரு பெருமான்செம்
னேர்பூத்தகஞ்சமலர்த்தாளிணையைக் கரங்கூப்பியிறைஞ்சவாமே.

உலகத்திலே ஆசியாகண்டத்திலுள்ள யவனதேசத்துப் பூர்விக பண்டிதர்களால் பயின்ற நூல்களையும் ஆராய்ந்து அருமையாகச் செய்யப்பட்டிருக்கிற யூநாநி வைத்திய சாஸ்திரங்களில் முக்கியமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறபடியே மனிதர்க ளெல்லாருக்கும் எக்காலத்தும் பலவழியிலும் உபயோகப்பட்டுவருகிற சகல பதார்த்தங்களுடைய பல குணங்களையும் தெளிவுறப் பிரகாசிப்பித்தலால் இந்நூலிற்குப் பதார்த்தகுண விளக்க சாரசங்கிரகப் பெயராயிற்று.

கண்ணினுற் காணப்பட்டவை களெல்லாம் பதார்த்தமாயினும் ...பொதுப்பட ஆகார ஔஷத பதார்த்தங்களென்றே சொல்லத் ...ாகும்.

...தார்த்தங்கள்—ஆகாரபதார்த்தம் ஔஷதபதார்த்தம் என இரு ...ாகப் பிரித்து ஆகாரபதார்த்தங்களுள் ஒவ்வொன்றும் ஐவகைக் ...களையுடையதாகவும், ஔஷதபதார்த்தங்களுள் ஒவ்வொன்றும் ...கைக் குணங்களை யுடைதாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன.

## ஆகாரபதார்த்தங்களின்

## ஐவகைக் குணங்களாவன.

க - வது சுபாவம் - அல்லது - தன்மை.
உ - வது சௌக்கியம் - அல்லது - பயன்.
ங - வது சௌக்கியம் - அல்லது - நன்மை.
ச - வது வியாதி - அல்லது - தீமை.
ரு - வது பரிகாரம் - அல்லது - மாற்று-என்பனவாம்.

# முதலாவது

---

## ஆகாரபதார்த்தங்கள்

### சம்பாபச்சையரிசிச் சாதம்.

(சுபாவம்) சூடு கொழுமையுமாம் பிரயோசனம் சுத்த இரத்தத்தை யுண்டாக்கும், அதிகவுணவாம் சௌக்கியம் தேகந்தழைக்கும் அழகு கொடுக்கும், ஜீரணமாகும், தாதுவிர்த்தியாகும் வியாதி சூடற்கட்டு உண்டாகும், குளிர்ந்ததேகத்துக்கு வாயு அதிகரிக்கும் பரிகாரம் தவிடுபோகக்கழுவிச் சலத்தில் நன்றாய் ஊறவைத்துத் தண்ணீர் போக்கவேண்டும்

### மார்ப்பச்சை யரிசிச்சாதம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பித்தம் அசுத்த இரத்தத்தை யுண்டாக்கும் அதிகவுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் வி-தி-வயிறு ணைக்கும் மந்திக்கும், மலத்தைக்கட்டும், வயிற்றில் வாயு அதிகரிக்கும் ப-ம் மிளகும் சீரகமும்.

### புழுங்கலரிசிச் சாதம்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அற்ப இரத்தந்தை ...க்கும் குறைந்தவுணவாம் சௌ-ம் பலஹீனருக்கும் குட் ...ல்லாதவர்களுக்கும் நோயாளிகளுக்கும் சிறு குழந்தை ...க்கும். வி-தி தேகபுஷ்டி குறைந்துபோம் ப-ம் ஆவின் ...ர்ம்சமுமாம்.

## கிச்சிடிச்சாதம்.

(சு-ம்) சூடும் கொழுமையுமாம். பி-ம் சுத்த இரத்தத்தை யுண்டாக்கும் அதிகவுணவாம் சௌ-ம் தேகவலியுண்டாகும் தேகத்தடிப்பும் தாதுவிர்த்தியும் அதிகரிக்கும், தொழில் செய்பவருக்கும் குதிரை முதலியசவாரிக்காருக்கும் மிகவும் ஒத்துக்கொள்ளும் இதில் மாமிசம் சேர்த்துச் சமைத்தால் தேகந்தழைப்பும் கொழுமையும் உண்டாகும். வி-தி பலஹீனருக்கு மந்திக்கும். ப-ம் புதீனாதுவையல் அல்லது சீரகமுமாம்.

## புலவுச் சாதம்.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் சுத்த இரத்தத்தை யுண்டாக்கும், அதிகவுணவாம் சௌ-ம் குடலுக்கு வலிவு உண்டாகும், தேகத்தழைப்பும் தாதுவிர்த்தியும் அதிகரிக்கும், போகிகளுக்கும் தாதுநஷ்டப்பட்டவர்களுக்கு அலைச்சலாயிருக்கும், குண்டிகாய்க்கும் இருதயகலமத்துக்கும் வலிவுண்டாகித் தைரியமுமுண்டாகும், வி-தி தலைநோய் மயக்கம் தாகம் இவைகளுண்டாகும் ப-ம் எலுமிச்சம்பழச்சாற்றை வெந்நீரில்விட்டு சருக்கரை கலந்து குடிக்கவும்.

## பசுவின்பாற்சாதம்.

(சும்) சூடும் கொழுமையுமாம் பி-ம் சுத்த இரத்தத்தை யுண்டாக்கும், அதிகவுணவாம் சௌ-ம் மார்புக்கும் நுரையீரலுக்கும் வலிமை கொடுக்கும். மார்பின் புண்ணை யாற்றும் இருமலை நீக்கும் வி-தி சீதள தேகத்திற்கு நீர் அதிகரிக்கும் ப-ம் சருக்கரை அதிகமாகச் சேர்த்துக்கொள்ளவும்,

## பசுவின்தயிர்ச்சாதம்.

(சு-ம்) குளிர்ச்சியும் ஈரமுமாம பி-ம் உதிரத்தில் நீரையேற்றி அதினோட்டத்தைக் குறைப்பதன்றி மயிர்க்கால்களில் அடைந்து தேக வெப்பத்தை வெளிபடவொட்டாமல் தடைபண்ணும் அசுத்த உணவாம் சௌ-ம் தாகத்தையடக்கும், சூட்டையகற்றும், தேகஎரிவைச் சாந்திபண்ணும் தயிர் புளிப்பேறியிருந்தாற் சீக்கிரத்திற் சீரணமாகும். வி-தி சீதளசுரம் வயிற்றிற்களிம்பு உண்டாகும் தலைவலி உண்டாகும் ப-ம் வெங்காயம்

## மோர்ச்சாதம்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் உதிரத்தின் சூட்டைப் பற்றிய பித்தத்தின் கொதிப்பைத்தணித்து தேக எரிவையும் போக்கும், அதிக வுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் கண்களிருளும்,

பித்தமயக்கம் போகும் தாகம் அடங்கும் களைதீரும் சூட்டுடம்புக்கு அனுகூலமாம் உதிர சுரம் உதிரம் அதிகரித்துத் தலைவலிகாணல் இவைகளைமாற்றும் வி-தி நீரிழிவு உண்டாகும் கர்ப்பிணிகளுக்கும் குழந்தைகளுக்கும் நோயைச்செய்யும்ப-ம் இநம்மைச்சிவக்கக் காய்ச்சி நன்றாய்த்தோய்த்து முறிக்கவும் இதுபசுவின்மோர் எருமைமோர் வெள்ளாட்டுமோர் ஒட்டையின்மோர் இவைகளுக்குண்டாகிய குணமாம்.

# ரொட்டிவகை.

## கோதுமைமாவின்ரொட்டி.

(சு-ம்) சூடும் கொழுமையுமாம் பி-ம் சுத்த இரத்தத்தை யுண்டாக்கும், அதிகவுஷ்ணமாம் சௌ-ம் தேகந்தழைக்கும் ஜீரணமாகும் தாதுவிர்த்தியாகும், வி-தி குண்டிக்காயில் கல்லுண்டாகும், வாயு அதிகரிக்கும்.

## பழையரொட்டி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த இரத்தத்தை யுண்டாக்கும், குறைந்தவுணவாம் சௌ-ம் ஜீரணமாம் வி-தி உதிரத்திலுள்ள கொழுமையை வறளச்செய்யும், சூடு அதிகரிக்கும் வயிற்றில் வலியுண்டாகும் ப-ம் நெய்யுஞ் சருக்கரையுமாம்.

## கோதுமைத்தவிட்டின்ரொட்டி,

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் கறுத்த உதிரம் உண்டாகும், அதிக உழைப்பாளிகளுக் கொத்துவரும் ஜீரணமாம் வி-தி சூட்டிகரிக்கும் வரட்சியுண்டாம் மலம் அதிகரிக்கும் சத்துக்குறையும், தினவுண்டாகும் வயிற்றில் வலிகாணும் ப-ம் நெய்யுஞ் சருக்கரையுமாம்.

## கோதுமைப்புளித்தரொட்டி

(சு-ம்) சூடும் கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சுத்த உதிரத்தை யுண்டாக்கும் சௌ-ம தேகந்தழைக்கும் கொழுமை அதிகரிக்கும், சத்து அதிகரித்து பலக்குறையும் விரைவில் ஜீரணமாம், வி-தி சூட்டுடம்புக்குச் சூடதிகரிக்கும், ப-ம் வெண்ணெய் அல்லது

## கோதுமை நொய்ரொட்டி.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சுத்த இரத்தத்தையுண்டாக்கும், தேகந்தழைக்கும், தீபனமுண்டாகும், வி-தி அற்பச் சூட்டைக் கொடுக்கும், ப-ம் வாதுமைப்பருப்பும் பாலுஞ் சேர்ந்தபாயசம்.

## நாட்டுக் கோதுமைரொட்டி.

(சு—ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் அதிகவுணவாம் சௌ-ம் சூட்டுடம்புக்கு அநுகூல மாயிருக்கும், அழலைமாற்றும், தாகமடக்கும் வி-தி வயிறுகனக்கும் வயற்றில் வலியுண்டாகும், வாயு அதிகரிக்கும், ப-ம் மாம்சத்திற் கூட்டிச்சாப்பிடவும்.

## அரிசிமாவின் ரொட்டி.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம், பி-ம் குறைந்தவுணவாம், சௌ-ம் உழைப்பாளிகளுக்கு அநுகூலமாயிருக்கும் வி-தி வயிறு கனக்கும் திமிருண்டாம், நெஞ்சுகரிக்கும் மந்திக்கும் வயிறுவலிக்கும் களிம்புகட்டும், வாயு அதிகரிக்கும் ப-ம் புதினாவும் சீரகமுமாம்.

## கடலைமாவின் ரொட்டி.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம், பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும், வலிவு வுண்டாகும், தாதுவிர்த்தியதிகரிக்கும், தேக வலிமை யுடையவர்களுக்கு அநுகூலமாயிருக்கும், வி-தி மந்திக்கும் குடலிற் காற்று அதிகரிக்கும் ஈரல் வலிமை குறையும் ப-ம் கொழுப்புர சேர்த்துச் சமைக்க வேண்டியது.

## உளுந்துமாவின் ரொட்டி.

(சு-ம்) குளிர்ச்சியுமாம் சிலிர்ப்புமாம், பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் சேகந்தழைக்கும் வலிவுண்டாகும், தாதுவிர்த்தி யதிகரிக்கும், குண்டிக்காய்க்கு வலிவைக் கொடுக்கும் வி-தி மந்திக்கும் வயிறு உப்புசும் காற்றுண்டாகும் ப-ம் புதினா சீரகம் இஞ்சி.

## சோளமாவின் ரொட்டி.

(சு-ம்) அற்பச் சூடும் அதிகவறட்சியுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் வலியுண்டாகும் தாதுவிர்த்தி அதிகரிக்கும், குளிர்ந்ததேகத்துக்கு அநுகூலமாம், குண்டிக்காய்க்கு வலிவுகொடுக்கும் வி-தி தினவுண்டாகும் மந்திக்கும், ப-ம் பால் அல்லது வெண்ணெய்.

## கம்புமாவின் ரொட்டி.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த உணவாம். சௌ-ம் தேகங்குளிரும், வி-தி சத்துக்குறைந்து மலம் அதிகரிக்கும் மந்தப்படும் திமிர் மயக்கம் அதிகரிக்கும் தலை பாரிக்கும் நீர் அதிகரிக்கும் அசதியுண்டாகும் ப-ம் புதினா துவையல்.

## கேழ்வரகு ரொட்டி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் வலிவு உண்டாகும், பசித்தீபனமாகும் வி-தி தேகத்தில் வறட்சி அதிகரிக்கும் சூடுண்டாகும் மூலசுரத்தை அதிகரிக்கச் செய்யும் ப-ம் நெய் வெண்ணெய்.

---

# தானிய வகை.

## கோதுமை.

(சு-ம்) சூடுங் கொழுமையும் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் வலிவுண்டாகும் தாதுவிர்த்தியதிகரிக்கும் ஆத்மாவின் அனலை அதிகரிக்கச்செய்யும் பசித்தீபனம் உண்டாகும் அழகுகொடுக்கும் இரசத்தைப் பற்றிய ரோகங்களைக்கண்டிக்கும், தேகந்தழைக்கும் வி-தி வயிற்றில் கட்டுண்டாம் வயிறுவலிக்கும் கருப்பையை சுருங்கச் செய்கிறகுணமிருப்பதால் மந்தம் பிரசவத்துக்கு வழக்கமாய்க் கொடுப்பதுண்டு பிரசவ வேதனை கண்டிருக்கிற பெண்களுக்குக் கொடுத்தால் கொஞ்சமாயிருக்கிற நோயை அதிகப்படுத்தி சீக்கிரத்தில் வெளிப்படுத்திவிடும் மாதர்கள் பிரசவவேதனைப்படும்போது கருப்பைக்குப்பலமில்லாமல் மெதுவில் சுருங்கிக்கொண்டு சண்டிநோயுடன் வருத்தப்படுகிற வேளையில் இதைக்கொடுக்க வேண்டியது கருப்பையைச் சுருங்கச் செய்து ரத்தபிரவாகத்தை நிறுத்த இதைக்கொடுக்க வேண்டியது ப-ம் உப்புங் காடியும்.

## நாட்டுக் கோதுமை.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியும் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் சூட்டையடக்கும் தேகந்தழைக்கும், குடலுக்கு வலிவு உண்டாகும், பேதியைக்கட்டும், வி-தி வாதவுடம்புக்கு மலச்சிக்கலுண்டாகும், நீர்த்தாரையின் வலிவைக் குறைக்கும், ப-ம் ஆவின்நெய் வெண்ணெய்

## சம்பா நெல்.

(சு-ம்) சூடு கொழுமை வறட்சி இவைமூன்றும் சமமாக இருக்கும், பி-ம் அதிகவுணவாம், சௌ-ம் தேகத்தில் நல்லசத்துகளை உண்டாகும், தேகந்தழைக்கும், வலிவுண்டாகும் அழகுண்டாகும், தீபனமாகும், உமிபோடு கஷாயமிட்டுக் குடிக்க வயிற்றில் மரித்துப் போனபிண்டம் வெளிப்படும், அதின் உமி விஷமிக்கும், வி-தி வயிறு வலிக்கும், குடலிற் கட்டை யுண்டாக்கும் (ப-ம்) உமிபோக நன்று யக் குத்த வேண்டும்,

## கார் நெல்.

(சு-ப்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்தவுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் குடல் பருக்கும் வி-தி மந்திக்கும், வயிறு வலிக்கும், வயிற்றிற் காற்றை யுண்டுபண்ணும் ப-ம் மிளகு சீரகம் புதீனு துவையல்.

## வர கரிசி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த உணவாம் சௌ-ம் இல்லை விதி தேகத்தில் உதிரஞ் சுண்டிவறட்சியை அதிகரிக்கச் செய்யும் தினவு சொறி சிரங்குண்டாகும் ப-ம் பால் தயிர் நெய் மோர்.

## சோளம்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த உணவாம் சௌ-ம் உதிரத்தைப் பெருகச்செய்யும் வி-தி தினவு சொறி சிரங்கு அதிகரிக்கும் வயிறுமந்திக்கும் ரசத்தினுலுண்டாகும் ஆவியை யடக்கும் சூடு உண்டாகும் வயிற்றுக்கடுப்பு உண்டாகும் ப-ம் நெய் பால் மோர்.

## முத்து சோளம்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த இரத்தத்தை யுண்டாக்கும், குறைந்தவுணவாம் சௌ ம் கபத்தையும் தோய்ந்தவுதிரத்தையும் நீக்கும், அதை வேகவைத்துக் காடியிற்கலந்துபூச இரணங்கள் சொறிசிரங்குகள் நீங்கும், நேத்திரவமதகிரத்தை மாற்றும், இருமலுக்கும், பேதிக்கும் உபயோகப்படும், வி-தி மந்திக்கும், வயிறு இரையும், பொருமலுண்டாகும், ப-ம் பால் நெய்.

## கம்பு

(சு-ம்) குளிர்ச்சியுமாம், பி-ம் குறைந்தவுணவாம் சௌ-ம் தேகங்குளிரும், வி-தி உதிரத்தைத் தோயப்பண்ணும், அசுத்த வெண்ணீரையுண்டாக்கும், சத்துக்குறைந்து மலமதிகரிக்கும் மயக்கம் திமிர் சோம்பல் உண்டாகும், ப-ம் இஞ்சி மிளகு புதீனு.

## கேழ்வரகு.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அதிகவுண்வாம், சௌ-ம் தீபனமாம், வலிவுகொடுக்கும், வயிற்றின் உப்பிசத்தை மாற்றும் வி-தி சூட்டுண்டாக்கும், வறட்சியுண்டாகும், வயிறுகடுக்கும், மூல உபத்திரமுண்டாகும் ப-ம் ஆவின் பால்மோர் நெய் வெண்ணெய்,

## சாமை.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் வலிவுண்டாகும், ஜீரணமாகும், பத்தியத்துக் குதவும், மார்பிலுண்டாகும் கோழை கபம் இவைகளை வறட்டிவிடும் வி-தி வயிற்றில் கட்டுண் டாகும், ப-ம் நெய் பால் சருக்கரை.

## தினையரிசி.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம், பி-ம் குறைந்தவுணவாம் சௌ-ம் ஜன்னி சலவைமுதலிய ரசத்தைப்பற்றிய ரோகங்களை நன்றாய்க் கண்டிக்கும், வலிவு உண்டாகும், ஜீரணமாம், சுரத்துக்குதவும், இடுப்பு நோயைமாற்றும், வீக்கத்துக்கு உபயோகமாகும், வி-தி சூடுண்டாகும், மந்திக்கும், பித்தம் அதிகரிக்கும், சூட்டைப்பற்றிய காற்றையெழுப்பும், ப-ம் நெய் பால் சருக்கரை.

# இ றை ற ச் சி வ கை.

## ஆட்டிறைச்சி.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம், பி-ம் அதிகவுணவாம், சௌ-ம் வலிவு உண்டாகும், தேகந்தழைக்கும், அழகுண்டாகும் தாதுவிர்த்தியதிகரிக்கும், குடல்பெருக்கும், சத்து அதிகரிக்கும், மலங்குறையும், வி-தி கீல்வாதம், நரம்பிசிவு அதிகரிக்கும் ப-ம் கொத்தமல்லி - கருவாப்பட்டை நெய்.

## ஆட்டின் தலை இறைச்சி.

(சு-ம்) சூடு கொழுமை குளிர்ச்சி இவைகள் மூன்றுஞ் சமமாக இருக்கும், பி-ம் அதிகவுணவாம், சௌ-ம் கபாலத்துக்கும் இருதயத்துக்கும் வலிவைக்கொடுக்கும், குடல் புஷ்டியுண்டாகும் தேகந்தழைக்கும், இருதயகமலத்தைப்பற்றிய ரோகங்களைக் கண்டிக்கும் சத்து அதிகரித்துமலங்குறையும் வி-தி வயிற்றிற் காற்று அதிகரிக்கும் மந்திக்கும் ப-ம் இஞ்சி எலுமிச்சம்பழச்சாறு புதீனு.

## ஆட்டின் தலை மூளை.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் தலைமூளைக்கு வலிவைக்கொடுக்கும், புத்திகோசரிக்கும், கண்குளிரும் தாதுவிர்த்தியுண்டாகும் மறதியிராது வி-தி குடல் புஷ்டியில்லாதவர்களுக்கு உதவாது ப-ம் இஞ்சி கடுகு சீரகம்

## ஆட்டின் கண்ணிறைச்சி,

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் கண்களுக்கு வலிமை கொடுக்கும், கண்ணொளி அதிகரிக்கும் ஜீரணமாம் வி-தி கொழுமையதிகரிக்கும் ப-ம் காடி எலுமிச்சம்பழச்சாறு.

## ஆட்டின் கழுத்திறைச்சி.

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் வலிவுண்டாகும், கழுத்து நரம்புகளுக்கு வலிவைக்கொடுக்கும், பசித்தீபனமுண்டாகும், ரோகஸ்தருக்குதவும் வி-தி வயிற்றிற்சொற்பக்காற்றையுண்டாக்கும், ப-ம் கொத்தமல்லிக்கீரை வெங்காயம்.

## ஆட்டின் மார்பிறைச்சி.

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் மார்புக்கு வலிவுண்டாகும், சூடுதணியும் கபத்தையறுக்கும், மார்பின் புண்ணையாற்றும், தேகந்தழைக்கும், வி-தி கொழுமையதிகரிக்கும் ப-ம் புதீனா எலுமிச்சம்பழச்சாறு.

## ஆட்டின் இருதய கமலத்திறைச்சி.

சு-ம் சூடுங் கொழுமையுமாம் பி ம் சுத்தவுணவாம் சௌ ம் இருதயகமலத்துக்கு வலிவைக்கொடுக்கும், ஆத்துமசத்தி யதிகரிக்கும் இருதயகமலம் பறிதலைமாற்றும், தைரியமுண்டாகும் வி தி மந்திக்கும் ஜீரணப்படாது ப ம் காடி எலுமிச்சம் பழச்சாறு.

## ஆட்டின் நுரையீரல்.

சு-ம் குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி ம் குறைந்தவுணவாம் சௌ ம் தேகத்துக்குக் குளிர்ச்சியைத்தரும் சூட்டையகற்றும் நுரையீரலுக்கு வலிவைக்கொடுக்கும், தேகந்தழைக்கும் விதி மலம் அதிகரிக்கும், வயிறு கனக்கும் காற்றுண்டாம் ப ம் புதீனா மிளகு சீரகம்.

## ஆட்டீரல்.

சு-ம் சூடுங் கொழுமையுமாம் பிம் அசுத்தவுணவாம் சௌ ம் இல்லை வி தி அசுத்த இரத்தத்தையுண்டாக்கும் உதிரம் குழம்பேறித் தேய்ந்து போகச்செய்யும், தேகசத்துக்களின் சுபாவ குணத்தை மாற்றி அழுகப்பண்ணும், மந்திக்கும் வயிறுகனக்கும் காற்று உற்பவிக்கும், கபாலத்தில் கட்டு உற்பவிக்கும் ப ம் காடி கடுக்காய் லவங்கப்பட்டை.

## ஆட்டின் நாவிறைச்சி.

சு-ம் குளிர்ச்சியுமாம் பி ம் அசுத்த வுணவாம் சௌ ம் சூட்டையகற்றும், தோலின்மேலிருக்கும் தோலுக்கு மினுக்குண்டாம் பசுமை கொடுக்கும் வி தி அசுத்த உதிரத்தையும் அசுத்த சத்துக்களையும் உண்டுபண்ணும் ப-ம் காடி சீரகம் கொத்தமல்லிக்கீரை.

## ஆட்டின் மண்ணீரல்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்தவுணவாம் சௌ-ம் தீபனமாகும் வி-தி தேகத்தில்வண்டலையும் அசுத்தவுதிரத்தையும் உற்பவிக்கச்செய்யும் உதிரத்திற் குழம்பேற்றும் மந்திக்கும் வண்டலைப்பற்றிய அவி அதிகரிக்கும் ப-ம் லவங்கப்பட்டை நெய்.

## ஆட்டுக்குடல்.

(சு-ம்) குளிர்ச்சியாம் பி-ம் அசுத்தவுணவாம்சௌ-ம் குடலுக்கு வலிவுண்டாக்கும் வி-தி அசுத்த இரத்தத்தையுண்டாக்கும் மந்தப்படும் வயிறு கனக்கும் வயிற்றில் நோயுண்டாகும் ப-ம் சுக்கு திப்பிலி சீரகம் கடுகு,

## ஆட்டுக் கொழுப்புக் குடல்.

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் காற்றை யெழுப்பும் உதிரப்போக்கு உதிரக்கடுப்பு இவைகளை மாற்றும், சூடு தணியும், வலிவுண்டாகும், இராக்குருட்டைநீக்கும், உதிரத்தில்கொழுமையதிகரிக்கும் வி-தி மந்திக்கும்,வயிறுகனக்கும் ப-ம் காடி எலுமிச்சம்பழச்சாறு.

## ஆட்டின் குண்டிக்காய்,

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் இடுப்புக்கும் குண்டிக்காய்க்கும் வலிவைக் கொடுக்கும், தாதுவிர்த்தியாகும், இடுப்புநோயைமாற்றும், லேபமுனண்டாகும், ஆண்குறி பருக்கும், வி-தி மந்திக்கும், காற்று அதிகரிக்கும், ப-ம் மிளகு-திப்பிலி-உப்பிட்டுப் பொரிக்கவும்

## ஆட்டுக்கொழுப்பு,

(சு-ம்) சூடும்கொழுமையுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் இடுப்புக்கு வலிவைக் கொடுக்கும், குண்டிக்காயின்மேலிருக்கும் கொழுப்பு சகல இரணத்தையும் ஆற்றிவிடும் வி-தி வயிற்றிற் களிப்புகட்டும் ப-ம் சுக்கு சீரகம்

## ஆட்டின்பீசம்.

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் காட்டுக் கொடியாட்டின் பீசத்தைக் காயவைத்துச் சாராயத்திற் கலந்து குடிக்க நல்லபாம்பு விஷத்தைப்போக்கிவிடும் வி-தி கொழுமையதிகரிக்கும் ப-ம் நாட்டுக்காடி.

## ஆட்டின்கால்கள்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் கால்களுக்கு வலிவைக்கொடுக்கும் தைரியமுண்டாகும் தேகந்தழைக்கும், எலும்புகளுக்கும் வலிவு உண்டாகும், வி-தி மந்திக்கும் காற்றையுண்டுபண்ணும், ப-ம் சீரகம் புதீனா காடி.

## வெள்ளாட் டிறைச்சி

(சு-ம்) சமரசமாம பி-ம் குறைந்தவுணவாம் சௌ- பத்தியத்துக்குதவும் சத்துக்களின் கொதிப்பைமாற்றும், தீபனமாகும்கபத்தையறுக்கும் மார்புக்கு வலிவுண்டாகும் வி-தி அற்பச்சூட்டைக் கொடுக்கும் ப-ம் எலுமிச்சம்பழச்சாறு.

## கொடியாட் டிறைச்சி.

(சு-ம் சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் மார்புக்கும் இடுப்புக்கும் வலிவைக்கொடுக்கும், பத்தியத்துக்காகும் தாதுவிர்த்தியாகும்வி-தி இல்லை ப-ம் இல்லை.

## செம்மறியாட் டிறைச்சி.

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் தேகந்தணியும், தேகத்தில் கொழுமையதிகரிக்கும் தாதுவிர்த்திபிண்டாம், அழகுகொடுக்கும் சத்துக்கள் அதிகமாக உற்பவிக்கும் வி-தி மந்திக்கும் காற்றதிகரிக்கும் ப-ம் இஞ்சிபுதீனா எலுமிச்சம் பழச்சாறு.

## பள்ளை யாட் டிறைச்சி.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் அசுத்தவுணவாம் சௌ-ம் தேகங்குளிரும் சூட்டைத்தணிக்கும் வி-தி காற்றதிகரிக்கும், மந்திக்கும் ப-ம் இஞ்சி மிளகு காடி.

## குறும்பட் டிறைச்சி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் குறைந்தவுணவாம், சௌ-ம் உதிரம் அதிகரிக்கும் ஜீரணமாம் வி தி சொறி சிரங்கு தினவு சூடு அதிகரிக்கும் ப ம் சல்லாதுக்கீரை கொத்தமல்லிக்கீரை.

## தும்பையாட் டிறைச்சி.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி ம் அதிகவுணவாம், சௌ-ம் தேகந்தழைக்கும் வலிவுண்டாகும் அழகுகொடுக்கும் தீபனமாம் சத்து அதிகரிக்கும் மலங்குறையும் தாதுவிர்த்தியாகும் வி தி தேகத்தில் கொழுமை யதிகரிக்கும ப ம் நெய்யிற் பொரித்துக்கொள்ளவும்.

## பசுமாட் டிறைச்சி.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி ம் அசுத்த வுணவாம் சௌ ம் தேகவலிவுண்டாகும் தேகந்தழைக்கும் முரட்டுவேலை செய்பவர்களுக்கு ஒத்துவரும் வி தி மந்திக்கும் காற்றதிகரிக்கும் வண்டல் அதிகரிக்கும் வயிறு உப்பும் ப ம் மிளகு சீரகம் இஞ்சி கடுகு.

## எருமைமாட் டிறைச்சி.

(சு-ம்) குளிர்ச்சியும் அதிகவறட்சியுமாம் பி ம் அசுத்த வுணவாம், சௌ ம் தேகவலிவுண்டாகும் தேகந்தழைக்கும் வி தி மந்திக்கும் வயிறுப்பும் தீபனங்குறையும் வறட்சியதிகரிக்கும் ப ம் தீபனத்துக்குரிய பதார்த்தங்கள்.

## பசுவின் கன்றின் இறைச்சி.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி ம் அதிகவுணவாம் சௌ ம் தேகந்தழைக்கும், ஜீரணமாம் வி தி குடலுக்கு நோயைக்கொடுக்கும் ப ம் கடுக்காய்.

5

## குதிரை யிறைச்சி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி ம் அசுத்தவுணவாம் சௌ-ம் வலிவு கொடுக்கும் தேகந்தழைக்கும் முரட்டுவேலைக் காரருக்குதவும், வி தி மூலவுதிரம் அதிகரிக்கும் ப ம் கடுக்காய்.

## ஒட்டை யிறைச்சி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி ம் அதிகவுணவாம் சௌ ம் குளிர்ந்த தேகத்துக்குதவும் தேகந்தழைக்கும வி தி வயிறு வலிக் கும் காற்றதிகரிக்கும் ப ம் காடி புதீனா எலுமிச்சம் பழச்சாறு.

## ஆட்டுக்குட்டி யிறைச்சி.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி ம் சுத்தவுணவாம் சௌ ம் சூட்டையகற்றும் தேகந்தணியும் பலஹீனருக்குதவும் பத்தியத்துக் காகும் வி தி குளிர்ந்த தேகத்துக்குதவாது ப ம் புதீனா எலுமிச்சம் பழச்சாறு.

## கழுதை யிறைச்சி.

(சு-ம) சூடுங் குளிர்ச்சியுமாம் பி ம் அதிகவுணவாம் சௌ ம் தேகந்தழைக்கும் வி தி மலம் அதிகரிக்கும் சத்துக்குறையும் ஓக்காள முண்டாகும் நெஞ்சுகரிக்கும் ப ம் ஏலம் லவங்கப்பட்டை.

## கோவேறுகழுதை யிறைச்சி.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி ம் அதிக வுணவாம் சௌ ம் தேகந்தழைக்கும் கீல்வாயுவை நீக்கும் தாதுவிர்த்தியதிகரிக் கும் வி தி வயிறு வலிக்கும் காற்றுண்டாகும ப ம் சூரத்துச் சிவ தை வேர்.

## மான்கறி.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி ம் அதிக வுணவாம் சௌ ம் இரசத்தைப்பற்றிய ரோகங்களை மாற்றும் பவுத்திரம் சொறி சிரங்கு தினவு இவைகளை நீக்கும் வி தி கண்ணில் புகைச்சலுண்டாகும் ப ம் பசுவின்நெய்யிற் பொறித்துக் கொள்ளவும்.

### கலைமான் கறி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் தேகவலிவுண்டாம் தேகந்தழைக்கும் சூட்டையகற்றும் தாதுவிர்த்தியதிகரிக்கும் வி-தி சூட்டைப்பற்றிய தேகத்துக்குதவாது ப-ம் நெய் அதிகரித்துக் கொள்ளவும்,

### கடம்பை யிறைச்சி.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் அதிகவுணவாம், சௌ-ம் தேகவலிவுண்டாகும் தேகந்தழைக்கும் குண்டிக்காய்க்கு வலிவுண்டாகும் தாதுவிர்த்தியதிகரிக்கும் வி-தி மந்திக்கும் காற்றதிகரிக்கும் ப-ம் கிரும்பு கருவாப்பட்டை.

### மூய லிறைச்சி.

(சு-ம்) குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும், சூடுதணியும் மார்புக்கு வலுவைக்கொடுக்கும் இருமல் நீங்கும் மூல உதிர்த்தை யாற்றும் வி-தி பித்தரோகிகளுக்குதவாது ப-ம் நெய் சல்லாதுக்கிரை.

### உடும் பிறைச்சி.

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம்தேகவலிவுண்டாம் தேகம்பருக்கும் உதிரத்தைச் சுத்தப்படுத்தும், மூலம் வெட்டை சீதம் இரத்தக்கடுப்பு குஷ்டம் இவைகளுக்கு உபயோகப்படும் வி-தி குடல்வலிவு அற்றவர்களுக்குதவாது ப-ம் புதினை லுமிச்சம்பழச்சாறு.

## பறவைகளின் வகை.

### சேவலிறைச்சி.

(சு-ம்)சூடுங் கொழுமையுமாம் பி-ம் அதிகவுணவாம், சௌ-ம் சத்து குறைந்து உதிரம் அதிகரிக்கும் வலிவு கொடுக்கும் தேகந்தழைக்கும் வயிற்று நோய் நீங்கும் குளிர்ச்சியைப்பற்றிய ரோகங்களுக்கு உபயோகப்படும் கிழச்சாவலிறைச்சி அதிகசூடாம் வி-தி தலைவலி பித்தம் அதிகரிக்கும் ப-ம் காடி எலுமிச்சம்பழச்சாறு.

## பெட்டைக்கோழி யிறைச்சி.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் தேகவலிவு ஆத்துமவலிவு அதிகரிக்கும் தாதுவிர்த்தியாகும் பசித்தீபன முடாம் வி-தி சூட்டைப்பற்றிய தேகத்தோருக்குதவாது ப-ம் காடி எலுமிச்சம்பழச்சாறு.

## கருங்கோழிக் கறி.

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் உதிரத்தைச் சுத்தப்படுத்தும் உதிரச்சிக்கலினு லுண்டாகும் ரோகங்களைநீக்கும் வலியுண்டாகும் தேகந் தழைக்கும் வி-தி இல்லை ப-ம் இல்லை.

## கோழிக்குஞ்சு.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் பரிசுத்தவுணவாம் சௌ-ம் ஜீரணமாம் பிள்ளைகளுக்கும் நோயாளிகளுக்கும் ஒத்துவரும் தேகந்தழைக்கும் பலவியாதிகளுக்கும் ஆகும் பத்தியத்துக் குதவும், வி-தி இல்லை ப-ம் இல்லை.

## வான் கோழிக் கறி.

(சு-ம்) சூடுங் கொழுமையும் பி-ம் அதிகவுணவாம், சௌ-ம் தேகந்தழைக்கும் தாதுவிர்த்தி அதிகரிக்கும் கொழுமையுண்டாம் ஜீரணமாம் குடல்வலிவு அதிகரிக்கும் வி-தி கரப்பான் சொறி சிரங்கு உண்டாம் ப-ம் புதீனு எலுமிச்சம்பழச்சாறு.

## கானங் கோழிக் கறி.

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் மார்புக்குவலிவுண்டாம், இருமலைப்போக்கி விடும், தேகந்தணியும் கரப்பான் சொறிசிரங்கு இவைகளைப் போக்கும் வி-தி குளிர்ந்ததேகத்துக்கு உதவாது ப-ம் புதீனு எலுமிச்சம்பழச்சாறு.

## சம்பங் கோழிக் கறி.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம், பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் தேகத்தில் உதிரத்தைப்பற்றிய சூட்டை ஆற்றும் தேகந்தழைக்கும், சொறிசிரங்கு கரப்பான் இவைகளை நீக்கும் வி-தி குளிர்ச்சியைப் பற்றிய தேகத்தோருக்குதவாது ப-ம் புதீனு எலுமிச்சம்பழச்சாறு.

## வாத்துக் கறி.

(சு—ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி ம் அதிக வுணவாம், சௌ ம் மலங்குறைந்து உதிரம் அதிகரிக்கும் தேகந்தழைக்கும் தாது விர்த்தியதிகரிக்கும் வி தி மந்திக்கும் உதிரத்தைத் தோயப் பண்ணும் ப ம் காடி தேன்.

## காடைக் கறி.

(சு-ம்) சூடுங்குளிர்ச்சியுமாம் பி ம் அதிகவுணவாம் சௌ ம் தேகந்தழைக்கும கொழுமை யதிகரிக்கும் சூட்டை யகற்றும் மலங் குறைந்து உதிரம் அதிகரிக்கும் அதிகவிரைவில் ஜீரணப்படும் வி தி இல்லை ப ம் இல்லை.

## கவுதாரிக் கறி.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் பி-ம்சுத்தவுணவாம் சௌ-ம் பரிசுத்த இரத்தத்தை யுண்டாக்கும் ஜீரணமாகும் மூளைக்கு வலிவுண்டாகும் தேகந்தழைக்கும் அழகுண்டாகும் வி தி சூட்டுடம்புக்குத் தலை வலி யுண்டாகும் ப ம் காடி தேன் எலுமிச்சம் பழச்சாறு.

## ஊர்க்குருவிக் கறி.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் பி ம் சுத்தவுணவாம் சௌ ம் வலிவு கொடுக்கும் தாதுவிர்த்தி யதிகரிக்கும் அழகுண்டாம் வி தி சூட்டுடம் புக் குதவாது ப ம் வாதுமைநெய்யிற் பொரித்துக்கொள்ளவும்

## வானம்பாடிக் கறி.

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் பி—ம் சுத்தவுணவாம் சௌ-ம் வலிவுண்டாகும் தேகந்தழைக்கும் நோய்கள் அகலும் தீபனமாகும் தாதுவிர்த்தி யதிகரிக்கும் வி-தி சூட்டுடம்புக் குதவாது ப—ம் பசு வின் நெய்யில் பொரித்துக் கொள்ளவும்.

## விச்சுளிக் கறி.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் சூட்டையகற்றும் அரோகியததை நீக்கும் தாதுவிர்த்தி யதிகரிக்கும், பத்தியத்துக்குதவும் வி-தி இல்லை ப-ம் இல்லை.

## கருங் குருவிக் கறி.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் காமாலை கூடியரோகம் கரப்பான் சொரி சிரங்கு இவைகள் நீங்கும் வி-தி சூட்டுடம்புக் குதவாது ப-ம் நெய் பால் மோர்

## சிட்டுக் குருவிக் கறி.

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் சமமாகும் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் தாதுவிர்த்தியதிகரிக்கும் புண் கிரந்தி நீக்கும் வயிற்றிலுள்ள புழுக்களைக்கொல்லும் வி-தி இல்லை ப-ம் இல்லை.

## உள்ளான் கறி.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் பத்தியத்துக்காகும் வாதபித்தத்தைச் சாந்தப்படுத்தும் தீபனமுண்டாகும் கல்கரையும் குடலவலி வுண்டாகும் வி-தி மந்தப்படும் பஞ்சைக்குடலுக் குதவாது ப-ம் மிளகு சீரகம் பொதீனு.

## கொசு உள்ளான் கறி.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் பசியுண்டாம் மேகம் பறக்கும் சொறி சிரங்கு தினவு இவை நீங்கும் தாதுவிர்த்தியதிகரிக்கும் குடல் வலிவாகும் வி-தி இளைத்த தேகத்துக்கு மந்திக்கும் ப-ம் இஞ்சி மிளகு சீரகம்.

## கோரை யுள்ளான் கறி,

(சு-ம்) சாந்தமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் அதிகவிரைவில் ஜீரணமாகும் மலங்குறைந்து உதிரம் அதிகரிக்கும் பலநோய் நீங்கும் தேகத்துக்கு வலிவுகொடுக்கும் தேகந்தழைக்கும் வி-தி இல்லை ப-ம் இல்லை.

## டாயில் கறி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அதிகவுணவாம், சௌ-ம் சூலை பிடிப்பு உதிரவாய்வு கபரோகம், இவைகளைப்போக்கிவிடும் தாது வுண்டாகும், ஜீரணப்படும் வி-தி சூட்டுடம்புக்குத்வாது ப-ம் கொத்தமல்லிக்கீரை சல்லாதுக்கீரை எலுமிச்சம்பழச்சாறு.

## குயிற் கறி.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் ஜீரணப்படும் தேகந்தழைக்கும் வாதம் பித்தம் சொறி சிரங்கு இவைகளைநீக்கும் குன்மவியாதியைப் போக்கிவிடும் வி-தி நித்திரையில் வீரியம் பொங்கிவிடும் ப-ம் பால் தயிர்மோர்.

## கொக்குக் கறி.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம், பி-ம் அசுத்தவுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் வி-தி உதிரத்தைத் தோயப் பண்ணும் மந்திக்கும் தினவுண்டாகும் ப-ம் புளித்த தயிர்.

## கருங் கொக்குக் கறி,

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்தவுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் வயிற்றிலுள்ள கிருமிகளைக் கொல்லும் வி-தி உதிரத்தை நீராக்கும் சொறி சிரங்கு தினவு அதிகரிக்கும் ப-ம் புளித்தத் தயிர் எலுமிச்சம்பழச்சாறு.

## நாரைக் கறி.

(சு-ம்) சூடுங் குளிச்சியுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் தேகத்துக்கு வலிவுகொடுக்கும் நீரிழிவைமாற்றும் வி-தி மந்திக்கும் விரைவில் ஜீரணப்படாது ப-ம் அடித்த மறுநாள் நெய்விட்டுச்சமைக்கவும்.

## புறுவின் கறி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் இரசத்தைப்பற்றிய ரோகங்களை நன்றாய்க் கண்டிக்கும் பாரிசவாதம் பக்கவாதம் இசிவு வீக்கம் மகோதரம் இவைகளை நீக்கும் கொழுமை

யுண்டாம் குண்டிக்காய்க்கு வலிவுகொடுக்கும் வி-தி சூட்டுடம்புக்குத் தலைவலியுண்டாகும் உதிரம்பொங்கும் ப-ம் கொடிமுந்திரிப்பழச்சாற்றிற் சமைக்கவும்,

### நீர்க் காக்கைக் கறி.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் பாண்டு சோகை இவைகளை நீக்கும் உதிரம் அதிகரிக்கும் தாதுவுண்டாம் வி-தி சொறி சிரங்கு தினவு உண்டாகும் ப-ம் புளித்ததயிர்.

### அண்டங் காக்கைக் கறி.

(சு-ம்) சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் பித்தவெட்டை சோகை பாண்டு இவைகளைநீக்கும் உதிரத்தைத் தெளியப்பண்ணும் தீபனமாகும் வி-தி மந்திக்கும் ப-ம் புளித்ததயிர்.

---

## பொரிக் கறிகளின் வகை.

### கபாப் என்கிற பொரித்தயிறைச்சிகள்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் தேகத்துக்கு வலிவுகொடுக்கும் தாதுவிர்த்தியாகும் லேபனம் அதிகரிக்கும் இன்பங்கொடுக்கும் வி-தி மந்திக்கும் ப-ம் காடி தேன் சீரகம்.

### ஆட்டின் எலும்புக் குள்ளிருக்கும் மூளை.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் வலிவுண்டாகும் தேகத்திற் பசுமை யதிகரிக்கும் சத்து அதிகரிக்கும் மலமிளகும் விந்து விளையும் உடல்பருக்கும் வி-தி சூட்டுடம்புக்கு ஒக்காளிக்கும் ப-ம் கருவாப்பட்டை.

---

# முட்டைகளின் வகை.

## கோழி முட்டை.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் விந்துவிளையும், தாதுவிர்த்தியதிகரிக்கும், தேகந்தழைக்கும், உதிரம் அதிகரிக்கும், சூட்டைப்பற்றிய பீனிசத்தை மாற்றும்? கோழி முட்டையை அரைவரிசை வேவித்தபோது, இந்தக்குணங்களைக் காட்டும், வெள்ளைக்கருவானது பதார்த்தங்களின் அழுக்கையெடுக்கும், படிகாரத்தைச் சேர்த்துக் குலுக்கினால், உறைந்து போல்டீஸ்போல் ஆகும். கண்வியாதிதீரும் வி-தி அதிகமாய் வெந்தால் காற்றதிகரிக்கும் மந்தப்படும். ப-ம் சூட்டுத்தேகத்துக்கு நாட்டுக்காடி குளிர்ச்சி தேகத்துக்குக் குல்கந்து.

## வாத்து முட்டை.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் தேகவலியுண்டாகும் உடல்பருக்கும் வி-தி மந்திக்கும் வயிறு வலிக்கும் காற்று அதிகரிக்கும் ப-ம் இஞ்சி சீரகம் கொத்தமல்லி வான்கோழி முட்டைக்கும் இதுவே குணம்,

## புறா முட்டை.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் ஜீரணப்படும் இரசத்தைப்பற்றிய ரோகங்களைக் கண்டிக்கும் தேகந்தழைக்கும் தாது அதிகரிக்கும், விந்து விளையும் வி-தி சூடுண்டாம் ப-ம் பசுவின் நெய்யிற் பொரித்துக் கொள்ளவும்.

## மயில் முட்டை.

(சு-ம்) சூடும் வரட்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் பிடிப்புகளை மாற்றும், கடிகளை யகற்றும் வலி வுண்டாகும் ஜீரணப்படும் வி-தி சூடுண்டாம் ப-ம் கொத்தமல்லிக்கீரை வெங்காயச்சாறு.

## ஊர்க்குருவி முட்டை.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் நரம்புகளிலுள்ள சோர்வைமாற்றிப் பலப்படுத்தும் தாதுவிர்த்தி

யதிகரிக்கும், லேபனமுண்டாம், பக்கவாதங்களுக்கதிகமாக வுபயோகப்படும் வீக்கம் மகோதரங்களைப் போக்கிவிடும் ஜீரணமாகும் சத்து அதிகரிக்கும், மலங்குறையும் வி-தி சூடுண்டாம் ப-ம் காடி எலுமிச்சம்பழச்சாறு.

### காக்கா முட்டை.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் மண்ணீரலுக்கு வலிவுகொடுக்கும் காமாலை பித்தபாண்டு சோகை இவைகளை நீக்கும் ஜீரணமாகும் கண்ணொளி அதிகப்படும் வி-தி சூட்டுடம்புக் குதவாது ப-ம் வெங்காயச்சாறு கொத்தமல்லி கீரை.

### ஆமை முட்டை.

(சு-ம்) குளிர்ச்சியும் வரட்சியுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் வலிவு கொடுக்கும் தேகந் தணியும் அதிசார பேதிகளைக் கட்டிவிடும் குடலுக்கு வலிவுண்டாகும் வி-தி நெஞ்சுகரிக்கும் ப-ம் ஏலம் சீரகம்.

### மீன் முட்டை.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் வலிவுண்டாம் அதிசாரபேதிகளைநிறுத்தும்குடல்வலிவுண்டாம் வி-தி வயிற்றில் களிம்புகட்டும் ப-ம் கடுகு மிளகுசீரகம்.

---

## கஞ்சியின் வகை.

### சம்பா அரிசிக்கஞ்சி.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் குறைந்த வுணவாம், சௌ-ம் குடலிலுந் தீனிப்பையிலுமுள்ள சூட்டையகற்றும், வி-தி இரசத்தை யதிகமாக விளைவிக்கும் மூத்திரப் பெருக்குண்டாம் குளிர்ந்த தேகத்துக்குக்காற்று அதிகரிக்கும்ப-ம் குல்கந்துபுதினாஇலை.

### நாட்டு கோதுமை யரிசியின் கஞ்சி.

(சு-ம்) குளிர்ச்சியும் வரட்சியுமாம் பி-ம் அதிகவுணவாம், சௌ-ம் சூட்டையகற்றும் தேகத்திற்கு வலிவைக்கொடுக்கும் எலும்புருக்கிக்

காய்ச்சலுக்கும் களையிருமலுக்கும் ஈரலைப்பற்றிய சூட்டுக்கும் உபயோகப்படும் பத்தியத்துக்குதவும் இதில் மாமிசம் சேர்க்க ரோகிகளுக்கு அதிக உபயோகப்படும் வி-தி வயிறப்பும் மந்திக்கும் காற்றையுண்டுபண்ணும் ப-ம் குல்கந்து பனிநீர்.

## பச்சைப்பயறு அல்லது உளுத்தம்பயறின் கஞ்சி.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம், பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் சூட்டையகற்றும் பலஹீனருக்கும் சூட்டுடம்புக்கும் சுரத்துக்கும் ஆகும் இதில் மாமிசஞ்சேர்த்துக் கொண்டால் அதிகபுஷ்டி கொடுக்கும் வி-தி குளிர்ச்சியைப்பற்றிய தேகத்தோருக்குவதாது ப-ம் சுக்கு சீரகம் வெள்ளுள்ளி.

## பாற் கஞ்சி.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் தேகத்திலுள்ள சூட்டை மாற்றும் வலிவுண்டாம் தேகத்திலுள்ள உட்புண்களையாற்றும் நீர்ச்சுருக்கை மாற்றும் வி-தி நீனிப்பைக்கும் நீரலுக்கும் ஆகாது நீர்ப் பெருகும் ப-ம் கற்கண்டு வெள்ளைச் சர்க்கரை,

## தயிர்க் கஞ்சி.

(சு-ம்) வறட்சியும் குளிர்ச்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் சூட்டுடம்புக் கொத்துவரும் வி-தி வயிற்றில் களிம்பு கட்டும் ப-ம் தேன்.

## மோர்க்கஞ்சி.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் சூட்டையகற்றும் வயிற்றுக் கடுப்பு உதிரப் போக்கு உப்பிசம் இவைகளைமாற்றும் நீனிப்பையையும் குடலையும் பற்றிய சூட்டை மாற்றும் குடலுக்கு வலிவுண்டாகும் வி-தி குளிர்ந்த தேகத்துக்குதவாது ப-ம் இஞ்சி புதீனா.

## ஆட்டின் எலும்பு ரசத்தின் கஞ்சி.

(சு-ம்) சூடும் வரட்சியுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் களையயகற்றும் வலிவுண்டாகும் பத்தியத்துக்குதவும் பேதிக்குக்

குடித்தவர்களுக்கு அதிக உபயோகப்படும். தேகந்தழைக்கும் வி-தி அற்பச்சூட்டைக் கொடுக்கும் ப-ம் எலுமிச்சம்பழச்சாறு.

## கோழிக்குஞ்சின் இரசத்திற்காய்ச்சுங் கஞ்சி.

(சு-ம்) சாந்தமாம் பி-ம் சத்தவுணவாம் சௌ-ம் பலஹீனருக்கும் பிள்ளைகளுக்கும் நோயாளிகளுக்கும் அதிக உபயோகப்படும் வலிவுண்டாம் சீரணப்படும் வி-தி இல்லை ப-ம் இல்லை.

## புறாக்குஞ்சின் இரசத்திற்காய்ச்சுங் கஞ்சி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் தீபனமதிகரிக்கும் தேகந்தழைக்கும் இரசத்தைப்பற்றிய ரோகங்களுக்குதவும் பத்தியத்துக்குமாகும் வி-தி சூட்டுடம்புக் குதவாது ப-ம் நெய் எலுமிச்சம் பழச்சாறு.

## ஆட்டின்காலின் இரசத்திற் காய்ச்சுங் கஞ்சி.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் அதிகவுணவாம், சௌ-ம் தேகந்தழைக்கும் வலிவு கொடுக்கும கால்களுக்கு வலிவுண்டாம் இடுப்பு வலியைமாற்றும் வி-தி மந்திக்கும் காற்றதிகரிக்கும் ப-ம் கிராம்பு கருவாப்பட்டை.

## ஆட்டுத்தலையின் இரசத்திற்காய்ச்சுங் கஞ்சி.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் தேகவலி யுண்டாம் தேகந்தழைக்கும் தாதுவிர்த்தி யதிகரிக்கும் கொழுமையுண்டாம் இராஜவுருப்புகளுக்கும் பொறிகளுக்கும் அதிக வலிவைக்கொடுக்கும் வி-தி மந்திக்கும் காற்றதிகரிக்கும் ப-ம் கிராம்பு கருவாப்பட்டை.

## ஆட்டுக்குண்டிக்காயின் இரசத்திற்காய்ச்சுங் கஞ்சி.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் தேகவலி வுண்டாம் தேகந்தழைக்கும் தாதுவிர்த்தி யதிகப்படும் லேபனமுண்டாகும் ஆண்குறிக்கி வலிவுண்டாம் விந்துகட்டும் இதில் கருவாத்துக்கிழங்கைக் கூட்டிக்காய்ச்ச அதிகவலிவைக் கொடுக்கும் வி-தி மந்திக்கும் காற்றதிகரிக்கும் வயிறு வலிக்கும் ப-ம் கிராம்பு கருவாப்பட்டை புதினா.

## கொழுத்த ஆட்டிறைச்சியின் இரசத்திற்காய்ச்சுங் கஞ்சி.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் குடலுக்கு வலியுண்டாகும் களைதீரும் தேகமிளைத்தவர்களுக்கதிக உபயோகப்படும் இதில் சல்லாது இல்லை மணத்தக்காளியிலை கொத்தமல்லிக்கீரை இவைகளி லொன்றைக் கூட்டிக்காய்ச்ச அதிக உபயோகப்படும் வி-தி இல்லை ப-ம் இல்லை.

## நாட்டுக்கோதுமைநொய் ஆல்பகாரு திராக்ஷிப்பழம் இவைகளைச்சேர்த்துக் காய்ச்சிய கஞ்சி.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் பத்தியத்துக்காகும் வண்டலைப் பற்றிய ரோகங்களுக் குபயோகப்படும் வயிற்றுச்சிக்கலை மாற்றும் தேகந்தழைக்கும் வி-தி இல்லை ப-ம் இல்லை.

## பூநொய்க் கஞ்சி.

(சு-ம்) சாந்தமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் சூட்டை அகற்றும் களைதீரும தீபனமாம் உபவாசம் இருப்பவருக்கு அதிக உபயோகப்படும் வி-தி இல்லை ப-ம் இல்லை.

## பொரிக்கஞ்சி.

(சு-ம்) சாந்தமுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் சூட்டை அகற்றும் மார்நோய்க் குபயோகப்படும் வயிற்றுச் சிக்கலை மாற்றும் தவனமடக்கும் தீபனமாம் வி-தி சொற்பக்காற்றை யுண்டுபண்ணும் ப-ம் சருக்கரை நெய்.

## கொள்ளுக்கஞ்சி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் சுத்தவுணவாம் சௌ-ம் களைதீரும் தேகவலிப்பைத்தீர்க்கும் தேகஸ்தூலத்தை மாற்றும் நீர்த்தாரையில் விளையுங் கற்களைப்பொடியாக்கிவிடும் நீர்ப்பெருக்கை மாற்றும் வி-தி சூடு அதிகரிக்கும் ப-ம் நெய் பால் வெண்ணெய்.

## பச்சையரிசிக்கஞ்சி

(சு-ம்) குளிர்ச்சியுஞ் சிலிர்ப்புமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் தேகந் தழைக்கும் சூட்டையகற்றும் வலிவுண்டாகும் தீபனத்தை

அடக்கும் மேனியுண்டாம் வி-தி மந்திக்கும் நீரைப்பெருக்கும் வயிறு வலிக்கும் ப-ம் நெய் பால் சர்க்கரை.

### வாதுமைப்பருப்பு சுரை விரை வெள்ளரிவிரை கசகசா இவைகளைக்கூட்டிக் காய்ச்சியகஞ்சி.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் தேகத்திலுள்ள வெப்பத்தைப் போக்கிவிடும் உடல் பருக்கும், சொறி சிரங்கு தினவையகற்றும் வெள்ளை நீர்ச்சுருக்கு முதலிய நீர்த்தாரையைப்பற்றிய ரோகங்களைப்போக்கி விடும் மார்புக்குவலியைக்கொடுக்கும் சூட்டைப்பற்றிய இருமலைப்போக்கிவிடும் கபத்தையறுக்கும் வி-தி குளிர்ச்சியைப்பற்றிய தேகத்தோருக்குதவாது ப-ம் ஜாதிக்காய் ஜாதிபத்திரி கருவாப்பட்டை.

---

## பால்வகை.

### முலைப்பால்.

(சு-ம்) குளிச்சியுஞ் சிலிர்ப்பும் அற்பச்சூடுமாம் பி-ம் பரிசுத்தவுணவாம் சௌ-ம் தேகத்துக்கும் பசுமையும் வலியுங் கொடுக்கும் உதிரப்பொக்களை மாற்றும் உதிரம் அதிகரிக்கும் பித்தம் அதிகரித்துப் பிறந்த ஜன்னிகளுக்கு உபயோகப்படும் அழலைமாற்றும் தாவத்தை அடக்கும் ஈளையிருமலுக்கு உபயோகப்படும் நீர் அடைப்பை மாற்றும் குழந்தைகளுக்கு இதைவிட மிஞ்சின பதார்த்தம் வேறேயில்லை பிள்ளைகளுக்கு விசேஷம் தாய்ப்பால் தாதிகள் எந்நிறமோ அந்நிறம் பாலின் வழியாய்ப் பிள்ளைகளுக்குண்டாகும் எண்ணெய் முதலியவைகளை பாலோடு சேர்த்துக்கொடுக்க விருப்பமாய்க் குடிக்கும் துணியை முலைப்பாலில் நனைத்து நெற்றியில் போட தலைநோய் போகும் சிற்றாமணக் கெண்ணையுடன் கலந்துபோட கண் வியாதியுந்தீரும் வி-தி இல்லை ப-ம் இல்லை.

### பதார்த்தகுணசிந்தாமணியிற் முலைபால் போதகுணம்.

(இ-ள்) முலைப்பால் ஏழுவகைத் தோஷங்கள் வெப்பம் சந்நிபாதம் வாதபித்தம் கபசுரங்கள் திரிதோஷம் வாதகிரிச் சுரம்

நாவரட்சி ஆகிய இவைகளை நீக்கிவன்மையைத் தரும் ஔஷத அநுபானத்திற்கும் கலிக்கத்திற்கும் ஆகும்.

## கருமை செம்மைநிறமாதர்களின் முலைப்பாற்குணம்.

கரியநிற மாதர் முலைப்பால் கண் வயித்தியங்களுக்கே யன்றி ஔஷதங்களுக்குபயோகமாகாது. வியாதியில்லாத செம்மை நிற மாதர் முலைப்பால் வாதாதி மூன்று தோஷங்களையும் போக்கும்

## பரத்தையர் முலைப்பாற்குணம்.

வேசையர் முலைப்பாலால் திரிதோஷங்கள் வாதரோகம் இரத்தச் சொறி கிரந்தி விரணம் கழல் வாதம் இவை உண்டாம்.

## பசுவின்பாற் பொதுக்குணம்.

பசுவின் பாலானது பாலகருக்கும் விருத்தருக்கும் புராணசுரம் விரணம் சூலை பிரமேகம் துர்ப்பலம் அதிசுட்சுரோகம் ஆகிய இவைகளையுடையவர்களுக்கும் ஆகும்.

## பசுக்களின்பாற் குணம்.

வெண்மைநிறப் பசுவின்பால் பித்த கோபத்தையும் செம்மை நிறப்பசுவின்பால் வாததோஷத்தையும் கருமைநிறப் பசுவின்பால் கபரோகத்தையும் கபிலைநிறப் பசுவின் பால் திரிதோஷத்தையும் போக்கும்.

## கபிலைஎன்பது கருமைகலந்த பொன்நிறமாவன,

## காரும்பசுவின்பாற் குணம்.

காரும் பசுவின்பால் விழிப்பிணி க்ஷயம் மற்றையப்பாலின் தோஷங்கள் ரத்தபித்தரோகம் இவைகளை நீக்கும் ராஜவசியமாம்.

## ஆகாப் பசுவின்பாற் குணம்.

ஆகாப் பசுவின்பால் ஐவகைப்படும் அவையாவன அரளை நோய் தாராநோய் மிகவுஞ் சுற்றுதலோடு வெண்மைப் புள்ளி தூங்கித்திரிந்து மலம் அருந்தல் இடுகாட்டெலும்பு உண்ணல் ஆகிய இவைகளையுடைய பசுக்களின் பாலாம் இவை சேருமாகில் வாதாதி மூன்று தோஷங்களும் மார்பிற்சேர்த்து ஐயத்தைவிளைப்பதும் ஆயுளை குறைப்பதுமாம்,

## பகற்பசுவின்பாற் குணம்.

பகற்பசுவின் பால் குழந்தைகளுக்குப் பக்குவமாமென்றாலும் பற்பல கபரோகையும் தாம்பூலம் புளிப்பு முதலிய சேருமிடத்துக் கெடுதியையுஞ் செய்யும் உட்சூட்டையும் வெப்பத்தையும நீக்கும்.

## இராப் பசுவின்பாற் குணம்.

பகலிற்சராந்து இரவிற் கறக்கின்றபாலை விதிப்படி காய்ச்சியருந்தில் தேக அழற்சி கபரோகம் சுவாசம் பித்தரோகம் நேத்திரதோஷம் விந்துவின் கெடுதியாலநுசரித்த சிற்சில ரோகங்கள் ஆகிய இவை நீங்கும் தேகத்தில் மினுமினுப்பும் சுக்கிலப்பெருக்கமும் மாதர்மேல் விருப்பமும் வுண்டாகும் இது பத்தியத்திற்குதவும்.

## (யூநாநி) பசுவின் பால்.

(சு-ம்) சூடு கொழுமை சிலிர்ப்பு இவைகள் மூன்றும் சமமாகும் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் வலிவுகொடுக்கும் தேகந்தழைக்கும் பசுமையுண்டாகும் மூளைக்கு வலிவு கொடுக்கும் மலசுத்தியாம் பாலைமுறித்து ஜலத்தை எடுத்து நோயாளிகளுக்கு கொடுத்தால் தாகந்தீரும் வி-தி நீர்த்தாரையிலும் குண்டிக்காயிலும் கல்லிளையும் மண்ணீரலைப் பலஹீனப்படுத்தும் ப-ம் தேனும் சருக்கரையும்.

## எருமைப் பால்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்பும் அற்பப்பித்தமும் பி-ம் அதிக உணவாம் சௌ-ம் வலிவு கொடுக்குந் தேகந்தழைக்கும் இந்தப் பாலை இலையில் ஏற்றித் துத்திக்கொம்பினால் துழாவிச் சுண்டக்காய்ச்ச அப்படியே தோய்ந்துபோகும் அதில் கற்கண்டு சேர்த்துக் குடித்து வர மூலரோகம் போய்விடும் வி-தி மந்திக்கும் வயிற்றிற் களிம்பு கட்டும் ப-ம் தேனும் சருக்கரையும்.

## வெள்ளாட்டுப் பால்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்பும் அற்பசூடுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் பழமையான சுரங்களுக்கும் எலும்புருக்கிச் சுரத்துக்கு மார்பின் புண்களை ஆற்றுவதற்கும் தேகத்தின் சாந்தப்

படுத்துவதற்கும் அதிக உபயோகப்படும் என்றுமிதைக் கொப்புளிப் பதனால் தொண்டைக்கம்மல் உண்ணாக்கு வீக்கம் நாவைப்பற்றிய ரோகங்கள் நீங்கிப்போகுமென்றும் இதற்கொப்பானது ஒருவிதபாலு மில்லையென்றுஞ் சொல்லி யிருக்கிறார்கள் வி-தி கர்ப்பஸ்ரீகளுக்கும் ஈரல் பஞ்சைபட்டவர்களுக்கும் காக்காய்வலிக்கும் உதவாது ப-ம் தேனும் சருக்கரையும்.

## செம்மறியாட்டின் பால்.

(சு-ம்) சூடுகுளிர்ச்சி இவையிரண்டும் சமமாம் பி-ம் அதிகவுண வாம் சௌ-ம் மூளைக்கு வலிவுகொடுக்கும் மார்பின் புண்ணையாற் றும் சூட்டைப்பற்றிய இருமலைநிறுத்தும் குடலுக்கு வலிவுகொடுக் கும் வி-தி சிரசைப்பற்றிய நரம்புகளுக்குதவாது ப-ம் தேனும் சருக் கரையும்,

## கழுதைப்பால்.

(சு-ம்) அற்பக்கொழுமையும் அதிககுளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் சூட்டையகற்றும் தேகத்தைப் பெருக்கச் செய்யும் ஈளை இருமலுக்கும் சூட்டைப்பற்றிய இருமலுக்கும் எலும்புருக்கிச்சுர த்துக்கும் நீர்கடுப்புக்கும் வெள்ளைக்கும் குடலைப்பற்றிய வெப்பத்துக் கும் அதிக உபயோகப்படும் வி-தி குளிர்ச்சியைப்பற்றிய தேகத்துக் குத் தலைவலியுண்டாகும் ப-ம் சருக்கரை பனிநீராம்.

## குதிரைப்பால்.

(சு-ம்) சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் தேக வலிவுண்டாகும் தேகந் தழைக்கும் தாது விர்த்தி யதிகப்படும் வாயுவை யகற்றும் அழகு கொடுக்கும் தீபன முண்டாம் மலங் கழி யும் நீர்த்தாரையைப் பற்றியபுண்ணை ஆற்றுவிக்கும் வி-தி பலஹீன ருக்குதவாது ப-ம் அம்பர்கஸ்தூரி.

## ஒட்டைப் பால்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் தேகபுஷ்டி வலிவுண்டாகும் வீக்கம் மகோதரம் நீங்கும் மலங் கழியும்

உபசாந்தியாகும் வி-தி சூட்டெடம்புக் காகாது ப-ம் சோம்பு அதி மதுரம்.

## ஆனைப்பால்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அதிகவுணவாம் சௌ-ம் வாயுவைகண்டிக்கும் தாதுவிர்த்தியுண்டாகும் வி-தி பித்தம் அதிகரிக்கும் ப-ம் பசுவின்பால்.

## புலிப்பால்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்தவுணவாம் சௌ-ம் வலிவுண்டாகும் தாதுவிர்த்தி யதிகரிக்கும் வி-தி அதிக சூட்டைக் கொடுக்கும் ப-ம் வெள்ளாட்டுப்பால் வவ்வாற் பாலுக்கு மிதுவே குணமாம்.

## பன்றிப்பால்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் எலும்புருக்கிக் காய்ச்சலையும் ஈளை இருமலையும் போக்கும் வி-தி உதிரத்திலுள்ள கொழுமையைநீக்கி உதிரத்தைத் தோய்வித்து அழுகிப் போகச்செய்யும் குஷ்டம் பெருவியாதிகளை யுண்டாக்கும் ப-ம் கஸ்தூரி கோரோசனம்.

## பசுவின் நெய்.

(சு-ம்) சூடுங் கொழுமையுமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் சூட்டைத்தணிக்கும் பசுமையுண்டாகும கண்குளிரும் வறட்சியை மாற்றும் ஒளிவுண்டாம் பதார்த்தங்களின் ருசியை அதிகரிக்கச் செய்யும் தீபனமாகும் வி-தி சூட்டுத் தேகத்தோருக்கு மார்பின் இரத்தத்தைத் தோய்ம்பண்ணும் ப-ம் பதார்த்தங்களில் சேர்த்துப் பரிமாற வேண்டியது அல்லது உருக்கிக் கொள்ளவேண்டியது.

## பசுவின் வெண்ணெய்.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் தேகவெப்பத்தைமாற்றும், பசுமையுண்டாம் உடல்பருக்கும் மார்பின் வறட்சியை நீக்கும் விக்கலையகற்றும் கண்குளிரும் கண்ணைப்பற்றிய சகலரோகங்களும் உபயோகப்படும் மலங்கழியும் வி-தி மந்திக்கும் ப-ம் சருக்கரை கண்கண்டு.

## பசுவின் பாலேடு.

(சு-ம்) சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் செள-ம் தேகந்தணியும் வலிவுண்டாகும் தேகந்தழைக்கும் சூட்டைப்பற்றிய இருமலையகற்றும் விக்கலைமாற்றும் வி-தி மந்திக்கும் ப-ம் தேன் இஞ்சி முறப்பா.

## பசுவின் சீப்பால்.

(சு-ம்) குளிர்ச்சியுஞ் சிலிர்ப்புமாம் பி-ம் அதிக வுணவாம் செள-ம் தேகத்துக்கு வலிவுண்டாக்கும் தழைப்புண்டாம் வி-தி மந்திக்கும் நீர்த்தாரையில் கல்விளையும் ப-ம் சருக்கரை.

## பசுவின் தயிர்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் அதிக வுணவாம் செள-ம் தீனிப்பையிலுள்ள சூட்டை மாற்றும் தேகந்தணியும் நீர் பெருகும் தவனத்தையடக்கும் வி-தி காற்றையுண்டு பண்ணும் முதுகுண்டு வலிக்கும் ப-ம் இஞ்சி புதினா.

## பசுவின் புளித்ததயிர்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் செள-ம் சூட்டையகற்றும் தேகந்தணியும் சாதத்தைச் சீரணப்படுத்தும், தவனத்தையடக்கும் வி-தி பற்களின் ஈறை வீங்கப்பண்ணும் ப-ம் தேன் கலர்ந்தநீர்.

## பசுவின் மோர்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த வுணவாம் செள-ம் சூட்டுடம்புக் கொத்துவரும் அழலை மாற்றும் தவனத்தை யடக்கும் தேகவறட்சியை நீக்கும் வி-தி தலை சுற்றும் ப-ம் இஞ்சி முறப்பா எருமைப்பால் முதலானவைகள் இதற்கு அற்ப விரோதஞ் செய்யும்.

## ஜின் னுக்கட்டி.

(சு-ம்) சூடும் வறட்சியும் சமமாகும் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் வலிவுகொடுக்கும் தீபனமாம் பரிசுத்த உதிரம் உற்பவிக்கும் யார்புக்கும் தொண்டைக்கும் வலுவைக் கொடுக்கும் பலஹீனத்தை மாற்றுவிக்கும் வி-தி மந்தப்படுத்தும் வயிறு வலிக்கும் ப-ம் தேன் புதினா.

## உப்புக்கலந்த ஜின் னுக்கட்டி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் தேகத்தின் சுரப்பைமாற்றும் பசுமைகொடுக்கும் வி-தி மந்திக்கும் தவனத்தை அதிகப் படுத்தும் ப-ம் சூட்டுடம்புக்குப் புளிப்புச் சேர்க்கவும்.

---

# பழ வகை.

—✿✿✿—

## இனிப்புக்கொடி முந்திரிப்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் சூட்டைத் தணிக்கும், அரோகியத்தை மாற்றும், தேகம் பருக்கும், பித்த அயலைமாற்றும், நீர்ப்பெருக் குண்டாம், மேனி கொடுக்கும், உலர்ந்த பழத்தை போஜன பதார்த்தங்களோடு அநேக அவிழ்தங்களோடும் சேர்த்துக் கொடுக்க தேகத்துக்கு வலிவுண்டாம் வி-தி ஈரலிலும் மண்ணீரலிலும் சுட்டையுண்டு பண்ணும் சிலவேளை ஜீரணம் ஆகாமல் போவது உண்டு, ப-ம் சீரகம் காட்டுச் சீரகம்.

## புளிப்புக்கொடி முந்திரிப்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் தீபனமாம் உதிரக்கடுப்பை மாற்றும் வி-தி உதிரத்தைத் தோயப்பண்ணும் வறட்சியுண்டாம், மந்திக்கும், சுரமுண்டாகும் ப-ம் தேன் இஞ்சி.

## சீமை அத்திப்பழம்.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் பரிசுத்த வுணவாம் சௌ-ம் உதிரம் அதிகமாக உப்பவிக்கும். மலங் குறைந்து சாரம் அதிகரிக்

கும் சூட்டையகற்றும் தேகந்தழைக்கும் தேகவலிவு அதிகரிக்கும் தொண்டைக்கும் மார்புக்கும் சிபுகாமென்னும் கமலத்தைப்பற்றிய நோய்க்கும் அதிக உபயோகப்படும் வி-தி இல்லை ப-ம் இல்லை.

## உலர்ந்தசீமை அத்திப்பழம்.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் பரிசுத்த வுணவாம் சௌ-ம் சத்துக்களை வேகவைத்துப் பாகப்படுத்தும் மார்பிலும் தொண்டையிலுமுள்ள வறட்சியை மாற்றும் நுரையீரலுக் குபயோகப்படும் வி-தி இல்லை ப-ம் இல்லை.

## கிஷமுஷ்பழம்.

(சு—ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் மலத்தைப் போக்கும் மூலம் இருமல் குரல் கம்மல் இவைகளுக்கு உபயோகப்படும் வி-தி அதிகத்தைக் நோயப் பண்ணும் ப-ம் புளி.

## தீவுதிராட்சப் பழம்,

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் சூட்டையகற்றும் மலத்தைப் போக்கும் தழைப்புண்டாகும் வி-தி இல்லை ப-ம் இல்லை,

## பேரீச்சம் பழம்.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் தேகவலிவுண்டாம் ஜீரணப்படும் மலத்தைப் போக்கும் வாதுமை வித்திற் கலந்துண்ணத் தேகந்தழைக்கும் அரோகியம் சுரம் தாகம் பித்தம் முதலியவை நீங்கும் வி-தி சூட்டை அதிகரிக்கச்செய்யும் ப-ம் வெள்ளரிப் பிஞ்சு.

## உலர்ந்த பேரீச்சம் பழம்.

(சு—ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் தேகத்துக்கு வலிவுண்டாம் தழைப்புண்டாம் மார்புக்கு வலிவைக் கொடுக்கும் இருமல் சுவாச இருமல் இவைகளுக்கு உபயோகப்படும், பாலிற்கலந்து காய்ச்சிக் குடிக்கத் தாதுவிர்த்தியதிகப்படும் வி-தி கண்களுக்கும் பற்களுக்கு முதவாது ப-ம் கசகசா நெய்.

## விளாம் பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் தீனிப்பை ஈரல் கமலம் இவைகளுக்கு வலுவைக் கொடுக்கும் வாய்வேக்காடு தொண்டைநோய் சொறி சிரங்கு இவைகளுக்கு உபயோகப்படும் பித்தச் சூட்டையகற்றும் வி-தி மலச்சிக்கலுண்டாம் மார்புக்குதவாது தொண்டைகட்டும் ப-ம் விரையைப்போக்கிச் சருக்கரைச் சேர்க்கவும்.

## இனிப்பு இலந்தைப்பழம்.

(சு-ம்) சூடு குளிர்ச்சி சமமாம் கொழுமையுண்டாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் சத்துக்களை வேகவைத்துப் பாகப்படுத்தும் மார்பிலும் குடலிலுமுள்ள மாசுகளை நீக்கும் இலேசாயிருக்கிற அசுபாவசத்துக்களை மலத்தின் வழியாய்க் கழித்துவிடும் தொண்டையிலும் மார்பிலுமுள்ள வறட்சியைமாற்றும் வி-தி மந்திக்கும் காற்றை யுண்டுபண்ணும் ப-ம் தீவ்திராட்சிப்பழம் சருக்கரை.

## புளிப்பு இலந்தைப் பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் சூட்டை யகற்றும் தீபனத்தை யுண்டு பண்ணும் வி-தி வயிற்றில் கொழுமையுண்டு பண்ணும் ப-ம் மதனும் சருக்கரையுமாம்.

## வாழைப்பழம்.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் குடல் பருக்கும் வலிவுண்டாம் இதில் அனேக சாதி யுண்டு வி-தி உதிரநோயும் மந்திக்கும் கட்டுண்டாம் ப-ம் தேன் சருக்கரை.

## பலாப் பழம்.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியும் அற்ப வறட்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் கபாலத்தைப்பற்றிய நரம்புகளுக்கு வலிவைக் கொடுக்கும் வி-தி மந்திக்கும் காற்றை யுண்டுபண்ணும் ப-ம் பசுவின் நெய் அல்லது அதன் கொட்டை.

## இனிப்பு மாம்பழம்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் இருதயத்துக்கும் மூளைக்கும் வலிவைக் கொடுக்கும் கிபகாளென்னும் ரோகத்துக்கு உபயோகப்படும் மலசுத்தியாம் வயிறிளகும் வி-தி இதன்னாறினால் வயிறு உப்பும் வலியுண்டாம் ப-ம் சீரகம் ஏலம் தீபதிராட்சிப்பழம்,

## புளிப்பு மாம்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் தீனிப்பைக்கு வலிவைக் கொடுக்கும் இருதயத்தைப்பற்றிய சூட்டையகற்றும் வி-தி மந்திக்கும் மலத்தைக் கட்டும் ப-ம் உபபு.

## புளிப்பு நாவற்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் அதிக வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் தீனிப்பைக்கு வலிவைக் கொடுக்கும் சூட்டையகற்றும் வி-தி மந்திக்கும் மலத்தைக் கட்டும் தொண்டைக்கும் மார்புக்கும் கர்ப்பஸ்திரீகளுக்கும் ஆகாது ப-ம் உப்பு மிளகு.

## இனிப்பு நாவற்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் சூட்டுத்தேகத்துக்குத் தீபனமாம் மலங்கழியும் இதன் காயைக் கும்பிநெருப்பிலே வேகவைத்து அதின் ரசத்தைப் பிழிந்து சருக்கரை கலந்து குடிக்கச் சூட்டைமாற்றும் கோடை காலத்துக்கு உபயோகப்படும் வி-தி மார்புக்கும் தொண்டைக்கும் உதவாது ப-ம் சோம்பு சீரகம்.

## புளியம் பழம்.

(சு-ம்) குளிர்சசியும் வறட்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் பித்தசுரத்தை யகற்றும் கமலத்துக்கும் மூளைக்கும் வலிவு கொடுக்கும் தாகம் வாந்தி கிபுகாளென்னும் ரோகம் இவைகளை மாற்றும் மலங்கழியும் வயிறுபோக்குண்டாம் வி-தி இருமலை யுண்டாக்கும ப-ம் கசகசா அல்லது பன்புஷாவின் பானம்.

## கொய்யாப்பழம்.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் கமலத்துக்கு வலியைக் கொடுக்கும் களிப்புண்டாகும் நீனிப்பைக்கு வலிவைக் கொடுக்கும் விக்கலைநிறுத்தும் தீபனமாகும் வி—தி இதன் விரை வயிற்றில் சிக்கல் கொடுக்கும் குளிர்ந்த தேகத்துக்குக் காற்றுண்டாம் ப-ம் சோம்பு மொச்சைபறது இந்தப் பழத்தைக் குடைந்து அகனுள் நேர்வாள முதலிய சுத்திசெய்ய வேண்டிய பொருள்களை அடைத்துப்புடமிடச் சுத்தியாகும்.

## எலுமிச்சம் பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் இதில் இனிப்பு புளிப் இன் புளிப்பு என மூன்றுவகைப்படும் மதுரமான வாசனை உண்டு புளிப்பு பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் நாலு வித்துகளின் வெப்பத்தை யாற்றும் வண்டலை நீக்கித்தெளியப் பண்ணும் சூட்டினலுண்டாகுந் தலைவலி தலைசுற்றல் கிபுகாளென்னும் ரோகம் இவைகளைப் போக்கும் சுரம் முதலிய ரோகங்களில் காணுகிற நாவறட்சி எலுமிச்சம் பழரசத்தைக் கொடுத்தால் தாகத்தைத்தணிக்கும் இதை ஷர்பத்து செய்துக் கொடுக்கலாம் நீனிப்பைக்கு வலிவைக் கொடுக்கும் தீபனத்தை யுண்டாக்கும், பித்தரோகத்தை யாற்றும் காடிதுரிஞ்சிக்காய் இவைகளின் இரசத்துக்குப் பதிலாகும் இதன் விரை பாம்பின் விஷத்தை நீக்கும் வி-தி மார்பின் நரம்புகளுக்கும் தலையில் நரம்புகளுக்கும் உதவாது ப-ம் தேன் சருக்கரை.

## இனிப்பு நாரத்தப் பழம்.

(சு—ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் நீனிப்பைக்கு வலிவைக்கொடுக்கும் நீர் பெருக்குண்டாம் சூட்டைப் பற்றிய இருமலுக்கும் பித்தரோகத்துக்கும் களிப்பு உபயோகப்படும் ஆத்துமத்துக்கு வலிவைக் கொடுக்கும் களிப்பு அதிகப்படும் சுர முதலிய ரோகங்களின் தாகத்தைத் தணிக்கும் சலத்தைப்போல வயிற்றை நிரப்பாமல் தாகத்தை மாத்திரந்தணிக்கும் வி-தி குளிர்ச்சியைப்பற்றிய தேகத்துக்கு இருமலுண்டாகும் மார்புக்குதவாது ப-ம் சருக்கரை.

## புளிப்பு நாரத்தம்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் இதன் ரசந்தவிர மற்றதெல்லாம் சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் இதின் ரசத்தில் சருக்கரை சேர்த்துக்குடிக்கச் சூட்டையகற்றும் பித்தத்தினுண்டாகும் பேதியைக்கட்டும் உதிரத்தின் சூட்டையடக்கும் சாராயமயக்கத்தை நீக்கும் பித்தத்தினாலுண்டாகுஞ் சகல ரோகங்களையும் நீக்கும் இதின் விரையின் பருப்பு வராகனிடை இரண்டு தின்னப் பாம்பு முதலிய சகல விஷங்களையும் போக்கும் வி-தி இதை அதிகரித்துச் சாப்பிட்டால் ஈரல் பஞ்சைப்படும் ப-ம் சருக்கரை.

## பொம்பளிமாசு பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் பித்த சூட்டையகற்றும் தீனிப்பைக்கு வலிவைக் கொடுக்கும் இதின்சக்கை விரைவில் ஜீரணமாகாது வி-தி சிரசில் குளிர்ச்சியைப் பற்றிய நீரையுண்டாக்கும் ப-ம் கடுக்காய் முறப்பா.

## கொடிமாதுளம்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் இதின் மேற்றோல் சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் இருதயத்துக்கும் ஆத்துமாவுக்கும் வலிவைக் கொடுக்கும் தீபனமுண்டாம் கிபுகா னென்னும் ரோகத்துக்கு உபயோகப்படும் பேதியைக் கட்டும் வி-தி மார்புக்கும் தலையின் நரம்புக்கும் உதவாது ப-ம் சுசகசாபானம்.

## இனிப்புச் சேப்புப்பழம்.

(சு-ம்) சூடும் வறட்சியும் சயமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் இருதயம் ஆத்துமா மூளை தீனிப்பை இவைகளுக்கு வலிவைக்கொடுக்கும் கிபுகானென்னும் ரோகத்தை யகற்றும் வி-தி வயிற்றில் காற்றையுண்டுபண்ணும் ப-ம் குல்கந்து.

## புளிப்புச் சேப்புப்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் தீனிப்பைக்கு வலுவைக்கொடுக்கும் பித்தச்சூட்டை யகற்றும் களிப்

புண்டாகும் வி-தி மலத்தைக்கட்டும் இருமலே யுண்டாக்கும் மார்புக் காகாது ப-ம் குல்கந்து கருவாப்பட்டை.

## இனிப்புக் கம்பளிப்பூச்சுப்பழம்.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் செள-ம் குண்டிக்காய் நுரையீரல் மார்பு இவைகளுக்கு ஒத்துவரும் வி-தி தீனிப்பைக்குதவாது ப-ம் சிக்கன்ஜபீன்.

## புளிப்புக் கம்பளிப்பூச்சுப்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் செள-ம் சூட்டையகற்றும் தீனிப்பைக்கு வலிவைக்கொடுக்கும் வி-தி மந்திக்கும் மலத்தைக்கட்டும் மூளைக்கும் மார்பின் நரம்புகளுக்கும் உதவாது ப-ம் தேன் ஜீரணப்பதார்த்தம்.

## சீத்தாப்பழம்.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் செள-ம் தேகத்தைப் பருக்கப்பண்ணும் இருதயத்துக்கு வலிவைக் கொடுக்கும் வி-தி ஒளித்திருக்கும் ரோகங்களை வெளிப்படுத்தும் பித்தத்தை யுண்டுபண்ணும் ப-ம் சத்துக்களைப் பாகப்படுத்தி வாந்திபேதிக்குக் கொடுக்க வேண்டியது.

## சிற்றீச்சம்பழம்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் செள-ம் இல்லை வி-தி மந்திக்கும் தீபனக்குறைவுண்டாம் வயிற்றுக் குதவாது ப-ம் காடி சீரகம்.

## அன்னுசிப்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் குறைந்த வுணவாம் செள-ம் இருதயத்தின் வறட்சியை மாற்றும் மூளைக்கு வலுவைக் கொடுக்கும் கிபுகாவென்னும் ரோகத்துக்குபயோகப்படும். பித்தத்தின் தணலையாற்றும் நீர்ப்பெருக்குண்டாம் வி-தி தொண்டை கபமும் இதின்சக்கை ஜீரணப்படாது ப-ம் சருக்கரை கற்கண்டு.

## இனிப்பு மாதுளேப்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் இருதயத்தின் வறட்சியைமாற்றும் மூளைக்கு வலிவைக் கொடுக்கும் கிபுகாவென்னும் ரோகத்துக்கு உபயோகப்படும் பித்தத்தின் தணலையாற்றும் நீர்ப்பெருக்குண்டாம் வி-தி தொண்டை கபமும் இதின் சக்கை ஜீரணப்படாது ப-ம் சருக்கரை கற்கண்டு.

## புளிப்பு மாதுளேப்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் அதிகச்சூட்டையகற்றும் புளிப்பு மாதுளம்பிஞ்சுக்கு பேதி சிதபேதி ரத்தபேதி இவைகள் கட்டுப்படும் வி-தி மந்திக்கும் ஈரலைப் பஞ்சைப்படுத்தும் குளிர்ச்சியைப்பற்றிய தேகத்துக்குதவாது ப-ம் இஞ்சி முறப்பா.

## இனிப்பு அமறாதுப்பழம்.

(சு-ம்) சாந்தமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் தீனிப்பைக்கு வலிவைக்கொடுக்கும் பித்தச் சூட்டைத்தணிக்கும் தவனத்தையடக்கும் கிபுகாவென்னும் ரோகத்துக்கும் பீனிசத்துக்கும் உபயோகப்படும் வி-தி காற்றை யுண்டுபண்ணும் ப-ம் சுக்கு இஞ்சி முறப்பா தேன்.

## புளிப்பு அமறாதுப்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் தீனிப்பைக்கும் ஈரலுக்கும் வலிவைக் கொடுக்கும் தீபனமாகும் உதிரத்தைப்பற்றிய சூட்டையகற்றும் வி-தி குடலிற் கட்டுண்டாம் ப-ம் தேன்.

## நெல்லிக்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் வயிற்றிலும் குடலிலும் மாசுகளைச் சேரவொட்டாமலும் காக்கும் சூடுதணியும் பித்தமயக்கம் தாகம் அடங்கும் மலத்தைக் கட்டும் நெல்லிக்காய் ஊறுகாய் அல்லது துவையல் நோயாளிகள் அரோசகத்தை யெடுக்கும் தீனிப்பைக்கும் இருதயத்துக்கும் வலி

வைக்கொடுக்கும் தீபனமுண்டாம் ஓக்காளத்தை மாற்றும் வி-தி. காற்றையுண்டுபண்ணும் நரையீரலுக்குதவாது ப-ம் தேன்.

## இனிப்புப் பிசினென்னும் பழம்.

(சு-ம்) சாந்தமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் தீனிப்பை இருதயம் மூளை இவைகளுக்கு வலிவைக்கொடுக்கும் கிபுகாவென்னும் ரோகத்துக்கு உபயோகப்படும் வி-தி இதின் சக்கை வயிற்றில் கட்டையுண்டு பண்ணும் ப-ம் தேனைப் போசனஞ் செய்தபின்பு சாப்பிட வேண்டியது.

## புளிப்புப் பிசியென்னும் பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் பித்தசூட்டையகற்றும் இனிப்புப் பிசியைவிட தேகத்துக்கு அதிக வலிவைக்கொடுக்கும் பழங்களில்லை வி-தி இருமலை யுண்டு பண்ணும் ப-ம் தேன்.

## புளிப்பு மாங்காய்.

(சு-ம்) குளிர்ச்சயும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் தீபனமாம் தீனிப்பைக்கு வலிவைக் கொடுக்கும் வி-தி பழமுதவாது இருமலை யுண்டுபண்ணும் ப-ம் கசகசா அல்லது பன் புஷ்பானம்.

## மகிழம் பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியும் அற்பச் சூடுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் பித்தரோகங்களையும் இரசத்தைப்பற்றிய ரோகங்களையுங் கண்டிக்கும் பற்களின் நோய்க்கு உபயோகப்படும் வி-தி மந்திக்கும், மலத்தைக் கட்டும் காற்றை யுண்டாக்கும் ப-ம் சீரகம் ஓமம் இஞ்சி.

## சர்க்கரைக் கும்மட்டிப் பழம்.

குளிர்ச்சியும் புளிப்புமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் சூட்டையகற்றும், சூட்டைப்பற்றிய சுரங்களை நீக்கிவிடும் தவனத்தை யடக்கும் வி-தி தீனிப்பைக்கும் நுரையீரலுக்கும் குளிர்ந்த தேகத்துக்கும் உதவாது ப-ம் சருக்கரை குல்கந்து.

## கொட்டாஞ்சிப் பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் பித்தச் சூட்டையகற்றும் உதிரத்தின் பதத்தைச் சீர்படுத்தும் வலிவுண்டாம் வி-தி மலத்தைகட்டும் குளிர்ந்த தேகத்துக்காகாது ப-ம் பேதிமாத்திரை கரம்மசாலா.

## மூலாம் பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் அற்பச் சூடுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் தேகத்தைத் தழைக்கப் பண்ணும் நீரையும் மூலைப்பாலையும் பெருகச்செய்யும் வி-தி மங்கிக்கும் விரைவில் ஜீரணப்படாது ப-ம் சருக்கரை, அல்லதுமாதுளம் பழத்தின் ஷர்பத்து.

## ராபசித்தாப் பழம்.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் அற்ப வுணவாம் சௌ-ம் இல்லை வி-தி வயிறுகணக்கும் ஜீரணப்படாது, தலைவலியுண்டாகும் ப-ம் குல்கந்து கடுக்காய் முறப்பா.

## கௌலாவென்னும் பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த உணவாம் சௌ-ம் இருதயத்துக்கு வலிவைக் கொடுக்கும் தேகத்தைத் தழைக்கப்பண்ணும் தாகத்துக்கும் வாந்திக்கும் உபயோகப்படும் வி-தி குளிர்ச்சியைப்பற்றிய இருமலையுண்டாக்கும் ப-ம் சருக்கரை.

## களாப்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் தீனிப்பைக்கு வலிவைக் கொடுக்கும் தீபனமாகும் சூட்டுத் தேகத்துக் கொத்துவரும் வி-தி காற்றை யுண்டுபண்ணும் ப-ம் சோம்பு.

## கோவைப்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்தவுணவாம் சௌ-ம் பித்தச் சூட்டையும் உதிரக்கொதிப்பையும் ஆற்றும் வி-தி மந்தப்படும் வயிற்றிற் காற்றையதிகரிக்கப்பண்ணும் ப-ம் குல்கந்து.

## அத்திப்பழம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வரட்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் பித்தத்தின் சூட்டையகற்றும், மலசுத்தியாம் கண்களுக்கு ஒளியுண்டாகும் பேதியைக்கட்டும் வி-தி விரைவில் சீரணப்படாது ப-ம் சீரகம் புதீனு.

## நருவிலிங்கபழம்.

(சு-ம்) குளிர்ச்சி சிலிர்ப்பு இவைகள் சமமாகும் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் தவனத்தைமாற்றும், கட்டைநீக்கும், மார்புக்கும் தொண்டைக்கும் உபயோகப்படும் சூட்டைப்பற்றிய சுரத்தை மாற்றும், வி-தி தீனிப்பைக்கும், ஈரலுக்கும் உதவாது ப-ம் ரோஜாப்பூ பந்நீர்.

---

# காய்களின் வகை.

## சுரைக்காய்.

(சு-ம்) குளிர்ச்சியுஞ் சிலிர்ப்புமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் சூட்டையகற்றும் தேகத்தணியும் தவனத்தை யடக்கும் நீரைப்பெருக்கும், மலசுத்தியாகும் வி-தி அதிகரித்த சத்துகளோடு இணங்கும் ப-ம் புளிப்பு காடி.

## பூசிணிக்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் இல்லை வி-தி உதிரத்தைக் குழம்பேறச் செய்யும் வண்டலை யதிகப்படுத்தும், வயிறுயுப்பம், விரைவில் சீரணப்படாது காற்றுண்டாகும் ப-ம் சுக்கு சீரகம்.

## கல்யாணப் பூஷணிக்காய்.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் பிரமியச் சூட்டைமாற்றும், தேகவரட்சியை நீக்கும் சூட்டையகற்றும் விந்து விளையும், தாதுபுஷ்டியுண்டாம் வி-தி ஜீரணசத்தி யில்லாதவர்களுக்குதவாது ப-ம் சருக்கரை கற்கண்டு.

## வெள்ளரிக்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் சூட்டையகற்றும் தவனத்தை யடக்கும் நீரைப் பெருக்கும் ஈரல், தீனிப்பை, நீர்த்தாரை இவைகளைப்பற்றிய சூட்டை நீக்கி விடும் நீர்க்கடுப்பையாற்றும் வி-தி குளிர்ந்த தேகத்திற்குக் காற்றை யுண்டு பண்ணும் ப-ம் சுக்கு, சோம்பு, உப்பு, தேன்.

## கக்கரிக்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் உதிரத்தைப்பற்றிய சூட்டையகற்றும் பித்தச்சூட்டையும் சூட்டினாலுண்டாகுஞ் சுரத்தையுமாற்றும் உதிரக்கடுப்பை யாற்றும் வி-தி நீரைப் பெருக்கும் மந்திக்கும் விரைவில் ஜீரணப்படாது குளிர்ந்த தேகத்துக்குக் காற்றையுண்டாக்கும் ப-ம் மிளகு ஓமம்.

## ஆகாயக் கக்கரிக்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் அழலை, கரப்பான் பித்தம் இவைகளைப் போக்கும் போக முண்டாகும் அவிழ்தங்களின் சூட்டை யாற்றும் வாந்தியை நிறுத்தும் வி-தி ஜபத்தை விளைக்கும் ப-ம் சீரகம் சுக்கு.

## அவரைக்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் சூட்டுடம்புக்குதவும் வி-தி மலம் அதிகரித்து உதிரங் குறையும் மந்திக்கும் விரைவில் ஜீரணப்படாது வயிற்றிலும் குடல் களிலுங் காற்றையுண்டாக்கும் ப-ம் குல்கந்து ஜீரணபதார்த்தம.

## வாள் அவரைக்காய்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் இல்லை வி-தி உதிரசுபாவ குணத்தைமாற்றி அசுபாவ குணத்தை அதிகரிச்சச்செய்யும் பித்தம், வாந்தி, அரோசிகம் வாயில் நீர்காணுதல் முதலானவைகளை யுண்டாக்கும் ப-ம் தேன் புதினா இஞ்சி.

## பீர்க்கங்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் சூட்டைப்பற்றிய சுரத்துக் குபயோகப்படும் பித்தத்தினை லுண்டாகும் பேதியைக்கட்டும் ஓக்காளத்தை மாற்றும் வி-தி மந்திக்கும் குளிர்ந்த தேகத்துக்குக் கபத்தை யதிகரிக்கச் செய்யும் ப-ம் நெய், இறச்சி, கறம்மசாலா.

## பீர்க்கங்காயின் மேற்றோல்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் தேகத்தில் நல்ல சத்துகளையுண்டாக்கும் வி-தி இதின் சக்கை விரைவில் ஜீரணப்படாது மந்திக்குமவயிற்றில் வலியுண்டாம் ப-ம் குல்கந்து ஜீரணபதார்த்தம்.

## நுரைப் பீர்க்கங்காய்

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் தவனத்தையடக்கும் மலசுத்தியாம் வி-தி குளிர்ந்த தேகத்துக்குச் சுரத்தை யுண்டாக்கும் தீனிப்பையின் வலிவைக் குறைக்கும் ப-ம் கறம்மசாலா ஜீரணபதார்த்தம்.

## புடலங்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் தேகத்தின் அழலையைமாற்றும் சூட்டைக் குறைக்கும் வரட்சியைநீக்கும் தழைப்புண்டாகும் வி-தி குளிர்ந்த தேகத்துக்குத வாது ப-ம் இறைச்சி கறம்மசாலா.

## குள்ளப் புடலங்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிப்புமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் சூட்டையகற்றும் வி-தி சலவையுண்டாம் விஷக்கடிகளுக்குதவாது கரப்பான், சொறிசிரங்கு உண்டாகும் ப-ம் இறைச்சி கறம்மசாலா.

## மிதி பாகற்காய்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுதத வுணவாம் சௌ-ம் சூட்டடம்புக்கு காற்றை நீக்கும் தீனிம்பையிலுண்டாகும் பூச்சுகளைக் கொல்லும் குடலுக்கு வலியுண்டாகும் வெள்ளை பாகற்

காய்க்கு அதிகக் குணங்களுண்டு, பாஷாணத்தை முறிக்கும் வி-தி சூட்டுக்குதவாது ப-ம் நெய் புளி.

## கொம்பு பாகற்காய்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் தீபனமாகும் வி-தி சூட்டையதிகரிக்கச் செய்யும் நெஞ்சிற் கரிப் புண்டாம் தினவு சொறிகலுண்டாம் பத்தியத்துக் குதவாது ப-ம் சருக்கரை நெய் புளிப்பு.

## காட்டு பாவற்காய்.

(சு-ம்) சூட்டிலும் வறட்சிலும் சமமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் தீபனமுண்டாம் உணவில் ஆவலதிகரிக்கும் காற்றைக்கண் டிக்கும் தீபனக்குறைவுள்ளவர்களுக் கொத்துவரும் வி-தி அற்பச் சூட்டைக் கொடுக்கும் ப-ம் எலுமிச்சம் பழச்சாறு நெய் இறைச்சி.

## தூதுளங்காய்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் தீபனமுண்டாம் தீனிப்பை குடல் இவைகளுக்கு வலிவைக் கொடுக் கும் நெஞ்சுகரிப்பு வாய்குமட்டல் வாந்தி அரோசிகம் இவைகளை மாற்றும் வி-தி சூட்டுடம்புக்குதவாது மலத்தைக்கட்டும் ப-ம் உப்பு புளி நெய்.

## பயற்றங்காய்.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் தீபனமாம் அரோசிகம் அறும் காற்றைநீக்கும் கபத்தையறுக்கும் நீரைப்பெருக்கும் வி-தி மருந்துகளின் குணத்தை முறிக்கும் ப-ம் வேகவைக்கிறது அல்லது நெருப்பில் வதக்குகிறது.

## மிளகாய்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் பாம்புகளின் விஷத்தைமாற்றும் தீபனமுண்டாகும் குளிர்ந்த தேகத் தோருக்குதவும் மிளகாய் தூளை ரோஜாப்பூ வெந்நீர் கஷாயத் தோடு சேர்த்துக் கலக்கி வாய் கொப்புளித்தால் தொண்டை நோய் தீரும் இதை அரைத்து துணியில் தடவி ஜந்நிரோகங்களுக்குப்

போடலாம் களிம்பாகச் செய்து போட்டால் தோலைச் சிவப்பிக்கும் வி-தி சூட்டையும் வறட்சியையும் அதிகரிக்கச்செய்யும் பேதியாகும் சூட்டுடம்புக்குதவாது ப-ம் புளிப்பு நெய்.

## பச்சை மிளகாய.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் அரோசிகத்தை மாற்றும் பதார்த்தங்களின் ருசியை அதிகரிக்கச் செய்யும் வி-தி வயிற்றுப் பிடுங்கலுண்டாம் பேதியாகும் கீரைகளின் குளிர்ச்சியைமாற்றும் ப-ம் எலுமிச்சம் பழச்சாறு உப்பு வெங்காயம்.

## கத்திரிக்காய்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் குட்டல் புஷ்டியுண்டாம் கட்டையவிழ்க்கும் வி-தி வறட்சி தினவு சொறி இவைகளை யதிகப்படுத்தும் விலாவில் வலியுண்டாம் ப-ம் நெய் இறைச்சி.

## கண்டங்கத்திரிக்காய்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் தீபனமுண்டாம் காற்றுகளை அகற்றும் தேக அசதியை நீக்கும் சுறு சுறுப்புண்டாம் வி-தி வயிறு வலிக்கும் ப-ம் விரையைப் போக்கிச சமைக்கவும்.

## முள்ளிக்காய்

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் தீபனமுண்டாம் வாதப்பிடிகளை யாற்றும் வி-தி அற்பச் சூடுண்டாம் ப-ம் விரை போக்கி நெய் புளி விடவும்.

## கொத்தவரைக்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் சூட்டுடம்புக்குதவாது வி-தி வயிற்றிற் காற்றை அதிகரிக்கச்செய்யும் மந்தப்படும் ப-ம் இஞ்சி சுக்கு சீரகம் நெய்.

## வெண்டைக்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் சூட்டையகற்றும் மார்பின் கபத்தையறுக்கும் சூட்டைப்

பற்றிய இருமலுக்கு உபயோகப்படும் குடலின் சூட்டையாற்றும் வி-தி மந்தப்படும் ப-ம் ருமிமஸ்த்தகி நாடடுச் சீரகம்.

## மணத்தக்காளிக்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் செள-ம் சூட்டையும் தவனத்தை யடக்கும் நீரைப் பெருக்கும் வீக்கத்து குபயோகப்படும் இதில் சிகப்பு கறுப்பு என இரண்டு சாதிகளுண்டு இலேசத்தில் சருக்கரையைச் சேர்த்துக் கொடுத்தால் அக்ஷரம் கரப்பான் இவைகள் நீங்கும் கஷாயமிட்டு வாய் கொப்ப ளித்தால் வாய் ரணம் நீங்கும் வத்தல் கஷாயம் நீர் அதிகப்படும் வி-தி குளிர்ந்த தேகத்துக்குதவாது ப-ம் சீரகம் ஓமம்.

## வாழைக்காய்.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியும் சமமாம் பி-ம் அதிக வுணவாம் செள-ம் தழைப்புண்டாகும் தேகம் பருக்கும் வி-தி மந்திக்கும் தீபனத்தையடக்கும் வயிறு வலிக்கும் ப-ம் மிளகு சீரகம்.

## வாழைப்பிஞ்சு.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த வுணவாம் செள-ம் உதிரப் போக்கு உதிரக் கடுப்பு இவைகளுக் கனுகூலப் படும் பெரும் பாண்டு உதிரத்தைக்கட்டும் வி-தி மந்திக்கும் ப-ம் நெய் மிளகு.

## பலாக்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் செள-ம் தாதுபுஷ்டி அதிகரிக்கும் விந்து விளையும் வி-தி வயிறு பருக்கும் மந்திக்கும வாய்வு அதிகரிக்கும் ப-ம் இஞ்சி மிளகு சீரகம்.

## பலாப்பிஞ்சு.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த வுணவாம் செள-ம் சூட்டையகற்றும் பித்தந்தணியும் தாகத்தை மாற்றும் தாது அதிகரிக்கும் பால் சுரக்கும் வி-தி மந்திக்கும் வயிறு வலிக்கும் ப-ம் கறம்மசாலா.

## அத்திக்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் சூட்டையகற்றும் சூட்டுடம்புக்கதிக உபயோகப் படும் தேகத்திலுள்ள புண்ணையாற்றும் மலத்தைப் போக்கும் வி-தி விரைவில் ஜீரணப்படாது ப-ம் சீரகம் புதீனு

## அத்திப்பிஞ்சு.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் இரத்தக்கடுப்பு உதிரபேதி மூலக்கிராணி வயிற்றுக் கடுப்பு இவைகளை நீக்கும் பெரும்பாட்டுக்கு உபயோகப்படும் வி-தி மந்திக்கும் ப-ம் வேகவைத்துத் தண்ணீர் இறுத்து விடவும்.

## முருங்கக்காய்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் குடல் தழைப்புண்டாகும் காற்றை யோட்டிவிடும் நீரைப் பெருக்கும் தாது உண்டாகும் வி-தி சூட்டுடம்புக் குதவாது ப-ம் புளிப்பு நெய்.

## முருங்கப்பிஞ்சு.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த வுணவாம் சௌ-ம் காற்றையோட்டும் நீர்ப்பெருகும் தாதுவிளையும் பத்தியத்துக் குதவும் வேர்பட்டை ரசஞ்செய்து கொடுத்தால் பாரிசவாதம் சீதசுரம் காக்கை வலி சூதகசந்நி இவைகள் நீங்கும் அரைத்து மேலுக்குப் போட்டால் தோல் சிவக்கும் முருங்கைப்பூவை பாலில் காய்ச்சி சாபபிட்டால் இந்திரிய புஷ்டி யுண்டாகும் வி-தி சூட்டைக் கொடுக்கும் ப-ம் பால் நெய்.

## அரிநெல்லிக்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் குளிர்ச்சி யுண்டாம் பித்தந்தணியும் தவனம் அடக்கும் சூடுந்தணியும் வி-தி தலைவலியுண்டாம் சுரமுண்டாகும் சளிபிடிக்கும் ப-ம் கல்லுப்பு கறியுப்பு.

## புளியங்காய்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம், அசுத்த வுணவாம் சௌ-ம் பித்தத்தை நீக்கும் பசியுண்டாம் வி-தி சைத்தியத்தை யதிகரிக்கச்

செய்யும் தலைவலி காய்ச்சல் சளி இவைகளை யுண்டாக்கும் ப-ம் உப்பு பச்சை மிளகாய்.

## மாங்காய்.

(சு ம்) குளிர்ச்சயும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் தேகத்தில் இரத்தத்தை யுண்டாக்கும் அரோசிகத்தை மாற்றும், வாய்க்கு ருசியுண்டாம், சுறிபதார்த்தங்களின் ருசியை அதிகரிக்கச் செய்யும், கும்பியில் வேகவைத்துச் சாறு பிழிந்து குடிக்கத் தீபனம் அதிகப்படும் மாங்கொட்டை பருப்பு அரைத்துக் கொடுக்க மூலச்சூடு, ரத்தமூலம் நீங்கும் வேர்பட்டை கஷாயத்தால் சீதபேதி குணமாகும் வி-தி தாது கஷ்டம் உண்டாகும் சொறி சிரங்குண்டாம் ப-ம் உப்பு, காடி, சீரகம்.

## மாம்பிஞ்சு.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுணவாம் சௌ-ம் வாந்தி ஓக்காளம் அரோசிகம் இவைகளை மாற்றும் வாய்க்கு ருசியுண்டாம் வி-தி சொறிசிரங்குண்டாம் வயிறு வலிக்கும் ப-ம் உப்பு சீரகம்.

## தேங்காய்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் சுத்த இரத்தமுண்டாகும் தாதுவிளையும் இடுப்பு வலி கீல் வாதம் பாரிசவாத முதலிய வாதரோகங்களைக் கண்டிக்கும் வலிவு கொடுக்கும் உட்புண்களையும் மூலத்தையுமாற்றும் வாய் நாற்றத்தை யெடுக்கும் இதின் வழுக்கையில் கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டு வர மூலச்சூட்டை யெடுக்கும் விந்து விளையும் முற்றின தேங்காய்ப் பால் சாப்பிடப் பேதியாகும் இதன் யிளநீரில் வறுத்த கொததபவலிச் சூரணம் ஊறவைத்துக் குடிக்க நீர்த்தாரையில் உதிரம் ஒழுகுவதை நிறுத்தும் இதன் கொப்பறையில் ஐபுவண இலே சேர்த்து அரைத்துப்பூசி ஸ்நானஞ் செய்யச் சொறி தினவு முதலியதுந்தீரும் இதை நெல்லோடு வேக வைத்துக் குழந்தைகளுக்குக் கொடுக்க வயிற்றிலுள்ள கிருமிகள் சாகும் இதன் தைலத்துக்குப் புத்தி யதிகரிக்கும் இடுப்பு வலி மூல வலி முதலியவைகள் சொஸ்தமாகும் வி-தி சூட்டுடப்புக் குதவாது நெஞ்சு கரிப்பு ஓக்காளம் இவை யுண்டாகும் ப-ம் எலுமிச்சம், பழ முதலிய புளித்த பதார்த்தங்களாம்.

# கீரைவகைகள்.

## சல்லாதுக் கீரை.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் குறைந்த உணவாம் சௌ-ம் சுத்த இரத்தமுண்டாகும் ஈரலுக்கும் குண்டிக்காய்க்கும் பலங் கொடுக்கும் நீர்ப் பெருக்குண்டாம் வீக்கத்தை அகற்றும் சுரத்தின் சூட்டைமாற்றும் வி-தி ஒக்காளம் இருமல் உண்டாகும் ப-ம் சருக்கரை வாதுமைப்பிசின்.

## காட்டுச் சல்லாதுக் கீரை.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் சுத்த இரத்தமுண்டாம் தீனிப்பைக்கு வலிவு கொடுக்கும் சல்லாதுக் கீரையிலும் இது அதிக பிரயோசன முள்ளது வி-தி மலச்சிக்கலுண்டாம் ப-ம் காடியும் தேனும்.

## காப்பிரி சல்லாதுக் கீரை.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் சுத்த இரத்தமுண்டாகும் சூட்டையாற்றும் தேகத்தைக் குளிரச்செய்யும் உதிர சுத்தியுண்டாம் நித்திரை பிடிக்கும் வி-தி காற்று அதிகரிக்கும் ப-ம் சோம்பு சீரகம்.

## கோவிசுக்கீரை.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த இரத்த முண்டாம் அசுத்த வுணவாம் சௌ-ம் மலங்கழியும் வி-தி இதை விட காட்டுக் கோசுக்கீரை அதிகசூடாம் வறட்சியுண்டாக்கும் தேகத்தில் வண்டலை யுண்டாக்கும் ப-ம் வேக வைத்து நீரை யிறுத்து விட்டுச் சமைக்க வேண்டும்.

## கொத்தமல்லிக் கீரை.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அதிக வுணவாம் சௌ-ம் தடித்த வுதிரமுண்டாம் சிரசையும் மூளையையும் பற்றிய சூட்டைமாற்றும் நித்திரை பிடிக்கும் சீரணமுண்டாம் மேற்படி

கீரையை துவையல்செய்து சாப்பிட்டால் அரோசிகம் பித்தம் சுரம் இவைபோகும் வி-தி குளிர்ந்த தேகத்துக்குதவாது மறதி அதிகரிக்கும் ப-ம் அரைத்தரம் வெந்த முட்டையின் மஞ்சளம்பிலி

## கோழிக்கீரை அல்லது பருப்புக்கீரை.

சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் தேகங்குளிரும் நீர் அதிகரிக்கும் கண்களுக்கும் பிரகாசமுண்டாகும் வயிறிளகும் மலசுத்தியாம் தவனத்தை யடக்கும் வி-தி குளிர்ந்த தேகத்தோருக் குதவாது ப-ம் மிளகு சீரகம்.

## தண்டுக்கீரை.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் மத்திம இரத்த முண்டாம் அதிக வுணவாம் சௌ-ம் சூட்டை யாற்றும் நீர் சுருக்கு வெட்டை இவைகளுக் குபயோகப்படும் மூலக் கடுப்பை நீக்கும் வெண்கீரைத்தண்டுக்கு மிதுவேகுணம் வி-தி உடல் கனக்கும் மந்திக்கும் தலைபாரிக்கும் சளிபிடிக்கும் குளிர்ந்த தேகத்துக் குதவாது ப-ம் இஞ்சி கடுகு வெள்ளுள்ளி.

## செங்கீரைத்தண்டு.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் மத்திம வுணவாம் சௌ-ம் மத்திம இரத்த முண்டாம் உடல்தணியும் சூட்டை யகற்றும் நீர்ச்சுரக்கும் உதிரவாந்தி உதிரக்கடுப்பு உதிர மூலம் இவைகளுக் குபயோகப்படும் வி-தி நீர்ப்பெருகும் மந்திக்கும் குளிர்ந்த தேகத்துக்கு வயிறு கனக்கும் ப-ம் மிளகு சீரகம் இஞ்சி.

## முளைக்கீரை.

(சு-ம்) குர்ளிச்சியுஞ் சிலிர்ப்புமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் சுத்த இரத்த முண்டாம் சூட்டையகற்றும் உதிரக் கொதிப்பையகற்றும் பித்த எரிவைப்போக்கும் கண்குளிரும் சொறி சிரங்கு தினவு இவைகளைப் போக்கும் விதி நீர்ப் பெருக்கும் மந்திக்கும் அப்பியாச மில்லாதவர்களுக்குச் சிதளிக்கும் ப-ம் மிளகு இஞ்சி சீரகம்.

## அறுகீரை.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் தடித்த இரத்த முண்டாம் தீபன முண்டாம் குளிர்ந்த தேகத்தோருக் குபயோகப்படும் வி-தி தேகச் சூட்டை யதிகரிக்கச் செய்யும் மூலரோகிகளுக் குதவாது வயிறு கடுப்புண்டாகும் ப-ம் புளியிட்டுச் சமைக்கவும்.

## புளியாரைக்கீரை.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் சுத்த இரத்த முண்டாகும் பித்தச்சூடு வாந்தி குமட்டல் நாவறட்சி இவைகளை நீக்கும் ஆகாரத்தை யிழுக்கும் தீபன முண்டாகும் உதிரக் கடுப்பு உதிர பேதி மூலக் கடுப்பு இவைகளை மாற்றுவிக்கும் வி-தி அதிக அப்பியாசப் படுத்தினால் விந்து கெடும் ப-ம் மாமிசங்களில் சேர்த்து சமைக்கவும்.

## கொடி வசளைக்கீரை.

(சு-ம்) குளிர்ச்சியுஞ் சிலிர்ப்புமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் சுத்த இரத்த முண்டாம் சூட்டைத் தணிக்கும் தேகத்துக்குப் பலமுண்டாம் தாது விளையும் தீபனமாகும் வயிறிளகும் குடற் சிக்கலை அறுக்கும் அரோசிகத்தை மாற்றும் வி-தி கபத்தை விளைக்கும் ப-ம் மிளகு சீரகம்

## குத்துவசளை.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் சுத்த இரத்த முண்டாம் உதிரக் கொதிப்பை மாற்றும் நீர்க்கடுப்பு அகலும் வயிறிளகும் தீபனமாகும் மேகவூறலை நீக்கும் தேகந்தழைக்கும் வி-தி இல்லை ப-ம் இல்லை.

## சுக்கான்கீரை.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் குறைந்த வுணவாம் சௌ-ம் சுத்த இரத்த முண்டாம் பித்தத்தைப்பற்றிய சகல ரோகங்களையுமாற்றும் அரோசிகம் வாந்தி ஒக்காளம் இவைகளை நீக்கும் தீபனமாகும் சூலைவலியைமாற்றும் வி-தி குளிர்ந்த தேகத்துக்குதவாது ப-ம் புதினா இஞ்சி சீரகம்.

## சதகுப்பைக் கீரை.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் மத்திம வுணவாம் சௌ-ம் வாய்வுகளை நன்றுய்க்கண்டிக்கும், தீபனமாகும் உதிரச் சிக்கலை மாற்றும், குடல் வாயுவை யகற்றும் குடலைச் சுற்றி படுத்தும் மலமிளகும், வி-தி தலை சுற்றும் அரோசிக முண்டாம் ப-ம் புளிச்சக் கீரை சேர்த்துச் சமைக்கவும்.

## வெந்தியக்கீரை.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் தடித்த இரத்த முண்டாம் மத்திய வுணவாம் சௌ-ம் வாயுவுகளைக் கண்டிக்கும் மலத்தைப் போக்கும் பெருமலைமாற்றும் மார்புவலி தொண்டைப் பிடிப்பு கெர்ப் பவலி இவைகளை மாற்றும் இடுப்புவலி நீங்கும் மூலவாயுவு நீங்கும் வி-தி வயிறு வலிக்கும் சூடு அதிகரிக்கும் ப-ம் காடி தேன்.

## வேளைக்கீரை.

(சு—ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் தடித்த இரத்த முண்டாம் மத்திம வுணவாம் சௌ-ம் வாய்வுகளைக் கண்டிக்கும் நீரை வறட் டும் சைத்தியங்களை அறுக்கும் வயிறிளகும் உதிரச் சிக்கலை யறுக் கும் வி-தி வயிறுவலிக்கும் சூடு அதிகரிக்கும் ப-ம் நெய் வெண்ணை யும் எலிமிச்சம் பழச்சாறு.

## சதாபிலை.

(சு—ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த இரத்த முண்டாம் அசுத்த வுணவாம் சௌ-ம் வாயுவுகளை நன்றுய்க்கண்டிக்கும் சைத் தியங்கள் அண்டாது விசேஷமாக உதிரக் கட்டுகளை நீக்கும் வயிற் றில் மரித்துப் போன கெர்ப்பத்தைத் தள்ளிவிடும் சூதக ஜந்நிரோ கத்துக்கு உபயோகப்படும். வாயுவினுல் காணுகிற வயிற்று வலி நீங்கும் இதை முக்கியமாய் உபயோகப் படுத்தும்படி கண்டிருக்கி றது உள்ளுக் காவது அல்லது ஆசனத்து வழியாவது பிரயோகிக் கலாம் குழந்தைகளுக்குக் காணுகிற இசுவுரோகம் இது கெர்ப்பத் தில் போய்ப்பறப்பிடிக்கு தென்று முன்னேருடைய எண்ணம் இப்போதும் கற்பினிகளுக்குக் கொடுத்தால் பிண்டத்தை சேதப் படுத்துகிற தென்று நமது தேசத்தாருடைய எண்ணம் இங்கி லாண்டு தேசத்தில் பிண்டத்தை வெளிப்படுத்த இதை எப்போதாகி லும் உபயோகப்படுத்துவ தாண்டு நமது தேசத்து வயித்தியாள் இலையை யிடித்து ஸ்மஸ்த்தம் பரோகத்துக்குச் சருமம் சிவக்கும்

படி கட்டுவதும் உண்டு இருமலுக்கு நோயாளி யிருக்கிற அறைக்குள் தூபம் போடுவதும் உண்டு வயிற்றிலிருக்கிற கிருமிகளுக்கு ரசத்தைப்பிழிந்து ஒரு தேயிலைக் கரண்டி 3 வருஷத்துக்கு மேற்பட்ட குழந்தை களுக்குக் கொடுத்தால் நன்மை செய்யும் தூர்பலத்தால் காணுகிற மந்தாகினி ரோகத்துக்கு தமிழ் வைத்தியர்கள் உபயோகப் படுத்துகிறார்கள். இதில் மூன்றுவகை அவைகளில் காட்டு சதர்பிலை நஞ்சு வி-தி அதிகச் சூட்டைக் கொடுக்கும் தேக பலத்தைக் குறைக்கும் ப-ம் மோரில் வேகவைக்கவும்.

## புதினா.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த இரத்த முண்டாம் குறைந்தவுணவாம் சௌ-ம் தீபனமாம் வாய்வுகளைக் கண்டிக்கும் தீனிப்பைக்கும் குடலுக்கும் வலிவைக் கொடுக்கும் அஜீரணத்தை மாற்றும் உதிரச்சிக்கலையுருக்கும் வி-தி மூலத்துக் குதவாது ப-ம் பழச்சாறு மாசக்காய்.

## மணத்தக்காளி கீரை.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த இரத்த முண்டாம் குறைந்தவுணவாம் சௌ-ம் சூட்டை யகற்றும் தபனத்தை நீக்கும் நீர்பெருகும் வீக்கம் மகோதரங்களுக்கு அதிக உபயோகப்படும் நீரைப்பற்றிய ரோகங்களுக்கும் வாய்வேக் காட்டுக்கும் உள்ரணங்களுக்கும் அதிகபயத்தைக் கொடுக்கும் இதின் காய்க்கு மிதுவேகுணம். அதிக அப்பியாசத்தினால் நீர்பெருகும் ப-ம் கடுகு சீரகம்.

## தேயிலை.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த இரத்த முண்டாம் குறைந்த வுணவாம் சௌ-ம் தேகத்துக்கும் ஆத்துமத்துக்கும் வலிவு அதிகரிக்கும் உதிரத்தின் அழுக்கைப் போக்கித் தெளியப்படுத்தும் சளிப்பைமாற்றும் இது சீனதேசத்தில் விளைகின்றது இந்த இலையில் பச்சை கறுப்பு என இரண்டுயினங்களுண்டு தேயிலையில் துவர்ப்பு குணம் நரம்புகளில் வியாபித்து தென்பைக் கொடுத்து ஆயாசத்தைப் போக்கும் முக்கியமாய்ப் பச்சை நிறத் தேயிலையானது நித்திரையைப் போக்கடிக்கும் தேத்தண்ணீர் இரத்த வோட்டத்தைக் குறைத்து சாராயம் குடித்துக் காணுகிற மயக்கத்தையும் தேகம் அலுத்துக் காணுகிற அறக்கத்தையும் நீக்குகிற தென்று

சிலருடைய சித்தாந்தம். வியாதிகளில் இளைப்பையாற்ற இதைக் கொடுக்கலாம். தேத்தண்ணீரை காரமாய்ச்செய்து கொடுத்தால் சிலவேளை தென்பைக்கொடுக்கும் சிலவேளை சோம்பலைத் தரும் வி-தி சூட்டுடம்புக்குதவாது ப-ம் பசுவின்பால் சருக்கரை.

## அத்திக்கீரை.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் அசுத்த இரத்த முண்டாம் குறைந்தவுணவாம் சௌ-ம் சூட்டையறுக்கும் கண் குளிரும் மலசுத்தியாகும் நீர்பெருகும் வாய்வு அறும் மகோதரம் வீக்கம் நீர் அடைப்பு இவைகளைமாற்றும் பித்தத்தைத்தணிக்கும் வி-தி மருந்துகளின் சத்தை முறிக்கும் பசுவின்பால் சேர்க்கவும்.

## கருவேப்பிலை.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியும் அற்பச்சூடுமாம் பி-ம் சுத்த இரத்த மூண்டாம் குறைந்தவுணவாம் சௌ-ம் தீனிப்பைக்கு வலிவைக்கொடுக்கும் பித்த ஒக்காளத்தை மாற்றும் அரோசிகத்தை நீக்கும் மூலபேதியைக்கட்டும் தீபனமாகும் காற்றுகளினாலுண்டாகுந் தீங்கை மாற்றும் வி-தி குடலில் மறட்சி யதிகரிக்கும் ப-ம் நெய் வெண்ணை.

# காய்தானியவகை.

---

## காப்பிக்கொட்டை.

(சு-ம்) அற்பச் சூடும் அதிகவறட்சியுமாம் பி-ம் சுத்த இரத்த முண்டாம் குறைந்த வுணவாம் சௌ-ம் உதிரக் கொதிப்பை யடக்கும் சளிப்பை மாற்றும் மார்ச்சளி இருமல் இவைகளைப் போக்கும் தீனிப்பைக்கு வலிவைக்கொடுக்கும் அசதி நீங்கும் மூளையில் மாசுகள் அடையாமற்காக்கும் இதைப் பொன் வறலாய் வறுத்துப் பொடிசெய்து சலத்திற்கலந்து கொடுக்கப் பேதிகளைகட்டும் இதற்குத் தீபனத்தை உண்டாக்கிற குணமும் விந்தை விருத்திப் படுத்துகிற குணமும் உண்டு குவைனு நில ஆவாரை சீமை இந்துப்பு இவைகளோடு சேர்த்துக் கொடுத்தால் அவைகளுக்கு இருக்கிற வெகுட்டலை எடுத்து விடும் சுவாசத்திற்கு கொடுத்தால் உடனே

சமப்படுத்தும் குழந்தைகளுக்கு காணுகிற வாந்தி முகஜந்நி சுரங்கள் கக்கிருமல் ரோகம் அபினி முதலிய ரோகங்களுக்கு கொடுத்தால் சவுக்கியமுண்டு வி-தி நித்திரைபிடியாது தாது நஷ்டப்படும் ப-ம் பசுவின் நெய் சருகரை.

## துவரை.

(சு-ம்) சூடும் வறழ்ச்சியுமாம் பி-ம் அசுத்த இரத்தமும் அதிகவுணவாம் சௌ-ம் தீனிப்பைக்கும் குடலுக்கும் புஷ்டியுண்டாம், வயிறிளகும் காற்றையகற்றும் தீபனமாகும் தேகந் தழைக்கும் தேகத்துக்கு வலிவுகொடுக்கும் வி-தி, சூட்டுடம்புக்கு வயிறுப்பும் ப-ம் நெய் புளி சேர்த்துச் சமைக்கவும்,

## பச்சைப்பயறு.

(சு-ம்) குளிர்ச்சியும் வறழ்ச்சியுமாம் பி-ம் சுத்த யிரத்த முண்டாம் அதிகவுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் தாதுவளரும் உடல்பருக்கும் பித்தவுடம்புக்குதவும் சூட்டினுலுண்டாகும் பேதியை நிறுத்தும் வி-தி குளிர்ந்தவுடம்பின் குண்டிக்காய்க்கு வலிவுண்டாம் ப-ம் தேன் சருக்கரை.

## உளுந்து.

(சு-ம்) குளிர்ச்சியும் கொழுமையுமாம் பி-ம், சுத்தஇரத்த முண்டாம் அதிகவுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் தாதுவிளையும் இடுப்புக்கு வலியைக் கொடுக்கும் வி-தி மந்திக்கும் மலச்சிக்கலுண்டாம் காற்றை விளைக்கும் வயிறுப்பும் ப-ம் நெய் ஜீரணப்பதார்த்தம்.

## மொச்சைக்கொட்டை.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் அசுத்த இரத்த முண்டாம் அதிகவுணவாம் சௌ-ம், 'இல்லை தேகந்தழைக்கும் இருமலுக்கும் குடலைப்பற்றிய புண்ணுக்கும் வாந்திக்கும் அதிக உபயோகப்படும் வி-தி நீர் அதிகரிக்கும் மந்திக்கும் சூட்டைப் பற்றிய ஆவியையுண்டாக்கும் ப-ம், சீரகம் மிளகு உப்பு.

## கடலே.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த இரத்த முண்டாம் அதிகவுண்வாம் சௌ-ம் தேகந்தழைக்குந் தாது விளையும் நரையீரலுக்குப் பலத்தைக் கொடுக்கும் வி-தி தேகச் சூட்டை அதிகரிக்கச் செய்யும் மந்திக்கும் குண்டிக் காயில் வலியையும் நீர்த்தாரையிற் புண்ணையும் விளைவிக்கும் ப-ம் கசகசா காடி.

## பட்டாணி.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த இரத்தமுண்டாம் குறைந்த வுணவாம் சௌ-ம் நரையீரலுக்கும் மார்புக்கும் புஷ்டியுண்டாம் கட்டுகளை யவிழ்க்கும் சுத்தப்படுத்தும் வாய்வுகளை யறுக்கும் வி-தி வயிறுப்பும் மந்தப்படுத்தும் அப்பியாசப் படுத்தினல் தேகத்தில் அசுத்த சத்துகள் அதிகமாய் விளையும் ப-ம் பன்னீர் கிலே அர்மனி.

## பெரும்பயறு.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுஞ் சமமாம் பி-ம் சுத்த இரத்த முண்டாம் அசுத்த வுணவாம் சௌ-ம் மலம் அதிகரித்துக் குடலைச் சுத்தப்படுத்தும் வி-தி வயிறுப்பும் நீர் பெருகும் இதின் தோலினல் வயிருப்பும் கண்ணொளி குன்றிவரும் கண்ணிற் புகைச்சலுண்டாம் நித்திரையில் மருட்சி யுண்டாம் துஷ்டக்கனவுகாணும் ப-ம் கடுகு சுக்கு இஞ்சி.

## மசூரென்னும்பயறு.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் அசுத்த இரத்தமுண்டாம் அசுத்தவுணவாம் சௌ-ம் தீனிப்பைக்குப் புஷ்டி யுண்டாகும் கட்டையவிழ்க்கும் வி-தி மந்திக்கும் தாமதமாம் சீரணப்படும் தொண்டை கனக்கும் வண்டலை விளைக்கும் நீரை வறட்டும் ப-ம் நெய் இறைச்சி.

## கொள்ளுப்பருப்பு.

(சு-ம்) சூடுங் வறட்சியுமாம் பி-ம் அசுத்த இரத்த முண்டாம் குறைந்த வுண வாம் சௌ-ம் வாய்வுகளைக் கண்டிக்கும் நீரை வறட்டும் குண்டிக்காய், நீர்த்தாரை இவைகளில் விளையுங் கற்க

ளைப் பொடிபொடியாக்கி, நீரின் வழியாய் நீக்கும் உதிரச் சிக்கல் உதிரக்கட்டு இவைகளையிளக்கிச் சுத்தப் படுத்தும வி-தி அதிக சூட்டைக் கொடுக்கும் தலைசுற்றல் வாந்தி ஓக்காளம் வயிறுகடுப்பு இவைகளை யுண்டாக்கும் ப-ம் நெய் வெண்ணை புளி.

### எள்ளு.

(சு-ம்) சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்த உணவாம் சௌ-ம் தேகத்துக்கும் மார்புக்கும் நுரையீரலுக்கும் குளிர்ச்சி கொடுக்கும் இருமலை மாற்றும் நீரை வறட்டும் இதையூறவைத்த சலம் உதிரச்சிக்கலை மாற்றும் ப-ம் வறுத்துத் தேன்கலந்துண்ணவும்.

---

## பருப்புவித்துவகை.

### வாதுமைப்பருப்பு.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த இரத்தமும் அதிக வுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் கொழுமையு முண்டாகும் மூளைக்கும் கண்ணுக்கும் பலத்தைக் கொடுக்கும் மலம் இளகும் கற்கண்டு சேர்த்துச் சாப்பிட்டால் உள்ளவயவங்களைச் சித்தப்படுத்திப் பலத்தைக் கொடுக்கும் இதன் பாலெடுத்துச் சருக்கரை கலந்து குடித்தால் மார்பு எரிவு இருமல் வறட்சி சுவாசம் சூலை உதிரச்சிக்கல் இன்னும் இதைப்போலொத்தவைகளை யுடனே சொஸ்தப்படுத்தும் கசப்பு வாதுமைப் பருப்பில் விஷமிருக்கிற குண முண்டு கொஞ்சமாய்க் கொடுத்த போதிலும் சிலருக்கு வயிற்றில் கெடுதி செய்யும் இதைத்தின்று இறந்து போனது முண்டு வி-தி வயிறு கனக்கும் தீபனங் குறையும் குடல்யிளைக்கும் ப-ம் றூமிமஸ்தகி சருக்கரை.

### கசப்பு வாதுமைப்பருப்பு.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்த வுணவாம சௌ-ம் வாய்வுகளை கண்டிப்பதற்கும் கெட்டுப் போன சத்துக்களைச் சுத்தப்படுத்துவதற்கும் அதிக யுபயோக

ப்படும் இதைக்காடியிலுரைத்துப் பற்றுபோடத் தலைவலிவுடனே வாங்கும் மூலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிடக் கண்பிர காசம் அதிகப்படும் வாதுமைப் பருப்பை ஊறவைத்து மேல் தோலை நீக்கிவிட்டு உபயோகிக்க வேண்டும் தோலோடு சாப்பிட்டால் வாந்தி அல்லது பேதியை உண்டாக்கும் வாதுமைப் பருப்பை ஜலம் விட்டு அரைத்துக் குழம்பாகச் செய்து இருமல் இரத்தபேதி நீர்ச்சிருக்கு கல்லடைப்பு இவைமுதலிய உபயோகங்களுக்குக் கொடுக்கப் படுகின்றது நீர் எரிவை யெடுத்து விடும் வாதுமைப் பருப்புப் பாலைத் தனியாய் உபயோகிக்கிற தில்லை வேறு அவுஷதங்களோடு சேர்த்துக் கொடுக்கப்படும் வி-தி பேதியதிகரிக்கும் தீபனக்குறையும் ப-ம் மூன்றிலொருபங்கு சருக்கரை சேர்க்கவும்.

## பிஸ்தாவெனும் பருப்பு.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்தவுணவாம் சௌ-ம் தீனிப்பைக்கும் இருதய கமலத்துக்கும் பலங்கொடுக்கும் விந்து விளையும் தாதுபுஷ்டி யதிகரிக்கும் தேகம் பருக்கும் குளிர்ச்சியினாலுண்டாகும் கிபுகானென்னும் ரோகத்தைக் கண்டிக்கும் வி-தி தலைவலி யுண்டாகும் ப-ம் புளிப்புச் சேர்க்கச் சுத்தியாகும்.

## அக்ரோட்டென்னும்பருப்பு.

(சு-ம்) சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த இரத்தமும் அதிகவுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் தாது பெருகும் விந்து விளையும் இருதய கமலத்துக்கும் தீனிப்பைக்கும் பலங்கொடுக்கும் வயிறிளகும் ஒக்காளத்தைமாற்றும் வி-தி சூட்டிடம்புக்குச் சொறிதினவு அதிகரிக்கும் ப-ம் இனிப்பு மாதுளம் பழச்சாறு கசகாச.

## பிந்துகருப்பருப்பு.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் தடித்த இரத்தமும் குறைந்தவுணவாம் சௌ-ம் விந்துவளரும் தாதுவிர்த்தியாகும் மூளைக்கும் குடலுக்கும் பலத்தைக் கொடுக்கும் மார்புக்கும் நுரையீரலு ஒத்துவரும் தேனோடு கலந்து குடிக்க இருமலைப் போக்கும் இதை

வறுத்து மிளகிற்சேர்த்துச் சாப்பிடக் குளிர்ச்சியைப்பற்றிய நீரைவற்ட்டும் அனிசூன்சேர்த்துப் புசிக்க இருத்பத்தைப்பற்றிய ரோகங்களையுங் குண்டிக்காய் கரைந்து போனதையும் நீர்ச்சுருக்கு தாதுநஷ்டம் தேள்விஷம் இவைகளையும் நீக்கும் இதை விட்டு நான்கு கோணங்களிலும் போட்டுவைக்கத் தேள்முதலிய விஷப்பூச்சிகள் வீட்டைவிட்டு ஓடிப்போகும் வி-தி வயிறுவலிக்கும் வாந்தியுண்டாகும் ப-ம் தேனுந் தண்ணீருஞ் சேர்த்துக் குடிக்கவும்

## வெள்ளைக்கசகசாவிரை.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்தவுணவாம் செள-ம் குளிர்ச்சியாம் கபத்தை நன்றாய்க் கண்டிக்கும் இருமலைப் போக்கிவிடும் மார்புக்குள்ளிருக்கும் புண்ணையும் நீர்த்தாரைக்குள்ளிருக்கும் புண்ணையும் ஆற்றும் நித்திரை பிடிக்கும் நீர்பெருகும் நீர்சுருக்கு வெட்டை இவைகளை நீக்கும் கசகசாவிலிருக்கின்ற எண்ணெய் விளக் கெரியவைக்க உபயோக மாகிறது திமிரு நமைச்சல் கிராணி அதிசாரம் சிரசீர் அதித்கிரை இவைகள் போமென்றும் அழகு காந்தி தாதுபுஷ்டி இவைகளுண்டாகும் கசகசா துத்தியிலை இவைகளைச் சேர்த்துக் காடி ஜலத்தை விட்டு அரைத்து நமைச்சலுக்கு மேல் பூசலாகும் வி-தி வயிறுவலிக்கும் மலத்தைகட்டும் ப-ம் தேன் ஹுமியஸ்தகி.

## கறுப்புக்கசகசா.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்த வுணவுமாம் செள-ம் இது சர்வ குணத்திலும் வெள்ளையைவிட அதிக புஷ்டியுள்ளது உதிரப் போக்கையும் பெரும் பாட்டையும் நிறுத்தும் வி-தி மூளைக்குதவாது ப-ம் பெருஞ் சீரகம்.

## வெள்ளரி விரை.

குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்த உணவாம் செள-ம் தீனிப்பை ஈரல் இவைகளைப் பற்றிய சூட்டை யறுக்கும் நீர்ச்சுறுக்கு நீர் அருகல் வெட்டை பிரமியம்இவைகளை

நீக்கும் கல்லடைப்பை யோட்டும் தாபெசுப்பழத்தின் விரைக்கு மிது வே குணம் வி-தி, குளிர்ந்தவுடம்புக்கு வாய்வை யதிகரிக்கச்செய்யும் ப-ம். சுக்கு சோம்பு தேன்.

## சுரைவிரை.

சு-ம் குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம், தேகத்துக்குப்பசுமை கொடுக்கும் வறட்சியை மாற்றும் நீர்பெருகும் தவனத்தையடக்கும் வி-தி, அதிகரித்த சத்துக் களோடு தானும்கலந்து போகும் ப-ம், காடி.

## சல்லாதுவிரை.

சு-ம் குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்த உணவாம் சௌ-ம், தேகத்துக்குள்ளடங்கியிருக்கிற சத்துக்களை வெளிப்படுத்தும் நீரின்வழியாய் ரோகங்களையோட்டும் வி-தி, குமட்டலுண்டாகும் ப-ம், சிக்கஞ்சபீன்.

## வெங்காயவிரை.

சு-ம் சூடும் வறட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம், தீபனமாம் கோழிமுட்டை அல்லது தேனோடு கலந்துகுடிக்கத் தாதுபுஷ்டியுண்டாகும் வாய்வுகளை நன்றாய்க்கண்டிக்கும் வி-தி, தலைவலியுண்டாகும் ப-ம், காடி.

## முள்ளங்கிவிரை.

சு-ம் சூடும் வறட்சிமாம் பி-ம், அசுத்த இரத்தமும் குறைந்த உணவாம் சௌ-ம் காற்றைக்கண்டிக்கும் தீபனமாகும் இதின்கிழங்கு நீரைப்பெருகும் இதின்கீரைவாயுவை நாசப்படுத்தும் வி-தி, கண் தலை பற்களுக்குதவாது ப-ம், உப்புதேன்.

## நெருஞ்சில்விரை.

சு-ம் குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம், தேகங்குளிரும் நீர்பெருகும் இதைப்பசுவின் பாலிற் பதப்படுத்தி நெய்சருக்கரை சேர்த்துப் புசிக்க விந்துவிளையும் தாது அதிகரிக்கும் கெர்ப்பந்தரிக்கும் இதை ஜலத்தில் ஊறவைத்து

இறந்து சருக்கரையைச் சேர்த்து பிழ்மேகத்துக்கும் நீர்கடுப்புக்கும் கொடுக்கலாம் யானைநெருஞ்சிலுக்கும் இதுவேகுணம் வி-தி, மந்தப் படும் வயிறுகனக்கும் ப-ம், தேன் சீரகம்.

## துத்திவிரை.

சு-ம் குளிர்ச்சியும் வறட்சியுமாம் ப-ம், அசுத்த இரத்தமும் அதிகவுணவாம் சௌ-ம் தேகந்தழைக்கும் தாதுவளரும் மேகரோ கங்களறும் உளுந்தமாவிற்கலந்து களிகிண்டிநெய் சருக்கரை சேர்த் துண்ண, இடுப்புவலி நீங்கும் வி-தி. மந்திக்கும் தீபனங்குறையும் ப-ம், இஞ்சி காடி புதினா,

## நீர்முள்ளிவிரை.

சு-ம் குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம், தடித்த இரத்தமும் அதிகவுணவாம் சௌ-ம், தேகந்தழைக்கும் தாதுவளரும் மேகரோ மங்களைக் கண்டிக்கும் இதனுடன் காலாரிமிசிரி கருவாப்பட்டை சம மாகச்சேர்த்துக் கொடியாட்டின்பாலில் ஒருகழஞ்சு சாப்பிட்டுவரக் கட்டுப்படாத வீரியபுஷ்டியுண்டாகும் இதை கஷாயமிட்டு அரை ஆழாக்குவீதம் நீர்க்கோவைக்குக் கொடுத்தால் நீர் அதிகமாய் இறங் கும் இதின் சாம்பலை சிறுநீரில் கலந்த வீக்கத்துக்கு அநேகர் தடவு கிறார்கள் அதினாற்பிரயோசனமில்லை வி-தி, மந்திக்கும் தீபனங்குறை யும் ப-ம், இஞ்சி க்ஷாசீரு ஓமம்.

## ஆளிவிரை.

சு-ம் குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம், மத்திம இரத்தமும் குறைந்தவுணவாம் சௌ-ம், குளிர்ச்சியைப்பற்றிய இருமலுக்கும் வாயினா லுதிரங் கக்குவதற்கும் உபயோகப்படும் வயிறிளகும் குடலை சுத்தப்படுத்தும் வாய்வைகண்டிக்கும் இதை வேகவைத்துத் தேங் காய்த்தயிலம்விட்டு நன்றாய்க்கடைந்து துணியில் தடவ வயிற்றுநோய் முதலியசகல நோய்களின்பேரில் வைத்துக்கட்டவுடனே சொஸ்த மாகும் இதை எலுமிச்சம் பழரசம்விட்டு அரைத்து மேலுக்குப்பத்

துபோடுகிறதுண்டு (வி-தி) கண்புகைச்சலுண்டாம். ஜீரணக்குறையும் (ப-ம்) கொத்தமலி தேன்.

## வெந்தியவிரை.

(சு-ம்.) சூடும் வறட்சியுமாம் (பி-ம்.) மத்திமஇரத்தமும் குறைந்தவுணவாம் (சௌ-ம்) வாய்வுகளை நன்றாய்கண்டிக்கும் சத்துக்களைப்பாகப்படுத்தும் மலம்யிளகும் இதில்கோழிமுட்டை தேகாய்ப் பால்சேர்த்து நெய்யிற்பாகம்செய்து சாதத்தோடுகலந்து சாப்பிட்டுவரத்தீரா த இடுப்புவலி தீரும் (வி-தி) தலைசுற்றும் நெஞ்சுகரிக்கும் (ப-ம்.) காடியுந் தேனுங்கலந்து குடிக்கவும்!

## இஸ்போஹோல்விரை.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் (பி-ம்.) தடித்தஇரத்தமும் அதிகவுணர்வாம் (சௌ-ம்) சூட்டையும் உதிரக்கொதிப்பையுந் தணிக்கும் தாகத்தையடக்கும்மலம் இளகும்வறட்சி வயிற்றுக்கடுப்பு உதிரபேதி இவைகளைநீக்கும் பித்தரோகஙகளை நன்றாய்க் கண்டிக்கும் இதை காடிரோஜாப்பூ தைலத்திற் கலந்துபூசக் கீல்வாதவலிகள்தீரும் இதை வறுத்துச்சலத்திற்கலந்து குடிக்கச் சகலபேதிகளையும் கட்டும் உடையாத கட்டிகளின்பேரிற்பூச உடையும் போதாவுக்கும்இது வேகுணம் இதன் விரையை நசுக்க நஞ்சாகும் 3 விராகனிடை இஸ் போஹோல்விரை 2 விராகனிடை அதிமதுரம் இவைகளை அரைப்படி வெந்நீர்போட்டு 3 மணிநேரம்வரையிற் ஊறவைத்து வடிக்கட்டி அரை ஆழாக்கு அளவுக்கு அடிக்கடிகொடுக்கலாம் நீர் எரிச்சல் பிரமேகம் இருமல் இவைகள் குணமாகும் (வி-தி) தீபனகுறையும்நரம்பைப்பற்றியரோகங்களுக்குதவாது (ப-ம்) காடி தேன்

## பாலங்கு.

(சு-ம்.) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்தஉதிரமும் குறைந்த உணவாம் (சௌ-ம்) வயிறப்பும் உதிரமும் சீதமும் ஓயாமல் வருவதற்குப் பன்னீரில் ஊரவைத்துக்கொடுக்க நீங்கும் நீங்காதபேதிக்கு வறுத்துக் குளிர்ந்தசலத்தில் ஊரவைத்துக்கொடுக்க உடனேகட்டுப் போகும்திருநீற்றுப்பச்சையின் விரைக்கும் இதுவேகுணம் (வி-தி) மந்திக்கும் தீபனங்குறையும் (ப-ம்) சருக்கரைபன்னீர்

# கிழங்குவகை.

## ஷகாகுல்மிசிரி.

(சு-ம்) சூடும் குளிர்ச்சியுமாம் (பி-ம்) சுத்தஇரத்தமும் குறைந்தவுணவாம் (சௌ-ம்) தேகவலியுண்டாகும் அழகுண்டாம் தாது விளையும் இடுப்புவலியைமாற்றும் பிராணச்சூட்டை யதிகரிக்கச்செய்யும் பசுவின்பாலில் நெய்சருக்கரைகலந்து காய்ச்சி இதில் ஒருவிராகனிடை தூள் கலந்துகுடிக்க அப்பியாசப்பட்டவர்களுக்கு அண்டையில்இழகிய வாலிபப்பெண்ணில்லாமல் நித்திரைபிடியாது இது அகப்படாத சமயத்தில் இதற்குபதிலாய் சல்கூசாவென்னும் விரையை உபயோகப்படுத்தலாம் (வி-தி) தலைவலியுண்டாம் தீபனத்தையடக்கும் (ப-ப) தேன் இஞ்சி முறப்பா

## சுரஞ்சான்மிசிரி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்த இரத்தமும் குறைந்தவுணவாம் (சௌ-ம்) பற்பலவாதங்களைப் பேதியின் வழியாய் நன்றாய்க்கண்டிக்கும் கீல்வாதங்களை ஓட்டும் இதோடு குங்குமப்பூசேர்த்து முட்டைவெள்ளை யம்பிலியிலரைத்துப் பூச மூலவலியை உடனேமாற்றும் ரணங்களையாற்றும் இதில் அரைவராகனிடைத் தூளை பசுவின் பச்சைப்பாலில் சருக்கரைசேர்த்து மூன்றுநாள் குடிக்கப் பிடிபாத தாதுபுஷ்டியுண்டாகும் தீனிப்பைக்குதவாது வயிறுபிடுங்கும் (ப-ம்) வாதுமை பிசின் சருக்கரை

## பேோஜிதான்மிசிரி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த இரத்தமும் குறைந்தவுணவாம் சௌ-ம்) தேகர்தழைக்கும் விந்துவிளையும் தாதுபுஷ்டியதிகரிக்கும் பேதியாகும் கட்டுகளையவிழ்க்கும் தீனிப்பைக்கும் நரம்புக்கும் பலத்தைக்கொடுக்கும் கீல்வாதம் நரம்பு இசிவு வீக்கம் மகோதரம் இவைகளை நீக்கும் இதைப் பச்சையரிசியிற்கலந்து வெள்ளாட்டுப்பால் சருக்கரைசேர்த்து அல்வாகிண்டி அப்பியாசப்படுத்தக் கதிரைப்போலிளைத்த தேகம்பருத்துச் செக்கைபோலாகும் (வி-தி) குடலுக்குதவாது (ப-ம்) தேன் கடுகு

## நீலப்பனைக்கிழங்கு.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்தஇரத்தமும் குறைந்தவுணவாம் (சௌ-ம்) இருமல் மாரடைப்பு மூலம் இவைகளை நீக்கும் மேகரோகங்களை நன்றாய்க்கண்டிக்கும் இதை மோரில் ஊறவைத்து வேகவைத்துச் சருக்கரைப்பாலில் முறப்பா செய்து சாப்பிட்டுவரமேகவூறலை நாசப்படுத்தும் (வி-தி) வயிறுப்பும் மந்திக்கும்(ப-ம்) மிளகு சீரகம் இஞ்சி.

## கருனைக்கிழங்கு.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் (பி-ம்) தடித்த இரத்தமும் அசுத்தவுணவாம் (சௌ-ம்) தீனிப்பைக்குப் பலத்தைக் கொடுக்கும் மூலஉதிரத்தை நிறுத்தும் (வி-தி) நாவுக்கும் தொண்டைக்கும் உதவாது (ப-ம்) நெய் புளி.

## சேமக்கிழங்கு.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்பும் அற்பசூடுமாம் (பி-ம்) தடித்த இரத்தமும் அசுத்தவுணவாம் (சௌ-ம்) உதிரம்விளையும்குண்டிக்காய்க்கும் மூளைக்கும் நரம்புகளுக்கும் பலத்தைக்கொடுக்கும் (வி-தி) மந்தப்படும் காற்றைவிளைவிக்கும் (ப-ம்) சலத்தில் நன்றாயூறவைத்தூறு பிசைந்து தழிகிப் புளியிட்டுச் சமைக்கவும்

## உருளைக் கிழங்கு.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் (பி-ம்) தடித்த இரத்தமும் அதிகவுணவாம் (சௌ-ம்) தேகபுஷ்டியுண்டாகும் தும்மலைநிறுத்தும் (வி-தி) மந்திக்கும் தீனிப்பைக்குதவாது காற்றைவிளைவிக்கும் (ப-ம்) இஞ்சி புதீனா பழச்சாறு.

## வள்ளிக்கிழங்கு.

(சு-ம்) சூடும் குளிர்ச்சியுமாம் (பி-ம்) தடித்தஇரத்தமும் அதிகவுணவாம் (சௌ-ம்) உதிரம் விளையும் மூளைக்குப் பலத்தைகொடுக்கும் (வி-தி) மந்திகும் வயிறிரையும் காற்றுற்பவிக்கும் (ப-ம்) சருக்கரை.

## சிறுவள்ளிக்கிழங்கு.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் (பி-ம்) தடித்தஇரத்தமும் அதிகவுணவாம் (சௌ-ம்) தீனிப்பைக்குப் பலத்தைக் கொடுக்கும் இருதயத்தின்சத்தியை யதிகரிக்கச்செய்யும் சூட்டையும்பித்தத்தினுல் உண்டாகும் தாபத்தையும் நீக்கும் நீர்பெருகும் வி-தி மந்திக்கும் வயிறுகனக்கும் ப-ம் சருக்கரை தேன்.

## முள்ளங்கிக்கிழங்கு.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தஇரத்தமும் அதிகவுணவாம் சௌ-ம் தீபனமாகும் குரல்ஓசையைத் தெளியப்படுத்தும் தொண்டைகம்மலுக்குப் மூலரோகத்துக்கும் கல்லடைப்புக்கும் அதிகஉபயோகப்படும் இதின்உப்பெடுத்துநித்தியம் அப்பியாசப்படுத்தப்பற்பலவாய்வுகளையும கண்டிக்கும்நித்தியம்காலையிற் சாப்பிட்டால் முகத்திற்படர்ந்தமாசுகளை அறுத்து முகத்தொளியை அதிகரிக்கச்செய்யும் ரோமங்கள் உதிருவதைநிறுத்தும்கட்டுகளையவிழ்க்கும் நீர்பெருகும் வி-தி தலைக்கும்பற்களுக்கும்உதவாது ப-ம் தேன் உப்பு.

## செம்முள்ளங்கி

(சு-ம்) சூடும்குளிர்சியுமாம் பி-ம் சுத்தஉரத்தமும் அதிகவுணவாம் சௌ-ம் கண்ணொளியதிகரிக்கும் நீர்பெருகும் நீர்த்தாரையில் விளையும் கல்லைபொடியாக்கி நீரின்வழியாப்போக்கும் இருமலை நீக்கும் வயிற்றுப்பலையெடுக்கும் அதன்விறையைப் பாலிற் போட்டுக்காச்சிக்குடிக்க விந்துவளரும் தாதுவிர்த்தியாகும் வி-தி காற்றை க்ளைக்கும் சூட்டேம்புக்குத் தலைவலியுண்டாம் ப-ம் குல்கந்து சிக்கஞ்சபின்

## கருவாத்துக்கிழங்கு.

(சு-ம்ம்) சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்தஇரத்தமும் குறைந்தவுணவாம் சௌ-ம் தீனிப்பைக்கும் ஈரலுக்கும் பலத்தைக் கொடுக் நீர்பெருகும் கட்டுகளையறுக்கும் மார்வலியையுநீக்கும் கல்லடைப்பைவாங்கும் தாதுவளரும் வி-தி மந்திக்கும் வயிறுப்பும் ப-ம் சிகஞ் காடி.

## வெங்காயம்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தஇரத்தமும் அதிகவுணவாம் சௌ-ம் தாதுவிளையும் கெட்டகாற்றுகளின் விஷத்தைமாற்றும் பலபல ஜலங்களிலுள்ள பொல்லாப்பை நீக்கும் பசு யுண்டாகும் நீரடைப்பையும் உதிரச்சிக்கலையும் அறுக்கும் மலம்யிளகும் பித்தத்தைப்பற்றிய ஓக்காளத்தை மாற்றும் பேய்நாய்க்கடி விஷத்தை யறுக்கும் வி-தி, தலைவலிதாகம் உண்டாகும் ப-ம், ஜலத்தில் நன்றாயூரவைத்து உப்புசேர்க்கவும்.

## வெள்ளுள்ளி.

சு-ம் சூடும் வறட்சியுமாம் பி-ம், தடித்த இரத்தமும் குறைந்தவுணவாம் சௌ-ம், பருவுகளையுடைக்கும் உதிரச்சிக்கலை யறுக்கும் கட்டுகளையவிழ்க்கும் உதிரத்தையிளக்கும் வயிற்றுநோயைப் போக்கும் மறதியைநீக்கும் இதைப் பாலில் வேகவைத்துத் தேன்கலந்து சாப்பிட்டுவர வாதரோகங்கள் அகலும் தாதுபுஷ்டி யதிகரிக்கும் பாலிலரைத்துப் பருவுகள் மேற்பூச உடைந்துபோகும் நவசாரத்தோடரைத்து வெண்குஷ்டத்தின் மேல்பூச அதுநீங்கிப்போகும் அண்டவீக்கத்தையும் அப்படியேயகற்றும் படைகளையகற்றும் வி-தி, குட்லுக்குதவாது ப-ம், நெய் பால்.

## இஞ்சி.

சு-ம் சூடும் வறட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்தவுணவாம் சௌ-ம், தீபனமாம் தீனிப்பைக்குப் பலத்தைகொடுக்கும் ஈரலைப்பற்றிய கட்டுகளை அறுக்கும் அஜீரணப்பேதியை நிறுத்தும் பழவர்க்கங்களிலுள்ள பொல்லாப்புகளை நீக்கும் வி-தி, தொண்டைக்குதவாது ப-ம், வாதவுடம்புக்குத் தேனும் சூட்டுடம்புககு வாதுமைநெய்யுமாம்.

## ஷோர்பாமுதலிய பதார்த்தவகை

## இறைச்சிகளின்ஷோர்பா.

சு-ம் சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம, சுத்த இரத்தமும் அதிக உணவாம் சௌ-ம், தேகவலிவுண்டாம் குடல்பருக்கும் தீபனமுண்டாம்

* ஷோர்பா-என்பது-குழம்பு.

களைதீரும் தாதுவிர்த்தியாம் மற்றப்பதார்த்தங்களைவிட இதை நித்தியம் அப்பியாசப்படுத்தினல் அதிக உபயோகமாகும் விசேஷமாய் பேதிக்குக்குடித்த பேர்களுக்கும் வியாதியஸ்தருக்கும் இதுவே ஜீவரட்சாமிர்தமாங் எந்தச்சமயத்திலும் இதைப்பரிமாறலாம் தேகக்கூறுக்குத் தக்கபடி மாமிச இனங்களைத் தெரிந்துசேர்த்துக்கொள்ளவேண்டியது வி-தி, காற்றையுண்டுபெண்ணும் அற்பச்சூட்டை கொடுக்கும் ப-ம், கருவாப்பட்டடை ஏலக்காய் எலுமிச்சம் பழச்சாறு.

## ரோகஸ்தர்களுக்கு ஷோர்பா.

சு-ம் சூடும் கொழுமையுமாம் பி-ம், சுத்த இரத்தமும் அதிக உணவாம் சௌ-ம், சூட்டுடம்புக்கு இறைச்சியில் யாதொரு மசாலா புளி சேர்க்காமல் வேகவைத்து இரசத்தைவடித்துக்கொடுக்க வேண்டியது அல்லதுநாட்டுகோதுமை அரிசியைக்கொஞ்சம் வறுத்து அதற்கு நான்குபங்கு ஜலத்தில் நன்ருய் வேகவைத்துக்குடிக்கும் பதத்தி, லிறக்கிக்கொண்டு குடிக்கவும் இதில்கொஞ்சம் மலச்சிக்கலுண்டாம் அதற்கு இதில் இலந்தைக்காய் கறுவளிக்காய் கலந்து காய்ச்சச் சிக்கலைமாற்றும் இதோடுகொஞ்சம் இறைச்சிசேர்க்க புஷ்டியுண்டாம் வி-தி, வயிறுவலிக்கும் பொருமலுண்டாம் ப-ம், குல்கந்து.

## ஆட்டின் பொரித்த இறைச்சி.

சு-ம் சூடும் வறட்சியுமாம் பி-ம், தடித்த இரத்தமும் அதிக உணவாம் சௌ-ம், தீபனமாம் தாதுவிர்த்தியுண்டாம் ஜீரணித்தபின் சுத்த இரத்தத்தையுண்டுபெண்ணும் வி-தி, சூட்டுடம்புக்குத் தலைவலியுண்டாகும் ப-ம், காடி தேன்.

## உப்பிட்டு உலர்ந்த இறைச்சியின் பொரியல்.

சு-ம் சூடும் வறட்சியுமாம் பி-ம், தடித்த இரத்தமும் குறைந்த உணவாம் சௌ-ம், வீக்கத்துக்கு உபயோகப்படும் வி-தி, சூடுண்டாம் உதிரத்தைச் சுண்டவைக்கும் தினவுண்டாம் வண்டல்களை விளைக்கும் மந்திக்கும் நித்திரைபிடியாது தாபமுண்டாம் ப-ம், சிக்கன்ஸ்பீன்.

## உப்பிட்டு பொரித்த கருவாடு.

(சு-ம்) சூடும் வரட்சியுமாம் (பி-ம்.) தடித்த இரத்தமும் அசுத்த உணவாம் (சௌ-ம்) இல்லை (வி-தி.) உதிரத்திலுள்ள பசுமையை யுலரவைத்து அதின் சக்கையை யுடலிற் பெருகவைக்கும் தேகங்கருக்கும் உயிரின் சத்தைத் தான் வாங்கிக்கொண்டு தன்னுடைய சத்தை யுடலுக்குக் கொடுக்கும் சொறி சிரங்கு தினவுண்டாம் (ப-ம்,) காடிதேன்.

## பொரித்த மீன் இறைச்சி.

(சு-ம்) சூடும் குளிர்ச்சியுமாம் (பி-ம்,) சுத்த இரத்தமும் அதிக உணவுமாம் (சௌ-ம்) சூட்டிறைலுண்டாகும் வாயுவை நன்றாய் கண்டிக்கும் தேகத்துக்குளிர்ச்சியைக் கொடுக்கும் புஷ்டியுண்டாக்கும் ஆகாரத்தின்மேல் இச்சையுண்டாம் குண்டிக்காய்க்கு வலிவைக் கொடுக்கும் வயிற்றிளகும் மலத்தைத்தள்ளும் வி-தி, சூட்டுடம்புக்குதவாது (ப-ம்), கருவாப்பட்டை காடி-பழச்சாறு.

## பொரித்தகோழி அல்லது சாவலிறைச்சி.

(சு-ம்) சூடும் குளிர்ச்சியுமாம் (பி-ம்), சுத்த இரத்தமும் அதிகவுணவாம் (சௌ-ம்) தேகந்தழைக்கும் தாதுவிர்த்தியாகும் விந்திலுள்ள நீரை வரட்டி விந்தைக் கெட்டிப்படுத்தும் இதைத் தேங்காயின் பாலிற் பாகப்படுத்தி இராத்திரிகாலங்களிற் சாப்பிட்டுவர இடுப்பு வலியை நீக்கிக் கெட்டிப்படுத்தும் சஞ்சாரத்தில் எவ்வளவு அதிகரித்தாலும் சலியாது இளைப்புத்தோற்றாது (வி-தி) மூலத்துக்குதவாது (ப-ம்,) பழச்சாறு புளிமாதுளம்பழச்சாறு சருக்கரை.

## கரிநெருப்பில் வாட்டசெய்த இறைச்சி.

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் (பி-ம்) சுத்த இரத்தமும் சுத்த உணவுமாம் (சௌ-ம்) தேகவலிவுண்டாம் தீனிப்பைக்குப் புஷ்டிகொடுக்கும் தாதுவுண்டாம் தீபனமதிகரிக்கும் சூட்டுடம்புக் கொத்துவரும் (வி-தி,) தலைவலிக்கும் மந்திக்கும் (ப-ம்,) சிக்கஞ்சபீன்.

## சமைத்த ஆட்டிறைச்சி,

(சு-ம்) சூடுங்குளிர்ச்சியுமாம் பி-ம், சுத்தஇரத்தமும் அதிகவுணவுமாம் (சௌ-ம்,) தைரியங்கொடுக்கும் குடல் பருக்கும் தேகந்தழைக்கும் புத்திவளரும் மேனிகொடுக்கும் (வி-தி,) மந்திக்கும் மலத்தையிறுக்கும் (ப-ம்,) பழச்சாறு காடி தேன் புதினா.

### மச்சங்களின் வகை.

மச்சங்களின் வகை அநேகமுண்டு இவைப்பிரித்தெழுதிய நூல்கள் ஒன்றும் அகப்படாமையால் விவரிக்காமல் தேகத்துக்குபயோகயான செவிள்பொறி அல்லது பிரால் இவைகள் தடித்திருப்பவை வயிறுவெளுப்பு முதுகுபசுமை சிவந்தவருணம் முள்ளுகள் மெலிவு தோலற்றதுமான இந்த ஏழுகுணமுள்ள மச்சங்கள் எதுவாயினும் அவைகளுடைய குணங்களைமாத்திரம் சொல்லுகிறேன்.

### மச்சங்கள்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம், அசுத்த இரத்தமும் அசுத்தவுணவுமாம் சௌ-ம, தேகத்துக்குக் கொழுமை கொடுக்கும், சூட்டுடம்புக்கொத்துவரும் தாதுவிளையும் மலத்தைத்தள்ளும் அவிஷதம் சாப்பிடுகிறவர்களுக் குதவாது வி-தி, குளிர்ந்தவுடம்புக்குக்கபத்தை விளைக்கும் ப-ம், நெய் காடி தேன் புளி,

## சலத்தின் வகை

### மழை நீர்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம், சுத்த இரத்தமுங் குறைந்தஉணவுமாம் சௌ-ம, தாகத்தையடக்கும் தேகத்துக்கு ஒளி கொடுக்கும் தீபனமுண்டாகும் அவுஷதங்களின் பொல்லாப்பை நீக்கிச்சுத்திசெய்யும் பித்தத்தின் கொதிப்பையாற்றும் ஆனால் முந்திப்பெய்தநீரில் பூமியின் சூடு கலப்பதால் அதை நீக்கிப் பிந்திப்பெய்யும் நீரைக்கொள்ளவேண்டியது வி-தி, குளிர்ச்சியைப்பற்றிய சுரத்துக்குதவாது ப-ம், காடி வெங்காயம் தேன்,

### பனிக்கட்டி நீர்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம், சுத்த இரத்தமுங் குறைந்தவுணவுமாம் சௌ-ம், சூட்டைப்பற்றிய ரோகங்களை நன்றுய்க்கண்டிக்கும் பித்தசுரத்தைப் படியவைக்கும் தீனிப்பைக்கும் ஈர

னுக்கும் வலிவைக்கொடுக்கும், தீபனமுண்டாம், வி-தி, குளிர்ந்த தேகத்தோருடைய பற்களுக்குதவாது ப-ம், கற்கண்டு வெங்காயம் தேன்.

## சுத்த நீர்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலீர்ப்புமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்தவுணவாம் சௌ-ம், ஜலங்களின் குணமானது பூமிக்கொத்த குணங்களாய்ப்பேதிக்கும்," ஆயினும் ஜலம் எவ்வளவு மிருதுவாயும் மெலிந்தும் தெளிவாயுங் கனக்குறைந்தும் இருக்கிறதோ அவ்வளவு அதில் நற்குணங்களுண்டாயிருக்கும் ஆகையால் எந்த ஜலமாயினும் வாலையிலிட்டு திராவகம்போ லிருத்திக்கொள்வது நாலுவிதசத்துக்களினலுண்டாகும் பற்பல பிணிகளுக்கும் இதையே அவுஷதமென ஒப்பிடலாம் இதனல்ஒருபொல்லாப்புமில்லை (வி-தி) இல்லை (ப-ம்,) இல்லை

## ஆற்று நீர்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் (பி-ம்,) சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்.) மேற்கிலிருந்து கிழக்குமுகமாக எப்போதுங் கட்டுப்படாமல் ஓடிவருகிற ஆற்றுநீர் தேக சவுக்கியத்துக்கு ஒரு அமிர்தமாகவிருக்கும் இதற்கிடமாக இராத இடங்களில் மேற்சொல்லிய திராவக நீருக்குச் சமமான நீரொன்றுமில்லை (வி-தி) இல்லை (ப-ம்) இல்லை.

## ஊற்று நீர்.

(சு-ம்) குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் (பி-ம்,) சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) தேகத்திலுள்ள பித்தத்திலுள்ள பித்தச்சூட்டையுமாற்றும் தாகத்தையடக்கும் ஜீரணமாகும் தீனிப்பைக்கு வலிவைகொடுக்கும் (வி-தி) சூட்டுடம்புக்குத் தலைகனக்கும் (ப-ம்)காடி தேன்.

## கிணற்று நீர்.

(சு-ம்) குளிர்ச்சியும் வரட்சியுமாம் (பி-ம்,) அசுத்த இரத்தமும் குறைந்தவுணவாம். சௌ-ம் குன்மரோகிகளுக் குபயோகப்படும்

வி-தி காற்றை விளைவிக்கும், மந்திக்கும், தாமதமாய் ஜீரணிக்கும் ப-ம், சுண்டக்காய்ச்சி ஆறவைத்துக் குடிக்கவும்.

## கடல் நீர்.

சு-ம் சூடும் வரட்சியுமாம், பி-ம், அசுத்த இரத்தமும் அசுத்தவுணவுமாம் சௌ-ம் கபத்தையறுக்கும், உதிரவோட்டத்தை மாற்றும் இதில் ஸ்நானஞ்செய்தால் மகோதர முதலிய வீக்கங்களைப் போக்கும் வி-தி சூடு அதிகரிக்கும், சொறி-சிரங்கு-தினவுண்டாம் ப-ம், நெய்-பால்-சருக்கரை சேர்த்துக்கொள்ளவும்

## வெந்நீர்.

சு-ம் சூடும் குளிர்ச்சியுமாம், பி-ம் சுத்த இரத்தமும் குறைந்தவுணவுமாம் சௌ-ம் மலம் இளகும் தலைவலி ஜலதோஷம் இருமல் இவைகளுக்குதவும் பேதிக்குச் சாப்பிட்டவர்களுக் குபயோகப் படுத்தவேண்டியது, வி-தி ஈரல் — தீனிப்பை குடல் இவைகளின் வலுவைக்குறைக்கும், நரம்புகளின் பிகுவைச் சோரவைக்கும் ப-ம் சிக்கஞ்சபீன்-சோம்பு.

## குளிர்ந்த நீர்.

சு-ம் குளிர்ச்சியும்-சிலிர்ப்புமாம். பி-ம் சுத்த இரத்தமும் குறைந்தவுணவுமாம் சௌ-ம் உதிரத்தைப்பற்றிய கொதிப்பை மாற்றும், தீபனமுண்டாம், தீனிப்பை-குடல்-ஈரல் முதலிய உள் அவயவங்களுக்குபயோகப்படும், ஜீரணசத்தியை அதிகரிக்கச்செய்யும், பேதியை நிறுத்தும் வி-தி இதில் ஸ்நானஞ்செய்ய அப்பியாசித்தால் ஆத்தும சத்திகுறையும், ப-ம் காய்ச்சி ஆறவிட்டு அரைச்சூடாக உபயோகப் படுத்தவும்.

# பானவகை அல்லது சர்பத்து

## நாரத்தைப்பழத்தின் பானம்.

சு-ம் குளிர்ச்சியும் வரட்சியும் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்தவுணவுமாம், சௌ-ம், இருதயத்துக்கு வலிவைக் கொடுக்கும்

தைரியமுண்டாம் சூட்டையாற்றும் பித்த ரோகங்களை நன்றாய்க் கண்டிக்கும் வி-தி, குளிர்ந்த வுடம்புக்குதவாது ப-ம், இஞ்சி முறப்பா.

## சுக்கங்கீரையின் பானம்.

சு-ம் குளிர்ச்சியும் வரட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்தவுணவுமாம் சௌ-ம் தீனிப்பை ஈரல் குடல் இவைகளுக்கு வலிவைக்கொடுக்கும் ஈரல்குலையின் வலியை நிறுத்தும், பித்த ரோகங்களின் உபாதியை அகற்றும் வி-தி, நரம்புக்குதவாது ப-ம், கடுக்காய் முரப்பா.

## பிஹிறியென்னும் பழத்தின் பானம்.

சு-ம். குளிர்ச்சியும் வரட்சியுமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் சூட்டுடம்புக்கு அதிக உபயோகப்படும் இருதய கமலம் ஈரல் மூளை இவைகளுக்கு வலிவைக்கொடுக்கும் வி-தி தொண்டைக்கும் மார்புக்கும் உதவாது ப-ம், குல்கந்து.

## சேபென்னும் பழத்தின் பானம்.

சு-ம. குளிர்ச்சியும் வரட்சியுமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம், இருதய கமலத்துக்கும் தீனிப்பைக்கும் வலிவைக்கொடுக்கும் சந்தோஷமுண்டாகும் பித்தத்தா லுண்டாகிய பேதி வாந்தி இவைகளை நீக்கும், வி-தி, குளிர்ந்த வுடம்புக்குதவாது ப-ம், குல்கந்து.

## இனிப்பு மாதுளைப்பழத்தின் பானம்.

சு-ம். சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்த உணவாம் சௌ-ம்,இருதய கமலத்துக்கு வலிவை கொடுக்கும், சூட்டையாற்றும் உதிரவிளைவுண்டாம் நீர் பெருகும் மகோதர முதலிய வீக்கங்களுக்கு அதிக உபயோகப்படும் மார்புவலி பக்கச்சூலை இவைகளை நீக்கும் வி-தி, இல்லை ப-ம், இல்லை-

## புளிப்பு மாதுளைப்பழத்தின் பானம்.

சு-ம். வரட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம், பித்தக்கொதிப்பையாற்றும் தீனிப்பைக்கு வலிவைக் கொடுக்கும் பித்தத்தினலுண்டாக்கும் பேதியை நிறுத்தும் உதிரக்க

டுப்பு உதிரபேதி இவைகளை யாற்றும் வி-தி, குன்மத்துக் குதவாது (ப-ம்) கவாநிஷே ஷூதேகாமெனும் லேகியம்.

## ஆலூரவென்னும் பழத்தின் பானம்.

சு-ம் குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்தஉணவுமாம் சௌ-ம் பேதியாகும் இருதய கமலத்தைப் பற்றிய சூட்டையாற்றும் பித்த வாந்திகளையும் தாகத்தையும் பித்தசுரம் தலைவலி சொறி தினவு இவைகளை நீக்கும் வி-தி மூளைக்கும் தீனிப்பைக்கும் ஆகாது (ப-ம்) குல்கந்து றாமிமஸ்தகி

## கம்பிளிப்பூச்சிப் பழத்தின் பானம்.

சு-ம் சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் சுவாசத்தைப்பற்றிய உறுப்புகளுக்கும் தீபனக்குறைவுக்கும் உதவும் தீனிப்பைக்கு வலி வுண்டாகும் தொண்டையைப்பற்றிய ரோகங்களை நீக்கும் வி-தி வாதவுடம்புக்குதவாது ப-ம் காடி தேன்.

## தாமரை புஷ்பத்தின் பானம்.

சு-ம் குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்த வுணவுமாம் சௌ-ம் சூட்டைப்பற்றிய சுரம் தலைவலி இருமல் மார்புவலி பக்கச்சூலை நீர்ச்சுருக்கு இவைகளுக்கு அதிக உபயோகப் படும் வி-தி வாதவுடம்புக்குதவாது ப-ம், காடி தேன்.

## பன்புவென்னும் புஷ்பத்தின் பானம்.

சு-ம். குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம், சுத்தஇரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் தலைவலி இருமல் கண்ணோய் மார்புவலி சூலை குண்டிக்காய்வலி நீரடைப்பு இவைகளுக்குபயோகப்படும் வி-தி தீனிப்பை பஞ்சைப்படும் ப-ம் நாரத்தைப்பழம் அல்லது பழச்சாறு.

## கசகசாவின் பானம்.

(சு-ம்) குளிர்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் சுத்த இரத்தமும் அதிக உணவாம் சௌ-ம், சிரசைப்பற்றிய விஷநீரைத் தேகத்துக்குள்ளிறங்காமல் தடுத்துவரும் மார்பைப்பற்றிய புண்களையும் இருமலை

யும் நீர்த்தாரையைப்பற்றிய புண்களையும் பிரமிய முதலிய மேகரோகங்களையும் நீக்கும் நித்திரைபிடிக்கும் வி-தி வயிறுவலிக்கும் மலச்சிக்கலுண்டாகும் ப-ம் இஞ்சி முரப்பா.

## சந்தன பானம்.

சு-ம் குளிர்ச்சியும் சூடுமாம் பி-ம் சுத்த இரத்தமும் அதிக உணவுமாம் சௌ-ம் இருதயத்துக்கும் ஈரலுக்கும் வலிவைக் கொடுக்கும் கிபுகானென்னும் ரோகத்தையும் தாகத்தையும் நீக்கும், ஈளை இருமலுக்கு அதிக உபயோகப்படும் வி-தி சலவைக்கும் மலச்சிக்கலுண்டாம் ப-ம், பண்ணீர் கற்கண்டு.

## ரோஜாப்புஷ்பத்தின் பானம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம். தடித்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் பித்தநீரைப் பேதியின் வழியால் நீக்கும் பிபதந்தீய்ந்து அதனாலுண்டாகும் அழலையும் ஈரலைப்பற்றிய கட்டுகளையும் அதனுடைய ரோகஙகளையும் சொறி சிரங்கு தினவு முதலியவைகளையும் நீக்கும் வி-தி தாகமெடுக்கும் ப-ம் காப்பிரி சல்லாது விரை மூங்கிலுப்பு.

## தாழம்பூவின் பானம்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் இராஜ வுறுப்புகளுக்கும் ஐம்புலனுக்கும் அதிக வலிவைக்கொடுக்கும் வசூரிமுதலிய புண் கிரந்தி சொறி சிரங்கு தினவு வெண்குஷ்டம் கருங்குஷ்டம் பெரும்வியாதி முதலிய மேக ரோகங்களை எங்குமில்லாமல் தேகத்தைவிட்டு ஓட்டும் இதை அப்பியாசமாகக் குடித்து வருபவர்களுக்குத் தேகத்தில் தாழம்பூவின் சுகந்த வாடை வேர்வையின்வழியாய் வீசிவரும் வி-தி சூட்டைக்கொடுக்கும் ப-ம் சந்தனம் பந்நீர் சேர்த்துப் பாகஞ்செய்யவும்.

## சதாபிலையின் பானம்.

சு-ம் சூடும் வரட்சியுமாம் பி-ம் தடித்த இரத்தமும் அசுத்தவுணவுமாம் சௌ-ம் தீபனமாகும் வாய்வுகளை நன்றாய் கண்டிக்கும்

உதிரச்சிக்கலை அறுத்துச் சுத்தப்படுத்தும் (வி-தி) சூட்டைக்கொடுக்கும் வயிற்றைவலிக்கும், சீதளங்காணும் ப-ம் நெய் பால் வெண்ணெ

## சீமை அத்திப்பழத்தின் பானம்.

சு-ம் சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் தீபனமாகும் குண்டிக்காய்க்கும் நீர்த்தாரைக்கும் உபயோகமாகும் விந்துவிளையும் தாதுபுஷ்டி அதிகப்படும் இடுப்புவலியைமாற்றும் வி-தி, சூட்டுடம்புக்கு வயிறு வலிக்கும் ப-ம் நீர்க்காடி.

## புதினா இலையின் பானம்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் காற்றுகளையகற்றும் வாயுவைக் கண்டிக்கும், தீபனம் அதிகரிக்கும், தீனிப்பையிலுள்ள சிக்கலையறுத்துச் சுத்திசெய்யும் கபத்தையறுக்கும் தாதுபுஷ்டியுண்டாகும் இதை லேபனலேகியங்களுடன் சேர்த்துக்குடித்து அப்பியாசப்படுத்தினால் விந்து கட்டுப்படும் விரைவில் வெளிப்படாது வி-தி சூட்டை யதிகரிக்கச்செய்யும் ப-ம் பழச்சாறு.

## எலுமிச்சம்பழச்சாற்றின் பானம்

(சு-ம்) குளிர்ச்சியும் வரட்சியுமாம் பி-ம் சுத்த இரததமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் இதைப் பெரியோர்கள் சர்வரோகநிவிர்த்தியென்றும் சர்வ விஷங்களையுமாற்றும் விஷாமிர்தமென்றும் பேசியிருக்கிறார்கள் பித்தச் சூட்டினால் தீய்ந்து உலர்ந்துபோன உதிரத்தைத் தெளிவிப்பதற்கு நாட்பட்ட முறைக்காய்ச்சலைத் தீர்க்கவும் இளைத்துப்போன மூளைக்கும் இருதயகமலத்துக்கும் வலிவை கொடுப்பதற்கும் வண்டலைப்பற்றிய ரோகங்களைக் கண்டிப்பதற்கும் சகலவித ப்பூச்சிகளின் விஷத்தை நீக்குவதற்கும் தேகத்தின் சுகத்தையும் ஆரோக்கியத்தையுங் காப்பதற்கும் இதற்கு மிஞ்சினபதார்த்தம் எதுவும் இல்லை இப்போது சொன்னகுணமெல்லாம் புளிப்பும் இனிப்பும் சமமாக இருக்கும்போது உண்டாகும் வி-தி புளிப்பு அதிகரித்தால் நரம்பு இசிவுகாணும் இருமலுண்டாகும் தாது நஷ்டப்படும் ப-ம் கசகசா வாதுமைப்பருப்பு சருக்கரை.

# தைலவகை.

## வாதுமைப்பருப்பின் தைலம்.

சு-ம் சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம், குறைந்த உணவுமாம் சௌ-ம் சுத்த இரத்தமுண்டாம், புத்தியதிகரிக்கும் மேனியுண்டாம் சூட்டினு லுண்டான பேதிகளையுந் தலைவலிகளையும் மாற்றும் கண்ணுக்குப் பிர காசமுண்டாம் காடியுடன் சேர்த்துத் தேய்த்துவரத் தினவு சொறி சிரங்கு இவைகளைப்போக்கும் வி-தி சூட்டுடம்புத் தலைபாரிக்கும் ப-ம், றாமிமஸ்தகி.

## கசகசாவின் தைலம்.

சு-ம் குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம், குறைந்த வுணவாம் சௌ-ம் சுத்த இரத்தமுண்டாம் தேகந்தழைக்கும் அழகுகொடுக்கும் தேகவரட்சிகளை மாற்றும் மார்புப்புண்ணை யாற்றும் கபத்தைபோக்கும் இருமலை நிறுத்தும் நித்திரை பிடிக்கும் வி-தி மயக்கமுண்டாம் வயிறு வலிக்கும் ப-ம், பன்னீர் கற்கண்டு.

## சுரக்காய் வித்தின் தைலம்.

சு-ம். குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம், குறைந்த உணவாம், சௌ-ம், சுத்த இரத்தமுண்டாம் கண்குளிரும் மூளையைப்பற்றிய சூட்டைநீக்கும், சூட்டினுலுண்டாகும் ஜன்னிகளை மாற்றும் பயித்திய ரோகங்களை அண்டாமல் ஓட்டும் வி-தி, சலவையுண்டாம் தலைபாரிக் கும் ப-ம், குங்குமப்பூ கஸ்தூரி.

## ரோஜாபுஷ்பத்தின் தைலம்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், குறைந்த உணவாம் சௌ-ம், சுத்த இரத்தமுண்டாம் வாய்வுகளைக் கண்டிக்கும், காற்றை அகற்றும், தேகத்துக் கொளிகொடுக்கும், தேக வலிப்புகளை மாற்றும் வி-தி சூட்டைக்கொடுக்கும் ப-ம், காடி மூலைப்பால்.

## ஜயித்தூன் தைலம்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், அதிகவுணவாம் சௌ-ம், சுத்த இரத்தமுண்டாம் தேகத்துக் கழகுகொடுக்கும் தீபனமாகும், மயிர்

கறுக்கும், வெந்நீர் சேர்த்துக்குடிக்கப் பேதியாகும், இடுப்புவலி இல் வாதம் நரம்புகளின் இசிவு வயிற்றுக்கடுப்பு கிருமி நாக்குப்பூச்சி இவைகளுக்கு அதிக உபயோகப்படும் வாதரோகங்களை நன்றாய கண்டிக்கும் இரணங்களையாற்றும் கண்ணொளியுண்டாகும் அவுஷதங்களாலுண்டாகும் விரோதங்களை மாற்றும் வி-தி, தலைவலிக்கும் ப-ம், காடிசல்லாதிலை.

## எள்ளுத்தைலம்.

சு-ம். சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம், குறைந்த உணவாம் சௌ-ம், சுத்த இரத்தமுண்டாம் இதை நித்தியம் அப்பியாசமாகச் சாப்பிட்டு வந்தால் சொறி சிரங்கு தினவு முதலிய தேகத்தின் படைகளை நீக்கும் தோலின் கடினத்தைமாற்றி மெதுவாக்கும், அழகுகொடுக்கும் தேகம் பருக்கும், புஷ்டியுண்டாம் நுரை யீரலைப்பற்றிய புண்களை யாற்றும், சூட்டினாலுண்டாகும் இருமல் நீர்ச்சுருக்கு தேகமெலிவு இவைகளை மாற்றும், முட்டை வெள்ளை அம்பிலியிற்கலந்து பருவுகளின் மேற்பூச அதின் வலிவை நீக்கிச் சொஸ்தமாக்கும் செய்த்தாளெண்ணெயும் மஞ்சட்கருவுஞ் சேர்த்துப்பூச கனவீக்கம்போகும், இகம்போங்கி விரையின் கோழையிற் கலந்துபூச நெருப்புப்பட்டு வெந்தபுண் சுண்ணாம்பில் வெந்தபுண் தினவுசொறி இவைகள் உடனே சொஸ்தமாகும் வெள்ளை மிளகு மஸ்தகி இவைகளோடு சேர்த்துக் காதில்விடக் காதைப்பற்றிய ரோகங்கள் தீரும் இதின் சத்தி ஏழுவருஷம் வரையில் நீங்காதிருக்கும் வி-தி, மந்திக்கும் மூளைக்கும் தீனிப்பைக்கு முதவாது வண்டலைப்பற்றிய ரோகங்களை யதிகப்படுத்தும் வாய் நாற்றமுண்டாகும் தலைவலிக்கும் ப-ம், நெருப்பிற் சுடவைத்துக்கொள்ளவும், பழச்சாறு நீர்படி இன்னமதற்கொத்த பதார்த்தங்கள் சேர்த்துக்கொள்ளவும்.

# தாம்பூலவகை,

---

## தாம்பூலம்.

சு-ம். சூடும் வரட்சியுமாம், பி-ம், குறைந்த உணவாம் சௌ-ம், சுத்த இரத்தமுண்டாம் இராஜ கருவிகளாகிய மூளை இருதயகமலம்

சால் இவைகளுக்கு வலிவுகொடுக்கும், தாது அதிகரிக்கும் கட்டுகளை யவிழ்க்கும், மாசுகளை நீரின்வழியாய் இறக்கும் நீர்த்தாரையில் விளையுங் கல்லுகளை நீரின்வழியாய்ப் போக்கிவிடும் ஞாபகசத்தியுண்டாம் புத்தியை யதிகரிக்கப்பண்ணும் சந்தோஷம் தென்பு இவைகளை யுண்டாக்கும் கோழையை அறுக்கும் வாயைச் சிவக்கப்பண்ணும் பற்களுக்குப் பலமுண்டாகும் உண்ணுக்கு வலியை நீக்கும் புதிய புண்களை யாற்றும், இதை இந்துக்கள் சுண்ணந்தடவிக் கொட்டைப்பாக்கோடு போட்டுக் கொள்ளுவார்கள் வி-தி, அதிகமாகச்சேர்த்தால் சூட்டெடம் புக்காகாது தலைவலியுண்டாகும் ப-ம், சிக்கஞ்சபீன்.

## சுண்ணாம்பு.

கு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், அசுத்த உணவாம் சௌ-ம், அசுத்த இரத்தமுண்டாகும் சுண்ணங்கள் அநேக வகையினுலுண்டாகின்றன, அவைகளில் முட்டையோடு முத்துச்சிப்பிப் பலகரை வெள்ளைப் பளிங்குக்கல் இவைகளினுலுண்டாகுஞ் சுண்ணங்களே சிறந்தன ஆயினும் இருபதுதினத்துக்கு மேலிருந்தால் தன் சுயகுணம் மாறிப் போகின்றது. திரியை வெள்ளையும் பிலியில் தோய்த்துச் சுண்ணத்திற்புரட்டி மூக்கிலேற்ற உதிரப்பீனிசம் உடனே நீங்கும், பண்ணிக் கொழுப்பிற்கலந்து உடையாத கட்டிகள்மேற்பூச உடனே உடைந்து போகும் செய்த்தான் எண்ணெயிற்கலந்து நெருப்புப்பட்ட விடத்திற் பூச உடனே குளிர்ந்துபோகும் கற்பூரதைலத்தை இத்துடன் சேர்ப்பதும் உண்டு வி-தி, பழையசுண்ணாம்பு சேர்த்தால் விஷமாம் ப-ம், புதுச்சுண்ணாம்பு.

இதை ஜலத்திற் கரைத்துத் தெளியவைத்துத் திராவகமிறக்கி அதை இரண்டு மூன்றுதரம் அப்படியே தெளியவைத்து அதில் ஒரு துளி திராவகத்தில் சேர்த்து குடிக்க உடனே பிராணன் போய்விடும்.

## கொட்டைப்பாக்கு.

சு-ம். குளிர்ச்சியும் வரட்சியுமாம், பி-ம், அசுத்த வுணவாம் சௌ-ம், அசுத்த இரத்தமுண்டாம். இருதய கமலத்துக்கும் தேகவவயவங்களுக்கும் வலிவைக்கொடுக்கும் தேகத்திலுள்ள அசுத்த ஆவிகளை மூளைக்கேறவொட்டாமல் தடுக்கும் வி-தி, மலபந்தமாம், மந்திக்கும், தீபனத்தையடக்கும். ப-ம், கத்தீரா.

## களிப்பாக்கு.

சு-ம். குளிர்ச்சியும் வரட்சியுமாம் பி-ம் அசுத்தவுணவாம்,சௌ-ம் தடித்த இரத்தமுண்டாம், பேதியாகும், சூட்டைப்பற்றிய நோய்களை யும் வேர்வையையும் எடுக்கும், பற்களையும் நரம்புகளையும் கெட்டிப் படுத்தும், தேகத்திற் சோம்பலையகற்றும், உதிரவோட்டத்தை நிறுத் தும், கண்ணின் வெள்ளை விழியிற் சிவப்புப்புள்ளிகள் பாய்ந்திருப் பதையுங் கண்ணில் நீரோடிவருவதையும் அகற்றும், துவர்ப்பாக்கு மிதுவே குணம். வி-தி, மார்புக்குதவாது, கோழைகளை யுண்டுபண் ணும் ப-ம், வாதுமைப்பிசின்.

## புகையிலை.

இதை உலகத்தில் அநேகர் விரும்புவதற்குக் காரணம் யூறு னென்னுந் தேயத்தில் அக்கிம்புகராத்தென்னும் சாஸ்திரியவர்கள் காலத்தில் வாந்திபேதி அதிகமாய்ப்பிரவேசித்து அநேக ஜனங்கள் கஷ்டமானதை மேற்படியார் பார்த்துப் புகையிலையை ஊரைச்சுற்றிக் கொளுத்தும்படிச்செய்து அதனால் மேற்படி வியாதி நிவர்த்தியான தால் அதுமுதலாக உபயோகப்படுத்தினால் நலமென்று முன்னோர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

சு-ம். சூடும் வரட்சியுமாம், பி-ம், அசுத்த உணவாம் சௌ-ம், அசுத்த இரத்தமுண்டாம் பற்களின் வலியைநீக்கும் இதின் புகையினால் பற்பல விஷப்பிராணிகள் ஓடிப்போகும் பீனிசத்தைமாற்றும் இதின் சாம்பலைப் பூவெண்ணையிற் கலந்து புண்கள்பேரிற் பூச உலர்ந்து போகும், காற்றைக் கண்டிக்கும், புகையிலைக் கஷாயத்தை இறுகிக் கொண்ட குடல்வாதம், குடல் இறுகிக்காண்கிற மலபந்தம், மூத்திர தாரை இறுகிக்காண்கிற நீரடைப்பு இவைகளுக்கு ஆசனத்தில் உப யோகப்படுத்தப்படும் வி-தி, தாகமெடுக்கும் நீரைவறட்டும் இருதய கமலத்துக்கும் மூளைக்கு முதவாது உதிரத்தைக் குழம்பேறச்செய்யும் சூட்டடம்புக்குத் தலைசுற்றும் புத்தி மயங்கும் புலன்கள் குன்றும் ப-ம், இதற்குச் சரியான சுத்தியொன்றும் அகப்படவில்லை.

# மதுரவகை.

## கரும்பு.

சு-ம். சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம், குறைந்த வுணவாம் சௌ-ம் சுத்த இரத்தமுண்டாம் தேகந்தழைக்கும் புஷ்டியுண்டாகும் உதிரத்

ஷ்தைச் சுத்தப்படுத்தும், சட்டுகளை யவிழ்க்கும் நீர்பெருகும் நீர்த்தாரையைச் சுத்தப்படுத்தும் இருமல் மார்புவரட்சி இவைகளை மாற்றும் தாதுபுஷ்டியுண்டாகும் வயிற்றின் சிக்கலை அறுக்கும் வி-தி, காற்றை விளைவிக்கும் வயிறுப்பும், தீபனத்தைக்குறைக்கும் வாந்தியாகும் ப-ம், இதின் சாற்றைப்பிழிந்து சுடவைத்துக் குடிக்கவேண்டியது.

## சருக்கரை.

இது கருப்பஞ்சாற்றைப் பலவிதமாய்ப் பக்குவப்படுத்துவதினுற் பலவகையாய்ச் சமையப்படுகின்றது. இது எவ்வளவு சுத்திசெய்யப் படுகின்றதோ அவ்வளவுக்கும் சூடு குறைந்து சாந்தப்படுகிறது

சு-ம். சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம், குறைந்தவுணவாம் சௌ-ம் சுத்த இரத்தமுண்டாம், மலத்தை இளக்கும், சுவாச உறுப்புகளுக்கும் ஈரலுக்கும் ஆத்மாவுக்கும் வலிவைக்கொடுக்கும் நரம்புகளைக் கெட்டிப்படுத்தும், வெந்நீர் அல்லது வாதுமை நெய்யிற்கலந்து குடிக்கத் தொண்டைக்கம்மலை எடுக்கும், குன்மவலியையடக்கும் காற்றையோட்டும், ஆமணக்குத் தைலத்திற்கலந்து குடிக்கப் பிரசவித்தவர்களுடைய உதிரச்சிக்கலை நன்முய்க்கண்டிக்கும், கட்டுகளையவிழ்க்கும் நீரடைப்புவாங்கும், சலத்திற் கலந்துகுடித்தால் தொண்டைப் புகைச்சல் இருமல் குரல்கம்மல் மார்பு உலர்துபோதல் இவைகள் நீங்கும் இதைப் பொடிசெய்து கண்ணிலிட மாசுகளையறுக்கும், சதை வளர்ந்திருப்பதையறுக்கும், கண் பிரகாசப்படும், இதின் புகையினுல் சளிஜலதோஷம் நீங்கும் வி-தி, ஈளை இருமல் உதிரபேதி வயிற்றுக்கடுப்பு இவைகள் அதிகரிக்கும் பித்தவுடம்புக்காகது ப-ம் பசுவின்பால் வாதுமைப்பருப்பு மாதுளம்பழம் புளி இன்னும் இவைகளைப்போன்றவை.

## நாட்டுச் சருக்கரை.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், குறைந்தவுணவாம் சௌ-ம் சுத்த இரத்தமுண்டாம், காற்றைக்கண்டிக்கும் வயிறிளகும் வி-தி சூட்டுடம்புக்குதவாது பம், பழச்சாறு.

## வெள்ளைச் சருக்கரை.

சு-ம். சூடுங்குளிர்ச்சியுமாம் பி-ம் குறைந்தவுணவாம் சௌ-ம் சுத்த இரத்தமுண்டாம் வயிறு குண்டிக்காய் நீர்த்தாரை இவைகளுக் கொத்துவரும் வி-தி தாகமுண்டாம் பித்தம் அதிகரிக்கும் ப-ம் புளி மாதுளம்பழச்சாறு.

## கற்கண்டு.

(சு-ம்) சூடுங்குளிர்ச்சியுமாம் பி-ம், குறைந்த வுணவாம் சௌ-ம், சுத்த இரத்தமுண்டாம் கண்ணொளியுண்டாம் கண்களின் திரையை யறுக்கும் கண்சிவப்பை மாற்றும் வெண்ணெயிற் சேர்த்து நித்தியம் சாப்பிடத் தேகம் பருக்கும் வி-தி, அதிகமாக அப்பியாசித்தால் பசி மந்தப்படும் ப-ம், பால் வெண்ணெய் வாதுமைப்பருப்பு.

## தேன்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், குறைந்தவுணவாம் சௌ-ம் சுத்த இரத்தமுண்டாம், தேகத்திலுள்ள மாசுகளை நரம்புகளின் வழியாயிழுத்துத் தேகத்தைச் சுத்தப்படுத்தும் ஆத்துமச்சூட்டின் சத்தியை யதிகரிக்கச்செய்யும் விஷங்களையறுக்கும் அவுஷதங்களின் குணத்தைக்காத்து உபயோகப்படுத்தும் மூளை மார்பு நுரையீரல் மண்ணீரல் தீனிப்பை ஈரல் இவைகளுண்டாகும் மாசுகளை நன்றாய்க் கண்டிக்கும் வீக்கம் காமாலை கல்லடைப்பு மாரடைப்பு பக்கவாதம் சூலை இவைகளுக்கு உபயோகப்படும் தீபனமாகும் தாது அதிகரிக்கும் இதைச் சுத்த சலத்திற் கலந்துகுடிக்க நீர்பெருகும் நீர்த்தாரையைப் பற்றிய புண்களையாற்றும் வயிற்றுக்கடுப்பைமாற்றும் தாகத்தை யடக்கும் இதைக்குடித்து வாந்தியெடுக்க அபினியின் விஷமாறும் கருஞ்சீரகத்திற் கலந்துகுடிக்க கீல்வாதம்போம் தாதுவிர்த்தி யதிகப்படும் சீரக கஷாயத்திற் கலந்து குடிக்கப் பேய் நாய்க்கடி விஷத்தைமாற்றும் வெங்காயரசத்திற் கலந்து கண்ணில்விடக் கண்திரையை யறுக்கும் நீரோட்டத்தைமாற்றும் வெள்ளைக் குங்கிலியம் கல்லுப்புச் சேர்த்துக் காதில்விடக் காதுவலி சீழோடுதல் இவைகளைப் போக்கும் நவச்சாரத்

திற்கலந்து படைகள்பேரிற் பூசப் படைகள் மறைந்துபோகும் காடி உப்புசேர்த்துக் கட்டிகள்பேரிற் பூசக் கட்டிகள் உடையும் அடிவயிற் றிற்பூசப் பிரசவித்த பெண்களுக்குக் கற்பவலியை மாற்றும் இந்தக் குணங்களெல்லாம் புதியதேனுக்குண்டாம் பழமையானால் சூடு அதி கரிக்கும் காய்ச்சி நுரையை யெடுத்துச் சேர்க்கவேண்டியது வி-தி, சூட்டுடம்புக்குப் பித்தம் அதிகரிக்கும் தலைவலிக்கும் மலத்தைக் கிண்டிவிடும் ப-ம், காடி வாதுமைப்பிசின்

## கள்ளின் வகை.

அது இரண்டு வகைப்படும் மரங்களின் வழியாய் இறக்கப்படுவ தைக் கள்ளென்றும் பலபல வஸ்துக்களில் மதுரஞ்சேர்த்துப் புளிக்க வைத்துப் பதப்படுத்துவதைச் சாராயமென்றும் சொல்லப்படும் அவை களின் சுபாவகுணமாவது மயக்கமுண்டாதலும் உதிரத்தை உறையப் பண்ணுதலும் மூளையை இளக்கப்பண்ணுதலும் புலன்களைச் சிதறப் பண்ணுதலுமாம்.

### தென்னங்கள்.

(சு-ம்) சூடுங்குளிர்ச்சியுமாம் (பி-ம்), சுத்த இரத்தமும் அதிக வுணவுமாம் சௌ-ம், தேகந்தழைக்கும் சூட்டையகற்றும் நீரைப்பற் றிய ரோகங்களை நன்றாய்க் கண்டிக்கும் உதிரஞ்சுரக்கும் உதையத் திற்கு முன்னே புதிதாயிறக்கியவுடனே குடிக்கவேண்டியது வி-தி, மந்திக்கும் பசியையடக்கும் ப-ம், நற்சீரகம் ஏலம் கற்கண்டு.

### பனங்கள்.

சு-ம். சாந்தமாம் பி-ம், சுத்த இரத்தமும் அதிக உணவுமாம் சௌ-ம், பித்தம் வெட்டை அழலை யிவைகளை நீக்கும் தாதுபுஷ்டி அதிகப்படும் பிரமியம் வெள்ளை யிவைகளை நீக்கும் சொறி சிரங்கு தினவு யிவைகளை நீக்கும் வி-தி இல்லை ப-ம், இல்லை.

## கொடி முந்திரிப்பழச் சாராயம்.

சு-ம். சூடுங்குளிர்ச்சியுமாம் பி-ர், சுத்த இரத்தமும் சுத்த வுணவுமாம் சௌ-ம் தேகபுஷ்டியுண்டாகும் தீபனமுண்டாகும் தினிப் பைக்கு வலிவைக்கொடுக்கும் கட்டுகளை யவிழ்க்கும் தேன் கலந்து குடிக்க நீரைப்பெருக்கும், காற்றைக்கண்டிக்கும் தாதுபுஷ்டி யுண்டாகும், மார்பிலும் நுரையீரலும் விளையுங்கபத்தை அறுக்கும், குண்டிக்காய்க்கு வலியைக்கொடுக்கும், நீர்த்தாரையைச் சுத்திசெய்யும் மூளைக்கு வலிவுகொடுக்கும் வி-தி சத்துக்களைக் குழம்பேறச்செய்யும் வீக்கமுண்டாகும் ப-ம், இனிப்பு மாதுளைப்பழச்சாறு.

## தேன் கலந்துசெய்யுஞ் சாராயம்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம் அசுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் நீரைவறட்டும், கபத்தை அறுக்கும், குளிர்ச்சியைப்பற்றிய ஜலதோஷங்களை நீக்கும் குளிர்ச்சியைப்பற்றிய தேகத்தோருக்கு அதிக உபயோகப்படும், மலசுத்தியாகும் குங்குமப்பூகிரும்பு சாபத்திரி சேர்த்துக்காய்ச்சவும் (வி-தி) கட்டுகளை விளைக்கும் ப-ம், இனிப்பு மாதுளைப்பழச்சாறு.

## கருப்பஞ்சாற்றிலிறக்குஞ் சாராயம்.

(சு-ம்) சூடும் வரட்சியுமாம் பி-ம் அசுத்த இரதத்மும் குறைந்த உணவாம் சௌ-ம் தாது அதிகரிக்கும் குண்டிக்காய்க்கும் நீர்த்தாரைக்கும் வலிவைக்கொடுக்கும் நீரடைப்பு நீர்ச்சுறுக்கு, யிவைகளை மாற்றும் வி-தி, பித்தம் அதிகரிக்கும் ப-ம், காடி பழச்சாறு.

## பேரிச்சம்பழத்திலிறக்குஞ் சாராயம்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம் அசுத்த இரத்தமும் அதிக வுணவுமாம் சௌ-ம், தாதுவுண்டாம் தீபனம் அதிகரிக்கும், மலம் இளகும், விருத்தாப்பியருக்கும் விந்து நஷ்டமுள்ளவருக்கும் அதிக உபயோகப்படும் வி-தி, வண்டலைப்பற்றிய ரோகங்களை அதிகப்படுத்தும் ப-ம், இனிப்பு மாதுளைப்பழச்சாறு.

## பற்பல தானியங்களினாற்செய்யுஞ் சாராயம்.

சு-ம். சூடுங்குளிர்ச்சியுமாம். பி-ம் அசுத்த இரத்தமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் அதிக மயக்கமுண்டாம் பசியை யுண்டாக்

கும், மலத்தைக்கட்டும், அழுகைக்கொடுக்கும் வி-தி தாதுகுறையும் வயிறுப்பும் தேகம் இளைக்கும் ப-ம் தேன்சுத்தஜலம்.

### பற்பல கனிகளினுற் செய்யுஞ் சாராயம்.

சு-ம். சூடுங்கொழுமையுமாம் பி-ம், அசுத்த இரத்தமும் அசுத்தவுணவுமாம் சௌ-ம், இது தானியத்திலிறக்கிய சாராயத்துக்கு ஒத்திருந்தபோதினும் அதற்கிது கொஞ்சம் நன்மையை யுடையதாகும் மயக்கம் அதிகரிக்கும் வி-தி, வயிறுப்பும் வயிற்றில் இறைச்சலுண்டாம் ப-ம் தேன் சீரகம் இஞ்சி கடுகு திப்பிலி.

---

## வஸ்த்திரவகை.

### பட்டுவஸ்திரம்.

சு-ம். சூடுங்குளிர்ச்சியுமாம் பி-ம், இல்லை சௌ-ம், தோலை மிருதுப்படுத்தும், தேகம் பருக்கும் பேன் ஈர் முதலியவைகள் தேகத்திற் புழுக்காவாம் வி-தி தேகத்தின்மேற் கருமங்களைப் பஞ்சைப்படுத்தும் ப-ம், பருத்திப் போர்வையோடு இணைத்துப் போர்த்துக் கொள்ளவும்.

### நார் வஸ்திரம்.

சு-ம். குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம், இல்லை சௌ-ம், தேகக்கொதிப்பை ஆற்றும் தேகத்தைக் குளிரவைக்கும், தேகநிறத்தைத் தெளியப்படுத்தும், வி-தி, உதிரங்குறையும் ப-ம், பட்டுச் சேர்த்து உடுத்தவும்.

### பருத்தி வஸ்திரம்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், இல்லை சௌ-ம் சூட்டைக் கொடுக்கும், குளிரைப்போக்கும், நீரை வரட்டும் வி-தி உதிரத்தைக் குழம்பேறச்செய்யும் ப-ம் பருத்திச்சேர்த்து உடுத்தவும்.

### சரிகை வஸ்திரம்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம் இல்லை சௌ-ம் தேகம் தழைக்கும், அழகுகொடுக்கும் வலியுண்டாம் வி-தி, இல்லை ப-ம், இல்லை.

## ஔ ஷ த வ கை.

### அகிற்கட்டை.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம் சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் அதின் சுகந்தவாடை இராஜ வுறுப்புகளுக்கும் தீனிப்பை குடல் நரம்பு புலன் இவைகளுக்கும் வலிவைக் கொடுக்கும், சந்தோஷமுண்டாக்கும் கட்டுகளை அவிழ்க்கும், காற்றைக்கண்டிக்கும், குளிர்ச்சியினால் அல்லது ஊற்றும்பிள்ளை பஞ்சைப்பட்டதினால் நீர் அதிகரிப்பதற்கு அதிக உபயோகப்படும், கெர்ப்பத்தைக்காக்கும் இருமல் சுவாசம், வீக்கம் மூர்ச்சை வாந்தி, தாதுநஷ்டம் இவைகளுக்கு அதிக உபயோகப்படும் வி-தி, சூட்டைப்பற்றிய தேகத்தோருக்குத வாது ப-ம் சிக்கஞ்சபீன் கர்ப்பூரம் பு-ம், இதில் மூன்று வகைப்படும் ஒன்றுக்கொன்று பலமாகும்.

### அக்லீ லுல்மூலுக்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும், குறைந்த உணவுமாம் சௌ-ம், தலைவலி வயிற்றுவலி மூலநோய் கெர்ப்பவலி கெர்ப்பவீக்கம் இவைகளுக்குபயோகப்படும், நீரை வரட்டும் பருவுகளையுடைக்கும், இதின் கஷாயம் சுவாசத்தை நிறுத்தும் கல்லடைப்பைநீக்கும் வி-தி நீர்த்தாரைக்குதவாது, மந்திக்கும் ப-ம், தேன் சீமை அத்திப்பழம் திராட்சிப்பழம் ப-ம் வெள்ளைச்சாமந்திப்பூ

### அக்கராகாரம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம், சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம், வாயுவைக்கண்டிக்கும் கட்டை அவிழ்க்கும் புஷ்டியுண்டாம் மார்புவலி இருமல் தெத்துவாய் பாரிசவாய்வு நடுக்கல் உதறல் கீல்வாதம் வீக்கம் பல்நோய் இவைகளுக்குபயோகப்படும், நீரடைப்பு

உதிரச்சிக்கல் இவைகளை மாற்றும் இதில் நவச்சாரம் சேர்த்தரைத்து வாயிற்பூசி நெருப்பை வாயா லடுக்க வாய் சுடாது, புழுப்பிடித்த பற்களில் தடவ புழுக்கள் சா , இதின்றைல மிறக்கிச் சுரணையற்ற தேகத்திற் பூசச் சுரணையுண்ட ும், ஆண்குறியிற் பூசிப் புணர்ச்சி செய்ய இன்பம் அதிகரிக்கும், உட ங்காடியுஞ் சேர்த்து உண்ணாக்கிற் பூச உண்ணாக்கின் சோர்வையை வாங்கும், இதைப் பொடிசெய்து மூக்கினூத மூர்ச்சையைத் தெளியப்படுத்தும் பற்கிட்டலைத் திறக்கச் செய்யும், துரையீரலுக்குதவாது, தமிழ் வயித்தியர்கள், கண்டாஔஷதம் செய்கிறமுறையில் இது பிரதான சரக்கு அக்காரத்துக்கு சுரம் தாகம் தோஷம் வாதமிவைகள் போமென்றும், வாயிலடைக்க, ஜலம் உண்டாகுமென்றும் தமிழ் நூல்களிற் கண்டிருக்கின்றது, ப-ம் வாது மைப்பிசின் தீப திராக்ஷைப்பழம் ப-ம் அரிசித்திப்பிலி.

## அசாறான்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம். சுத்த இரத்தமும் குறைந்த வுணவாம், சௌ-ம் வாயுவைக்கண்டிக்கும், நீரைப் பெருக்கும், தீனிப்பை ஈரல் மண்ணீரல் இவைகளைப்பற்றிய மாசுகளையறுக்கும் இதில் தேனுந் தண்ணீருங்கலந்து காயச்சின பாகை சேர்த்துக்குடிக்க வாயுவைப்பற்றிய மாசுகளைப் பேதியின் வழியாய் நன்றாய்க் கண்டிக்கும், நீரடைப்பு கல்லடைப்பு உதிரச்சிக்கல் நரம்பிசிவு கீல்வாதம் வீக்கம் காமாலை இவைகளுக்குபயோகப்படும். இதின் புகையிட தோளோடிப் போகும், இதைப் பசுவின்பாலில் அல்லது முட்டையின் வெள்ளை அம்பிலியிலாவது அரைத்து அடிவயிறு ஆண்குறி முதலிய இடங்களிற் பூசத் தாதுவிர்த்தியதிகரிக்கும், இளைப்புவராது வி-தி நுரையீரலுக்குதவாது, ப-ம், தீபதிராக்ஷைப்பழம் ப-ம் சுக்கு அல்லது வசம்பு.

## அஷக்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமுங் குறைந்த வுணவுமாம் சௌ-ம, பேதியாகும், தேகத்துக்குள்ளிருக்கும் மாசுகளையறுக்கும், காற்றைக்கண்டிக்கும் கல்லடைப்பை நீக்கும். குணத்தை வெளிப்படுத்தும், குடற்பூச்சிகளைச் சாகப்பண்ணும், புண்களை யாற்

றும், மேகப்படைகளை நீக்கும், கண்ணேய் வாங்கும் வி-தி தீனிப்பைக் கும் குண்டிக்காய்க்கு முதவாது ப-ம், புனிகூன்ஜ மா ப-ம், சுக்கு மிஞ்சு.

## அதிம ரம்.

சு-ம் சூடும் வரட்சியுமாம் பி-ம், மத்திம இரத்தமும் குறைந்த வுணவுமாம் சௌ-ம் காற்றைக்கண்டிக்கும் சத்துகளின் மாசை மலத்தின் வழியாயிறக்கும் தாகத்தையடக்கும் நீறையிறக்கும், உதிரச் சிக்கலையறுக்கும், உள் அவயவங்களிலுள்ள மாசுகளை நீக்கும், நரம்புகளுக்கு வலிவைக்கொடுக்கும், பற்பல இருமல்களை மாற்றும் மார்பு ஈரல் தீனிப்பை குரல் தொண்டை இவைகளின் வரட்சிகளை மாற்றிச் சாந்தப்படுத்தும், நரம்புகளைப்பற்றிய நோய்களையும் நாட்பட்ட மூல நோய்களையும் நாசப்படுத்தும், இதில் ஒருவராகனிடை சருக்கரை, ஒரு வராகனிடை சோம்பு, அரைவராகனிடை சித்திரமூலச் சூரணம், சேர்த்துச் சித்திரைமாதமுதல் ஆடிமாதங் கடைசிவரையிற் சாப்பிட்டு அப்பியாசஞ் செய்துகொண்டு வருகிறவனுக்கு ஒருநோயும் அணுகாது ஒளிகொடுக்கும், சீராத்தலைவலி, ஒருதலைவலி, சுரம் இவைகள் தீரும், இதை மூலைப்பாலிலுரைத்து நேத்திரத்திலிட ஒளியுண்டாகும், இதின் இலையையரைத்து தேகத்திற் பூசிவரத் தேகநாற்றம் அக்குள் நாற்றப்படை சொறி சிரங்கு இவைகளை நாசப்படுத்தும், இதின் பாலுக்கும் இதுவேகுணம் அதிமதுரத்தை பேதி, நீர்ச்சுருக்கு இவைகளுக்குங் கொடுக்கிறார்கள் மூஸாம்பரம், நில ஆவாரை முதலிய கசப்பான மருக்களோடுஞ் சேர்த்துக்கொண்டால் அவைகளுக்கு வாசனையும் ருசியும் கொடுக்கும், இதை வாயில்போட்டு அடக்கி ரசத்தை விழுங்கினல் கறகறப்பு நீங்கும் வி-தி குண்டிக்காய்க்கும் மண்ணீரலுக்கும் உதவாது ப-ம், நறுவுளிக்காய் ரோஜாபுஷ்பம் ப-ம், திருபுது சுக்கு.

## அப்சந்தீன்.

சு-ம். சூடும்வரட்சியுமாம் பி-ம், சுத்த ரத்தமுங் குறைந்த உணவுமாம், சௌ-ம், தீபனமாம் தீனிப்பை ஈரல் நுரையீரல் இவைகளுக்கு வலிவுகொடுக்கும் உதிரச்சிக்கலை யெடுக்கும் நீர் பெருகும், சுரத்தைக் கண்டிக்கும், இதை சலத்தில் வேகவைதது வீட்டில் தெளிக்க விஷப் பூச்சிகள் சாகும் வி-தி, தலைவலியுண்டாகும் ப-ம், அனிசூன் ப-ம், அசாறுன்.

## அபினி.

சு-ம். குளிர்ச்சியும் வரட்சியுமாம் பி-ம், தடித்த இரத்தமும் குறைந்த வுணவுமாம் சௌ-ம் மயக்கமுண்டாகும், நித்திரையுண்டாம், வலிகளை நீக்கும், மந்திக்கும், கெட்ட நாற்றத்தை நீக்கும், பேதியைக் கட்டும், இருமல் மூச்சடைப்பு தலைவலி பீநிசம் இவைகளுக்கு உபயோகப்படும், புண்ணையாற்றும் அபினியுடன் குங்குமப்பூ சேர்த்துக் கோழிமுட்டை மஞ்சட்கருவி லிழைத்துக் கண்ணில்விட கண் சிவப்பு நீங்கும் மூலைப்பாலி லிழைத்துச் சிலையிலூட்டித் திரித்து ஆசனத் துவாரத்தில்வைக்க உதிரபேதி உதிரக்கடுப்பு நீங்கும், வாதுமைநெய்யி லிழைத்துக் காதில்விட காதுவலி நீங்கும், மெழுகுதைலத்தி லிழைத்து தேகத்திற்பூச சொறி சிரங்கு தினவு நீங்கும், அபினியுடன் ஜாதிக்காய் சேர்த்தரைத்துச் சாப்பிட்டுவரத் தாதுபுஷ்டி அதிகரிக்கும் வி-தி புத்தியைமயக்கும், உறக்கமுண்டாகும், ஒருவன் இரண்டு வராகனிடை உட்கொண்டாற் கொன்றுவிடும் ப-ம், மிளகு லவங்கப்பட்டை ஜான்பற்பியூன் குரோசானி ஓமம், போஸ்துகாயிலிருந்து வடிந்துறைந்த பாலுக்கு அபினியென்றுபேர், அபினியை எடுக்கிறவிதமாவது காயப்பழுக்காததற்கு முன்னும் புஷ்ப இதழ்கள் உதிர்ந்து 7 நாள் ஆனபின்பு சாயரட்சையில் காயின்மேல் நீண்ட வட்டமாய் மேலோடு 2-3-கீற்று கீறினால் கீற்றுகளிலிருந்து பால் ராத்திரிமுழுதும் வடிந்து உறைந்திருக்கும் காலையில் அதைச் சுரண்டி எடுத்துக் கொள்ளவேண்டியது, கீற்றுகளை ஆழமாய்க்கீறினால் பால்வடியாது பகலில் கீறினால் வெய்யலில் பால் உலர்ந்து வடிகிறவாய் மூடிக்கொண்டு பால் வடியாது இவ்விதமாய்க் காயின்மேல் 2-3-தடவை கீறி பாலை எடுக்கப்படும்.

## அப்திமூன்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம், வண்டலைப்பற்றிய சகலரோகங்களையும் நன்றாய்க் கண்டிக்கும் மேகவியாதிகளை யோட்டிவிடும், கருங்குஷ்டம், வெண்

துஷ்டம், படை, பெருவியாதி, இதைப்போன்ற வியாதிகளும் நீங்கி விடும் இதில் ஒருபலத்தை எட்டுப்பலம் பசுவின்பாலில் இராப்பகல் ஊறவைத்து, சிக்கஞ்சபீன் பதினேந்து கழஞ்சு சேர்த்து, நித்தியஞ் சாப்பிட்டுவர, மூளையைப்பற்றிய ரோகம் நீனிப்பையின் சூடு பக்கப் பிளவை பயித்தியம், இசிவு இவைகள் நீங்கும் வி-தி, சூட்டைப்பற்றிய தேகத்தோருக்கும் பித்த தேகத்தோருக்கும் உதவாது, ப-ம், பனஷா கத்தீரு ப-ம், இராஜவர்த்திக்கற் இசறே அறுமனி.

## ஹப்பேஜலம்.

சு-ம். சூடுங் குளுமையுமாம் பி-ம், சுத்தஇரத்தமும் அதிக உணவுமாம் சௌ-ம், தேகம் பெருகும், புடியுஷ்ண்டாகும், குண்டிக்காய்க்கும் ஈரலுக்கும் வலிமையைக்கொடுக்கும், வண்டலைப்பற்றிய ரோகங்களை நீக்கும் நீர் எரிவு நெஞ்சுவரட்சி இவைகளைக் குளிரப்பண்ணும், தாது புஷ்டி யதிகரிக்கும் வி-தி கட்டுகள் உண்டாகும், தொண்டை வீங்கும் ப-ம், சிக்கஞ்சபீன் ப-ம், ஹப்புல்கரு.

## ஹப்பேஸம்ரு.

சு-ம். சூடுங்குளுமையுமாம் பி-ம், சுத்த இரத்தமும் அதிக உணவுமாம் சௌ-ம் தாது அதிகரிக்கும் தேகம் பருக்கும், பித்தம் கபம் இவைகளைக் கண்டிக்கும், வி-தி, வயிறுகனக்கும் பேதியகலும் ப-ம், சிக்கஞ்சபீன் தேன் ப-ம், எள்ளு.

## ஹப்பேபல்ஸான்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் உதிரச்சிக்கல் நீர் அடைப்பு இவைகளைமாற்றும், நீனிப்பைக்கு வலிமையைக் கொடுக்கும், நீனிப்பையிலுங் குடலிலு முள்ள ஈரத்தை வரட்டும், சிக்கலையறுக்கும், இரசத்தைப்பற்றிய ரோகங்களும் வண்டலைப்பற்றிய ரோகங்களும் மூச்சடைப்பு வயிற்றுவலி இருமல் வீக்கம், காக்காய்வலி விஷக்கடி இவைகளுந்தீரும், வி-தி, நீர்த்தாரைக்குதவாது ப-ம், வாதுமைப்பிசின் ப-ம், ஊதேபல்சா.

## ஹப்புல்பான்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம், சௌ-ம் பேதியாகும், ஈரல் மண்ணீரல் இவைகளின் கட்டுகளை அவிழ்க்கும் இதின் சூரணம் ஈரலைப்பலப்படுத்தும் இதை அரைத்துப் பூசக் கட்டிகள் உடையும், கீல்வாதம் இசிவு, தேமல் படை இவைகள் தீரும் வி-தி, ஈரலுக்கும் தீனிப்பைக்கும் உதவாது ப-ம், சோம்பு ப-ம் லவங்கப்பட்டை.

## ஹப்புல்கஜரு.

சு-ம் சூடும் வரட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும், குறைந்த உணவுமாம் சௌ-ம் தாதுபெருகும் உதிரச்சிக்கலையறுக்கும் நீர் பெருகும் மூலஉதிரங் கட்டுப்பட்டதைத் தீர்க்கும், அதின் சாம்பலைச் சலத்தில் அரைத்துப்பூச, மயிர் உதிர்ந்துபோவது நிற்கும், காடிச்சேர்த்துக் குடித்தால் விஷங்களை நீக்கும், அதின் தைலம் சேங்கொட்டையின் விஷத்தைமாற்றும், இடுப்புவலி தாதுநஷ்டம் காமாலை கல்லடைப்பு பக்கவாதம் இவைகளுக்கு உபயோகப்படும் தீபனமாகும் வி-தி தலைவலி தாகம் இவைகள் அதிகரிக்கும் ப-ம் மூங்கிலுப்பு வாதுமைப் பருப்பு.

## ஹ லி யூ ன்.

சு-ம். சூடும்வரட்சியுமாம் பி-ம், சுத்த ரத்தமும் அதிக உணவுமாம் சௌ-ம் தாதுபெருகும் ஈரலைப்பற்றிய கட்டை அவிழ்க்கும் நீர் அதிகரிக்கும் மார்புவலி வயிற்றுவலி வீக்கம் கண்புகைச்சல் இவைகளை நீக்கும், இதின் கஷாயத்தில் வாய்கொப்பளிக்கப் பற்களினோவை நீக்கும், கல்லடைப்பை நீக்கும், உதிரச்சிக்கலை அறுக்கும், பற்பல மிருகங்களின் எலும்பை மண்ணிற்புதைத்து நித்தியம் அதில் சலம் விட்டுவர இந்தப்பூண்டு அதில் தானாய்ப்பிறக்குமென்று சாஸ்திரிகள் சொல்லியிருக்கிறார்கள் வி-தி, மந்தப்படும், பசியை அடக்கும் ப-ம், சிக்கஞ்சபீன் ப-ம் இல்லை.

## அ ப் பி ரே க ம்.

சு-ம். குளிர்ச்சியுமாம் வரட்சியுமாம் பி-ம், அசுத்த இரத்தமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் மூலம் பவுத்திரம் பெரும்பாடு உதிரச்

சிக்கல் உதிரபேதி இருமல் சூட்டைப்பற்றிய ஈரங்கள் பேதி இவைக ளுக்குபயோகப்படும் வி-தி குண்டிக்காய்க்கும் நுரையீரலுக்கும் உத வாது ப-ம் கத்திரு கர்பிஸ் ப-ம் இல்லை.

## அம்பர்.

சு-ம். சூடும் வாட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும் சுத்த உணவு மாம், சௌ-ம் தேகவலிமையை அதிகரிப்பது ஆத்மசத்தியை யதிகப் படுத்தும், தீபனமாம், அதிக சஞ்சாரத்தினல் குறைகின்ற தேக சத் தியை குறைந்துபோகாமற் காக்கும், சந்தோஷத்தை யுண்டாக் கும் அவுஷதங்களின் பலனை யேற்றும் கட்டத்திற் கபம் விளையாமற் காக்கும் பாரிசவாதம், பக்கவாதம் கில்வாத முதலிய சகல ரோகங்களை யும் நீக்கிவிடும், புத்தியை அதிகரிக்கப்பண்ணும், ஆத்துமச் சூட்டை நீக்கிவிடும் இதைமாவும் அசலோடு சேர்த்து சாப்பிடத் தாதுவிருத்தி யதிகரிக்கும், இதில் ஒரு நெல்லிடையை நீர்த்தாரையிற் சொருகி வைக்க லேபனம் அதிகரித்து அதிக இன்பத்தை ஸ்ரீ புருஷர்கள் இரு திறத்தாருக்குங் கொடுக்கும், மூன்றுநாள்வரையில் நித்தியம் ஒரு * டாங்கு சாப்பிட்டுவரக் குன்ம முதலியவற்றின் பலவிதவலிகளை நீக் கும், இதின் புகையினுற் காற்றைப்பற்றிய சகல குற்றங்களும் நீங்கிப் போகும், இதை மோந்துவருவதினாலும் மேற்சொல்லிய வியாதிகளை நீக்கும், சூடான எண்ணெயிற்கலந்து நசியமிடக் கபாலத்தைப்பற்றிய ஜன்னி சலவை சைத்திய முதலிய ரோகங்கள் பறந்துபோய்விடும் வி-தி, சூட்டைப்பற்றிய தேகத்தோருக்குதவாது ப-ம் குளிர்ச்சியைப் பற்றிய கனிகள் ப-ம் கஸ்தூரி குங்குமப்பூ அம்பர்தைலம் அம்பரும் கல்லமணலும் சமனிடையாய்ச்சேர்த்து எரித்து தைலத்தை வடித்துக் கொள்ளவேண்டியது இந்த தைலத்தை-5-துளிவீதம் கொடுத்தால் உஷ்ணிக்கும் வலிகளை நிறுத்தும், இதை நமது தேசத்தில் இந்து வைத்தியர்கள் எவ்விதமாய்ச் சிலாகித்துப் பேசுகிறார்களோ அவ்வித மாகவே இங்கிலீஷ் வைத்தியத்திலும் மெத்தப் புகழ்பெற்றிருந்தது இதற்கு ஔஷதகுணங் கொஞ்சமாய் இருப்பதால் இதை இப்போது மெத்த உபயோகப்படுத்துகிறதில்லை.

## அரத்தை.

சு-ம். சூடும் வாட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்த வுணவுமாம் சௌ-ம், காற்றை நன்ருய் கண்டிக்கும் தீனிப்பை குடல்

*டாங்கு என்பது ஐந்து குன்றிமணியிடை.

களுக்குப் புஷ்டியைக்கொடுக்கும், தாதுவுண்டாகும் பசியெடுக்சு ரைவரட்டும், வயிற்றுவலி புளியேப்பம், சைத்தியம் இடுப்புவலி, விகுரற்றம், கண்டமாலை, பக்கப்பிளவை, இவைகளுக்கு உபயோகப்படும், குளிர்ச்சியைப்பற்றிய நோய்களை ஓட்டும் இதில் ஒரு வராகனிடை அரைத்துப் பசுவின்பாலிற் கரைத்துக் குடிக்கத் தாதுபுஷ்டி அதிகரிக்கும் வி-தி, இருதயகமலத்துக்கும் மார்புக்குதவாது ப-ம் சந்தனம் மூங்கிலுப்பு ப-ம், வால்மிளகு லவங்கப்பட்டை.

## அரக்கு.

சு-ம் சூடும் வரட்சியுமாம் பி-ம், அசுத்த இரத்தமும் அசுத்த உணவுமாம், சௌ-ம் பருவுகளைக் கரைக்கும் தேகத்தை இளைக்கப் பண்ணும் வீக்கம் மகோதரம் பக்கவாதம் காமாலை இருமல் இன்னம் இதைப்போலொத்த ரோகங்களுக்கு உபயோகப்படும். இதில் நித்தியம் ஒருடாங்கு பொடிசெய்து காடியோடு கலந்து நாற்பதுநாள் சாப்பிட்டு வர மலையைப்போன்ற தேகம் துரும்பைப்போலாகிவிடும் தேகத்தைக் கரைக்க இதற்குமிஞ்சின பதார்த்தம் ஒன்றுமில்லை பட்டுப்புடவை கம்பளி முதலியவைகளுக்குக் கெண்பைப்போலச் சிவந்தவன்னங் கொடுப்பதற்கும் இதுவே உபயோகப்படும் வி-தி, மண்ணீரலுக்குதவாது ப-ம், ரூமிமஸ்தகி ப-ம் ரேவல்சீனி அசாரூன் மூங்கிலுப்பு.

## அரிதாரம் அல்லது தாளகம்.

சு-ம் சூடும் வரட்சியுமாம் பி-ம் அசுத்த இரத்தமும் அசுத்த உணவுமாம் சௌ-ம், அரிதாரம் மஞ்சள் சிவப்பு வெள்ளை பச்சை கறுப்பு என ஐந்துவகைப்படும் இதில் பச்சையுங் கறுப்புந்தவிர மற்றவை சிறந்தவைகளாகும் மடல் பளபளப்புள்ளதாயிருப்பது சிரேஷ்டம் மயிர்களைப் போக்குவதற்கும் ரணத்தை ஆற்றுவதற்கும், கிருமிகளைக் கொல்லுவதற்கும், அதிக உபயோகப்படும். இதைப் பொடி செய்து சுற்சுண்ணும்போடு கலந்து மயிர்வேண்டாத இடத்திற் பூசி வெந்நீர்விட உதிர்ந்துபோகும் பூவெண்ணெயிற்கலந்து மூலப்புண்ணின்மேற்பூச ஆறிப்போய்விடும் வி-தி நஞ்சாம் உள் அவயவங்களை வேகவைக்கும் ப-ம் பசுவின்பால் வாதுமைப்பருப்பு ப-ம், மஞ்சளுக்குச் சிவப்பும் சிவப்புக்கு மஞ்சள் இப்படிக்கு ஒன்றுக்கொன்று பதிலாகும்

## ஆமணக்கு.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், இல்லை சௌ-ம், பேதியா வாயுவைக்கண்டிக்கும் நரம்புக்குள்ளிருக்கும், மாசுகளை நீக்கும், உதிரச்சிக்கல் நீங்கும், வயிற்றில் உஷ்ணஞ்செய்யாமலும் வேதனை யில்லாமலும் பேதியாகும்படிச் செய்யவேண்டிய போதெல்லாம் இதைக் கொடுக்கலாம், குடற்புண் வயிறு முறுக்கலோடு வேதனை மூத்திர உறுப்புகள் ஜனன உறுப்புகள் இவைகளின் வியாதி மூலரோகங்கள் மலத்துவாரம் அடைப்பு, கற்பிணிகள் பிரசவித்தமாதர்கள் வியாதி கண்டிருக்கிற குழந்தைகள் இவர்களுக்குப் பேதிக்குச் சிற்றாமணக் கெண்ணெய் கொடுப்பது நல்லது, அயங்கொடுத்துக் காணுகிற மலச் சிக்கலுக்கும் இதைக்கொடுக்கலாம், குழந்தைகளுக்குச் செவ்வெண்ணை என்று முலைப்பாலில் கலந்து வாப்பது நமது வீட்டு வழக்கம் ஆனால் நாள்தோறும் அந்தி சந்தி இரண்டுவேளையும் வார்த்துக்கொண்டிருக்கிற வழக்கங்கெட்டது, அதனால் அநேக துர்க்குணங்கள் காணுகிறது அவசரமாய் எப்போது வேண்டியதோ அப்போது உபயோகப்படுத்தினால் சவுக்கியத்தைத் தரும், சிற்றாமணக்கெண்ணையுடன் பேயன் வாழைப்பழம் கற்கண்டு சீரகம் இவைகளைக் கலந்து ஊறவைத்து, காலையில் கொஞ்சஞ் சாப்பிட்டுக்கொண்டுவந்தால் தேகத்தைக் குளிர்ப்பிக்கும் மலச்சிக்கலிராது, ஆமணக்கு முத்தை துவையல்செய்து கொடுத்தால் மலத்தைக்கழிக்கும் வி-தி தீபனத்தை அடக்கும் ப-ம் மஸ்தகி கத்தீரு ப-ம், முள்ளாங்கிவித்தின் தைலம்.

## ஆலூபுஹாரு.

சு-ம். குளிர்ச்சியும் சிவிர்ப்புமாம் பி-ம், சுத்த இரத்தமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் வயிறிளகும் பித்தநீரைப் பேதியின் வழியாயிறக்கும் இருதயத்தைப்பற்றிய சூடு பித்தத்தினலுண்டாகும் தாகம் சூட்டைப்பற்றிய சுரங்கள் தலைகள் தினவு சொறி சிரங்கு இவைகளுக் குபயோகப்படும் இதில் ஒருபங்கிற்கு நாலுபங்கு ஜலம்விட்டு நாலி லொன்றாய்க் காச்சி இறக்கிக் கொஞ்சம் வெள்ளைச் சருக்கரை கலந்து சாப்பிட சொகுசாக யாதொரு உபத்திரவமு மில்லாமற் பேதியாகும் சருக்கரைப் பாகிற் பதப்படுத்திச் சாப்பிட்டுவர மலச்சிக்கல் இளகிச்

சுவாதீனமாம் இந்தப்பழம் கறுத்து மேலே சதையாயும் உள்ளே விதையுமிருக்கும் தித்திக்கும் இதற்கு மலத்தையுதைக்கிற குணமிருப்பதால் இது சில ஆவாரை சரக்கொண்ணை முதலிய அவுஷதங்களோடு சேர்க்கப்படும். சில ஆவாரைக் கஷாயத்துடன் சேர்த்தால் குமட்டலை சமனப்படுத்தும், இதைப் பழமாகவே சாப்பிடலாம் கஷாயஞ் செய்துங்கொடுக்கலாம் வி-தி, கபாலத்துக்கும் தீனிப்பைக்கும் உதவாது ப-ம், நறுவிலிக்காய் குல்கந்து ப-ம் புளி.

## ஆற்றுத்தும்மட்டிக்காய்.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம். அசுத்த இரத்தமும் அசுத்த உணவுமாம் சௌ-ம், குளிர்ச்சியைப்பற்றிய சகல வியாதிகளையும் பேதியின்வழியாய்க் கண்டிக்கும், உதிரச்சிக்கலை அறுக்கும், கருப்பத்தை விழப்பண்ணும், கீல்வாதம் இடுப்புவலி இவைகளுக்கு உபயோகப்படும் வி-தி மூளைக்குந் தீனிப்பைக்கு முதவாது வயிறு பிடுங்கும் ப-ம் வாதுமைப்பிசின் ப-ம், ஆமணக்குத் தைலம் கள்ளி.

## ஆபுனூஸ் அல்லது கருங்காலி.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம், காற்றைக் கண்டிக்கும் நீர்பெருங் கல்லடைப்பு வாங்கும் கட்டுகளை அவிழ்க்கும் இதை உரைத்துக் கண்ணிலிடக் கண்ணைப்பற்றிய ரோகங்கள் திரைகள் முதலியது நீங்கும், கோழிமுட்டை வெள்ளை அம்பிலியில் உறைத்துப் பூச நெருப்புப்பட்ட ரணங்கள் மேகரணங்கள் சொறி சிரங்கு முதலியதுகள் உலர்ந்துபோகும் வி-தி, தீனிப்பைக்குதவாது ப-ம், தேன் ப-ம், இலந்தைக்கட்டை.

## ஆ ஸ்.

சு-ம். குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம், சுத்த இரத்தமும் அதிக உணவுமாம், சௌ-ம், இருதயம் உடல் டீனிப்பை நேத்திரம் இவைகளுக்கு வலிமையைக்கொடுக்கும் மந்திக்கும் நீர் பெருகும் சுரத்தைக் கண்டிக்கும், பேதி கல்லடைப்பு மூலம் விஷப்பூச்சி கட்டி இவைக

ளுக்கு உபயோகப்படும் உதிரப்பெருக்கை மாற்றும் வி-தி, தலை வலிக்கும், நித்திரை பிடியாது ப-ம், பனப்ஷா ப-ம், கம்பிளிப்பூச்சியிலை.

## இஸ்பாஞ்.

சு-ம். குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் தடித்த இரத்தமும் அதிக வுணவுமாம், சௌ-ம் மார்பைப்பற்றிய ரோகங்கள் சூட்டைப்பற்றிய சுரங்கள் தலைவலி இடுப்புவலி இருமல் கழுத்துவலி நீர்ச்சுறுகுக நீரடைப்பு கல்லடைப்பு இவைகளுக்கு உபயோகப்படும், உதிரப் பெருக்கைமாற்றும், வி-தி, குளிர்ந்ததேகத்தோருக் குதவாது லவங்கப் பட்டை ப-ம் கோழிக்கீரை.

## இஞ்சி.

சு-ம். சூடும் வரட்சியுமாம், பி-ம், தடித்த இரத்தமும் அசுத்த வுணவுமாம், சௌ-ம் தீபனமாம், காற்றைக் கண்டிக்கும், வயிறிளகும், கட்டுகளை அவிழ்க்கும், குடல் தீனிப்பை இவைகளிலுள்ள மாசுகளை நீக்கும், நீரைவற்றடும், தாகத்தையடக்கும், தீனிப்பைக்கும் ஈரலுக்கும் வலிமையைக் கொடுக்கும். அஜீரணபேதிகளை நிறுத்தும், ஞாபகத்தை அதிகரிக்கச்செய்யும், கபாலத்திலுள்ள நீரைக் கீழேயிறக்கும் காற்றினாலுண்டாகுஞ் சலவை சைத்தியங்களையும் போக்கிவிடும், விஷப்பூச்சிகளின் விஷத்தையும் நீக்கும், இதின் ரசத்தைக் கோழிமுட்டையின் மஞ்சட்கருவிற்கலந்து காய்ச்சிக் குடிக்கத் தாதுபுஷ்டி அதிகரிக்கும், சிவதை வேரோடு சேர்த்துச்சாப்பிடப் பேதியாகும், வாய்வுகளை நன்றாய்க் கண்டிக்கும், கீல்வாதத்தை நீக்கும், வாயில் அடக்கி வைத்திருக்கத் தாகம் அடங்கும், விருத்தாப்பியருக்கு அதிக உபயோகப்படும் வி-தி தொண்டைக்கு உதவாது ப-ம், தேன் வாதுமை நெய் ப-ம், அரிசிதிப்பிலி.

## உஸ்தூகுதூஸ்.

சு-ம். சூடும் வரட்சியுமாம், பி-ம், சுத்த இரத்தமும் குறைந்த வுணவுமாம், சௌ-ம் தலைமூளை இருதயம் குடல் ஆத்துமம் இவைக

ளுக்கு அதிக வலிமைகொடுக்கும், பித்தம் வண்டல் இவைகளின் மாசுகளை அறுக்கும், நீரைப்பற்றிய மாசுகளைநீக்கும் மூலம் மகோதரம் கீல்வாதம் முதலாகிய நரம்பைப்பற்றிய வியாதிகளையும் நீக்கும் வி-தி நுரையீரலுக்குதவாது ப-ம், கத்தீரு ப-ம், அப்திமூன்.

## உப்பு.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், சுத்த இரத்தமும் குறைந்த உணவுமாம், சௌ-ம், உப்புகள் பற்பல வகைகளாய் உண்டாகின்றன அவைகளின் குணங்குறிகளை வெவ்வேறாகப் பிரிப்பதால் பிரிவதைப் பற்றி அவைகளின் மொத்த குணங்களைமாத்திரம் இவ்விடத்தில் சொல்லப்பட்டது அவையாவன—காற்றையும் இரசத்தையும் கண்டித்தல்; தீபனத்தை அதிகப்படுத்தல், தினிப்பை சுடல் இதுகளிலுள்ள மாசுகளை வெளிப்படுத்துதல் ஆகாரத்துக் குதவியாகுதலாம் உப்புகளை அதிகமாய்க் சமூவுவதினால் அதிக சுத்தியாம், உப்புகளை அதிகமாய்ப் புடமிடுவதினால் அதிக காரமேறி அதிக உபயோகப்படும், தேகத்திலுள்ள மாசுகளை நன்றாய்க் கண்டிக்கும், தேக சுத்தியாகும், பெருவியாதி முதலிய மேகரோகங்கள் அனைத்துக் தீரும், உப்பைச் சிக்கஞ்சபீன் அல்லது சுத்தசலத்திற் கரைத்துக் குடிக்கச் சகல கட்டுகளும் அகலும், தேன் அல்லது சிக்கஞ்சபீனில் கரைத்துக்குடிக்க அபினியின் விஷத்தையும் பூச்சிகளின் விஷ முதலியவைகளையும் மகோதரத்தையும் வண்டல் இரசத்தைப்பற்றிய ரோகங்களையும் கண்டிக்கும் இதைக் குடிக்கத் தினிப்பை சுத்தியாகும் கஷாயங்களில் சேர்த்துக் குடிக்க அதிகச் சத்துகளை அகற்றும், தேகஞ்சுத்தியாம், உதிரச்சிக்கலும் வாய்வுகளும் அறும், இதைக் கொப்புளிக்க ஈறு கெட்டிப்படும், உதிரம் ஓடுதலை நிறுத்தும், பற்களின் வலிதீரும், காடியும் சவுக்காரமுஞ்சேர்த்து பூசக் கட்டிகள் உடையும், வீக்கம்வாங்கும், ஆளி விதையோடு அரைத்துப் பூசத் தேள் விஷத்தைமாற்றும், காடி தேன் இதுகளுடன் கூட்டிப்பூச பற்பல வண்டு கடிகள் தீரும், காட்டுப்பொதினு இலைச்சாற்றிற் கூட்டிக்குடிக்க நல்லபாம்பு விஷம்முறியும், ஜெயித்தூன் எண்ணெயிற்கலந்து பூசத் தீப்பட்ட புண்களும் குஷ்ட முதலிய சகல ரணங்களும் உலர்ந்துபோகும், மருதோன்றி யிலையுடன் சேர்த்தரைத்துத் தேகத்திற் பூசிவரச் சகலபடைகளுந் தீரும், கருவூமத்தையிலைச் சாற்றி லரைத்து பூச வாய்வுகள் தீரும், கல்லுப்பைபச் சுத்திசெய்து

பசுவினெய்யில் மூன்றுஜாமமரைத்துக் குகையில் வைத்துருக்கிக் கம்பி யாய் வார்த்து முலைப்பால் எலுமிச்சம்பழச்சாறு இதுகளி லுரைத்துக் கண்ணிலிடச் சகல நேத்திரரோகங்களுந்தீரும், அதைப் பொடிசெய்து பற்களில் தேய்க்கப் பற்கிருமிகள் நீங்கி வலிதீரும், இன்னும் இவ் வுப்பின் குணங்க ளனேகமுண்டு அவைகளை விரித்துச்சொல்லுஞ் சாஸ்திரங்களிற் காண்க, உப்புகள் பலவாகவிருந்தாலும் இயல்பாய்ப் பூமியிலுண்டாகும் உப்புகளை ஓரினமாகவும் மண் சாம்பல் ஜலம் முதலி யதுகளிற் செய்கையாற் காய்ச்சும் உப்புகளை ஓரினமாகவும் பொதுப் படப் பிரிக்கப்பட் டிருக்கின்றன, அவைகளுள் பூமியிலுண்டாகும் உப்புகளிற் சிறந்தது இந்துப்பாம், இது நரம்புகளிலேறிய மாசுகளை அதி சீக்கிரத்தில் மிக வேகத்தோடு பிரித்துப் பேதியின்வழியாக வெளிப்படுத்தும், செய்கையாற் காய்ச்சும் உப்புகளிற் சிறந்தது கொடி முந்திரிகை உப்பாம் இது வயிற்றிலுங் குடலிலுமிருக்கிற வாதபித்த மாசுகளை மிகச் சாந்தமாகப் பிரித்துப் பேதியின் வழியாக வெளிப்படுத் துவதுமன்றித் தீபனத்தை வளர்த்துத் தேகபலத்தை அதிகப்படுத்தி ஆரோக்கியத்தைக் கொடுக்கும் வி-தி, உதிரத்தை வறட்டும், தலை மூளைக்குதவாது கண்ணொளிகுன்றும், கண் புகையுண்டாகும் ப-ம், நெய் பால் முதலிய கொழுமையான வஸ்துக்களும் குளிர்ச்சியான வஸ்துக்களுமாம் ப-ம், ஒருவகை உப்பிற்கு மற்றொருவகை உப்பாம்.

## ஊமத்தம்வித்து.

சு-ம். குளிர்ச்சியும் வரட்சியுமாம், பி-ம், அசுத்த உதிரமுண்டா கும் அசுத்த உணவுமாம் சௌ-ம், உதிரப்பெருக்கை மாற்றும் சன்னி பாதங்களுண்டாகும் பிதற்றலையும் இசிவையும் நோயையும் நீக்கும் சூட்டினாலுண்டாகுங் கட்டிகளைக் கரைக்கும் இதைப் பசுவின் நெய்யி லரைத்து முலமூளையினடியிற்பூச முலமூளை யற்றுவிழும் ஆசன வலி நீங்கும் இதைக் காடி அல்லது தேன்விட்டரைத்துக் கொதிக்கவைத் துக் கட்டிகள்மேற் பூசக் கட்டிகள் கரையும் வீக்கங்களிறங்கும் தேக வலியையுங் குத்தலையும் நிறுத்தும். உரோமங்களுதிர்வதை நிறுத்தும், இது வேதனையை யடக்கி நித்திரையைப் பிறப்பிக்கின்றது, குடைச் சல் கீல்வாதம் உள்ளுக்குக் கொடுத்து வெளியில் போடலாம் சுவாச

காச ரோகத்துக்கு ஊமத்தையிலையோடு புகையிலைச்சேர்த்து சுருட்டு பிடித்தால் நோய் உடனே தணியும், ஒருவேளைக்கு ம நடம கிரெய்ன் இடைக்கு சுருட்டுக் குபயோகிக்கலாம், இலையை வெந்நீரில் போட்டு நீர் ஆவியை உட்கொண்டாலும் இரைப்பு அடங்கும், ஊமத்தை கொடிய நஞ்சு நேத்திரத்தாரையைப் பெரிதாக்கும், ஒவ்வொரு வேளைக்கு மெத்த கொஞ்சமாய் உபயோகிக்கவேண்டியது, இல்லாவிட்டால் துர்க்குணஞ்செய்யும், வயது தளர்ந்தவர்களுக்கு இதைக் கொடுக்கலாகாது, இலையை வதக்கிக் கட்டிகளுக்குப் போடுவது வீட்டுவழக்கம் வி-தி, மயக்கமும் பிதற்றலுமுண்டாகும் ப-ம், மிளகு சோம்பு தேன் ப-ம், பேகேனூடா இதன் சமூலத்துக்கு இதுவே குணமாம்.

## எட்டிக் கொட்டை.

சு-ம். சூடும் வரட்சியுமாம், பி-ம், அசுத்த வுதிர முண்டாகும், அசுத்த வுணவாம், சௌ-ம், வாலுள்ள செந்துக்கள் விஷத்தை விரைவில் மாற்றும், சைத்தியங்களைக் கண்டிக்கும், இடுப்புநோய் பக்கவாதம் குளிர்ச்சியாற்காணும் நரம்பிசிவு இதுகள தீரும், வி-தி, புத்தியை மயக்கும் போதையுண்டாகும் இதை வாரகனிடைக்குமேல் சாப்பிடுவதினல் விஷத்தன்மையைக் கொடுக்கும் அளவுக்கு அதிகப்பட்டால் இசிவுகாணும் இதை ஸ்மஸ்தம்ப ரோகங்களுக்குக் கொடுத்தால் உணர்ச்சியை மெதுவில் வரும்படிசெய்து ஆட்டமில்லாமல் போய் இருக்கிற சதைகளுக்கு வலிவைக் கொடுக்கும், இந்த மருந்தை சாப்பிட்டுக் கொண் டிருக்கிறபோது கைகால்களில் இசிவு கண்டால் மருந்து தேகத்தில் அதிகப்பட்டதென்று எண்ணவேண்டியது, திமிர் வியாதிகளுக்கு இதை நோய்கண்டவிடத்தில் உபயோகிக்கலாம், மந்தாக்கினி ரோகத்துக்கு பலத்தைக் கொடுக்கும், வீரிய விருத்திக்கும் உபயோகப்படுகின்றது, கொட்டைக்கிருக்கிற குணமே பட்டைக்குமிருக்கின்றது, உ முதல் ௩-கிரெய் இடைக்கு கொட்டையின் சூரணத்தைக் கொடுத்தால் தேகத்துக்கு வலுவைக்கொடுத்து, தீபனத்தை யதிகப்படுத்தும் மூத்திரத்தை விருத்திசெய்யும், எட்டிகொட்டைச் சூரணத்தில் ௩ம கிரெய்ன் தின்று பிராணன்போனதும் உண்டு வழக்கப்படுத்தினல் அதிகமாய்ச் சாப்பிட்டு நிர்வகிக்கலாம், அரிக்கால் கிரெய்ன் அளவுக்கு ஆரம்பித்து படிப்படியாய் அதிகரித்து ஒரு முழுக்கொட்டைப் பரிமா

ணத்துக்குச் சாப்பிட்டு கிரமப்படுத்திக் கொள்ளுகிற சத்தி சிலருக்கு இருக்குமென்று கண்டிக்கின்றது, இதைச் சாப்பிட்ட உடனே போஜனம் செய்தாலும் அல்லது போஜனஞ் செய்தவுடனே இதைச் சாப்பிட்டாலும் கெடுதிசெய்யாது, இதை மறந்தால் ஒருவேளை இசிவு காணும் ப-ம், சருக்கரை பனிநீர் ப-ம், பித்தத்துக்குப் பட்டையும் பட்டைக்கு வித்துமாம்.

## எருக்கிலை.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பீ-ம், அசுத்த உதிரத்தையுண்டாக்கும், அசுத்த உணவாம் சௌ-ம், இதின் பாலைப் பஞ்சிற்றுவட்டிப் பற்களின்மேற் போடப் பல்வலியைப் போக்கும், மூலமுளை மேற்போட மூலமுளையை யறுக்கும, எண்ணெயிலிட்டுக் காய்ச்சிப் பூச உடலிற் படர்ந்திருக்கும் படைகளைமாற்றும் அதன் பாலிற் கல்லுப்பை யரைத்துப் புடமிட்டுக் கட்டிப்போகும் வீ-தி, அதின்பால் தேகத்தின் றோலை வேகவைக்கும் பேதியாகும் எருக்கினில் இரண்டு ஜாதிகளுண்டு, புஷ்பத்தில்மாத்திரம் வித்தியாசம் காணலாம், இந்தச் செடியின் வேர்பட்டை பால் இவைகளைத் தமிழ் வயித்தியர்கள் வெகு நாளாய் உபயோகப் படுத்திக்கொண்டு வருகிறார்கள். எருக்கம்பால் விஷக்கடிகளுக்கும், வீக்கங்களுக்கும் உபயோகப்படுத்தப்படும், வாந்தி, பேதி, வியர்வை இவைகளை உண்டாக்குகிற குணம் இதற்குண்டு, வேரின்பட்டைத்தூளை அரைமுதல் க கிராம்வரை கொடுத்தால் வாந்தியாகும், உ-முதல் ரு-கிரைய்ன் இடைக்கு அரைமணிக் கொருதரம் கொடுத்தால் குமட்டலோடு வியர்வை பிறக்கும், குஷ்டரோகம் ஆரம்பத்தில் இதைக் கொடுத்தால் மெத்த சவுக்கியத்தைத்தரும், தூளைக் களிம்புசெய்து ரணங்களுக்குப் போடுகிறதும் உண்டு, எருக்கிலை மிளகு இவைகளைச் சேர்த்து பாம்புகடிக்குக் கொடுக்கிறார்கள். இதை எண்ணெயில் போட்டுக் காய்ச்சி சொறி சிரங்குக்குத் தடவுகிறதுண்டு, வேர்ப்பட்டைத்தூளில் ௩-முதல் ௰-கிரைய்ன் இடைக்கு தினத்துக்கு மூன்றுதடவை கொடுக்கலாம் ப-ம், நெய் பால் மோர் தயிர் ப-ம், இலைக் கள்ளி.

## ஏலக்காய்.

க-ம். சூடும் வரட்சியுமாம் வீ-ம், சுத்த உதிரத்தை யுண்டாக்கும், குறைந்தவுணவாம் சௌ-ம், இவைகளுக்குப் பலத்தைக் கொடுக்

கும், தீபனத்தை யதிகப்படுத்தும் இருதய கமலத்துக்கு வலியையுண் டாக்கும் சந்தோஷத்தை வருவிக்கும், காற்றைக் கண்டிக்கும், வாய் நாற்றத்தைமாற்றும், கட்டுகளை யுடைக்கும், வாந்தி ஓக்காளம் குலைவலி இவற்றைப்போக்கும், இதைப் பொடிசெய்து மூக்கிலேற்ற காக்காய்வலி மூர்ச்சை தலைவலி முதலிய ரோகங்கள் தீரும், குண்டிக்காயிலுண்டா குங் கற்களையறுக்கும் வி-தி நுரையீரலுக்குதவாது ப-ம் சருக்கரை பால், இதற்கு ஒன்றரைபங்கு ஏலரிசி.

## ஏ ல ரி சி.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம், சுத்த உதிரத்தையுண்டாக்கும், குறைந்த உணவுமாம் சௌ-ம், இதுவும் ஏலக்காய்க் கொத்திருந்த போதிலும் தீபனசத்தியை யுண்டாக்குவதிலும் வாந்தியை நிறுத்து வதிலும் மார்பிலுள்ள கபத்தைப் போக்குவதிலும் அதற்கேட்டிகமாம், வி-தி மந்திக்கும் மலத்தைகட்டும், குடல்களுக்குதவாது ப-ம், கத்தீரா வென்னும் பிசின் ப-ம் இதற்கு அரைப்பங்கு வால்மிளகும் அரைப் பங்கு அப்பேல்சாவென்னும் வித்துஞ் சேர்த்துக்கொள்ளவும்.

## ஓ ம ம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரத்தை யுண்டாக் கும், குறைந்தவுணவுமாம் சௌ-ம் காற்றைக் கண்டிக்கும் சைத்தி யத்தை நீக்கும், நீரை வறட்டும், வயிற்றுவலி, பேதி, வாந்தி, மாந்தம், வயிற்றிரைச்சல், அஜீரணம், இவை முதலிய ரோகங்களையும் போக் கும், வி-தி, தலைவலியுண்டாம், கண்ணொளியை மாற்றும், புகைச்ச லுண்டாம், ப-ம் கொத்தமல்லிக்கீரை ப-ம் அசுமூது என்னும் ஓமம்.

## க ஞ் சா.

சு-ம. குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம், அசுத்த உதிரத்தை யுண்டாக்கும், குறைந்தவுணவுமாம், சௌ-ம், துவக்கத்தில் தீபனம் தாதுவிருத்தி சந்தோஷம், கண்களுக்குத் தோற்றுதவைகளைத் தோற் றும்படி செய்விக்கும், இடைவிடாமல் பேசுவிக்கும், ஆனந்தக்களிப்பை யுண்டாக்கும் நகைப்பு, ஆடல், பாடலுடன் கூத்தாடப்பண்ணும், வேதனையைச் சாந்தப்படுத்தும், வலிரோகங்களை நீக்கும், கஞ்சாவை

வழக்கப்படுத்திய சிலருக்கு ஓர்வித உன்மத்தரோகங் காணுகின்றது. இதை அதிகமாய்ச் சாப்பிட்டால் காட்லெப்பை எண்ணும் ஓர்வித ஜன்னி யுண்டாகின்றது. அது கண்டிருக்கிறபோது காலையாவது, கையையாவது நாமெடுத்து எவ்விதமாய் வைக்கிறேமோ விழாமல் அப்படியே நிற்கும் கண்தாரையைப் பெரிதாக்கும். இது அபினியைப் போல நாக்கில் திரவமில்லாமல் செய்யாது, தீபனத்தை மந்தப்படுத்தாது! வலச்சிக்கலை மெத்தவும் உண்டாக்காது கஞ்சாவை நித்திரை பங்கம், சகிக்ககூடாத நோய், ரணஜன்னி, நாய்க்கடி ஜன்னி, வாந்தி பேதி இவைகளுக்குக் கொடுக்கலாம், பிரசவநோய் லேசாயிருக்கிற போது இதைக்கொடுத்தால் நோயை யதிகப்படுத்தி விரைவில் பிண்டத்தை வெளிப்படுத்தும் பெரும்பாடு வியாதிக்கும் கொடுக்கலாம், கஞ்சாவைப் புகையிலையுடன் சேர்த்து சாதாரணமாய் பைராகி முதலியவர்கள் புகைக்குடிக்கிறார்கள் வி-தி, இரைப்பையையும் ஈரலையும் பஞ்சைப்படுத்தும், புலன் பொறிகளைக் குன்றவைக்கும், அசதி யதிகப்படும் முகத்தின் தேஜசை மாற்றிவிக்கும், இதை அதிகமாகக் கொள்வதினால் தாதுவிர்த்தி குறையும் இதின் விரைகளுக்கும் இதுவே குணமாம் ப-ம் கசகசா வாதுமைப்பருப்பு ப-ம் சுத்திசெய்த ஊமத்தம் வித்தை அல்லது எட்டிக்கொட்டை.

## கடுகு.

சு-ம். கூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரத்தை யுண்டாக்கும் குறைந்த உணவுமாம் செள-ம் தலை மூளை முதலிய உள்ளுறுப்புகளுக்குள்ளிருக்கும் மாசுகளை வெளிப்படுத்தித் தேகத்தைச் சுத்தப்படுத்தும், சயித்தியத்தைக் கண்டிக்கும், கட்டுகளை யுடைக்கும், குண்டிக்காய் ஊத்தாம்பிள்ளை யிவைகளில் உண்டாகுங் கல்லுகளை யகற்றும், வாத சீதளத்தினலுண்டாகும் சகல வலிகளையும் க்ஷணத்தில் மாற்றும், மறதியை நீக்கும் இதில் அரை வராகனிடை சூரணத்தைப் பாயாச முதலிய எவ்வித பானத்தோடு அல்லது சாராயத்தோடு சேர்த்துக் குடிக்கச் சந்தோஷ மதிகரிக்கும், தாதுபுஷ்டியுண்டாகும், இதைத் தேனிலரைத்துச் சாப்பிட்டுவர, வாதத்தினலுண்டாகுஞ் சுவாச இருமலை மாற்றும், குளிர்ச்சி அல்லது வண்டவினல் உண்டாகும் சுரத்தைக் கண்டிக்கும், இதை யரைத்துப் பற்றுப்போட காலவலி நரம்

பிசுப்புகள் வாங்கும், மெழுகு தைலத்தி லரைத்துப்பூச தேகத்தில் படர்ந்த மாசுகள் மறைந்து சுத்தியாம் உதிரம் தெளிந்து அழகு கொடுக்கும் இதன் கஷாயத்தில் காடியல்லது தேன் கூட்டி வாய்க் கொப்புளிக்கத் தொண்டைநோய் நாவிழுப்பு நாத்தடிப்பு பல்நோய் இவை முதலிய சயித்தியங்களைக் கண்டிக்கும், கடுகைக் கொஞ்சமாய்க் கொடுத்தால் ஜீரணத்தை அதிகப்படுத்தும் வாயுவைக் கண்டிக்கும், சூட்டையெழுப்பும், அதிக அளவில் கொடுத்தால் வாந்தியாகும், இது குமட்டலும் ஆயாசமும் இல்லாமல் அதிதீவிரத்தில் வாந்தியை யுண்டாக்குவதால் நஞ்சுண்டோருக்குக் கொடுத்து வயற்றிலிருக்கிற நஞ்சை வெளிப்படுத்த இது தகுதியான பதார்த்தம், கடுவை முழுசாய் விந்தாகவே கொடுத்தால் உஷ்ணித்து பேதியாகும், கடுகையரைத்துத் துணிமேல் தடவி கால்களுக்கும் கைகளுக்கும் போட்டால் சூட்டை எளுப்பும், நோயிருக்கிறவிடத்தில் போட்டால் உள்ளேயிருக்கிற நோயைக் கிரகித்து வேதனையைத் தணிக்கும், மார்பு வயிறு தொண்டை இவைகளில் காணுகிற ரோகங்களுக்குக் கடுகை யரைத்துப் போடுவதும் வழக்கம், துரைகள் கடுகைக் காடிவிட்டுக் கலந்து போஜன பதார்த்தங்களோடு சேர்த்துக் கொள்ளுகிறார்கள், நமது வீடுகளில் கரிதாளிக்க உபயோகமாகின்றது, அதிகமாய் வறுத்தால் அதிலிருக்கிற சத்து கெட்டுப்போகும், அரைத்த கடுகைத் துணிமேல் தடவி கால் கெண்டைச் சதைமேல் போட்டால் சுரமுதலிய ரோகங்களில் காணுகிற மயக்கத்தையும் தோஷகுணத்தையும் ஹரிக்கும், கடுகை விடாமல் கொடுத்தால் மூத்திரம் அதிகப்படும் வி-தி சூட்டுடம்புக்குதவாது தாகம் ஒக்காளம் அதிகரிக்கும் ப-ம், சல்லாதுவிரை வாதுமை விரை வாதுமை நெய் காடி ப-ம் இதற்கு இரணடிடை அப்போஷாது இதனெண்ணைக்கும் இதுவே குணமாம்.

## கடுக்காய்களின் பொது.

கடுக்காய்கள் பலவகைகளா யிருந்தபோதிலும் அவைகளனைத்திற்கும் வயிறிளகல் பேதியாதல், மலத்தைக்கட்டல் வயிற்றைப் பிடுங்

கல், இவைகளே பிரதான சுபாவ குணங்களாம். கடுக்காய்களோடு ரோஜாப்பூவைச் சேர்ப்பதினால் மலத்தைக்கட்டுதலும், வாதுமை நெய் அல்லது பசுவின் நெய் சேர்ப்பதினால் வயிற்றைப்பிடிக்கலும் நீங்கும், இதுவுமன்றி இரைப்பைக்கு வலிமையைக் கொடுப்பதும் மலத்தைப் பற்றிய ஆவிகள் கபாலத்துக்கேறாமற் காப்பதும், மூளையைப்பற்றிய மாசுகளை நரம்புகளின் வழியாகக் கீழிறக்கிவைப்பதும் புத்தி புலன் பொறி இவைகளின் சுபாவத்துக்குத் தீமைவாராமற் காப்பதும், காற்றுகளைக் கண்டிப்பதும், தொந்த ரோகங்களாகிய பௌத்திரம் மூல ரோகம் வீக்கம் பெருவியாதி குஷ்டம் தலைவலி இருதயத்துடிப்பு முதலிய ரோகங்களைக் கண்டிப்பதும், உதிரத்தைப்பற்றிய மாசுகளை நீக்கி, உதிரத்தைத் தெளியப்படுத்துவதும் இன்ன மிதைப்போலொத்த சில குணங்களும் எவ்விதக் கடுக்காய்களுக்கு முண்டு கடுக்காய்களை சுரங்களிலும் அருந்தி செய்வதிலும் உபயோகப் படுத்துவதை விலக்க வேண்டும். கடுக்காய்களைச் சூறணித்துக் கொள்வதைவிடக் கியாழமாகக் கொள்வதே சிறந்திருக்கின்றது, பலவகைக் காய்களி லிப்போது வழங்கிவருவதை மாத்திரம் இதன்பின் னெடுத்துச் சொல்லப்படுகின்றது.

## மஞ்சள் கடுக்காய்.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம். சுத்த உதிரத்தை யுண்டாக்கும் குறைந்தவுணவாம், சௌ-ம், இரசத்தைப் பற்றிய சொற்ப நீர்களோடு பித்தமாசுகளை நன்றாகக் கண்டிக்கும், கட்டுகளைப் பேதிக்கும் தலை மூளைக்கும் இரப்பைக்கும் வலிமையைக்கொடுக்கும் வண்டின் மாசுகளையகற்றும், இதைப் பொடிசெய்து பற்களிற்றேய்க்க பல நோயைமாற்றும், ஈறு கரைந்துபோதலை நீக்கும், பற்களி லுதிரமோடுவதை நிறுத்தும், வி-தி, குடல்கள் முதலிய கீழவயவங்களுக்குதவாது ப-ம், இலந்தைப்பழம் நறுவிலிப்பழம் வாதுமைநெய் கற்கண்டு சருக்கரை துருஞ்சுபின் ப-ம், மாதுளம்பழத்தி னுட்டசை மாசிக்காய் (புறநடை) இரும்புமுதலிய உலோகங்களை விரைவி லுருக்கும் இரும்பையுருக்குவதில் இதற்குமிஞ்சின பதார்த்தம் வேறொன்றுமில்லை.

## பிஞ்சு கடுக்காய்.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம், சுத்த உதிரத்தை யுண்டாக்கும், குறைந்த உணவாம் சௌ-ம, வண்டலைப்பற்றிய மாசுகளை நன்றாகக்கண்டிக்கும், உதிரத்தைச் சுத்தப்படுத்தும், குடல்களுக்கு வலிமையைக்கொடுக்கும், நுரையீரலினுபகலும் இரைப்பையி லழுந்தியிருக்கு மாசுகளையகற்றும், இதை நெய்யிற் பொரித்துச் சாப்பிட பேதியைக்கட்டும் இதை நித்தியம் வழக்கமாய்த் தின்றுவர, மயிர் வெளுப்பதை மாற்றும் இதைப் பொடிசெய்து பற்களிற்றேய்த்துவர ஈறுகள் வலிமையடையும் வி-தி ஈரலுக்குதவாது ப-ம், தேன் ப-ம், காபுலிக் கடுக்காய்.

## காபுலிக் கடுக்காய்.

சு-ம். சொற்ப குளிர்ச்சியும் அதிக வறட்சியுமாம் சிலர் அதிக சாந்தமான சூடென்றெழுதி யிருக்கிறார்கள் பி-ம், சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம், இரசத்தின் மாசுகளையும் பித்தத்தினுண்டாகும் வண்டல்களையும் பேதியின் வழியாய் நன்றாய்க் கண்டிக்கும், நீரைப்பெருக்கும், கடுக்காயின் வகுப்புகளில் இதையதிகச் சிறந்ததென்றும் ஒருவருஷம் வரையில் நித்தியம் ஒரு கடுக்காய் தின்றுவர உரோமங்கள் வெளுக்காதென்றும் சலங்களிலுள்ள துர்க்குணங்களை மாற்றிச் சுத்தப்படுத்துமென்றும் இதன் சாம்பலை மூலத்தின் மேற்றாவுதலினுல் மூலவுதிரமும், மூக்கிலேற்றுவதினுல் மூக்கிலோடிவருமுதிரமும் உடனே நிற்குமென்றும், அதைப் பற்களிற் றேய்ப்பதினுல் பல்நோய் வாங்குமென்றும், கரைந்த ஈறுகள் வளருமென்றும், இதன் சூரண மூன்று கழஞ்சுவரையிலும் கியாழம் எட்டுக் கழஞ்சுவரையிலும் சேர்க்கலாமென்றும், வருஷத்துக்குட்பட்ட இதன் முறப்பா மூளை இரைப்பை யீரல் இவைகளுக்கு வலிமையைக்கொடுத்து ஐம்புலன்களுக்கும் வலிமையை அதிகப்படுத்துவதோடு இரசத்தினுல் விழுந்த கட்டிகளைப் பேதிக்குமென்றுஞ் சொல்லி யிருக்கிறார்கள், வி-தி வயிறு வலிக்கும் ப-ம், வாதுமை அல்லது பசுவின் நெய் ப-ம், பிஞ்சு கடுக்காய்.

## கடுகுரோகணி.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம், அசுத்த உதிரத்தை யுண்டாக்கும் குறைந்த உணவாம் சௌ-ம் இதில் வெள்ளை கறுப்பு என விருவகைப்படும், அதில் வெண்மையின் குணமாவது வாதபித்த மாசுகளைப் பேதியின் வழியாக நன்றாய்க்கண்டிக்கும், தீனிப்பையைச் சுத்தப்படுத்தும், உதிரச்சிக்கலைபறுக்கும், வயிற்றில் மறித்துப்போன பிண்டங்களையும் குண்டிக்காய் ஊத்தாம்பிள்ளையில்லிளையுங் கற்களையும் வெளிப்படுத்தும், அதிகக்குளுமையினாலுண்டாகும் சன்னி பக்கவாத முதலிய சகல ரோகங்களையும் கண்டிக்கும், இதைப் பொடிசெய்து கண்ணிலிட கண்ணினுள்ள திரைகளையறுக்கும் காடியிலுரைத்துப்பூசப் படைகளை மறைக்கும், நசியமிடத் தும்பலுண்டாகும் வி-தி, இதைப் பிரமாணத்துக்கதிகமாகக் கொண்டால் தொண்டை வீக்கும், இசப்புண்டாகும், இந்த மருந்தை பயித்தியரோகம் காக்கைவலி சிரங்கு கிருமி இவை முதலிய ரோகங்களுக்கு உபயோகிக்கப்படும் அதிகமாய்க் கொடுத்தால் விஷமித்து கெடுதிசெய்யும், மிதமாய்க்கொடுத்தால் வயிற்றைக்கடுத்து தண்ணீர் தண்ணீராய்ப் பேதியாகும், வாந்தியுமாகும் இதை யிப்போது மெத்த உபயோகப்படுத்துகிறதில்லை நீர்கோவை சூதக்கட்டு சூதச்சூலை இவைகளுக்கும் உபயோகப்படுத்தினதுண்டு ப-ம் வாதுமை கெய்றாமிமஸ்தகி ப-ம், ஜவ்ஜேஅல்கி கறுப்புக்கு மிளுவே குணமாகிலும் அதற்கீ ததிக விஷத்தையுடையதாகையால் நன்றாகச் சுத்திசெய்து வெறும் வயிற்றில் உள்ளுக்குக் கொள்ளாமல் எச்சரிக்கைப் படவேண்டியது.

## கண்டங்கத்தரி.

சு-ம். சூடும் வரட்சியுமாம் பி-ம், அசுத்த உதிரத்தை யுண்டாக்கும் குறைந்த உணவாம் வி-தி இல்லை சௌ-ம் இரைப்பைக்கு வலிமை கொடுக்கும், கட்டுகளையுடைக்கும், இதன் இலைச்சாற்றில் அல்லது கிழாயத்தில் எண்ணெய் கலந்து காய்ச்சிப் பூசிவர தலைவலி அக்குள் நாற்றம் கீல்வாதம் முதலிய நோய்கள் தீரும், இதன் பூவை வாதுமை யெண்ணெயி லெரித்துப்பூச மூலரோகங்களைக் கண்டிக்கும், இதன் பழத்தை நன்றாக வேகவைத்துக் கடைந்து கும்பெடுத்து அதில் நாலிலொன்று ஜெயித்தாள் எண்ணெய் சேர்த்துக் காய்ச்சிக் கடுகு திரள

வடித்து வைத்துக்கொண்டு வெண் குட்டத்தின்பேரில் பூசிவர வெண்மைமறந்து தேக நிறமுண்டாம், இப்படியே சுரைவித்தினெண்ணெயில் காய்ச்சிக் காதிற்குத்த காதுவலி தீரும், இதன் ரசத்தில் ஆளிவிரையின் எண்ணை கூட்டிக் காய்ச்சி வெடிப்புகளிற் பூச விரைவில் வெடிப்பு மாறிப்போகும் வி-தி, வண்டலைபற்றிய ரோகங்களை யுண்டாக்கும் ப-ம் வாதுமை நெய் அல்லது பசுவின்நெய் ப-ம், நல்லகத்திரிவேர்.

## கரிய போளம்.

இது கற்றாழையின் பாலினல் மூன்று வகையாகச் செய்யப்படுகின்றது, அதிலொருவகை சிவந்த மஞ்சளாயும், பளபளப்பை யுடையதாயுமிருக்கும், இதுவே எல்லாவற்றிலுஞ் சிறந்தது இரண்டாவது கறுத்த மஞ்சளாயிருக்கும், மூன்றாவது காத்துந் துற்கந்தத்தை யுடையதாயுமிருக்கும் இது எல்லாவற்றிலுந் தாழ்ந்ததாம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம், சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் தேகத்திலுள்ள மூவகைச் சத்துக்களின் மாசுகளைப் பேதியின்வழியாய் நன்றாய்க்கண்டிக்கும், கட்டுகளையுடைக்கும், காற்றுகளைக்கண்டிக்கும் இத்துடன் றாமிமஸ்தகி கூட்டியுட்கொள்ள மூளையைப்பற்றிய மாசுகளை யறுத்துக் கீல்வாதங்களைப் போக்குவிக்கும நாரிகூன் சேர்த் துட்கொள்ள மார்பைச் சுத்தப்படுத்தி சுவாச இருமலை நீக்கும், றாமிமஸ்தகியும் ரோசுபுஷ்பமும் சேர்த்துட்கொள்ள வயிற்று வலிகளைநீக்கும் சுத்தசலத்தி லுரைத்துக் குடிக்க உதிர வார்தலை மாற்றும், அதற்கினமான அவுஷதங்களோடு சேர்த்து உண்டை செய்து அநுபானங்களோடு கொடுப்பதினல் சகல ரோகங்களையுஞ் சொஸ்தமாக்கும், விசேஷமா யிது வண்டலைப்பற்றிய ரோகங்களையும் ரசத்தைப்பற்றிய ரோகங்களையும் போக்குவதில் அமிர்தமென்றே சொல்லவேண்டியது, வயிற்றிலுள்ள கிருமிகளை நீக்கவும், குண்டிக்காய் மண்ணீரலைப்பற்றிய ரோகங்களைக் கண்டிக்கவும் காமாலைகளை நீக்கவும் அழலையை மாற்றவும் தாகங்களையடக்கவும், அதிக உபயோகப்படும் கீழ்வீழ்ந்து அல்லது அடிபட்டுக் கட்டிப்போன உதிரத்தைக் கரைக்

கவும், எலும்பு முறிவுகளைப் பொருந்தப்பண்ணவும் உயிரற்ற தேகங் களைக் கெடாமற் காக்க சிலையோடு ரணங்களையாற்றவும், மேகரணங் களின் விஷத்தையாற்றவும், இதற்குமிஞ்சின வஸ்து யாதொன்று மில்லை இதைக் கொத்தமல்லிச்சாற்றி லரைத்துப்பூசக் குழந்தைக ளுக்குவரும் செவ்வாப்பும் அக்கி முதலிய சிறிய கொப்புளங்களும் நீங்கும், சுரைக்காயின் வித்துடனரைத்து மூக்கிற்பூச மூக்குப்புண் ஆறும், நெல்லிக்காயின் ரசத்திலரைத்துப்பூச மயிர்கறுத்து வளரும், காடியி லரைத்துப் பூச உரோமங்கள் உதிர்ந்து போவதையும் கண் ணைப்பற்றிய ரோகங்களையும் நீக்கும், கந்தனுவென்னும் இலைச்சாற்றி லுரைத்துப் பூச மூலத்தின் முளைகளறுந்துவிழும், ஆண் குறியைப் பற்றிய கிரந்திப் புண்களின்மேற்பூசச் சீக்கிரத்திலாறிப்போகும். இதை மக்கிப்போன எலும்புகளுடன் சமனகச் சேர்த்தரைத்தும் பவுத்திரங் களிலும் ஆக்கிலாவென்னும் பரவுகிற புண்களிலுமேற்றச் சொஸ்த மாகும், கரியபோளாப்பருங் குடலினும் ஆசனத்திலும்போய் வியா பித்துக் குணத்தைக் காட்டுகின்றது, குறைந்த அளவில் கொடுத்தால் தீபனத்தை அதிகப்படுத்தும் குடல்களுக்குப் பலத்தைத்தரும், இது மலக்குடலில்சென்று உஷ்ணிப்பதால் மூலரோகங்களுக்கும் கருப்பிணி களுக்கும் வெகு ஜாக்கிரதையாய்க் கொடுக்கவேண்டியது. இதன் வேகம் கருப்பைக்குப்போய் பற்றுகிறபடியால் ருதுவர்த்தனகாரி யெ ன்றுஞ் சொல்லப்படும், மலச்சிக்கல் அக்கினி மந்தம் காமாக்கினி இவைகளுக்குக் கொடுக்கலாம் வி-தி ஈரலுக்கும் ஆசனத்துக்கு மூத வாது, இதை அதிகமாகச் சேர்ப்பதினல் வயிற்றுக்கடுப்பு உதிரபேதி யுண்டாகும் ப-ம், மைசாட்சி றாமிமஸ்தகி மஞ்சள் கடுக்காய்கத்திரு ப்-ம் சீமை சிவதைவேர் சஃமுனியா

## கருஞ்சீரகம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம், சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம், காற்றைக்கண்டிக்கும் உதிரச்சிக்களையறுக்கும், நீரையதிகப்படுத்தும் முலைப்பால் சுரக்கும் கட்டுகளைப் பேதிக்கும் நீரை வறட்டும், வயிற்றில் மரித்த பிண்டத்தை வெளிப்படுத்தும், குளிர்மை யாற் பிறக்கும் விஷங்களைமாற்றும், குன்மம் மார்வலி இருமல் வாந்தி ஓக்காலம் வீக்கம் காமாலை இவைகளுக்குபயோகப்படும், இதைச் செயி

த்தான் எண்ணெயிற்கலந்து நித்தியம் காலையில் உட்கொள்ள அப்பி யாசப்படுத்தினால் அழகுண்டாம், மேனி வசிக்கும், உதிரஞ் சுத்தி யாகும், இதைக் காடியிற்கலந் துட்கொள்ள வயிற்றிலுள்ள கிருமிகள் சாகும், இதை நித்தியம் இரண்டு வராகனிடையாக ௩-நாள் முதல் எ-நாள்வரையிற் காடியிற்கலந் துட்கொள்ள, பேய் நாய்க்கடிமுதல் விஷப்பூச்சிகளின் விஷங்களுந்தீரும், சிக்கஞ்சபீனிற் கலந்துகொள்ள வாதக்காய்ச்சல் முறைக்காய்ச்சல் தீரும், இதை ஜலத்தில் அல்லது தேனிற்கலந்து குடிக்க மூச்சடைப்பு-பெருமூச்சு-கல்லடைப்பு இவை கள் தீரும், இது சுட்டசாம்பலை மௌரீத்தென்னும் இல்லைச்சாற்றிற் கலந்து குடிக்க மூலத்தை நாசமாக்கும், இதை வெந்நீரிலரைத்துப் பூசக் கட்டிகளுடையும், தோலைப்பற்றிய கடிப்புகள் வாங்கும், கீழ் வாதம் குளிர்ச்சியினாலுண்டாகும் தலைவலி நீக்கும், பிள்ளைகள் சிறு நீரிலரைத்து மேலேபோட வீக்கங்கள் வற்றும், காடியிலரைத்துப்பூச படைகள் வாங்கும், ஆற்றுத்தும்மட்டிக்காச் சாற்றிலரைத்து விலாவிற் பூச வயிற்றுக் கிருமிகள் கொட்டுண்டுபோகும், இதை நல்லபாம்பிரத் தம் அல்லது வௌவா லிரத்தத்தி லரைத்து வயிற்றிற்பூசக் கெர்ப்பம் வெளியாகும், தேனிலிழைத்துப்பூசக் கெர்ப்பவலி நீங்கும், இப்படியே இதன் திராவகத்துக்கும் தைலத்துக்கும் அநேக குணங்களுண்டு, அவைகளிலொன்றை மோந்தாலும் பூசலாலும் சலவை சயித்தியங் களினாலுண்டாகும் அநேகரோகங்களை நாசமாக்கும், விசேஷமாய் நரம் பைப்பற்றிய ரோகங்களை நன்றாகக் கண்டிக்கும், இசிப்புவலியை மாற் றும், இதன் திராவகத்தை வெற்றிலையிற் பூசித் தின்ன வீரிய புஷ்டி யுண்டாகும், ஆண்குறியிற்பூச போகமதிகரிக்கும், தலைசுற்றும், குண் டிக்காய்க்குதவாது ப-ம் வாதுமைப்பிசின் ப-ம் அனிசூல் ஒருபங்கும் சதகுப்பி அரைபங்கும் ஒன்றாகச் சேர்த்துக்கொள்ளவும்.

## கர்பிஸ் இதுவே அஜமூத்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம், சுத்தவுதிரமும் குறைந்த உணவு மாம் சௌ-ம் கட்டுகளைப் பேதிக்கும் காற்றைக் கண்டிக்கும் உதிரச் சிக்கலை மாற்றும் தாதுவிளையும் தீபனமாம் இதன் கியாழத்தில் புளி மாதுளம்பழத்தின் ரசஞ்சேர்த்துச் சருக்கரைகலந்து காய்ச்சிக் குடிக்க

சகல விஷங்களையுமகற்றும், விசேஷமா மிருதாரசிங்கியின் விஷத்தை முறிக்கும் வி-தி, நுரையீரலுக்குதவாது வயிறு பிடுங்கும் ப-ம், சல்லாதுவிரை கத்திரா ப-ம், ஓமம் அல்லது சீரகம் இதில் பிதரூ சாலியூனென இன்னமொரு சாதியுண்டு அதையே அஜமூமுதென்று சொல்லுவார்கள் இது சகல விஷபத்திலும் முன்பேசிய கர்பிஸிற் கொத்திருக்கும்.

## காந்தம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம், ஈரலுக்கும் மண்ணீரலுக்கும் வலிமையைக் கொடுக்கும் கல்லடைப்பை நீக்கும் பாரிசவாயு கைகால்பிடிப்பு நரம்புகளிசுப்பு இவைகளை நீக்கும் இதைப்பஸ்மித்து தேனிற்கொடுக்க பேதியாகும், கட்டுவாதிகளுடன் கூட்டிக்கொடுக்க மலத்தைக் கட்டும் மூக்கிலிட உதிரபிரசமாறும், விஷ காயங்களை விரைவி லாற்றிவைக்கும் காந்தத்தைக் கருப்பப்பெண்களிற் பிடித்திருக்க விரைவிற் பிரசவமாகும் பனிநீரிலிதைக் சுத்திசெய்து நீலாஞ்சன மாஷாணத்தோடு சேர்த்தரைத்துக் கண்ணிலிடக் கண்களைப்பற்றிய ரோகங்கள் நாசமாகும்.

## காளான்.

காளான்கள் அநேக வகைப்படும் அவைகளில் நல்ல சவத்தின் ஓரத்தில் மணற்பாங்கில் விளைவது வெளுக்கும் முட்டை வடிவமாயுமிருக்கும் இது உபயோகப்படும் மரத்தின் வேர்களிலும் களிப்பு நிலத்திலும் விளையப்பட்டவை கறுத்தும் சிலிந்தும் மஞ்சளாயும் பல வர்ணங்கள் யிருக்கும் அவைகளடங்கலும் நஞ்சாம்.

சு-ம். குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம், அசுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் அதன் இரத்தைப்பிழிந்து கண்ணிற்குத்த கண் மாசுகளை யறுக்கும் ஒளியுண்டாம் கண்ணீர் ஒட்டத்தைமாற்றும் அதையுலரவைத்துப் பொடிசெய்து சாப்பிட பேதியைகட்டும் வயிறு கடுப்பையும் உதிரத்தையுமாற்றும் இதிற் காடியும் மீன் வச்சிரத்தையுங் கூட்டியரைத்து அண்டத்திற்பூச அண்டவலியை யகற்றும் வி-தி, இதை யதிகரித்துச் சாப்பிடுவதினால் சீரணக்குறையும் வயிற்றுவலி

யுண்டாம் இரசத்தைப்பற்றிய ரோகங்கள் அதிகரிக்கும் ப-ம், கடுகு காடி. உப்பு.

## கித்தூமி இதுவே சீமைத்துத்தி.

சு-ம். சாந்தமாம் பி-ம், சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் காற்றைக்கண்டிக்கும் கட்டுகளைக்கரைக்கும் இதனிலையை வேக வைத்து ஒத்திடச் சகலவிடத்திலுமுள்ள வலிகளை மாற்றும் இதன் கியாழத்தைச் சாப்பிட மருந்தின் வேகத்தினு லுண்டாகும் உபத்திரவத்தை நீக்கும், குன்மத்தைக்கண்டிக்கும் நீர்பெருகும், உதிரச்சிக்கலை மாற்றும், இதனிலையை வறுத்து ஒத்திட கட்டி கொப்புள முதலிய ரணங்களையும் கீல்வாதமுதலிய சகல பிடிப்புகளையும் மாற்றும், இதன் விரையை யூறவைத்துச் சருக்கரைசேர்த்துச் சாப்பிட சூட்டினுலுண்டாகும் இருமலைபோக்கும், கல்லடைப்புகளை வெளிப்படுத்தும், இதன் மூலத்தைக் கியாழமிறக்கிக் காடிசேர்த்து வாய் கொப்பளிக்க பற்களின் வலியைமாற்றும் வி-இ, குடல்களுக்குதவாது ப-ம், தேன் சோம்பு ப-ம் சிறுதுத்தி.

## குபாசி இதுவே சிறுதுத்தி.

சு-ம். குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம், சுத்த வுதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம், கட்டி கொப்புளம் வீக்கங்கள் முதலியவற்றைக் கியாழமிறக்கிச் சருக்கரைசேர்த் துட்கொள்ள தினவு சொறி சிரங்கு இவைகளைப்போக்கும், குடலிலுள்ள புண்ணையாற்றும், நீர்ச்சுருக்கு தொண்டைக்கம்மல் காமாலை இவைகளைப் போக்கும், மருந்துகளின் விஷத்தையும் குண்டிக்காயிலுள்ள வலிகளையும் அடக்கும் குளவி தேன் வண்டு இவற்றின் கடிவிஷத்தை மாற்றும், இதனிலையையரைத்துப் பற்றுப்போடச் சூட்டினுலுண்டாகும் பருக்களை யுடைக்கும், முறிந்த எலும்புகளைக் கூட்டிவைக்கும், இதனிலையிலுப்பிட்டரைத்துக் கண்களில் வரும் பௌத்திரத்திற்பூசச் சொஸ்தமாகும், இதன் சாற்றில் ஜெயித்தூனெண்ணெய் கலந்து காய்ச்சி நெருப்புப்பட்ட ரணங்களிற்பூச விரைவிற் காய்ந்துபோகும், இதனிலையைக் காயவைத்து

சிறுநீர் சேர்த்தரைத்துத் தலையிற்பூசத் தலைபுண்ணாறும், இதன் விரையை யூரவைத்து அந்தக் கோழையிற் கற்கண்டு கூட்டி யுட்கொள்ள சூட்டைப்பற்றிய இருமல்கள் குண்டிக்காயிலும், நீர்த்தாரையிலும் பற்றிய ரணங்கள் வயிற்றுக்கடுப்பு உதிரபேதி நீர்ச்சுருக்கு வயிற்றெரிவு முதலிய சகல எரிவுகள் இவைகளை மாற்றும் வி-தி தீனிப்பைக்குதவாது ப-ம், குளிர்ச்சியான கனிகளின்ரசம் ப-ம், சீமைத்துத்திவிரை.

## கள்ளிகளின் பொது.

கள்ளிகள் அநேகவிதமா யிருக்கின்றன அவைகளை விவரித்து வெவ்வேறாகச் சொல்லுவதனால் விரியுமென்றஞ்சி மொத்தா யவைகளுக்குள் சிறந்ததைமாத்திரம் இவ்விடத்திற் சொல்லுகிறோம், அதாவது கள்ளிகள் செடிகளாயும் மெலிந்தும் அடர்ந்த கிளைகளையுடையதாயும் சிவந்தசாயலாயும் சிறுத்த இலைகளையுடையதாயும் இருக்கிறதோடு அதன் கொம்புகள் நீண்டிருப்பதே சிறந்ததாம் கொடிக்கள்ளி இலைக்கள்ளி சதுரக்கள்ளி திருகுகள்ளியென முக்கியமாய் ச-சாதிகளுண்டு, கள்ளிப்பாலை புளியில் கலந்து பேதிக்குக் கொடுப்பது வழக்கம், சிலருக்கு அதிக பேதியாகி துர்க்குணத்தைச் செய்கிறது, மேலே தடவினால் புண்ணாகும் சீல்வாதத்துக்குத் தடவி வேர்மண்ணைப் போடுகிறதுண்டு, பட்டைநாம்பு சிலந்திக்குக்கட்ட உதவுமாம், மற்ற இனங்கள் தைல முறைகளில் சேருகின்றன, கொடிக்கள்ளியையாவது இலைக்கள்ளியையாவது வதக்கி ரசமெடுத்துச் சிறு குழந்தைகளுக்கு பேதிவார்க்கிற வலக்கங்கெட்டது கள்ளிப்பால்யாவும் அதிக சூடும் வறட்சியுமுள்ளதோடு தேகத்தின்தோலை வேகவைக்கும், அதில் பத்துக் குன்றியெடை யுள்ளுக்குக் கொள்ள பேதியாகும், இரச மாசுகளை நன்றாகக் கண்டிக்கும் ஆயினும் வயிற்றுக்கடுப்பு உதிரபேதி உளைச்சல் குடல்களைப் புண்ணாக்குதல் ஒக்காளம் அரோசிகம் மூர்ச்சை இவைகளையுண்டுபண்ணும், ஆதலால் இதை யுட்கொள்ளாம லிருப்பதே நன்று இதை யுட்கொள்ளவேண்டிய அவசரம் வந்த சமயத்தில் நிஷாஸ்த்தா அல்லது நாட்டுக் கோதுமைமாவில் சேர்த்துக் கொள்ளலாம், இதன் விஷத்தை மாற்றுவதற்கு வாதுமைநெய் சீராளை புஷ்பம் அதிமதுரப்பால் கோவையிலையின் சாறு பால் மோர் தயிர் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## மட்டுப்பால்.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்தகுருதியும் அசுத்த உணவுமாம் சௌ-ம் மூலைப்பால் வியர்வு நீர் இவைகளை யதிகப்படுத்தும் உதிரச் சிக்கலையும் வயிற்றில் மறித்த பிண்டத்தையும் வெளிப்படுத்தும், இரைப்பைக்கு வலிமையைக்கொடுக்கும், விக்கலையடக்கும், குளிர்ச்சியாலுண்டாகுந் தலைவலியைப்போக்கும் நாட்பட்ட ரணங்களையாற்றும், படைகளைமறைக்கும், இதை ரோஜாப்பூவெண்ணெயி லுரைத்துப்பூசக் குழந்தைகள் தலைப்புண்ணையும் நெருப்புப்பட்ட புண்ணையும் ஆற்றும், வயிற்றிற்பூச வயிறுகடுப்பும் உதிரபேதியும் நீங்கு மாட்டுக்கொழுப்பு அல்லது ஆட்டுக்கொழுப்பி லுருக்கிப்பூச வலியை மாற்றும், மரக்கள்ளியிலையின் தயிலத்திற்பூச மயிர் வ அதை யுதிராமற்காக்கும் அதன் புகையூட்ட தேள் முதலிய பூச்சிகளின் கொட்டு விஷமாறும், கருப்பந்தரிக்காத பெண் பாதைக்கிருந்தபின் அப்படியே உட்கார்ந்திருந்து இதன் பு யோனித்துவாரத்தி லேற்றினவுடனே மறுபடி சலோபாதைக்கு வருமானல் அவசியங் கருப்பந்தறிக்கும், இக்குறி யில்லாதவளுக்கு எப்போதுங் கருப்பந்தரியாது, இதன் தயிலமுறை நல்ல மட்டுப்பால் பலம் நான்கை ஜெயித்தூனெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் பலம் பதினெட்டில் கரைத்து மறுநாள் கரிநெருப்பில் கொஞ்சஞ் சுண்டும் வரையில் வைத்திருந்து, வடித்துப் புட்டியினிரப்பிக் காற்றுப்போகாமலடைத்துவைத்து, வேண்டியபோது ஒருதுளி பொறியிற்பூசத் தலைவலிதீரும், மோர்தால் சலதோஷ நீங்கும் வயிற்றிற்பூசத் தீபனமுண்டாகும், தலையிற்பூச மயிர் கறுக்கும் நீண்டுவளரும், சலவை சயித்தியரோகங்களைக் கண்டிக்கும் வி-தி குடலுக்குதவாது ப-ம், சட்டமாஞ்சில் ப-ம் இல்லை.

## சிலா ரசம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம், சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம், காற்றை நன்றாக கண்டிக்கும் நீரைப் பெருக்கும் உதிரச்சிக்கலை யறுக்கும் தலைமூளை ஈரல்முதலிய உள்ளுறுப்புகளுக்கு

அதிக வலிமையைக் கொடுக்கும், இதை வெந்நீரிற்கலந் துட்கொள்ள பேதியின் வழியாக மார்புவலி இடுப்புவலி தொண்டைக்கம்மல் சளி சலதோஷம் மூக்கில் நீர்வடிதல் குண்டிக்காய்வலி இவைகளைப் போக்கும் இதன் புகை பிடிப்பதற்கு மிதுவே குணமாம் வி-தி நுரையீரலுக்குதவாது ப-ம் றாமிமஸ்தகி ப-ம் இல்லை.

## கர்ப்பூரம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம், தடித்த உதிரமும் மத்திமணவுமாம் செள-ம், உதிர பீநசம் உதிரக்கக்கல் சூட்டைப்பற்றிய ...யின் வியர்வை தாகம் இவைகளைமாற்றும், ஈரல் நுரையீரலுள்ள ...களையாற்றும், ஈளை இருமல் அஸ்திசுரம் நீர்கடுப்பு இவைகளைப் ...தும், சூட்டினாலுண்டாகும் ரோகங்களுக்கும் விஷங்களுக்கும் ...பயோகப்படும், ஐம்புலன்களின் சக்தியை அதிகரிக்கச்செய் ...மூலையிலதிக சூடுகொண்டவர்களுக்கு நித்திரை யுண்டாகும் அம்பர் கஸ்தூரி இவைகளைச் சேர்த்து உட்கொள்ள ஆத்தும சத்தி யதிகரிக்கும், கத்தீராவோடு சேர்த்தரைத்து நசியமிட உதிரப் பீநசமறும், காப்பரிசல்லா திலைச்சாற்றிலரைத்து நெய்யிற்பூச நித்திரை பிடிக்கும், அதைப் பற்களிற்றேய்க்கப் பற்களிலுள்ள பூச்சிசாகும் கர்ப்பூரமானது நாடியைத் தீவிரப்படுத்தாமல் கொஞ்சம் உற்சாகப்படுத்தும் வேதனையைத் தணிக்கும், வியர்வையைப் பிறப்பிக்கிற மருந்துகளோடு சேர்த்து குணத்தை அதிகப்படுத்தி சுரங்கள் கீல்வாதரோகம் முதலியவைகளுக்கு கொடுக்கப்படுகின்றது, கர்ப்பூரத்துடன் பெருங்காயம், சடாமாஞ்சி சேர்த்து சூதக ஜந்நி வலிகள் இவைகளுக்கு கொடுக்கலாம், பார்ப்பவுடரோடு சேர்த்து கெட்ட சுரங்களுக்கும் அழிபுண்களுக்குங் கொடுப்பதுண்டு, கர்ப்பூரத்தை மோந்தால் ஜலதோஷம் நீங்கும், ஆவியை வாயால் உள்ளுக்கிழுத்தால் கபரோகங்களுக்கு நல்லது நாட்பட்ட சருமரோகங்களை குணப்படுத்தும், மூத்திரக்கட்டு மூத்திரத்தாரை மூத்திரப்பை கருப்பாயசம் ஆஸனம் இவைகளில் காணுகிற தாபன ரோகங்களுக்கு உபயோகிக்கலாம், வாந்திபேதிக்கு இதை அதிக அளவில் கொடுக்கவேண்டியது, ரு-முதல் ய-கிரைன்

கொடுக்கலாம் வி-தி, தாதுநஷ்டப்படும் விந்துடைந்து புத்திரசந்தான மற்றுப்போகும், மயிர் வெளுக்கும், தீபனத்தையடக்கும், அதிகமாக மோந்தால் நித்திரைபிடியாது ப-ம், அம்பர் கஸ்தூரி முதலிய சுகந்த பதார்த்தங்கள் ப-ம், அதற்கிரண்டெடை மூங்கிலுப்பும் ஒரெடை சந்தனமும் ஒன்றாய்ச் சேர்க்கவும்.

## கலைமான் கொம்பு.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம், அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் இதை வெள்ளையாய் பஷ்பித்துக் கத்திராவோடு சேர்த்துட்கொள்ள அவுஷதங்களினாலுண்டாகும் விஷங்கள் மாறு உதிரவாந்தி உதிரக்கடுப்பு பேதி காமாலை வெள்ளை இவைகளுக் யோகப்படும், காடியிலரைத்துத் தேமலின்மேற் பூசி வெயிலி லுட் மாறிப்போம், அதை யரைத்து அடிவயிற்றிற்பூச உதிரச்சிக்கல

## காக்குநஞ்.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம், ஈரல் குண்டிக்க தாம்பிள்ளை இவைகளிலுள்ள புண்களையாற்றும், நீரைப் பெருக்கும் சுவாச இருமலை நீக்கும், வயிற்றிலுமுள்ள கிருமிகளைப் போக்கும், நித்தியமொரு கழஞ்சு தின்பதினால் காமாலை தீரும், பெண்கள் மாத விடாய் வந்தபின்பு நித்தியம் எவ்வேழுகாய் சாப்பிட்டுவர அவர்களுக் கொருபோதுங் கருப்பந்தரியாது வி-தி, போதையுண்டாகும் ப-ம், குல்கந்து ப-ம், மணத்தக்காளி.

## காடி.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம், சுத்தவுதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் தேகத்திலுள்ள மாசுகளைக்கண்டிக்கும்தீபனத்தை யெழுப்பும் தாகத்தையடக்கும், உதிரக்கொதிப்பை மாற்றும், பித் தத்தை நாசம் பண்ணும், வயிற்றிலுள்ள கிருமிகளைக் கொல்லும், வயிற்றி லுரைந்துபோன உதிரத்தை இளகச்செய்யும், வாதுமை நெய் யோடு சேர்த்துத் தேகத்திற்குபூச சொறி சிரங்கு தினவுமாறும், இதிற் காட்டு வெங்காயத்தைச் சேர்த்துக் கொதிக்கவைத்து வெயிலில் வைத்து ஒருவாரத்திற்குப் பின்பு நித்தியம் இரண்டு வாரகனெடை யுட்கொள்ள வாய்நாற்றம் நீங்கிப்போம், ரத்தபீநசம் ரத்தவமனம்

அதிக வியர்வை இவைகளுக்குக் காடியை மத்த ஜலம் விட்டு விளாவி ராகத்திற்குச் சாப்பிடுகிறதுபோல் சாப்பிட்டால் தவறாமல் அவைகளைக் கண்டிக்கும், நாசி கருப்பை மூலம் ரண மிவைகளிலிருந்து வடிகிற ரத்தத்துக்கு துணியில் நனைத்து மேலே போடலாம் பெருங்குடலிலிருந்து வடிகிற ரத்தத்துக்கு பீச்சாங்குழலில் போட்டு ஜலம் விட்டு விளாவி ஆஸனத்திலடித்தால் நலந்தரும், ஜலம்விட்டு விளாவி நாட்பட்ட கண்ணோய்க்குப் போட்டால் குணமாகும், ஆல்கெலீஸ் என்னும் காரஉப்புகள் விஷமிக்கும்படித் தின்றுவிட்டவர்களுக்கு காடியைக்கொடுத்தால் முறிந்துவிடும், உ-ச-கிராம் கொடுக்கலாம் அதிக வியர்வை காணுவதற்கு ஒருநாளைக்குக் குடிக்கும்படியாய் ந-அவுன்ஸ் ஒன்றரை பயின்ட் ஜலத்துடன் கலந்து குடிக்க நீராகச் செய்துக் கொள்ளலாம் வி-தி விருத்தாப்பியருக்குதவாது நரம்பிளைக்கும் தாதுவும் ப-ம் சருக்கரை முதலிய இனிய பதார்த்தங்கள் ப-ம் எலுமிச்சம்பழச்சாறு.

## காரிஃகூன்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்தவுதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் வாதபித்தங்களைப் பேதியின் வழியாகக் கண்டிக்கும், கட்டுகளையுடைக்கும், விஷத்தைப்போக்கும், வீக்கம் வயிற்றுவலி நரம்பைப்பற்றிய ரோகங்கள் இவைகளுக் குபயோகப்படும் வி-தி வயிற்றுவலியுண்டாம் ப-ம் ஜூன் ப-ம் ஆற்றுத் தும்மட்டிக்காய் சீமை சிவதை வேர்.

## காரீயம்.

சு-ம். குளிர்ச்சியும் சிலிர்ப்புமாம் பி-ம் அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் இதில் ஏழரை கழஞ்சை ஒருதுண்டா யுருக்கி யிடுப்பிற் கட்டிவைத்தால் நித்திரையிற் கனவுகண்டு விந்து வெளிப்படுவதை நிறுத்தும் இதை ரோஜாப்பூ எண்ணெயிலாவது கொத்துமல்லி இலைச்சாற்றிலாவது உரைத்துப் பக்கப்பிளவை முதலிய ரணங்களிற்பூச ரணமாறிச் சொஸ்தமாகும். இதைக்கையிலுரைத்து அதை எடுத்துக் கண்ணிலிட கண்ணோய் கண்சிவப்பு கண்ணெரிவு இவைகள்

விரைவிற் சொஸ்தமாகும், இன்னுமிதி லைந்துவராகனிடை நித்திரை செய்பவன் தலையின்கீழ் புதைத்துவைக்க விகற்பக் கனவுகண்டு மருண்டு விழிப்பான் வி-தி இதைப் பச்சையாய்ச் சாப்பிடுவதனால் நஞ்சாகும் ப-ம் உடனே பால்குடித்து வாந்திசெய்யவேண்டும் ப-ம் வெள்ளீயம்.

## காவி.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் தடித்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் இதில் அனேக விதங்களுண்டு அவ்விதங்களின் பெயருங் குணமுஞ் சொல்லப்படும். முதல் தினேமாதோம் இதைக் கத்தியாலறுபட்ட புதுக்காயத்தில் தூவ அக்கணம் உதிரத்தை நிறுத்தும், உதிரபீனசம் மேகரணங்கள் பேய்நாய்க்கடி எலும்பு முறிவுதேகத்துக்குள்ளிருக்கும் பற்பல ரணங்கள் புண்ணுகள் இவைகளைச் சீக்கிரத்தில் ஆற்றிச் சொஸ்தப்படுத்தும், இன்னும் தேகத்துக்குள்ளும் புறமுமிருக்கும் அவயவத்தில் உண்டாகும் உதிரப்பெருக்கை உடனே கட்டும் இதில் கழஞ்சுக, பூமாதுளை மலர்க்கழஞ்சுக இவை யிரண்டுஞ் சேர்த்தரைத்துச் சரப்பிட்டுவர பெரும்பாடு விரைவிற் சொஸ்தப்படுத்தும் 2-வது தினேஷாமுஷி என்பதற்கும் இதுவே குணமாம் 3-வது தினே அருமனீ இது உதிரப்பெருக்கு பேதி, ஈளை இருமல் இவைகளுக்கு அதிக உபயோகப்படும், 4-வது, தினே குமுசனி இது மற்ற மூன்றிலும் அதிக உபயோகமுள்ளதாயும் வாசனையுள்ளதாயுமிருக்கும், இதுவாய் நீரையும் அசீரண பேதிகளையும் உடனே கண்டிக்கும், ஆனால் இதனோடு பனிநீர் கோரைக்கிழங்கு வால்மிளகு ஏலக்காய் அத்தர் இவைகளையுங் கலந்து கொள்ளவேண்டியது வி-தி குண்டிக்காய்க்குதவாது ப-ம் றாம்மஸ்தகி பனிநீர் ப-ம் இவைகளி லொன்றுக்கொன்று பதிலாகும்.

## குக்கில்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் தடித்த உதிரமும் அசுத்த உணவாம் சௌ-ம் உதிரச்சிக்கல் நீரடைப்பு கல்லடைப்பு, வாய்வினாலுண்டாகும் பேதி வாதப்பிடிப்பு, பக்கசூலை இவைகளுக் குபயோகப்படும், முலைப்பால் சுரக்கும், தாதுவிர்த்தியாம், சுவாசம் கழுத்துவலி நரம்

பிசுப்பு இவைகள் தீரும் குக்கிலென்றும் சரக்குக்கு உதடுநோய் கடி-கட்டி காதுநோய் குன்மம் சூலை நாசிநோய் மேகப்புணை வாதவித்திரதி முதலியவைகள் தீருமென்று பதார்த்தகுண சிந்தாமணியில் கண்டிருக்கின்றது வி-தி ஈரலுக்கும் நுரையீரலுக்கும் உதவாது ப-ம் கத்திரா குங்குமப்பூ ப-ம் வாலேந்திரபோளம்.

## கஹருபா.

சு-ம். சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் பெரும்பாடு உதிரக்கிராணி உதிரக்கடுப்பு உதிரப்பீநசம், காமாலை நீர்ச்சுருக்கு, கல்லடைப்பு, இவைகளுக் குபயோகப்படும், வாந்திபேதி உதிரப்போக்கு இவைகளை நிறுத்தும், சந்தோஷத்தை யுண்டாக்கும், இருதயகமலத்துக்கு வலிமையைக் கொடுக்கும், மூலரோகத்துக்கு அதிக உபயோகப்படும், இதைக் கறியபோலத்தோடரைத்து மூலமுளையின்மேற் பூச முளை நைந்து விழுந்துபோகும், சலத்திலரைத்து நெருப்புப்பட்ட ரணத்திற்பூச ஆறிப்போகும்,இதைக் குளிசமாக இடுப்பிற் கட்டியிருக்கக் கருப்பத்தை யழியாமற்காக்கும், இதைப் பொடிசெய்து ரணங்களின்மேற் போட ஆறிப்போகும் வி-தி தலைக்குதவாது, தலைவலியுண்டாம், ப-ம் ஷற்பத்தே பன்புஷா ப-ம் சந்தருஸ்.

## காவுஜபான்.

சு-ம். சூடும் குளிர்ச்சியுமாம், பி-ம் சுத்த வுதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் தலைமூளை இருதய முதலிய இராஜ உறுப்புகளுக்கும் ஐம்புலன்களுக்கும் அதிக வலிமையைக்கொடுக்கும், ஆத்தும சத்தியைக் காக்கும் சந்தோஷத்தை யுண்டாக்கும், வண்டலைப்பற்றிய ரோகங்களையும் பித்த ரோகங்களையும் நாசமாக்கும் சன்னி சலவை முதலிய வியாதிகளையும், பயித்தியம், காமாலை மாரெரிவு இருமல் மூச்சடைப்பு கல்லடைப்பு இவைகளையும் நீக்கும், அழகுகொடுக்கும் இதில் ஆப்பிலென்னுஞ் சீமையிலந்தப்பழம் திராட்சப்பழ மிவற்றின் இரசங் கலந்து ஷர்பத்துசெய்து சாப்பிடுவதினால் மனதுக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கும், இதன் பூவுக்கும் இதுவே குணமாம், இதன் பூ வராகனெடை-2, தீனே அர்மனி வராகனெடை 1, சேர்த்துக் காய்ச்சி

1-வாரகனெடை சருக்கரை சேர்த்துச் சாப்பிட்டுவர இருதய கமலத்தைப்பற்றிய ரோகங்களாகிய பயம் கிலி நடுக்க முதலியவைகள் நாசமாகும், இதன் திராவகத்தால் மேகரோகங்கள் தீரும் வி-தி நுரையீரலுக்குதவாது ப-ம் சந்தனம் ப-ம் பட்டு நூல் கொடி மாதுளம் பழத்தின் மேற்றோல்.

## காட்டு வெங்காயம் அல்லது நரி வெங்காயம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் சிரசைப்பற்றிய சகல ரோகத்தையும் கண்டிக்கும் இதைக் காடியிலுரைத்து பாம்புகடித்த வாயிற்றடவ உடனே விஷமுறியும், இதன்ரசத்தில் கடலைமாவைப் புளிக்கவைத் துண்டைசெய்து தின்ன மகோதரந்தீரும், இதனுள்ளிருக்கும் நரம்பைக் காடியி லுரைத் தப்பூசத் தீராத படைகள் தீர்ந்துபோம் இந்த வெங்காயத்தி லொன்றைச் சீமை யத்திப்பழத்துட் புகுத்தி, ஒருநாள் தேனி லூறவைத்து, அந்தப் பழத்தைச் சாப்பிட தீராத குன்மரோகந்தீரும், அளவுக்கதிகமானால் விஷமிக்கும், குறைந்த அளவில் கொடுத்தால் கபத்தை வெளிப்படுத்தும், மூத்திரத்தை அதிகப்படுத்தும், அதிக அளவில் கொடுத்தால் வாந்தியாகும் பேதியாகும், இதை வாந்திக்காவது பேதிக்காவது கொடுப்பது அரிது வி-தி நரம்புக்குதவாது தலைவலி யுண்டாகும் ஓக்காளமுண்டாகும் ப-ம் பசுவின்பாலில் செங்கல்லைகாய்ச்சித் தோய்த்துப் பாலைச் சாப்பிடவேண்டும் ப-ம் இல்லை.

## குக்குலியம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் உதிரச்சிக்கலை வெளிப்படுத்தும், மாவுல் அகலில் சேர்த்துக்கொடுக்க காக்காய்வலி வீக்கம சுவாசம் இவைகளுக்குபயோகப்படும், பல்நோய் கண்ணோய்க்கு அதன் பொடி யுதவும், அதன் சேர்வை ரணத்தையாற்றும்.

## குசும்பாப்பூ.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் வாய்வைக் கண்டிக்கும் தாது விர்த்தியுண்டாம்

ஈரலுக்கு வலிவைகொடுக்கும், தேனிலரைத்துப்பூச படைகளைப் போக்கும், காடியிலரைத்துப்பூச சொரிசிரங்கு தினவு நிவிர்த்தியாகும், சிசுக்களின் வாய் வேக்காட்டிற்கு அதிக குணங்கொடுக்கும் வி-தி நுரையீரலுக்குதவாது ப-ம் தேன்.

## குங்குமப்பூ.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தவுதிரமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் சந்தோஷத்தை யுண்டாக்கும், புலன்களைக் காக்கும் வாயுவைக் கண்டிக்கும், கெட்டுப்போன வாத சத்துக்களைச் சுத்தப்படுத்தும் தாதுவிர்த்தி யுண்டாக்கும் ஆற்றும சக்தியை யதிகரிக்கச் செய்யும், சுவாசம் ஈரல் குடல் முதலிய உறுப்புகளுக்குப் பலங்கொடுக்கும், மருந்துகளின் குணத்தை விசேஷப்படுத்தும், கருப்பம் வெளிப்படாமல் உபத்திரவப்படுங்காலத்தில் ஒரு கழஞ்சு குங்குமப்பூவை சோம்புகியாழததிற் கரைத்துக்கொடுக்க உடனே வெளிப்படும், பிள்ளை பிறந்தபின் ஒவ்வொரு பணவெடை குங்குமப்பூவை அவ்வாறேமூன்று வேளை கொடுக்க உதிரச்சிக்லறும் இரண்டு வராகனிடை குங்குமப்பூவைச் சலத்திலரைத்துண்டைசெய் துள்ளுக்குக் கொடுக்க மறித்த பிண்டம் உடனேவெளிப்படும், தேனிலுரைத்து பெண்குறி பவளவாய் காது இவைகளிலுண்டாகிய நோய்க்குப் பூச சீக்கிரத்தில் மாறும், முலைப்பாலுரைத்துக் கண்ணில் குத்திவர, கண்ணீரொழுக்கு முதலிய கண்ணைப்பற்றிய சகலரோகங்களும் நிவிர்த்தியாம், உதிரப் பீநசத்தை மாற்றும், தீராத ஒரு தலைவலிக்கு அபினி விளாம்பிசின் பழவெல்ல மிதுகளுடன் சேர்த்தரைத்துக் கன்னப்பொறியில் காகிதத்திற்றடவி ஒட்டிவர வலி நீங்கும், இதன் தயிலத்துக்கும், இதுவேகுணம், இது சிறிய இழைகளைப்போல் அறஞ்சிப்பழநிறமாய் இருக்கும் இதன்சாயம் ஜலத்திலும் சாராயத்திலும் இறங்கும் ஒருவித வாசனையாப கொஞ்சம் இனிப்பாய் காரமாய் கசந்துகொண்டு இருக்குமென்றால் எச்சிலை மஞ்சளாக்கிவிடும், இதற்குக்கொஞ்சம் உஷ்ணம் செய்கிற குணம் உண்டு, இவ்விடத்திலிதை மெத்தச் சிலாகித்துப் பேசுகிறார்கள், இங்கிலீஷ் வைத்தியர் இது தனியாய் கொடுக்கிறதில்லை, உஷ்ணகாரிகளோடும் லேகியம் முதலானவைகளோடும் சேர்க்கப்படுகின்றது. சூதககட்டு வலி இவைகளுக்குக் கொடுக்கலாம், க-திராம் குங்குமப்பூவை க-பயின்ட்

ஜலத்தில்போட்டு வெந்நீர் கஷாயமாக்கி மந்தாகினிக்குக் கொடுக்கலாம். இது 10-முதல் 30-கிறைன் இடைக்கு வலிகளுக்குக் கொடுக்கப்படுகின்றது. பரிமள லேகியத்தில் சேருகிற மருந்துகளில் இது ஒன்று வி-தி புலன்களைப் பேதப்படுத்தும் ப-ம் அனிசூன் ப-ம் சிக்கஞ்சபீன்.

## பாசியாவுஷான்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் உதிரச்சிக்கல் நீரடைப்பு இவைகளை வெளிப்படுத்தும, வாய்வுகளைக் கண்டிக்கும், சலத்தை வறட்டும், மார்பு நுரையீரல் இவைகளின் மாசையகற்றும், சுவாசம் மூச்சடைப்பு மார்வலி காமாலை இவைகளுக்கதிக உபயோகப்படும், இதனிரசத்தை எள்ளெண்ணெயில் விட்டுக் காய்ச்சிப் பூசவர, மயிருதிர்ந்துபோவது நிற்கும் வி-தி நுரையீரலுக்குதவாது ப-ம் றாமிமஸ்தகி ப-ம் அதிமதுரம்.

## குந்திரிக்கம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் ஆற்றுமம் இருதயகமலம் இரப்பை தலைமூளை இவைகளிலுண்டாகும் ரோகத்தைக் கண்டிக்கும், கோழிமுட்டை மஞ்சட்கருவில்சேர்த்துப் பொரித்துச்சாப்பிட விந்து விருத்தியாகும், இதைப் பொடிசெய்து மேலேபோட மேகத்தைப்பற்றிய சகல ரணங்களும் ஆறும்; முலைப்பாலிலிழைத்துக் கண்ணிலிட கண்ணைப்பற்றிய சகல ரோகங்களுஞ் சொஸ்தமாகும், சலத்திலூறவைத்து அந்தச் சலத்தை நித்தியஞ் சாப்பிட்டுவர மறதியை நீக்கும். வி-தி இதை யதிகம் அநுசரிப்பதால் பயித்தியமுண்டாம் படைகளுண்டாகும் ப-ம் சருக்கரை ப-ம் வஸ்தக்கி.

## கொட்டைக்கரந்தை.

சு-ம். சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் தலைமூளை இருதய முதலிய இராஜ வுறுப்புகளுக்கும் இரப்பைக்கும் ஆற்றுமத்துக்கும் வலிமை கொடுக்கும், வாயுவைக்கண்டிக்கும், பயித்தியங்களை மாற்றும், பூவெடுப்பதற்கு முன் இதைச் சமூலமும் பிடுங்கி இதற்குச் சமவெடையாகத்தகரைமூலமுஞ்

சேர்த்து நிழலிலுலர்த்திச் சூரணஞ்செய்து கழஞ்சுப்பிரமாணம் தேன் அல்லது நெய்யிற் கலந்து ஒருமண்டலஞ் சாப்பிட்டுவர வெளுத்த மயிரும் கறுத்துப்போகும், சிவகரந்தை இதிலு மதிக குணமுண்டு.

## கொடிவேலி.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் வி-தி மேக வியாதிகளுக்கு உபயோகப்படும், கருப்பத்தைக் கரைத்துவிடும், வாதப்பிடிப்புகளை நீக்கும, இதை யரைத்துப்பூசப் படைகளை மாற்றும் பல்நோ யதிகரித்தவர்களுக்கு இதை யரைத்து வலதுள்ளங்கையிற் பூச, இடது பக்கத்துப் பல்வலி மாறும், இதை யரைத்துக் கோழிமுட்டையின்மேற் பூசி ஒருநாள்வைக்க முட்டை ஓடு சிவந்துபோகும், இதில் சிகப்பு வெள்ளை நீலம் என நான்கு சாதிக ளுண்டு, பச்சைவேரை வடிகஞ்சி நீர்விட்டு அரைத்துத்துணியில் சன்ன மாய்த்தடவி அரைமணிநேரம் உடம்புமேல் போட்டுவைத்துப் பிறகு எடுத்துவிட்டால் போட்டவிடம் கொப்புளித்துப் புண்ணாகும், அரை யாப்புக் கட்டிமேலும் இருமலுக்கு மார்பின்மேலும் போடலாம் அநேக மருந்து டாப்புகளோடு சேருகின்றது, இது மெத்த கெடுதிசெய்கிற வஸ்துவாகையால் நீக்கிவைப்பதே உத்தமம் வேரை எண்ணெயில் கலக்கி வாத நோய்களுக்குப் பூசலாம், ஸ்திரிகள் கருப்பிண்டத்தைக் கரைக்க இதை அரைத்துத் தின்று தேக சவுக்கியத்தை விருதாவில் கெடுத்துக் கொள்கிறார்கள். இதற்குக் கருப்பையை உஷ்ணிக்கிற குணம் இல்லை, சிலர் சித்திரமூலக் குச்சியையாவது அதை நறுக்கி மெல்லிய துணியில் வைத்து திரிசெய்தாவது கருப்பை வாயில் வைத் துப் புண்ணாக்கிப் பிண்டத்தை வெளிப்படுத்திவிடுகிறார்கள். இது மெத்த உபத்திரமான செய்கை இச்செய்கை துரைத்தனச் சட்டத் துக்கு விரோதமாகையால் இதை செய்து கொள்ளுகிறவர்களுக்கும் செய்கிறவர்களுக்கும் பலமான தண்டனை விதித்திருக்கின்றது வி-தி நுரையீரலுக்குதவாது ப-ம், விளாம்பிசின் மஸ்தகி ப-ம் பவளம் கிச்சி லிக்கிழங்கு.

## கொத்துமல்லி விரை.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம்பி-ம், மத்திம உதிரமும் மத்திம உணவுமாம் சௌ-ம், இருதயத்திற்கு வலிமைகொடுக்கும் வயிற்றுக் குட்புறக்கும் ஆவிகளைக் கபாலத்துக் கேறாமற் காக்கும் மயக்கங்களைத் தெளியவைக்கும் அதை வறுத்துச் சாப்பிடுவதால் உதிரபேதி அசீரண

பேதி யிவைகளைப்போக்கும், சந்தனத்தோ டரைத்துப்பூச சூட்டைப் பற்றிய தலைவலி நீக்கும் அனீசூனோடு சேர்த்து சாப்பிட யிரைப் பைக்கு வலிமையுண்டாம் ஏப்பத்தை மாற்றும், சந்தனம் கெல்லி முள்ளி இவையோடு சலத்திலூரவைத்துச் சாப்பிடத் தலைச்சுற்றல் நீங்கும் காடியிற் சேர்த்துக் குடிக்கச் சாராயவெறியை நீக்கும், வி-தி மறதியுண்டாம் தாது நஷ்டப்படும் சுவாசத்துக்காகாது ப-ம், சிக்கஞ்ச பீனே சபர்ஜல்லி கோழிமுட்டை ப-ம், கசகசாகாப்பிரி சல்லாதுவிரை.

## கோஷ்டம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம, வாய்வைப்பற்றிய சகல ரோகங்களையும் போக்கும், உதிரச்சிக்கலையறுக்கும், விஷயங்களை மாற்றும் முறைகாய்ச்சலுக் குபயோகப்படும் யிழுப்பு காமாலை கல்லடைப்பு யிவை வி-தி நுரையீரலுக்கும் நீர்த்தாரைக்கு முதவாது ப-ம், அக்கரகாரம்.

## கோரைக்கிழங்கு.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம், சுத்தவுதிரமும் குறை மாம் சௌ-ம், புத்திவளரும் தாதுவிர்த்தியுண்டாம் அழகு கெ தீபனமுண்டாம் பழய சுரங்களைபோக்கும், கருப்பவலி உதிரச்சிக்கல் மூலம் யிடுப்புவலி பல்நோய் முதலியவலிகளுக்கு அதிக வுபயோகப் படும் வி-தி அதிகமாய்ச் சாப்பிடுவதால் உதிரஞ்சுண்டும் ப-ம், காடி ப-ம் சடாமஞ்சில்.

## சருமுனாயா அல்லது மஹாமூதா.

சு-ம். சூடும் வறட்சியுமாம் அசுத்த உதிரமும் அசுத்த உணவு மாம் சௌ-ம், பேதியாகும் பித்தமாசுகளை நன்றாய்க்கண்டிக்கும் சீமை சிவனதவேரோடு சேர்த்துக்குடிக்க வயிற்றிலுள்ள சகல கிருமிகளுஞ் சாகும் இத்துடன் சுக்குஞ் சேர்த்துக்குடிக்க வாய்வுகளை நாசம் பண்ணும் காடியிலுரைத்துப்பூச தேமல் படைகள் முதலியது தீரும் வாதுமைநெய்யிற் பூச தலைவலி நீங்கும், தேனிற்பூச நரம்பிழுப்பு நீங்கும், தேள்கொட்டும் விஷம் உடனே குளிர்ந்துபோகும் இதில் கொஞ்சமிழைத்து திரியிற்றடவிப் பெண் குறியில்வைக்க வயிற்றில் மரித்துப்போன பிள்ளை யாதோ ரூபத்திரவமில்லாமல் வெளிப்படுத்

வைக்கும் வி-தி, சுத்திசெய்யாமற் சாப்பிடுவதால் அனேகம் பொல்லாப் பைச்செய்யும் அரைடாங்குமுத லிரண்டுடாங்குவரையிற் சாப்பிடலாம் ப-ம் கொய்யாப்பழம் அல்லது சீமையிலந்தைப் பழத்துக்குள் வைத்துப் புடமிடச் சுத்தியாகும் ப-ம் இதற்கொன்றைபங்கு மஞ்சட் கரிய போளம் மஞ்சக்கடுக்காய்,

## சடாமஞ்சில்.

சு-ம. சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த வுதிரமும் குறைந்த உணவாம் சௌ-ம் இரைப்பைக்கு ஈரலுக்கும் வலிமையைக் கொடுக்கும் உதிரச்சிக்கலை யறுக்கும், நீரைவறட்டும், தீபனமுண்டாகும், கொத்த மல்லிக்கீரைச் சாற்றிலுரைத்துக் கண்ணிற்குத்தக் கண் சிகப்பை மா... ...ரியுண்டாம் தலையிற்றடவ மயிர்வளரும் சடாமாஞ்சியின் ...ாய் மூளையிற் கட்டுகிறபடியால் அதிகமாய்க் கொடுத் ...பைக்கங்காணும், கண் கெட்டுப்போகும், யிதைக் காக் ...ன்னி, இரைப்போடு கூடிய இருமல் கஷ்டசுவாசம், துடைச்சல் கிருமி யிவை முதலிய ரோகங்களுக்கு உப ...ன்றது யிதை சூதகஜன்னிக்குக் கொடுத்தால் மெத்தக் ...க் கொடுக்கும் ஆனால் வெகு சீக்கிரத்தில் இதன் வேகங் ... ...ந்துவிடுகின்றது, இப்போது இதை மெத்த உபயோகப்படுத்துகிறதில்லை சடாமாஞ்சிக்கு யிருமல் இரத்த பித்தமயிறைம்பு உஷ்ணம் கண்ணோய் குஷ்டம், சிலந்திவிஷம் பழயசுரம், பேதிவாயுவு இவைகள் போகுமென்று தமிழ் நூலிற் கண்டிருக்கின்றது வி-தி குண்டிக்காய்க்குதவாது ப-ம், கத்திராபல் அஸ்கர்.

## சதக்குப்பை.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம், அசுத்த வுதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம், வாய்வுகளைக் கண்டிக்கும் தீபனமுண்டாகும் ஈரல் நுரையீரல் இரப்பை யிவைகளிலுள்ள சிக்கலையறுத்து வலிமை கொடுக்கும். இதில் கருஞ்சீரகம் மாமஞ்சள் சமனாகச் சேர்த்து சூரணஞ்செய்து அதற்குச் சரிபாகம் புட்டிவெல்லஞ் சேர்த்தரைத்து கொட்டைப்பாக்குப்பிரமாணம் இரண்டுவேளையுஞ் சாப்பிட்டு, அதற்கு மேல் சோம்பு கியாழங் குடித்துவர உதிரச்சிக்கலை யறுத்துக் கருப்பந் தரிக்கச்செய்யும் யிதை குழந்தைகளுக்குக் காணுகிற வயிற்றுவலிக்கு

உபயோகப்படுத்துகிறார்கள் ஏ கிறைன்முதல் கதிராமவரையில் பெரிய வர்களுக்குக் கொடுக்கலாம் வி-தி சூட்டுடம்பிற்கு வாந்தி ஒக்காளம் தலைச்சுற்றலுண்டாகும் ப-ம் எலுமிச்சம்பழ ஷர்பத்து அல்லது புளி மாதுளம்பழம், ப-ம் சோம்பு.

## சந்தனம்.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம் சௌ-ம், இருதய கமலத்துக் கும் இரப்பைக்கும் வலிமைகொடுக்கும் சந்தோஷமுண்டாக்கும் சூட் டைப்பற்றிய சகல ரோகங்களையும் கண்டிக்கும். பித்தத்திறைலுண்டா கும் அனலைத்தணிக்கும், சூட்டைப்பற்றிய தலைவலி தீக்கொப்பளம் தினவு இவைகள் மாறும் வி-தி தாது நஷ்டமுண்டாகும் குரல்கம்மும் ப-ம் தேன் கற்கண்டு ப-ம், கர்ப்பூரம் கொட்டைப்பாக்கு.

## சரக்கொன்றைப் புளி.

சு-ம். சூடுங் குளிர்ச்சியும் பி-ம், அசுத்தவுதிரமும் அசுத்த உணவு மாம் சௌ-ம் பேதியாகும் வாய்வுகளைக் கண்டிக்கும். நாலுவித சத்து களின் மாசுகளையுஞ் சுத்தப்படுத்தும் கருப்பப் பெண்டுகளுக்கு அதிக உபயோகப்படும் தேகத்திலுள்ள உள்ளுருப்புப் புறவுறுப்புகளிலுண் டாகும். ரணங்களையாற்றும், புளியோடு கலந்து சாப்பிடப் பித்தநீரை வெளிப்படுத்தும், சூரத்து சிவதைவேரோடு சேர்த்துச் சாப்பிட வாதத் தைக்கண்டிக்கும்? சல்லாதிலைச்சாறு பிரப்பமிலைச்சாறு, மலை வேப்பிலைச் சாறு இவைகளிற் சேர்த்துச் சாப்பிட வண்டலைப்பற்றிய ரோகங்களைக் கண்டிக்கும். காமாலை பித்தசுரங்கள் ஈரலைப்பற்றிய வலிஇவைகளுக்கும் உபயோகப்படும். கட்டுகளை யுடைக்கும் கொத்துமல்லி இலைச்சாற்றில் கியாழஞ்செய்து, வாய் கொப்பளித்துவரத் தொண்டையைப்பற்றிய சகல வீக்கங்களும் சொஸ்தமாகும். சலத்திலரைத்து கொதிக்கவைத்து பூச, கீல்வாத முதலிய சகல பிடிப்புகளுந் தீரும். இதன் காயின் மேலோட்டை பொடிசெய்து அதனோடு குங்குமப்பூவும் சருக்கரை யுஞ் சேர்த்துப் பனிநீர்விட்டு உண்டைசெய்து பிள்ளை பிறக்காமல் உபத்திரவப்படும்போதும் அல்லது பிள்ளை வயற்றில் மரித்துப்போய் ஆபத்துள்ளபோதும் கொடுக்க உடனே வெளிப்படும், சரக்கொன்றைப் புளியைமாத்திரங் கொடுத்தால் அதிக வயிற்றுக்கடுப்பு குமட்டல் இவைகளை யுண்டாக்கும். ஆகையால் பேதி உப்புடன் கலந்து கொடுக்க வேண்டியது இதின் விரைக்கும் இலைக்கும் மலத்தையுதைக்கிற குண முண்டு ஷெ புளிப்புடன் முளகாய் உப்பு புளி சருக்கரை இஞ்சி

முதலியவைகளைச் சேர்த்து துவையல்செய்து இராஜபோஜனத்துடன் கொட்டைப்பாக்கு பரிமாணம் சாப்பிட்டுக்கொண்டு வந்தால், காலையில் மலம் தாராளமாயிறங்கும். இந்தப்புளியை மிளகுரோகச் செய்தும் சாப்பிடலாம். இதின் பூவை வெந்நீர் கஷாயஞ்செய்து கொடுப்பது முண்டு. சரக்கொன்றை கொழுந்தை வதக்கி மேற்சொன்னபடி துவை யல்செய்து சாப்பிட்டுக்கொண்டுவந்தால், மலபந்தத்தைப் போக்கும். கொழுந்தை கீரையில் கடைந்துஞ் சாப்பிடலாம், இதின் வேருக்கு சுரத்தைக்கண்டிக்கிற குணம் உண்டு வி-தி, வயிறு பிடுங்கும் ஓக்காள முண்டாகும் ப-ம் வாதுமைநெய் ப-ம் அதற்கு மூன்றுபங்கு விரை யில்லாத திராட்சிப்பழம் அரைப்பங்கு துருஞ்சபின்.

## சவுக்காரம்.

சு-ம் சூடும் வறட்சியுமாகும் சௌ-ம் மருதோன்றி யிலையோ டரைத்துப்பூசக் கால்நோய் நரம்பிழுப்பு கருந்தேமல்படை இவைகள் போகும் ரோஜாப்பூ எண்ணெயி லுரைத்துப்பூச பிள்ளைகள் தலையி லுண்டாகுஞ் சிறு சிரங்குகளாறும் புருவினெச்சத்தி லரைத்துப் பூசக் கட்டிகளுடையும்; இதைத் திரித்து ஆசனவாயில் வைக்கக் குன்ம ரோகம்போம். பெண்குறியில் வைக்கப் பிண்டம் வெளிப்படும்; உதிரச் சிக்கவறும் தலையிற் றேய்த்து முழுக எண்ணெய்ச்சிக்கு முதலிய அழுக்குபோம் பேன் ஈர்கள் சாகும், இஸ்போஹோல் விரையின் கொழுமிற் சேர்த்துபூசச் சொறி சிரங்குபோம் வி-தி இதிலிரண்டு கழஞ்சு அல்லது நாலுவிராகனெடை யுட்கொள்ளக் கொல்லும் ப-ம், வாதுமைநெய் அல்லது மாமிசத்தில் சாறுகுடித்து வாந்திசெய்ய வேண்டும் ப-ம் இல்லை.

## சவ்வரிசி.

சு-ம். சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம், சுத்தவுதிரமும் அதிகவுணவு மாம் சௌ-ம் தேகம் பருக்கும், புஷ்டியுண்டாம் அழகு கொடுக்கும் பாலில்லாக்குழந்தைகளுக்குப் பாலிற் காய்ச்சிக்கொடுக்க ஆதாரமாகும் வி-தி மந்திக்கும் வயிற்றிற் கட்டுண்டாம் ப-ம் பால் சருக்கரை நெய் ப-ம், கோதுமைப்பால்-அல்லது-நிஷாஸ்த்தா.

## சவ்வாது.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம், சுத்தவுதிரமும் குறைந்தவுணவு மாம் சௌ-ம் அதிக வாசனையுண்டாகும் சந்தோஷத்தை யுண்டாக்கும்

இருதயத்துக்கும் புலன்களுக்கும் அதிக சக்தியை யுண்டாக்கும் இதிலரைவராகனெடையைக் கால்வராகனெடை குங்குமப்பூவோ டரைத்துச் சேவலிறைச்சியின் ரசத்திற் கொடுக்கப் பிள்ளை பிறக்காம லுபத்திரவப்படுபவர்க்கு உடனே பிள்ளைபிறக்கும், பயித்தியம் மூர்ச்சை குலைநோய் ஆசனக்கடுப்பு இவைகளுக் கதிக உபயோகப்படும் வி-தி சூட்டைப்பற்றிய தேகமுடையவருக் குதவாது, மூச்சடைப்புண்டாம் ப-ம் சந்தனம் கர்ப்பூரம் ப-ம் காலியா இது ஒரு வாசனைக்கூட்டு.

## சன்னலவங்கப்பட்டை.

சு-ம். சூடும் வறட்சியுமாம் ட்ரீ-ம் சுத்தவுதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் தலைமூளை இருதய முதலிய இராஜ வுறுப்புகளுக்கும் புலன்களுக்கும் அதிக வலிமை கொடுக்கும்; சத்துகளினாலுண்டாகுஞ் சகல மாசுகளையும் வாய்வுகளையும் கண்டிக்கும். சன்னி சைத்திய முதலிய குளிர்ச்சியைப்பற்றிய ரோகங்களைப் போக்கும், உதிரச்சிக்கலை யறுக்கும்; வாய் நாற்றத்தை மாற்றும், றாமிமஸ்தகியோடு கியாழஞ் செய்து சாப்பிட விக்கலையகற்றும்; முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிட் ஒளி யதிகரிக்கும்; நடுக்கலை நீக்கும்; கண் துடிப்பதை மாற்றும் கருவாப் பட்டைக்கு வயிற்றிலிருக்கிற வாயுவை ஹரித்து மலத்தைக் கட்டுகிற குண மிருப்பதால் குழந்தை பேதிச் சிகிச்சையில் இது மெத்த உபயோகப்படுகின்றது பலவீனத்தால் காணுகிற அக்கினி மந்தரோகம், வயிறு உப்புசம் அதிசாரம் வாந்தி இவைகளுக்குக் கொடுக்கலாம். இதைத் தனியாய் கொடுக்கிற வழக்கமில்லை. கசப்பு மருந்துகளோடும் பேதி மருந்துகளோடும் துவர்ப்பு மருந்துகளோடும் சேர்த்து உபயோகப்படுத்தப்படும் கறிமசாலை செயற்கையால் இது முக்கியமானது: சூரணத்தில் ரு-முதல் உ௰-கிறைன் கொடுக்கலாம் வி-தி தலையுண்டாகும் நீர்த்தாரைக்குதவாது ப-ம், கத்தீரா அசாறான் ப-ம், வால் மிளகு பெரிய லவங்கப்பட்டை.

## ஜாதிக்காய்.

சு-ம், சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் சௌ-ம், ஆற்றும் அனலைக்காக்கும் இரைப்பைக்கும் ஈரலுக்கும் வலிமைதரும் சலதோஷமுண்டாம் வாய்வுகளைக் கண்டிக்கும் வாய் வைப்பற்றிய பேதிகளைக்கட்டும் வாந்தி ஓக்காளத்தைமாற்றும் நடுக்கப் பக்கவாத முதலிய வாதரோகங்களைக் கண்டிக்கும் காதுவலி கண் புகைச்சல், வாய்நாற்றம், வீக்கம் இவைகளுக்கு அதிக வுபயோகப்படும்

இதைத் துளைத்துப் பணவிடை அபினியை அதற்குள் வைத்துப் பேரிச்சங்காயை விரைபோக்கிக் கவசமிட்டு உளுந்துமாவரைத்து மேற் கவசமிட்டு, இரண்டெருவில் மேற்கவசம் வேக புடமிட்டு மேற்கவசத்தைப் போக்கி, மற்றதைத் தேன்விட்டரைத்துக் கடலைப் பிரமாணம் உண்டைசெய்து ஒருவுண்டை சாப்பிட்டு அதற்குமேல் ஆழாக்குப் பசுவின்பாலிற் சருக்கரை சேர்பத்துக்காய்ச்சி சாயுங்காலமும் சாப்பிட்டு வர தாதுவிருத்தி யதிகரிக்கும், இரத்த சீதபேதி தீரும் வி-தி இதை யதிகரிததுச் சாப்பிடுவதால் தொண்டைக்கு மீறலுக்கு முதவாது ப-ம் க்ஷர்பததே பனப்ஷா ப-ம் ஜாதிபத்திரி.

## ஜாதிபத்திரி.

சு-ம் சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தவுதிரமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் காற்றைக் கண்டிக்கும் ஈரத்தை வறட்டும் சந்தோஷமுண்டாகும் இரைப்பைக்கு வலிமைகொடுக்கும், தீபன முண்டாகும் வாய்நாற்றத்தை மாற்றும் தாது விருத்தியுண்டாகும் பழமையான பேதிகளைக்கட்டும் கருப்பத்துக்கு வலிமையைக்கொடுத்து அதநீரத்தை மாற்றும், அதை நசியமிட தலைவலி காக்காய்வலி தீரும், தேன்விட்டரைத்துப்பூச, இடுப்புவலிமாறும் ஜாதிக்காயின்மேல் மூடிக்கொண்டிருக்கிற பதார்த்தத்துக்கு ஜாதிப்பத்திரியென்று பெயர், சாதிக்காய்க்குள்ள குணங்களே இதற்கும் உண்டு; ஆனால் கொஞ்சம் வெகுட்டலாயிருக்கும். இதை ஔஷதங்களோடு கூட்டுவதில்லை வி-தி, தலைவலிக்கும் நாலுக்குமுதவாது ப-ம் விளாம்பிசின் ப-ம் சாதிக்காய்.

## சாதிலிங்கம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்தஉதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் கட்டிகளைப் பழுக்கவைக்கும் உதிரப்பெருக்கை மாற்றும் குழிவிழுந்த ரணங்களின் மாமிசத்தை வளரப்பண்ணும் அதன் நாற்றத்தை மாற்றும் சூட்டினாலுண்டாகும் கொப்புளம் சொறி சிரங்கு தினவு இவைகளைச் சொஸ்தப்படுத்தும் இதை மெழுகோடு சேர்த்தரைத்துப் பூசவேண்டியது சாதிலிங்கமானது பிறவிச் சரக்கு வைப்பு வைத்துச் செய்வதுண்டு. வைப்புச் சரக்கானது சிவந்து வளுவாய்

ஊசிக்கம்பிகளைப்போல் இருக்கும் ருசியும் வாசனையுமிராது ஜலத்தில் கரையாது. இதைத் தான்செய்தால் அதிக சிவந்தநிறமா யிருக்கும் லிங்கம் நீலவர்னச்சுடராய் எரியும், இதை உள்ளுக்குக் கொடுப்பதிலது; ஆனால் தமிழ் வைத்தியர்கள் இதை சுரம் முதலிய ரோகங்களுக்கு தேனிலிழைத்துக் கொடுப்பது வழக்கம். தமிழ வைத்தியர் உபயோகிக்கிற மருந்துகளில் இது பிரதானமானது; இதனுடைய செய்கையை நன்றாய் தெரிந்து கொள்ளாததினால் இதில் அவர்கள் மெத்த நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். இது அப் பிரயோசனமான மருந்து ௰-முதல் ௬௰-கிறைன் அளவுக்குக் கொடுக்கலாம்; நாட்டு வைத்தியர் இழைப்புக் கணக்காய் கொடுக்கிறார்கள். இதை முக்கியமாய் புகை போட உபயோகமாகின்றது; ஒரு வேளைக்கு அரைதிறும் வீதம் புகை போட உபயோகிக்கலாம்; கந்தகப் புகையால் இருமல் உண்டாகும் வி-தி தொண்டைவேகும், கடுப்புக்காணும், நஞ்சமாம் ப-ம் மூலைப்பால் பசுவின்பால் ப-ம் மிருதாரசிங்கு நபவெள்ளை.

## ஜாவுஷீர்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம், அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் வாய்வுகளைக் கண்டிக்கும் நரம்புகளுக்கு வலிமை தரும் உதிரச்சிக்கலைமாற்றும் காக்காய்வலி பக்கவாதம் நீருகல் வீக்கம் இவைகளுக்கு உபயோகப்படும் எலும்பு முறிவு ஆதரணங்கள் இவைகளின்மேல் உரைத்துப்போட விரைவிற் சொஸ்தமாகும் பல்நோய் நீங்கும் வி-தி பீசங்களுக்குதவாது ப-ம் வாலேந்திர போளம் ப-ம் அஷ்ஃ.

## ஷாத்துரா.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம், அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் பேதியாகும் உதிரத்தைச் சுத்தப்படுத்தும் வாத பித்த சிலேத்தும முதலிய நால்வகைச் சத்துக்களின் மாசுகளை யறுக்கும் அசாத்திய சுரங்களைப் போக்கும் காடியி லூறவைத்துச் சாப்பிட வாந்தி ஒக்காளத்தைமாற்றும் அதனிலைச்சாற்றில் புளியைக் கரைத்துக் குடிக்க, வயிற்றிலுங் குடலிலுமுள்ள கட்டுகளை யுடைக்கும் மரு தோன்றி யிலையோடரைத்துத் தேகத்திற்பூசி ஸ்நானஞ்செய்ய, சொறி சிரங்கு, தினவுகள் நீங்கும் வி-தி துரையீரலுக்குதவாது ப-ம் சல்லாது விரை ப-ம் சூரத்து நிலாவாரை மஞ்சட்கடுக்காய்.

## ஷாஸ்பரம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் தேகத்திலுண்டாகும் சகல கட்டி கொப்புளம் சிரங்கு இவைகளை ஆற்றும், நித்திரையுண்டாகும் அதை மோருத லினல் காற்றினலுண்டாகும் வொல்லாப்பை மாற்றும், சூட்டைப் பற்றிய தலைநோயைப் போக்கும் இதின் சாற்றில் சருக்கரைசேர்த் துட்கொள்ள மார்புநோய் இருமல் சுவாசம் தீரும், இதின் விரையை வறுத்துச் சுத்தசலத்தி றாறவைத்துச் சாப்பிடக் கட்டுப்படாத பேதி கள்கட்டும் வி-தி தலைமூளைக்குதவாது ப-ம், தாமரைப்பூ ப-ம் பாது ரஞ்சுபோயா.

## சூரத்து நிலாவாரை.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் நன்ருய்ப் பேதியாகும். வாதபித்த சிலேத்து மத்தினலுண்டாகு மாசுகளை நன்ருய்க் கண்டிக்கும், இதின் கியாழ மொருபங்கில் நாலுபங்கு ஜெயித்தூன் எண்ணை சேர்த்துச் சாப்பிட, இடுப்புவலி மூலவலி முதலிய வலிகளைக் கண்டிக்கும், இதின் கியா ழத்தில் காடிசேர்த் துடலிற்பூசிவரத் தேகத்திலுள்ள சொறி சிரங்கு முதலிய படைகளையும் தேமல்களையும் போக்கும். ஆறாத புண்களும் ஆறிப்போம், மயிருதிர்வது நிற்கும்; மருதோன்றியிலையோ டரைத்துப் பூச மயிர் கறுக்கும். இதின் கியாழத்தில் தேன் சேர்த்து ஏழுநாள் சாப்பிடக் கால்பிடிப்பு கீல்வாதம் இவைகள் தீரும். பேதி மருந்துக ளுக்குள் நில ஆவாரையை அடிக்கடி உபயோகப்படுத்தப்படும் மலச் சிக்கல் நீரேற்றம் கூவைகளுக்கு உபயோகிக்கலாம் இது கொஞ்சம் உஷ்ணஞ்செய்து, வயிற்றுக் கடுப்பையும் வாய்க்குமட்டலையும் உண் டாக்கும் ஆனல் ஆரோக்கியமாய்ப் பேதியாகும் நில ஆவாரையை வெந்நீர் கஷாயத்துடன் பேதி உப்புகளைச் சேர்த்துகொடுப்பது வழக் கம் சீமை இந்துவுப்பு சுக்கு இவைகளில் எதையாவது சேர்த்துக் கொடுத்தால் வயிற்றுக்கடுப்பை உண்டாக்கிற குணத்தைச் சமனப் படுத்தும் சுரச்சிகிச்சையில் இந்த பேதிமருந்தை வழக்கமாய் கொடுக் கப்படுகின்றது வயிறு புண்ணுயிருக்கிறபோது இதைக் கொடுக்க லாகாது. நில ஆவாரை முக்கியமாய் சிறுகுடலில் வியாபித்து பேதியை உண்டாக்கும். குழந்தைகளுக்குப் பாலூட்டு மாதர்கள் இதைச் சாப் பிட்டால் இதன் குணம் முலைப்பாலில் இறக்கி குழந்தைக்கும் பேதி

யாகும். இதை கருப்பிணிகளுக்கும் மூலரோகிகளுக்கும் கொடுப்பது வழக்கமில்லை, நில ஆவாரைக்கஷாயமும் உப்பும் சேர்த்துக் கொடுக்கிற பேதிக்கு பிளக் டிராப்ட் என்று பேர் இது சாதாரணமாய் ச-மணி நேரத்துக்கு பேதியை உண்டுபண்ணும்; மெத்த ஜலம் சாப்பிட்டால் அதிகமாய் பேதியாகும் கர்ப்பூரம் இந்துப்பு முதலிய உப்புகள் பேதியை அதிகப்படுத்தும் நில ஆவாரையை அடுப்பில் வைத்துக் காய்ச்சுவதிலும் நாள்பட வைத்திருப்பதிலும், ரேவேல் சின்னியென்கிற மருந்தைச் சேர்ப்பதிலும், அதன் குணம் குறையும் அல்லது கெட்டுப்போகும்; காப்பி பாலும் சருக்கரையும் சேர்த்தால் வெகுட்டலை நீக்கி, அல்லது இனிப்புண்டாகும் அப்போது தேயிலைத் தண்ணீரைப்போலிருக்கும் இதை வழக்கமாய் நாள்தோறும் எடுத்துக் கொள்ளும்போது சிற்றாமணக் கெண்ணெயைப்போல் அளவைக் குறைத்து எடுத்துக்கொள்ள வேண்டியது, இந்த இலையை வயிற்றுக்கு ஒற்றிடம் கொடுத்தால் பேதியாகுமென்று கண்டிக்கின்றது. நில ஆவாரைச் சூரணத்தில் $\frac{1}{2}$-முதல் உ-கிராம் அளவுக்குக் கொடுக்கலாம். இதை திராக்ஷை உப்போடு சேர்த்தரைத்து, பேதியாகும். சருக்கரையோடும் அனுமானிக்கலாம் ஆனால் கஷாயமே தகுதியானது நில ஆவாரையானது அனேக தேசங்களில் விளைந்து வருகின்றது. அவைகள் ரூபத்தில் வித்தியாசப்படும் திருநெல்வேலியில் விளைந்து வருகிற சரக்கு சிரேஷ்டமானது நில ஆவாரை கசப்பும் வெகுட்டலுமுள்ளதாயிருக்கும் வி-தி வயிறு பிடுங்கும் ஒக்காளமுண்டாகும் ப-ம் காம்புகளில்லாமற் பொருக்கி வாதுமைநெய், மஞ்சட்கடுக்காய் குலேபன்புஷா சேர்த்துக்கொள்ளவும் ப-ம் சூரத்து சிவதைவேர் அல்லது அரைப் பங்கு மஞ்சட்கடுக்காய் காற்பங்கு குலேபன்புஷா.

## சீந்திற்கொடி.

சு-ம். சூடும் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் செள-ம் இருமல் காமாலை மூர்ச்சை வாந்தி இவைகளுக் குபயோகப்படும். கபத்தை யறுக்கும் பித்தவாத சுரங்களை நீக்கும். தீபனமுண்டாகும் தாது விர்த்தியாம் சீந்திற் சற்கரையோடு நெய்யுஞ் சருக்கரையுங் கலந்து சாப்பிட விந்து வளரும் வண்டலைப்பற்றிய ரோகங்களைக் கண்டிக்கும். பித்தத்தைத்தணிக்கும் இதனோடு மூங்கி லுப்பு ஏலக்காய் கற்கண்டு சேர்த்துச் சாப்பிட, அது மேகத்தைக்

கண்டிக்கும் வி-தி மந்திக்கும் வயிற்றிற் கட்டுறப்பிக்கும் ப-ம் பசுவின் பால் நெய் கற்கண்டு ட-ம் அத்திப்பால் அல்லது அத்திக்கள்,

## ஷீர்கிஷ்த் இதுவேமேனு

சு-ம். சூடுங் கொழுமையுமாம் பி-ம் அசத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் செள-ம் ம்பதியாகும் பித்தத்தைக் கண்டிக்கும் இரப்பைக் கும் ஈரலுக்கும் வலிவை கொடுக்கும். இருமல் மார்வறட்சி தொண்டை வறட்சி தொந்தச்சுரங்கள் இவைகளுக் குபயோகப்படும். இதைக் கோது மைப்பாலோடு சேர்த்துக்காய்ச்சிய கஞ்சி சுரரோகமுடையவர்களுக்கு தகுந்த ஔஷதமாயும், ஆகாரமாயுமிருக்கும். இது குழந்தைகளுக்கும் நாசுக்குடைய பெண்களுக்குமே கொடுக்கப்படும், தனியாய்க்கொடுப்பது அரிது; பேதி மருந்துகளோடு தித்திப்புக்காகச் சேர்க்கப்படும். மெத்தக் கொடுக்கலாகாது வாய்வுசெய்யும் மருந்துகளை மெழுகு பதமாகக்கூட சேர்க்கப்படும் குழந்தைகளுக்கு க-முதல் உ-திராம் இடைக்கும், பெரிய வர்களுக்கு க-முதல் உ-அவுன்ஸ் இடைக்கும், கொடுக்கலாம் வி-தி காற்றை யுண்டாக்கும், வயிரிரைையும் குன்மரோக முடையவர்களுக்கு உதவாது ப-ம் வாதுமை நெய் ப-ம் துருஞ்சபீன்.

## சீரகம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமும் குறைந்த உணவு மாம் செள-ம் வாய்வுகளைக் கண்டிக்கும் உதிரச்சிக்கலையறுக்கும் முலைப் பாலையும்நீரையும் பெருகச்செய்யும், தீபனமுண்டாகும், வயிறுப்பல் நீக்கும். அசீரணத்தை மாற்றும்; யிதை எலுமிச்சம்பழச்சாற்றி லூற வைத்து நெய் சருக்கரை சேர்த்து லேகியங்கிண்டிச் சாப்பிட பித்த வாய்வினலுண்டாகுஞ் சகல ரோகங்களையுங் கண்டிக்கும். தீபன மதிக ரிக்கும்; சீரகம் நல்ல வாசனையாய்க் காரமாயிருக்கும். உள்ளே தயில முண்டு இதை இங்கிலீஷ் வைத்தியாள் மெத்த உபயோகப்படுத்துகிற தில்லை. சீரகத்தைக் கெட்டிக் களிப்பாகச்செய்து, வாயுவினல் உபத்தி ரவப்படுத்துகிறபோது வயிற்றுக்குப் போடுவதுண்டு, இதை நமது தேசத்தில் சாதாரணமாய் கஷாயங்களோடும், லேகியங்களோடும் சூர ணங்களோடும், சேர்ப்பதுண்டு; சீரகவடை செய்துகொடுப்பது ஒரு முறை விறையை ௰-முதல் ௬௰-கிறைன் அளவுக்குக் கொடுக்கலாம வி-தி இதை யதிகமாகச சாப்பிடுவதால் முகங்கறுக்கும் தேகமிளைக்கும் நுரையீரலுக்குதவாது ப-ம் சுத்தீரா ப-ம் கருஞ்சீரகம்.

சீனக்காரம் இதுவே படிக்காரம்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்தம் உதிரமும் அசுத்த வுணவுமாம் (சௌ-ம்,) நீரை வறட்டும் உதிரப்பெருக்கை நிறுத்தும் ரணங்களின் துர்மாமிசத்தை யறுக்கும், வாந்தி ஒக்காளத்தை அகற்றும்; இதைப் பொடிசெய்து மூக்கிலூதப் பீநசமாற்றும், பெண்குறியில் வைக்கப் பெருப்பாண்டுதிரத்தை நிறுத்தும்; சலத்தில் கரைத்து தலையிற்தேய்க்கப் பேன் ஈர் சாகும். இத்துடன் முத்து முத்துக்கண்ணம் சருக்கரை கழுதைலத்தி இவைகளைச் சமனுகச் சேர்த்து அரைத்துக் கண்ணிலிடக் கண்ணிலுள்ள மாசுகளறும். இதைக் கொட்டைப்பாக்கோடு பொடிசெய்து பற்களிற் றேய்க்கப் பல்நோய் நீங்கும். இதைப் பொடிசெய்து பாம்பின்வாயி லூதப் பாம்பு சாகும் சலத்திற் கரைத்து காதிற்குத்தச் செவிடுமாறும்; வாய்கொப்பளிக்கப் பாதரச முதலியதுகளாலுண்டாகும் வேக்காட்டை யகற்றும், பல்லிறுகும், ஈறு பலக்கும் இதைத் தலையின்கீழ்வைத்து நித்திரைசெய்யக் கனவுகாணுது, இதைப் பொரித்து அதற்குச் சரியிடை கற்கண்டு உலர்ந்த நெல்லிக்காயின் மேற்றோலுஞ்சேர்த்துப் பொடிசெய்து, வேளை வேளைக்கொரு வராகனெடை பசுவின் மோரிற் கரைத்து நாளொன்றுக்கு மூன்று தடவையாக ஏழுநாள் சாப்பிட, தீராதவெள்ளை நீர்கடுப்பு சொஸ்தமாகும் இன்னம் ரத்த பித்த ரோகங்களுக்கும நாள்பட்ட அதிசார பேதிக்கும் சீதபேதிக்கும் கக்குவாய் இருமலுக்கும் வயிற்றுவலிக்கும் படிகாரத்தைக் கொடுக்கலாம் படிகாரத்தில் கொஞ்சமாக ஜலம்விட்டு கரைத்து மேலுக்குப்போட்டால் ரத்தம் நிற்கும் அதிகமாய் ஜலம்விட்டுக் கரைத்து ரணங்களுக்குப் போடலாம் வாய்ரணம் அதிக உமிழ்நீர்வடிதல் இவைகளுக்கு வாயைக் கொப்பளிக்கலாம் நாள்பட்ட நேத்திர ரோகத்துக்கு கண்மேல் கிலேதமாக செய்துப்போடலாம், தந்தி மேகத்துக்கு பீச்சாங்குழலால் நீர்த்தாரையில் அடிக்கலாம் பொடித்த படிகாரத்தை துரமாமிசத்தைப்போக்க காரமாய் உபயோகப்படுத்தப்படும் இதற்கு நீரை வரட்டுகிற குண மிருப்பதால் வாயு நெஞ்சம் உலர்ந்து கொஞ்ச தாகமெடுக்கும் மலத்தை யிறுக்கிப்போடும் மிதத்துக் கதிமாய் சாப்பிட்டால் குமட்டல் வாந்தி வயிறு கடுப்பு பேதி இந்த துற்குணங்கள் சம்பவித்து வயிறு புண்ணாக்கிவிடும் 10-முதல் 20-கிறேன் அளவுக்கு

பெரியவர்களுக்கு கொடுக்கலாம் குழந்தைகளுக்கு 1-முதல் 5-கிறேன் கொடுக்கலாம் குறுமாந்த ரோகத்துக்கு சில வயித்தியர்கள் தேயிலைக் கரண்டி அளவுக்கு 2-வயதுக் குழந்தைகளுக்கு வாந்திக்குக் கொடுக்கிறார்கள். (வி-தி) இருமலதிகரிக்கும் (ப-ம்) பசுவின்பாலை கறந்தவுடனே சாப்பிடவேண்டியது. (ப-ல்) நவாச்சாரம்.

## சுக்கு பீஞ்சு.

(சு-ம்) சூடும், வறட்சியுமாய் (பி-ம்) சுத்தவுதிரமும்குறைந்த உணவுமாம் (சௌ-ம்) பேதியாகும் வாய்வுகளைக் கண்டிக்கும் உடையாத கட்டிகளை யுடைக்கும் உதிரச்சிக்கலை யறுக்கும் வாதமாசுகளைப் போக்கும், வயிற்றிலுள்ள பற்பல கிருமிகளைக் கொல்லும் இருமல் சுவாசம் மார்வலி வீக்கம் வாதசுரங்கள் காக்காய்வலி இவைகளுக் குபயோகப்படும் (வி-தி) சூட்டுடம்பினர்க் குதவாது (ப-ம்) கத்தீரா (ப-ல்) ருத்தியானஜ்.

## ஜுஊன்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்தஉதிரமுங்குறைந்த உணவுமாம் (சௌ-ம்) சன்னி சயித்தியங்களுக்கும் வாய்வைப்பற்றிய ரோகங்களுக்கும் உதிரச் சிக்கலை யறுப்பதற்கும் வயிற்றில் மரித்துப்போன பிண்டங்களை வெளிப்படுத்துவதற்கும் இதற்கு மிஞ்சின மருந்தொன்றுமில்லை பயித்தியங்கள் குன்மங்கள் பாரிசவாதம் பக்கசூலை முதலியவற்றையும் சீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும், காதுநோய் கண்ணோய்க்கு முபயோகமாம், இத்துடன் பெருங்காயமோரிடை மிளகு மூன்றெடை சேர்த்தரைத்து, மிளகுப்பிரமாணம் குளிகை செய்து வைத்துக் கொண்டு, சன்னி இசிவு முதலிய குளிர்ச்சியைப்பற்றிய சகல ரோகங்களுக்கும் ஒரு குளிகைமுதல் மூன்று குளிகைவரையிற் கொடுக்க விரைவிற் சொஸ்தமாகும். (வி-தி) சூட்டுடம்புகளிற் குதவாது (ப-ம்) ஷர்பத் தேனப்ஷா (ப-ல்) கஸ்தூரி.

## ஸூரிஜமக்கி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்த உதிரம் அசுத்த உணவுமாம் (சௌ-ம்) வாய்வுகளைக் கண்டிக்கும் தேகத்தைச் சுத்தப்படுத்தும், உதிரச்சிக்கல் கல்லடைப்பு வீக்கம் காமாலை குன்மம் இளம்பிள்

ளை வாய்வு விஷப்பூச்சிக்கடி இவைகளுக்குபயோகப்படும், இதனிலைச் சாறு வராகனெடை 4-ல் வெந்நீர் சேர்த்துச் சாப்பிட வாந்தியாகும், இதனிலையை அரைத்தவிழுது இரண்டு வராகனெடை சாப்பிட உதிரச் சிக்கலறும் கர்ப்பம் வெளிப்படும். இதனிலையை யரைத்துப்பூச கீல் வாதம் நரம்பெழுப்பு நீங்கும், இதன் வேரை இடுப்பிற் கட்டிப் புணர்ச்சி செய்ய விந்து வெளிப்படுவதரிது, இதன் வேரை அக்கரகாரத்தோடு சேர்த்தரைத்துப் பூசப் பல்வலி நீங்கும் இதன் பூவில் ஈக்கள்மொய்க்காது இதன் புகையிட எலிகள் ஓடிப்போகும், கருப்பஸ்திரீகள் இதனிலைகளை இடதுகையாற் பிடித்துக்கொண்டு வலதுகையினால் ஷை செடியை பிடிக்க வயிற்றிற் சிசு துடிக்கும் இப்படியே நாலைந்துதரஞ் செய்யச் சிசு மரித்து விழுந்துபோகும் (வி-தி) நரையீரலுக்கும் மண்ணீரலுக்கு முதவாது (ப-ம்) சிக்கஞ்சுபீன் (ப-ல்) பெருலவங்கப்பட்டை அரைபங்கும், குங்குமப்பூ கால்பங்குஞ் சேர்ந்தது.

ஜெந்தியானு.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமும் குறைந்தஉணவுமாம் (சௌ-ம்) வெறி நாய்க்கடி முதலிய சகல வேஷங்களைப் போக்கும், நீரடைப்பு உதிரச்சிக்கல் மேகரிணங்கள் படை தேமல் இவைகளுக்கு பெரும்பாண்டுதிரத்தைக்கட்டும் ஒடிந்துபோன எலும்பின்மேரில் அரைத்துப்போடச் சொஸ்தமாகும், உதிர முறைந்துபோனதின் மேற் பூச இளகும் (வி-தி) மாருக்குதவாது (ப-ம்) இஸ்கூல்கந்தரியூன் (ப-ல்) அசாறான் இதுவே நிலக்கடம்பு.

சேங்கொட்டை,

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம) சுத்த உதிரமுங்குறைந்தஉணவுமாம் (சௌ-ம்) இதன் பாலெடுத்துப் பசுவின்நெய்யிற் கலந்து உபயோகிக்கவேண்டியது தலை மூக்கும் நரம்புகளுக்கும் வலிமையைக் கொடுக்கும், அவைகளிலுண்டாகும் நோய்களைக் கண்டிக்கும் படை தேமல் சொறி சிரங்கு ரிணம் முதலிய தோலைப்பற்றிய ரோகங்களைப்போக்கும், மேனியுண்டாகும், சன்னி சைத்தியம் நீரிழிவு பக்கவாதம் முதலிய வாதரோகங்களைக் கண்டிக்குப் (வி-தி) சூட்டுடம்பினர்க் குதவாது உதிரத்தைச் சுண்டச்செய்யும் வாவேகும் (ப-ம்) அக்குரோட் டெண்ணெய் அல்லது அதன்பருப்பு பசுவின்மோர் (ப-ல்) இதற்கு ஐந்தெடைபிதும்° பாருப்பு, (ப-ல்) கானெண்ணெய்.

### பெருஞ்சீரகம்—இதுவே சோம்பு,

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்தஉதிரமுங் குறைந்தஉண வுமாம் (சௌ-ம்) முலைப்பால் சுரக்கும், உதிரச்சிக்கலையும் நீரடைப்பை யும் போக்கும், ஈரல் மண்ணீரல் குண்டிக்காய் நீர்த்தாரை மார்பு இ வைகளிலுள்ள கட்டுகளையகற்றும் நேத்திரத்திற்கும் இரைப்பைக்கும் வலியைக் கொடுக்கும் காற்றைக் கண்டிக்கும் குலேகாவு ஜபாரனுடு சேர்த்துக் கியாழஞ்செய்து சாப்பிட மூர்ச்சை இருதய நடுக்கம், இவை கள் நீங்கும், இதை பாசியாவுஷான் சீமையத்திப்பழ மிதுகளோடு சேர் த்துச் சாப்பிட இருமல் சுவாசம், மூச்சடைப்பு, வாய்வு, பக்க சூலை, குன்மம் இவைகளுக்குபயோகப்படும் சிக்கஞ்சபீனோடு சேர்த்துக் கொ டுக்க நாட்பட்ட சுரங்களைத் தணிக்கும். இதன் ரசத்தில் கருடன் பிச் சை யுறைத்து ஒரு புட்டியிலடைத்து, இருபத்தொரு நாள் சூரியபுட மாகவைத்து கண்ணிச் குத்திவர கண்ணீரோட்டம் கண் புகைச்சல் இவை நீங்கும். இதை யிடித்துச் சூரணமாக்கி, அதற்கு சமன் சருக்க ரைச்சேர்த்து, நித்தியம் இரண்டு விராகனெடை சித்திரைமாதமுதல் ஆனிமாதம் வரையில் யிடைவிடாமல் சாப்பிட்டு வருவோருக்கு அந்த வருடகடைசிவரையில் ஒருவித ரோகமு முண்டாகாது. இதன் திராவ கத்துக்கு மிதுவே குணம். (வி-தி) சூட்டுடம்பினர்க் குதவாது (ப-ம்) சந்தனம் சிக்கஞ்சு பீன் (ப-ல்) கர்பீஸ்.

### தக்காளி மணத்தக்காளி.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமும் குறை ந்த உணவுமாம் (சௌ-ம்) தாகத்தை யடக்கும் அதனிலைச்சாற்றை முறித்து சருக்கரை சேர்த்துக் குடிக்க ஈரலைப்பற்றிய ரோகங்களையும் வீக்கத்தையும் மாற்றும், அதை யரைத்துப் பூச ஆசனத்திலுண்டாகுக் தினவு புண் முதலிய சகலமும் தீரும், அதைக் கியாழமிட்டுக்கொப்பளி க்க பல்நோய் உண்ணுக்குவளர்ச்சி, தொண்டை நோய், ஈறின் வீக்கம், யிவைகள்தீரும், அதனாற் காலம்பிவரப் பெண்களுக்கு வெள்ளைபடுதலை நிறுத்தும், இதன் காய்க்கு மிலைக்கு மொரேகுணமாம். (பி-தி) நீர்த்தா ரைக்குதவாது (ப-ம்) சருக்கரை கற்கண்டு (ப-ல்) காக்னஜ்.

### தாமரைப்பூ,

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த வுதிரமும் குறைந்த உ ணவுமாம் (சௌ-ம்) இருதயத்துக்கு வலிமை கொடுக்கும், சூட்டை

த்தணிக்கும் சூட்டினுலுண்டாகும் சுரங்களைப் போக்கும், தாகத்தை யடக்கும், நித்திரைபிடிக்கும், நித்திரையில் விந்து பொங்கி போவதை நிறுத்தும் தேகத்துக்குள்ளிலும் புறத்திலுமிருக்கும் புண்களையாற்றும். தலைவலி மார் வறட்சி இருமல் இவர்களுக்குபயோகப்படும். விதி, நீர்த் தாரைக்குதவாது தாது நஷ்டமுண்டாகும் (ப-ம் கற்கண்டு பனிநீா, (ப-ல்) சீமைத்துத்திவிரை-சூலேப்ன்புஷா.

## தாழம்பூ

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் (பி-ம்) சுத்தவுதிரமும் குறைந்த உண வுமாம் (சௌ) தலைமூளைக்கும் இருதயத்துக்கும் வலிமை கொடுக்கும் புலன்களின் சுபாவத்தை யதிகரிக்கச்செய்யும், சகல அவயவங்களுக்கும் பலங்கொடுக்கும் இதை வெள்ளெண்ணெயிலூறவைத்துத் தேகத்திற் பூசிவர பெருவியாதி மேகரணங்கள் சொறி சிரங்கு தினவுபடைகள் தீரும் தேகஞ் சுத்தியாம், தாழையின் வேரைக் கியாழமிட்டு அந்தக்கியாழத்தில் சருக்கரைசேர்த்து, ஷர்பத்தாய்க் காய்ச்சிச் சாப்பிடுவதினுலும்மேற் சொன்ன குணங்களையே கொடுக்கும் அன்றியு மிதை அம்மைகாணுத பிள்ளைகளுக்குக் கொடுத்து வருவதினல் ஒருவித இம்மையுங்காணுது, அல்லது கண்டாலும் காலந்து கொப்புளத்துக்கதிகமாய்காணமாட்டாது, தாழம்பூச்சுட்டசாப்பலை ரணங்களின்மேற்போடக் காய்ந்துபோகும் (ப-ல்) செம்மரக்கட்டை அல்லதுர்லத்தங்கிக்கொட்டை.

## தாளிசப்பத்திரி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்தவுதிரமும் அசுத்தஉண வுமாம் (சௌ-ம்) இதைச் சூரணஞ்செய்து தயிரிற்குழைத்துச்சாப்பிட சுவாச இருமல் பேதி இரத்தமூலம் சொஸ்தமாம் காடியிலுரைத்துப் பூசத் தலைவலி கண்டமாலை குணமாம் பொடிசெய்து பற்களிற் தேய்க்கப் பற்களின் வலிதீரும், ஈறுபலக்கும், இன்புகைவிடக்காத்தின் பொல்லாப்பு நீங்கும். (வி-தி) சூட்டுடம்பினற்குதவாது. (ப-ம்) கத்தீரா (ப-ல்) இல்லை.

## தான்றிக்காய்

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியும் (பி-ம்) சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) தீபனத்தை வளர்க்கும் இரப்பைக்கு வலிமை

கொடுக்கும், பேதியாகும், தலைவலி சுரம் மூலம் இவைகளுக்குபபோகப் படும், இதைச் சூரணஞ்செய்து சமனெடை சருக்கரை சேர்த்து நித்தியம் ஒருவராகனெடையை வெந்நீரில் சாப்பிட்டுவர வாய்நீரொழுக்கு கட்டுப்பட்டு, கண்களுக்கதிக தெளிவுண்டாகும், இதற்கு துவர்ப்பு குணம் உண்டு, மேகரணத்துக்கு இழைத்துப்போடலாம், அனேகடாப்பு முறைகளில் சேருகின்றது, (வி-தி) குடலில் களிம்புகட்டும், (ப ம்) தேன் சருக்கரை, (ப ல்) வறுத்த நெல்லிப்பருப்பு.

## திருபுத் இதுவே சிவதைவேர்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி ம்) அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் (சௌ-ம்) பேதியாகும், சுக்குச்சேர்த்துச் சாப்பிடத் தேகத்திலுள்ள பழமையான வாதநீர்களைப்போக்கும். கட்டுகளை யடைக்கும், உதிரச்சிக்கலையறுக்கும் இரைப்பையைச் சுத்தப்படுத்தும் கபாலத்திலுள்ள மாசுகளை யகற்றும், காபுலிக்கடுக்காயோடு சேர்த்து சாப்பிடப்பக்கவாதத்தைப்போக்கும், காக்காய்வலி நீங்கும், பயித்தியமிவைகளுக்கு பயோகப்படும் வாதுமைநெய், ஆளிவிரை, யிவற்றோடு சேர்த்து சாப்பிட மார்வலி இருமல் இவற்றைப் போக்கும், (வி-தி) குடலுக்குத்தவாது, வயிறு பிடுங்கும் மயக்கமுண்டாம். (ப-ம்) அதின் மேற்றோலைச்சீவி வாதுமைநெய் அல்லது பசுவின் நெய்யிற் புரட்டிக்கொள்ளவேண்டியது (ப-ல்) கம்பிளிப்பூச்சி யடிமரத்தின்பட்டை.

## யானைத்திப்பிலி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் (சௌ-ம்) ஜன்னி சைத்திய முதலியவையும் வாதபித்தசிலேத்துமங்களினு லுண்டாகும் சகல ரோகங்களையும் நன்றாக கண்டிக்கும் இதைத் தேனிலூறவைத்துச் சாப்பிட ஈளை இருமலைப்போக்கும் அசீரணங்களைமாற்றும் வயிறுப்பல் நீக்கும் (வி-தி) சூடதிகரிக்கும் (ப-ம்) எலுமிச்சம்பழச்சாறு சருக்கரை (ப-ல்) சுக்கு

## திருப்பிலிமூலப்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்த உதிரமும் அசுத்த உணவாம் (சௌ-ம்) சயித்தியங்களை யறுக்கும் சந்தோஷத்தை மாற்றும் நீரை வறட்டும், இதைப்பொடிசெய்து மூக்கிலூதக மாரடைப்பு மூர்

சை மயக்கம் இவைகளை நீக்கும், கபத்தையறுக்கும். வாய்வுகளைக் கண்டிக்கும் (வி-தி) சூட்டுடம்பிற்குதவாது (ப-ம்) நெய் பால் (ப-ல்) சுக்கு திப்பிலி.

## திப்பிலி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்த உதிரமும் அசுத்தவுணவாம் (சௌ-ம்) சயித்தியங்களை மாற்றும், ஈரலைப்பற்றியகட்டுகளையுடைக்கும், தீபனமதிக்கரிக்கும்,இரைப்பைக்குவலிமைகொடுக்கும். தாதுவிர்த்தியுண்டாகு. இவை ஆட்டீரலுக்குள் வைத்துக் கும்பி நெருப்பிற் சுட்டுக் கண்ணிற்பிழிய மாலைகண் குருட்டுக்கண் நீங்கும் கண்ணொளியதிகரிக்குங் மாசுகளையறுக்கும். இதைப்பொடிசெய்து பச்சைவெற்றிலைச்சாறும் தேனுங்கூட்டிக் குழந்தைகளுக்குக்கொடுக்க; சயித்தியம் கோழை சுரமுதலியவைகள் நீங்கும்; வயிற்றிலுள்ள புளிப்பை யகற்றும். திப்பியானது நீண்டுமேலே மெடுகளாயிருக்கும் இவைகளில் வித்துகள் இருக்கின்றன, இதற்குக் கடுங்காரமும் விருவிருப்பும் கொஞ்சம்வாசனையுமுண்டு, மிளகுக்கிருக்கிற குணங்களெல்லாம் இதற்கிருக்கின்றன, திப்பிலியை மிளகுக்குப்பதிலாய் உபயோகிக்கலாம், அது அநேகங் கூடுவர்க்க ஔஷதங்களோடு சேருகின்றது, இது தனியாய் உபயோகப்படுத்துகிறதில்லை, தமிழ்வயித்தியத்தில் திப்பிலி திப்பிலிக்கட்டை திப்பிலீமூலம் இவைகள் உபயோகப்படுகின்றன, திப்பிலியை இலேகியஞ்சேய்துகொடுக்கலாம் (வி-தி) கண்வலி யுண்டாகும் சூடதிகரிக்கும் (ப-ம்) சந்தனம் விளாம்பிசின் பனிநீர் (ப-ல்,வெள்ளை மிளகுசுக்குதிரு நீற்றுபச்சையிலை.

## திருநீற்றுப்பச்சை.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தஉதிரமுங் குறைந்தஉணவுமாம்(சௌ-ம்) சகலகட்டிகளையுங்கரைக்கும், நித்திரைபிடிக்கும்,மூளையிற்பற்றிய கட்டுகளையகற்றும், இதை மோருதலினால் சூட்டைப்பற்றிய தலைவலி காற்றினாலுண்டாகுங் கெடுதிகள், இருதயகமலத்தில்நடுக்கம் இவைகள்நீங்கும் இதன்சாற்றில் சருக்கரைசேர்த்துச்சாப்பிட மார்வலி சுவாசம் இருமல் நீங்கும், காற்றைகண்டிக்கும். குடலுக்குவலிவைகொடுக்கும், இதை மென்றுதின்னுவதினால்வாய்வேக்காடு நீங்கும், இதன் வித்தை யூறவைத்துச் சாப்பிடுவதினால் சகலவிஷங்களையும் போக்கு

ம் வறுத்து அல்லது பனிநீரில் கியாழமிறக்கிச்சாப்பிட வயிறு பிடுங்கல், உதிரபேதி இவற்றைப்போக்கும், இதைக் கண்களிற்பூசக் கண்ணோய் நீங்கும். திருநீற்றுப்பச்சைப்பத்ரி திருத்திரகடை. சமஜாசப்ஜா விரைக்குங் குழகுழப்புண்டு. இவை வெந்நீரில் போட்டு ஊறவைத்து, மேகம் அதிசாரம் இவைகளுக்குக் கொடுக்கலாம். ரசத்தை காதிலிடவலிகிற்கும், சீமையில் வாசனைக்காக போஜன பதார்த்தங்களோடு இதைச்சேர்ப்பதுண்டு (வி-தி) இதையதிகமாக ஆக்கிராணித்தால் மூளையில், வறட்சியுண்டாகும் (ப-ம்) தாதரைபூ (ப-ல்) பாதுரஜ்ஜபோயா.

## திராட்சிப்பழம்.

(சு-ம்) கூடுங் குளிர்ச்சியுமாம் (பி-ம்) சுத்தவுதிரமும் அதிகவுணவுமாம் (சௌ-ம்) மலமிளகும் இரப்பையும் குடலையுஞ் சுத்தப்படுத்தும், தாதுவிர்த்தியுண்டாம், துரையீரலிலும் நீர்த்தாவாரையிலுமுள்ள புண்ணையாற்றும் இதைகுலேகாவுஜபான் சேரீசங்கர் யிவைகளோடு சேர்த்துச்சாப்பிட இருதயநடுக்கத்தை நீக்கும், இதைக் காடியிற்சேர்த்துச் சாப்பிடக் காமாலையைப்போக்கும் இதற்குச்சமனமிளகு சேர்த்துசாப்பிடக் கல்லடைப்பு நீரொழுக்கு நீங்கும், இதை அனிசூணேவேகவைத்து அந்தக் கியாழத்தில் வாதுமைநெய் கலந்து சாப்பிட இருமலைப்போக்கும், இதை ஆட்டுக்கொழுப்பிற் சேர்த்தரைத்து பருக்கள்மீது பற்றுப்போட வுடைந்துபோகும், இதின் மொச்சைப்பருப்பின் மாவும் சீரகமும் சேர்த்தரைத்து பீஜத்திற்பூச பீஜவீக்கத்தை நீக்கும். இப்படியே சாராயத்திலரைத்துதடவ கட்டி கொப்பள முதலிவை நீக்கும். (வி-தி) சூட்டுடம்பிற் குதவாது. (ப-ம்) சிக்கஞ்சிபீன் (ப-ல்) கொட்டை திராட்சிப்பழம்;

## துத்திநாகம்.

(சு-ம்) கூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்தவுதிரமும் அசுத்தஉணவுமாம் (சௌ-ம்) துத்திநாக பாத்திரங்களிற் சாப்பிடுவதனல் இருதயத்துக்கும் இரப்பைக்கும் வலிமைகொடுக்கும், இருதயத்துடிப்பை நீக்கும், இதைப் பண்பித்துக் கண்ணிலிடக் கண்ணிலுள்ள மாசுகளை யறுக்கும், இதையுரைத்துப் பூசப் படைகள் நீங்கும், துத்திநாகம் வெள்ளையும் நீலமும் கலந்த நிறமாயும் பளபளப்பாயும் கட்டியாயு மிருக்கும் இதை உள்ளுக்குக் கொடுப்பதில்லை, தின்பண்டங்களை துத்திநாகக் கிண்

ணங்களில்வைப்பது கெடுதி (வி-தி) மண்ணீரலுக் குதாவது (ப-ம்) தேன் (ப-ல்) காரீயம் அல்லது வெள்ளீயம்,

## துத்தி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம்(பி-ம்) சுத்தவுதிரமும் மத்திமவுஷ்ணவுமாம் (சௌ-ம்) மார் நோய் மூலம் புண் சுரம் இவைகளுக்குபயோகப்படும், வண்டலைப் பற்றிய ரோகங்களை நன்றாகக் கண்டிக்கும், நீரைப்பெருக்கும், நீர் தாரையிலுள்ள புண்களையாற்றும், அதனிலையையரைத்துப்பருக்களின் மேற்கட்ட கரைந்துபோகும், அதனிலையின்கியாழம் இடுப்புவலி உதிரமூலம் தேகவலி இவைகளை மாற்றும் அதனிலையைச்சுத்தஜலத்தி லிருத்திரி லூரவைத்து, விடிந்து பின்பு பிசைந்திறுத்து, பசுவின்பால் சேர்த்துச்சாப்பிட மூலஉதிரத்தை விரைவில்நிறுத்தும், அதன் கொம்புகளைக்கற்றையாகப்பிடித்துப்பாலைத்துழாவிக் காய்ச்சிச் சுண்டினபின்பு அப்பாலைஇராமுழுதும் அசையாம லாறவைக்க, உறைந்து சருக்கரையைப் பாலாகும்; அதில்ஏலப்பொடிசேர்த்து சாப்பிட்டுவர மேகத்தைப் பற்றிய சகலரோகங்களும் நிவர்த்தியாகும்; அதன்விரையின்சூர்ணத்தைப் பாலிற் சேர்த்துக்காய்ச்சி சருக்கரைசேர்த்துக் குடிக்கத் தாதுவிருத்தியதிகரிக்கும், துத்துசெடியில் அநேகசாதி களுண்டு தேசத்துக்குத்தக்கபடி வித்தியாசப்படும், துத்தியிலையில் குழகுழ புஇருக்கின்றஇலையைஜலத்தில்போட்டுக்காய்ச்சி, நோயிருக்கிற விடத்தில் ஒற்றிடம்கொடுத்தால் நோய் தணியும், பச்சையிலையையாவது, உலர்ந்தயிலையையாவது, கஷாயமாய்காச்சி பாலுஞ் சருக்கரை சேர்த்துச், சாப்பிட்டுகொண்டுவந்தால்மேகச்சூட்டைத்தணிக்கும், துத்தியிலையையுடன்சிறுபயரும் வெங்காயமும்சேர்த்துக் கூட்டுகறி செய்துசாப்பிட்டால்மலத்தை உதைக்கும், துத்தியிலையைவதக்கி வீக்கங்களுக்கு கட்டலாம் சாதத்துடனரைத்து மருவுகளுக்குக் கட்டினால் சீக்கிரத்தில் பழுத்து உடையும்' துத்திவேரை வெந்நீர் கஷாயஞ்செய்து சுரத்துக்குக்கொடுக்கலாம், துத்திவிதைக்கு மலத்தைத்தள்ளுகிற குணமுண்டு 4 அவுன்ஸ் துத்திவேர்-2 அவுன்ஸ்- விரையில்லாத திராக்ஷப்பழம்இவைகளை -5 பையின்ட்- ஜலத்தில்போட்டு 2 பையின்ட்டுக்குசுண்டக்காய்ச்சி வடிகட்டி அசையாமல் வைத்தால் வண்டல் அடியில்படிந்துவிடும், பிறகு தெளிவாய் இறுத்துக்கொண் டுபயோகித்துகொள்ள வேண்டியது, இந்தகஷாயம் மதுரமா யிருக்கும். நீர்சுருக்கு தாகம் இவைகளுக்குக்கொடுக்கலாம் (வி-தி) மந்திக்கும் (ப-ம்) பால்சருக்கரை (ப-ல்) சிறுதுத்தி அல்லது சீமைதுத்தி.

## துரிசு.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்தஉதிரமும் அசத்தவுணவுமாய் (சௌ-ம்) கண்களுக்கொளிவுகொடுக்கும், கண்ணிரோகூக்கைமாற்றும், சகல ரிணங்களையும் புண்களையும்ஆற்றும், இதைஎண்ணெயிற்சேர்த்தரைத்துப் புண்களின்மேற்பூசிவரப் புண்களை யாற்றும், இந்தஉப்பு தற்செயலாய் விளைகின்றது, இதைமுன்னோர்கள்உபயோகப்படுத்தினதற்கு யாதொரு சந்தேகமில்லை, இதன் நிறம் வாசனை, யில்லை, ஒருவிதமான துவற்ப்பு வெகுட்டலை யுடையது காற்றில்வைத்தால் தூளாகும் ஜலத்தில்கரையும், பொரித்தால் முதல்உருசிஅதிலிருக்கிரஜலம் பரந்துவிடும், அப்போது பச்சையும் வெள்ளையும் கலந்து சாயலான தூளாகும்; தீயைஅதிகரித்து எரித்தால் அதிலிருக்கிறதிராவகம் வெளிபட்டு, தாம்ரவர்மான துரிசுகரைத்த தூள்நிற்கும், ஜலம்நீலநிறமாயிறுக்கும், அதில் இரும்பு அல்லது துத்தநாகத் தகட்டைப்போட்டால், தாம்பரம் அவைளின் மேல்படிந்து தாம்ரவர்ணமுண்டாகும், இந்தபரீட்சையால் தாமிரமிருக்குதென்றும்இல்லையென்றும் கண்டுகொள்ளவேண்டியது துருசை தாமிரத்துடன் விளாவிமுறைக்காச்சல் நாட்பட்டரத்தபேதி அதிசாரம் இவைகளுக்குக்கொடுக்கலாம், நஞ்சுதின்றவர்களுக்கு இதைவாந்திக்குக்கொடுக்கலாம், ஆராத ரணங்களையாற்றும், துர்மாமிசத்தைக் கரைத்துவிடும் கொஞ்சம்சலத்திற்போட்டுக் கரைத்து, கண்நோவுக்கும் தந்திமேகத்துக்கு நீர்த்தாரையிலும் உபயோகிக்கலாம், இதற்கு நஞ்சின்குணமிருப்பதால் வெகு ஜாக்கிரதையாக கொடுக்கவேண்டியது, நரம்புகளுக்கு பலம் கொடுக்கிற குணம் இதற்கு உண்டு, விஷமிக்கச் சாப்பிட்டால் வாந்திபேதிக்குடையலட்சணங்களை யுண்டாக்கும், துரிசுகளுக்கு அதிகாரம் உண்டு துரிசைத்தடவி குளிர்ந்த ஜலத்தை மேலுக்குப் போடவேண்டியது. (வி-தி) வாந்தியுண்டாகும் (ப-ம்) சுத்திசெய்துக் கொடுக்கவும் (ப-ல்) ஷாதுஜை.

## துளசி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்தஉதிரமுங் குறைந்தஉணவுமாம் (சௌ-ம்) இருதயத்துக்கு வலிமைகொடுக்கும், சந்தோஷத்தை

புண்டர்க்கும் முலைப்பால்சுரக்கும்,உதிரச்சிக்கலை யறுக்கும்,தீபனமுண்டாகும்,ஈரலுக்கு வலிமைகொடுக்கும், அதைமோருதலினல் நாசியடைப்பு நீங்கும்,அதன்சாற்றைக் காடியிற்கலந்து மோப்பப் பீநசம்நீங்கும்,அதனிலையை மெல்லுவதினல் பற்கள்னேய் நீங்கும் அதன்சாற்றைமார்பிற்பூச மார்வீக்கம்வாடும்,அதன்விரையைப்பாலிற்காய்ச்சிக்குடிக்கத் தாதுமிகும், அதனிலையை எண்ணெயுலெரித்து காதிற் குத்த காதுவலி நீங்கும். வேரைக்கஷாயமிட்டு சுரங்களுக்குக் கொடுக்கலாம் இலைரசத்தை குழந்தைகளுக்கு கொடுத்தால் இருமல் குணமாகும், பழரசம் சேர்த்து சிரங்கு படை தழும்பு, இவைகளுக்குத் தடவலாம் துளசிவிரை வெந்நீர் கஷாயத்தை இருமலுக்கு கொடுக்கலாம் (வி-தி)இதையதிகமாகமோருவதினல் தலைச்சுற்றலும், கண்புகைச்சலும், உண்டாகும் (ப-ம்) திருநீற்றுப்பச்சை.

## துரிஞ்ஜபீன்,

(சு-ம்) சூடும் கொழுமையுமாம், (பி-ம்) சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) பேதியாகும் பித்தரோகத்தைக் கண்டிக்கும், இருமல் மார்வலி ஒக்காளம் சூட்டைப்பற்றிய சுரங்கள் இவைகளுக்குபயோகப்படும், பால் முறித்த சவத்தோடு சேர்த்துச் சாப்பிட நீரடைப்பைப் போக்கும், பசுவின் பச்சைப்பாலிற் கரைத்துக்குடிக்கத் தாதுவிர்த்தியாகும் (வி-தி) மண்ணீரலுக்குதவாது (ப-ம்) புளி இலந்தைப் பழம் (ப-ல்) பேனு,

## தூதரிஸபேத் தூதரிசுகும்.

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் (பி-ப்) சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) தீபனமுண்டாகும் தாதுவிர்த்தியாகும், அதைச்சூரணஞ்செய்து பாலுஞ் சக்கரையுஞ்சேர்த்துக் காய்ச்சிக்குடிக்க விந்து வளரும் புஷ்டியுண்டாகும் அழகுகொடுக்கும், சூட்டைத் தணிக்கும் (வி-தி) இல்லை (ப-ம்) இல்லை (ப-ல்) தூதரிசுகும்.

## நண்டுக்கல்,

(சு-ம். குளிர்ச்சியும் வறட்கியுமாம் (பி-ம்) அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் (சௌ-ம்) நேத்திரத்திலுண்டாகும் பற்பல பிணிகளை நீக்கும், கண்ணில்வடியும் நீரைவறட்டும், காயம் புண் ரணம்முதலியதுகளில் ஓடிவருஞ் சென்னீரைச் சுண்டவைக்கும், அதைப்பொடிசெய்து

வெள்ளி அல்லது பொன்னை விளக்க அதிசோதியுண்டாம், அதை யு ரைத்துத் தேகத்திற்பூச தேகத்திலுள்ள படைகள் முதலியவைகள் நீங் கித் தேகம் சுத்தியாகும் (வி-தி) (ப-ல்)இல்லை,

## ஆற்று நண்டு வயல் நண்டு

(சு-ம்) குளிர்ச்சியும் ஈரமுமாம் (பி-ம்) சுத்த உதிரமுங்அதிகஉண வுமாம் (சௌ-ம்) தாதுவிர்த்தியாகும் இத்துடன் சோம்பு கர்பிஸ் கூட் டி வேகவைத்திறுத்துக்குடிக்க உதிரச்சிக்கலை யறுக்கும், கல்லடப்பை வெளிப்படுத்தும், இதை இடித்துப் பிழிந்து குடிக்க இருதயத்துடிப்பை நீக்கும், இதை இடித்து முள்தைத்த விடத்திற்கட்ட முள்வெளிப்படும் இதன் கண்ணைப் பிடுங்கி குளிசமாக கட்ட முறைகாச்சல் நீங்கும், இ தன் கால்களைப் போக்கி, வயற்றைப்பிளந்து சுத்தப்படுத்தி வேகவைத் து, அதன் சலத்தில் நரட்டுக்கோதுமை ரொய்போட்டு காய்ச்சிகுடித்து வர ஈளை யிருமல் உடலுலர்ந்து போகுதல், அஸ்திசுரங்கள் முதலியவை கள் நீங்கும் மூலரோகத்துக்கு அதிக உபயோகம், இதை யரைத்து முலையின்மேல் வைத்துக்கட்ட முலைச்சிலந்தி ரணம் ஆறும், இதன்சாம் பல் எரு பங்கு செந்தியானு அரைபங்கு குந்திரிக்கம் பத்துப்பங்கு இம் மூன்றுஞ் சேர்த்துச் சூரணஞ் செய்து, நித்தியம் மூன்று கழஞ்சு சூர ணத்தைச் சுத்தஜலத்திற்சேர்த்து, மூன்றுநாள் குடிக்க வெறிநாய் கடி விஷம் நீங்கும், இதின் சாம்பலை தேனிற் கலந்து, குதிக்கால் வெடிப்பு ஆனவெடிப்பிற்பூசச் கொஸ்தமாகுப் (வி-தி) நீர்த்தாமறைக் குதவாது (ப-ம்) கிலேமஃதூரம் சூரத்துக்காவிக்கல் (ப-ல்) இல்லை.

## இரும்பு.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த வுதிரமும் குறைந்த உ ணவுமாம் [சௌ-ம்) இரும்பைச் சிவக்க காய்ச்சிச் சலத்திற் தோய்த்து குடிக்கத் தாது விருத்தியாகும், குடல்களி லுள்ள புண்களையாற்றும், அதிசார பேதி அஜீரண பேதி கிராணி பேதி, இதுகளைக் கட்டும் இரைப்பைக்கு வலிவை கொடுக்கும் மூல உதிரத்தை நிறுத்தும், அபா னவலியை நீக்கும், வெறி நாய்க்கடி விஷத்தைப் போக்கும், காமாலை யை நீக்கும், இதை சலத்திற் கற்கண்டு சேர்த்து ஷர்பத்து காய்ச்சிக்

இருதயந் திடிப்பு, வீக்கம் இரைப்பை ஈரல் இவைகளின் பலவீன மிவைகள் நீங்கும், தாதுவிர்த்திக்கும் இரும்பை முன்போற் காய்ச்சி மோரிற் றோய்த்துக் குடிக்கப் பெரும்பாட்டையும், சகலவித பேதிகளை கட்டும் (வி-தி) சூட்டின் தேகத்திற்குப் பொருந்தாது, இருப்பானதுபி றவிச்சரக்கு ஆக்ஸிஜென் என்னும் வாயுவோடும் கந்தகத்தோடும், கல ந்திருப்பது வழக்கம், திராவகங்களோடு சேர்ந்து அன்னபேதிமுதலிய உப்புகளால் ஆகின்றது, இரும்போடு கரியைச்சேர்த்து ஊதினால், அதி லிருக்கிற தோஷங்கள் நீங்கி பரிசுத்தமாகி, உருகும் சிலசெடிகளிலும் ரத்தத்திலும் அயம் இருக்கின்ற, ஐரன் ஓர்ஸ் என்னும் இரும்புமண்ணி லிருந்து இரும்பை எடுக்கப்படும், இந்தியா தேசத்தில் கருமணலிலிருந் தும், சில இடங்களில் கல்லுகளிலிருந்தும் இரும்பை யெடுக்கப்படும், இரும்பு பரிசுத்தமாய் அகப்படுகிறது கடினம், பரிசுத்தமான இரும்பு நீலங்கலந்த வெளுமைச் சாயலாயிருக்கும், துலக்கினால்பளபளப்பு உண் டாகும், தேய்த்தால் ஒருவித வாசனை பிறக்கும், நாக்குக்கு துவர்ப்பா யிருக்கும் அடித்துத் தகடாய் தட்டவாம் கம்பியாக யிழுக்கலாம் ஈரக் காற்றுபட்டால் துப்புபிடிக்கும். காந்தம் இரும்பை இழுத்துக்கொள்ளு ம், இரும்பை எரித்தாலாவது, ஈரம்படவைத்தாலாவது, காற்றிலிருக்கி ற ஆக்சிஜென்னும்வாய்சேர்ந்து, பஸ்மாயாவது சிந்தூரமாயாவது, ஆகி விடும் இரும்பு சேர்ந்திருப்பதில் மாசிக்காய் வெந்நீர்கஷாயஞ் சேர்த்தா ல்கருத்த வண்டல் அடியில் படியும் அ ஞ்சேர்ந்திருக்கிறஅவுஷதங்களை குறித்து தெரிந்துக்கொளள்வேண்டிய முக்கியவிஷயங்களாவது.

தோஷமற்ற இரும்பைச் சாப்பிட்டால் ஒன்றும்செய்யாது ஆனால் அது வயிற்றில் போனவுடன் குணம்மாறி அவுஷதத் தன்மையைக் காட்டும்; அயஞ்சேர்ந்த மருந்துகளெல்லாம் ரத்தத்தில் கலந்து அதிலி ருக்கிற அணுக்களை அதிகப்படுத்தி நிறத்தையும் அதிகமாய் சிவப்பிக் கும், அதெப்படியெனில் பாண்டுரோகத்தையுடைய ஒருஸ்திரியின்ரத்த த்தை பரிட்சித்து அதில் அணுக்கள் 16-பங்காக யிருந்தபோது சில நாள் அயத்தைக் கொடுத்து மறுபடியும் ரத்தத்தைப் பரிசித்தபோது, அணுக்கள் 16-பங்காக தொடையில் அதிகப்பட்டு வெளுத்திருந்த தேகமும், உதடுகளும் கன்னங்களும் நிறம் மாறிமுகத்தில் வசீகரத்தை உண்டாக்கினதாய் கண்டிருக்கின்றது. அயத்தைச் சாப்பிட்டுக்கொ

டு இருக்கிறவர்களில் அவாள் மூத்திரத்திலும் முலைப்பாலிலும் அயத்தைக்காணலாம், அயம் சாப்பிட்டால் மலங்கருத்து கெட்டவாசனையாயிருக்கும், திரவரூப அயமருந்துகளைச் சாப்பிட்டால் நாக்கு கருத்துவிடும், ஜீரணசக்தியை விருத்திபடுத்தும் பசியை அதிகமாக்கும்; நாடியை தீவிரப்படுத்தும், சரீரசவுக்கியத்தை யுண்டாக்கும் சிலருக்குஇரும்புசம்பந்தமான அவுஷதங்கள் வயிற்றில் எரிச்சலையுண்டாக்கும், அயத்தை அதிகமாய்ச் சாப்பிட்டால் நஞ்சின் குணத்தைக்காட்டும்.

சரீரத்திலிருந்து அதிகரத்தம் வடிந்தாவது அல்லது வேறுகாரணத்தினலாவது, உண்டாகிற பாண்டுரோகத்துக்கு அயச்சிந்தூரத்தையாவது அல்லது அன்னபேதியையாவது கொடுக்கலாம், சாதாரணமாய் காணுகிற துர்ப்பலனுக்கு அயஞ்சேர்ந்த சாந்தமான அவுஷதங்களைஉபயோகிக்கவேண்டியது. கண்டமாலை சம்பந்தமுடைய மேகரோகத்துக்கு ஐயோடயின் கலந்திருக்கிற அயத்தைக் கொடுத்தால் மெத்த சவுக்கியத்தைத் தரும், அயஞ்சேர்ந்த மருந்துகள் வயிற்றில் துர்க்குணத்தையுண்டாக்கினல் குராசாணி ஓமத்தையாவது, அல்லது சோனிபம் என்னும் மருந்தையாவது சேர்த்துக்கொடுத்தால் துர்க்குணத்தை நீக்கிவிடும். ஒருவித அயச்சரக்கு ஒத்துககொள்ளாமற்போனல் சாந்தமாயிருக்கிற வேறொரு மருந்தைக்கொடுக்கலாம், அயம் சாப்பிடும்போதுபுளிப்பையும் புளிப்புள்ள பழங்களையும், நீக்கவேண்டியது அயத்தை நெடுநாள் சாப்பிடும்போது 10-அல்லது 15-நாளைக்கொருதரம் விட்டுவிட்டுசாப்பிடவேண்டியது. நல்லது பேதிக்குகொடுத்தால் அயத்தின்நல்ல குணத்தை அதிகப்படுத்தும் பாண்டுரோகத்துக்கு, ரத்தத்தில் தேவையான அயம் சேருகிறவரையில் கொடுக்கலாம். இரத்தத்தில் அயம் அதிகப்பட்டால் அதிதூலரோகம்காணும் ஜீரண மந்தப்படும் சரீரஸ்திதிதாறுமாறுகிவிடும், தாபனரோகங்களில் ரத்தங்கட்டி யிருக்கும்போது அதிதூலரோகத்திலும், சுவாபீகமாக ரத்தபுஷ்டியுள்ள தேகிகளுக்கும், அயத்தைக்கொடுக்கலாகாது (ப-ம்) நெய் பால் மாமிசங்கள் (ப-ல்) மண்டூரம்

## மண்டூரம் இதுவே கிட்டம்.

(சு-ம்) குடும்வறட்சியுமாம் (பி-ம்) சுத்தவுதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) மண்டூரத்தைக் காடியிலரைத்தரைத்துக் காயவைக்

கச் சுத்தியாகும் சகலதோஷத்தை மாற்றும், இரைப்பைக்கு வலிமை கொடுக்கும், இரத்தவாந்தி நீர்பெருக்கு கருப்பஸ்திரீகளுக்குண்டாகும் கரத்திப்போக்கு இவைகளை நிறுத்தும் மூலரோகத்தை நீக்கும், உள்ளுறுப்புகளிலுண்டாகும் ரிணங்களையாற்றும், ஒருமண வெடைமண்டூரத்தை கோழிமுட்டையின் மஞ்யட்கருவிற் சாப்பிடத்தாதுவிர்த்தியதிகரிக்கும் சிகஞ்சுபீனிற்குடிக்க அவுஷத விஷயங்களைமாற்றும். தேனிலுரைத்துப்பற்றிட கட்டிகளையும், மூலைப்பால் கட்டிக்கொண்டதையும், கரைக்சி கண்ணிலிட கண்ணிறப்பைகளின் வறட்சியை மாற்றும்காதிற்குத்தக்க காதுநோய்கள்தீரும், சலமுந்தேனுஞ் சமபாகமாக கலந்து அதில் மண்டூரத்தை இருபத்தொருமுறை அரைத்து உலரவைத்துபின்பு அதன்மேல் மூன்றங்குல உயரம் நிற்கும்படி ஜெயித்தூணெண்ணையை வார்த்து மூன்றிலொருபங்கு சுண்டச்காய்ச்சி நித்தியமொருவிரலாலெடுத்து நக்கிவர தேகத்திலுள்ள மாசுகளை கண்டிக்கும், அழகுண்டாகும் தாதுவிர்த்திக்கும் இத்துடன் தேன்கூட்டி லேக்கியமாக்கி கொள்வதற்கு மிதுவே குணமாம் (வி-தி) நுரையீரலுக்குதவாது (ப-ம்) வாதுமைப்பிசின் (ப-ல்) இரும்பு.

## கழற்காய்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்தவுதிரமும் அசுத்தஉணவுமாம் (சௌ-ம்) கழற்காய்கள் வெள்ளை கறுப்பு, பச்சை மஞ்சளென நான்குவகைப்படும், அவைகள் வருமாறு கறுப்பு கழற்காயை ஆட்டினதோலில் முடிந்து, இடது துடையிற்கட்ட, அல்லது புகையிட உடனே பிரசவமாகும், சிவப்புநூலிற்கோத்து இடுப்பிற்கட்டகருப்பத்தைக் காக்கும், வலதுகையிற் கட்டவெற்றியுண்டாம். அதின்பருப்பை முலைப்பாலிரைத்துப்பூசி புணர கருப்பமுண்டாகும். வெள்ளைகழற்காயைச் சலத்திலுரைத்துக்குடிக்க, அல்லது அரையிற்பூச, நீரடைப்பு நீங்கும், கற்களைக்கரைக்கும், பச்சை கழற்காயை முலைப்பாலிலுரைத்துக் குடிக்க இரத்த வாந்தியை நிறுத்தும் மஞ்சட் கழற்காயுடன் மிளகுசேர்த்து அதனிலைச் சாற்றையேவிட்டரைத்து கழற்காய் பிரமாணம் உண்டைகள் செய்து இரண்டுவேளையுந் தின்றுவர மாசுகளையறுக்கும். அண்டவாய்வு பக்கசூலைமுதலியதுகளை நீக்கும் (வி-தி)சூட்டுடம்பிற்குப்பொருந்தாது (ப-ம்) நெய் பால் மோர் (ப-ல்) அதின் வேரிலையுமாம்.

## சாம்பிராணி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் (சௌ-ம்) இருதயத்திற்கு வலிமை கொடுக்கும், சந்தோஷத்தையுண்டாக்கும், வாய்வேக்காட்டை யாற்றும் தொண்டைப் பிடிப்பை நீக்கும், சாம்பிராணியை எள்ளெண்ணெயிற் சேர்த்தெரித்து காதிற்குத்த காதுவலி நீங்கும், தேகத்திற்பூச தேகத்திலுள்ள நோய்களை நீக்கும் சாம்பிராணிப் புகைபிடிக்கச் சகல தோஷத்தை முறிக்கும் சாம்பிராணி தைலத்தை, வெற்றிலையில் தடவி, பொறியிலொட்டிக்குளுத்தியினாலுண்டாகுந் தலை வலிகளை க்ஷணத்தில் மாற்றும், தேனிற் குழைத் துட்கொள்ளக் குளித்தியினா லுண்டாகும் சகல வலிகளையும் நீக்கும், ஒருபணவெட்டை சாம்பிராணிக்கத்தைக் சர்க்கரையுடன்கலந்துட்கொள்ள கபரோகங்களையும் குளித்தியினாலுண்டாகும் இருமலையும்போக்கும், தேனிற்கலந்து சாப்பிட தாதுவிர்த்தியாகும். தலைமூளைக்கு வலிமைகொடும் தீபனமதிகரிக்கும், இது பட்டையிலிருந்து வடிந்து உறைந்துபோன ஓர்வித தைலம் பெருங்காயத்தை துண்டித்து பார்வையிட்டால் எவ்விதமாயிருக்குமோ அவ்விதமான நிறமாய் சிறியமணிகளைப்போல இருக்கும் நல்லவாசனையா யினிப்பாயிருக்கும், இதற்குகபத்தைக் கண்டிக்கிற குணமிருக்கின்றது. இதின் துன்பம் துர்வாசனையையெடுத்துவிடும். கக்குவாய் இருமலுக்கு இதின் தூபத்தைக்கொடுத்தால் சுகுணத்தைக்கொடுக்குமென்று கண்டிக்கின்றது, இதை உள்ளுக்குக் கெடுப்பது அரிது (வி-தி) சூட்டுடம்பிற்குத் தலைவலியுண்டாகும் (ப-ம்) தசகசாபானபஷா தைலம் (ப-ல் தூமிமஸ்த மட்டுப்பால்

## கத்தக்காம்பு.

(சு-ம்) குளிர்ச்சியுய் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம் மலத்தைக்கட்டும், நீறைவரட்டும், உறைந்தஉதிரத்தை கரைக்கும், பற்களிற்றேய்க்க ஈறு பலப்படும் கியாழமிட்டு கொப்பளிக்க வாய்வேக்காட்டையாற்றும், இதைக்குடிக்க வயிற்றின் கிருமிகளை கொல்லும், காமாலை பெருவியாதி இரத்தக் கெடுதி வீரியக் கெடுதி இவைகளை நீக்கும், நித்திரையில் சுக்கிலம் வெளிப்படுதலை நிறுத்தும், குடலிலும் நீர்த்தாரையிலுண்டாகிய புண்களை யாற்றும், நீர்ச் சுருக்கை நீக்கும், நீரடைப்பைமாற்றும், பேதிகளை கட்டும், நெருப்பினாலும் வெந்நீராலும் வெந்தபுண்களின்மேல், கத்தைக் காம்பைபொடி

செய்து தூவச் சிக்கிரத்திலாற்றும் (வி-தி) அதிதமாகக் கொல்வதினுல் குண்டிக்காயிலும் ஊத்தாம்பிள்ளையிலுங் கல்லுண்டாகும், வீரியநஷ்டமுண்டாகும் (ப-ம்) மீனம்பர் (ப-ல்) கஸ்தூரி,

## வெள்ளைச்சாறுவேளை.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்தவுதிரமுங்குறைந்த உணமுமாம் (சௌ-ம்) வெள்ளைச் சாறுவேளை யிலைச்சசாற்றை அல்லது அதின்மூத்தினவேரை முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிட நேத்திரரோகங்களனைத்துந்தீரும், அதனிலைச்சாற்றை யாதொரு பானத்துடன்கலந்து குடிக்க காமாலை வீக்கம் குன்மம் வயிறுளைச்சல் இவைகள் நீங்கும் விஷங்களை முறிக்கும் இரத்தம்-பித்தம்-இரசம் இம்மூன்று சத்துக்களாலுண்டாகுஞ் சகலதீங்குகளுமகலும், தீபனமுண்டாகும் இதனிலையை வேகவைத்து நெய்யில் வறுத்துதின்ன ௸ குணத்தையேதரும், இதனிலையோடு கல்லாதிலையும் ஆமணக்கிலையுஞ் சமபாகமாகச் சேர்த்து திராவகமாக யிரக்கி குடிக்க குளித்தியினு லுண்டாகும் வீக்கத்தை நீக்கும், இதனிலைச்சாற்றில் எள்ளெண்ணை கலந்து காய்ச்சிப் பூச கீல்வாதங்கள் நீங்கும், அதனிலைச்சாறு விராகனெடை 6, இதை 12-ரூபாயெடை பசுவின் பச்சைப்பாலிற் கலந்து குடிக்க கட்டுப்பட்ட நீரையுடனே யிறக்கும், அதின் முத்தினவேரில் ஒரு குன்றுமணிப்பிரமாணமாரம்பித்து நித்திய ஒவ்வொரு குன்றுமணிப் பிரமாண முயர்த்தித் தின்று நாற்பது நாள் 40-குன்றுமணிப்பிரமாணம் தின்று 41-நாள் முதல் ஒவ்வொன்றுக குறைத்து தின்று மறுநாள் 40-ஒரு குன்றும்ணிப்பிரமாணந்தின்று நிறுத்த ஒரு விதத்திலுந் தீராத வாதரோகங்களும் சுரங்களும் முக்கியமாய் நெறிக்காச்சலும் பீநசங்களிலுங் காற்களிலும் நீரிறங்கி யுபாதிசெய்யும் வியாதிகளும், இதுபோன்ற வியாதிகள் யாவும் நீங்கும் (வி-தி) தொண்டைவலியுண்டாகும் (ப-ம்) கல்லாதிலை காப்பிரிசல்லாதிலை (ப-ல்) காட்டுச்சாறுவேளை.

## மரக் காளான்

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்த உதிரமுங்குறைந்த உணவுமாம் (சௌ-ம்) பாரிசவாதங் பக்கசூலை இருமல் மூச்சடைப்பு முதலிய நரம்புகளையுந் தலைமூளையைப் பற்றிக் குளிர்ச்சியினு லுண்டாகும் ரோகங்களைப் போக்கிவிடும், வயிற்றுப்பிசத்தை நீக்கும், பெருவியாதி

முதலிய ரணங்கள் கட்டி கொப்பள மிவைகளையாற்றும், ஒருவாரனெடை மரக்காளான்காயின றசையை யிராத்திரிக்கி வெந்நீரிலூறவைத்து காலமே தெளிவையிருத்துக் குடிப்பதாலும், அல்லது ஷை தசையின் சூரணத்திலொரு வராகனெடைச் சதகுப்பையின் கியாழத்திற் சேர்த்துக் கொஞ்சந் தேன்கூட்டிக் குடிப்பதாலும், நன்றாக வாந்தியாகும் பெருஞ் சீரகம் அனிசூனென்னும் ஒமம் இவைகளின் கியாழத்திலும் குடிக்கலாம், இரசத்தையும் பித்தத்தைப்பற்றிய மாசுகளையும் நன்றா யறுக்கும் பேதியாகும் (வி-தி) விக்கலுண்டாகும் மார்வலிக்கும் (ப-ம்) வெந்நீரைக் கொஞ்சம் கொஞ்சமாக குடிக்கவேண்டும் மார்பில் ரோஜாப்பூ அல்லது வெள்ளைச் சாமந்திப்பூவின் தைலத்தைப் பூசவேண்டும் (ப-ல்) தேத்தாம் பழத்தின் றசை இப்பிக்காவேர் நஞ்சுமிறித்தான் வேர்.

## அமுக்கிறாக் கிழங்கு.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் (பி-ம்) அசுத்தவுதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) இருமல்.மூச்சடைப்பு - வீக்கம்-படை யிவைகளைப் போக்கும் பழமையான ரோகங்களுக்கு மிகவுபயோகப்படும், தேகம் பருக்கம் வலிமையுண்டாகும். தாதுவிர்த்திக்கும்;இடுப்புவலிவைப்போக்கும், உதிரச்சிக்கலை நீக்கும், வண்டலையும் இரசத்தையும் பற்றிய ரோகங்களை யகற்றும் (வி-தி) உஷ்ண தேகத்திற்கு சூடதிகரிக்கும், (ப-ம்) பால் நெய் முதலிய கொழுமை வஸ்துக்கள் (ப-ல்) பஹுமன்ஸபேத்.

## நத்தை.

(சு-ம்) குளிர்ச்சியும் ஈரமுமாம் (பி-ம்) சுத்த உதிரமும் அதிக உணவுமாம் (சௌ-ம்) பெருவியாதி முதலிய மேகரோகங்களனைத்தையும் நீக்கும், தாகத்தை யடக்கும், பயித்தியங்களைப் போக்கும், பித்தத்தை நீக்கும், வீக்கங்களின் விஷத்தை யறுக்கும், வெறிநாய்கடி விஷத்தை முறிக்கும், நத்தையிற் றுவாரமிட்டு விளக்கிற் பிடிக்கத் தயிலமிறங்கும், இதில் கரியபோளம் வாலேந்திராபாளம் இவைகளிரண்டையுஞ் சமமாகச் சேர்த்தரைத்து, ஆறாத மேகப்புண்கள் பருக்களிவைகளின் மேற் பூச சீக்கிரத்தில் ஆறும், நத்தை கடை சாம்பலைத் தேனிற் கலந்து, படைகள் கண்ணோரத்தில் வரும் புண்கள் இவைகளின் மேலேயே பூசச் சொஸ்தமாகும்; காடியி லுரைத்து ஆக்கிராணி

க்க இரத்தபீநசம்தீரும், நத்தைக்குளிருக்குங் கோழையைக் கண்களை யுங் காதுகளையுஞ் சுற்றுப்பூசிவர அவைகளைக்காக்கும். நத்தைமாமிச த்திற்குச் சரியெடை நவாச்சாரமும், அரையெடை கெந்தகமும், ஆறி லோரெடை கல்லுப்புஞ் சேர்த்தரைத்துத் தயிலமிறக்கிக்கொள்ள இரச வாதத்தொழிலுக்குதவியாகும்(வி-தி)இல்லை (ப-ம்) இல்லை (ப-ல்) இல்லை

## நவாச் சாரம்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) நீரைவறட்டும். புண்களையாற்றும். கோழிமுட் டையின்வெள்ளைக்கருவி லுரைத்துப்பூச தொண்டைவலியை நீக்கும், படைகளைப்போக்கும், தேனிலுரைத்துப்பூச மயிருதிர்வதை நிறுத்து ம் முலைப்பாலி லுரைத்துக் கண்ணிற்குத்த மாசுகளையறுக்கும், இதை ப்புதைக்கப் பாம்புமுதலிய விஷசெந்துக்க ளிருப்பிடத்தை விட்டோ டிப்போகும், நவாசாரத்துக்கு வாசனையிராது காரமும் எரிச்சலும் கச ப்பும் மூத்திரவெகுட்டும்உள்ளதா யிருக்கும். ஜலத்திலும் சாராயத்தி லும் கரைந்துவிடும், கடைச்சரக்கில் தோஷங்களிருக்கின்றன அதைச் சுத்திசெய்து உள்ளுக்கு உபயோகப் படுத்தவேண்டியது, 2-வீசைந வாசரத்தைக் கொதிக்கிற வெந்நீரில்கரைத்து, சூடாயிருக்கிறபோதே துணியில்வடிகட்டிக் குளிரவைத்துப்பிறகு அதை ஒரு அகண்டபாத் திரத்தில் ஊத்தி வெய்யலில் வைத்தால் உப்புகட்டிப்போகும், பிறகு அதையெடுத்துப் புட்டிகளில்போட்டு பத்திர படுத்திக்கொள்ளவே ண்டியது நவாசரத்தை உள்ளுக்கு கொடுப்பது அரிது ஆனல் ஜர் மெனிதேசத்தார் பலவித வியாதிகளுக்கு மெத்த உபயோகப்படுத்து கி றார்கள் நீர்அண்டம் ஜுரங்கள் குடல்வாதம் முதலிய ரோகங்களுக்கு இலேமாகச்செய்து; உபயோகப்படுத்தபடும். கல்லடைப்பு குடல் சூலைகுன்மம் சருமத்தின் கவிச்சுநாற்றம் மகோதரம் முத்தோஷம் வாதம் இவைகள் போகுமென்று கண்டிருக்கின்றது (வி-தி) மூன்றுக முஞ்சுதின்னக்கொல்லும் (ப-ம்) பசுவின்பால்குடித்து வாந்திசெய்யவே ண்டும் (ப-ல்) படிகாரம்,

## நறுவிலிக் காய்

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் (பி-ம்) சுத்தவிரத்தமுங் குறை ந்தவுணவுமாம் (சௌ-ம்) வண்டலைப்பற்றிய ரோகங்களைக் கண்டிக்கு ம் கபத்தையறுக்கும், தாகம் பித்தம் நீர்ச்சுருக்கு சூட்டைப்பற

றிய இருமல் இவைகளை நீக்கும், குடலுக்கு வலிவைகொடுக்கும் குரல் கப்மல் வயிற்றுக்கடுப்பு இவைகளை நீக்கும், மருந்துகளினாலுண்டாகும் வேகத்தைத் தணிக்கும், பேரீச்சம்பழத்துடனரைத்துப் பூசப் பருக்களை யுடைக்கும் (வி-தி) ஈரலுக்குதவாது (ப-ம்) சிலேத்துமதேகத்திற்கு ரோசாப்பூவும் வாதபித்ததேகங்களுக்கு இலந்தைப்பழமுமாம் (ப-ம்) சீமை துத்திவிரை.

## நன்னாரிவேர்.

(சு-ம்) கூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்தவிரத்தமுங் குறைந்த உண்வுமாம் (சௌ-ம்)சயித்தியத்தினாலுண்டாகுஞ் சகலரோகங்களையும் நன்றாக கண்டிக்கும் ஒருபங்கு நன்னாரிவேருக்கு நாலுபங்கு சலம்விட்டு நாளிலொன்றாய்க் காய்ச்சி, யிறுத்துச் சமபாகஞ் சருக்கரைச் சேர்த்து ஷர்பத்து காய்ச்சிக்குடிக்கப் பழமையால் இருமல் மூச்சடைப்பு பாரிச வாத முதலியது சொஸ்சமாகும். நன்னாரிவேர் கியாழத்தி லுட்காருவதால் உதிரச்சிக்கல் நீக்கிப்போகும், ௸ கியாழத்திற் காடிசேர்த்து வாய்கொப்பளிக்கப் பல்வலி நீங்கும், நன்னாரிவேர் சூரணத்தோடு சமபாகச் சருக்கரை கலந்து நித்திய மொருவராகனெடையாக ஏழுநாள் சாப்பிடக்கிழ்வாதந்தீரும், இதன் தைலத்திற்கு மிதுவே குணமாம் பறங்கிச்சக்கைக்குள்ள குணங்களும் நன்னார்வேருக்குண்டு, இந்த வேர் நீண்ட துண்டுகளாய் மேலேகறுத்து உள்ளே மரமாயும் நல்ல வாசனையாயும் கசப்பாயுமிருக்கும், நன்னாரிவேர் பலத்தைக்கொடுக்கும் நாள்பட்ட வியாதிகளை சொஸ்தப்படுத்தும் கண்டமாலை மேஹரோகம் கருமரோகங்கள் இவைகளுக்கு உபயோகிக்கலாம், இதற்கு மூத்திரத்தை விருத்திப்படுத்துகிறகுணம் இருக்கிறபடியால் இருதயரோகத்தின் மேல் காணுகிற நீர்க்கோர்வைக்கு கொடுத்தால் அதை நிவர்த்திக்குமென்று கண்டிக்கின்றது, இதை வெந்நீர் கஷாயமாகவுஞ் செய்து உபயோகிக்கலாம், 4-அவுன்ஸ் நன்னாரிவேரை 1-பயின்ட் கொதிக்கிற ஜலத்தில் போட்டு 30-நிமிஷம் ஊறவைத்து வடிகட்டிக் கொள்ளுக. இதில் 1-முதல் 2-அவுன்ஸ் அளவுக்குக் கொடுத்தால் பலத்தைக்கொடுத்துக் கொண்டே மூத்திரத்தை யதிகப்படுத்தும் (வி-தி) நற்குண மல்லது துற்குணமு மிருக்கின்றது (ப-ம்) வாதுமைநெய் பசுவின்பாலிதுகளை எப்போதுஞ் சேர்க்கவேண்டும் (ப-ல்) சீமை நன்னாரிவேர்.

## நாகேசரி.

(சு-ம்) கூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமுங் குறைந்த உண்வுமாம் (சௌ-ம்) சீரை வறட்சியுங்காற்றைக்கண்டிக்கும், சீதபேதிப்பு

Page no

173, 174 Missing

மல் மார்பின்வறட்சி மார்புநோய்தொண்டைவறட்சி, இவைகள்நீங்கும் பெரும்பாடு மூலவிரத்த மிவைகளை நிறுத்தும், இத்துடன் வெள்ளாட்டுக்கொழுப்புசேர்த்துப் பாயாசமாகக் காய்ச்சிக்குடிக்க இரத்தக்கடுப்பைநீக்கும் சூடான மருந்துகளினு லுண்டான பேதிகளை கட்டும். இதைச் சலத்திற்கரைத்து அகுருதுசெய்யக் குடல்களின் புண்களையாற்றும் இதை சலத்திற்கரைத்துக் கொதிக்கவைத்துக் பருக்களின்மேற்பூசிக் கட்ட அவைகளைப்பழுக்கவைத்துடைக்கும் இத்துடன் குங்குமப்பூச்சேர்த்தரைத்துப் பூசிவர தேமலும் படைகளும் நீங்கும் இதைக்காடியி லுரைத்துப் பூசத்தொண்டைவலியைமாற்றும். முலைப்பாலிலிழைத்துக்கண்ணிற்கூத்தக் கண்வறட்சி நீங்கும், (வி-தி) மந்திக்கும்கட்டுகளுண்டாகும் (ப-ம்) சருக்கரைபசுவின்பால் கர்பிஸ் (ப-ல்) கோதுமைபால் நன்றுகக்கழுவிய பச்சரிசி.

## நிலப்பனைக் கிழங்கு.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்தவிரத்தமு மத்திமவுணவுமாம் (சௌ-ம்) இடுப்புவமலிமாரடைப்பு மூலரோக மிவைகளைப்போக்கும் நிலப்பனைக் கிழங்கின் றேலைச் சீவிப்போட்டுக் கிழங்குகளைவேகவைத்து நித்தியம் தின்றுவரச் சொரிசிரங்கு மேகவூரல் இவைகள்நீங்கும் தாதுபுஷ்டியதிகரிக்கும் (வி-தி)சூட்டுடம்பிற்குதவாது (ப-ம்)நெய்பால் மாமிச மிதுகளை மிகுதியகாச் சேர்த்துக்கொள்ளவும் (ப-ல்) காராட்டுக்கிழங்கு.

## நீ ர டி மு த் து.

[சு-ம்] சூடும் வறட்யுமாம் (பி-ம்) அசுத்வுதிரமும் அசுத்த வுணவுமாம் (சௌ-ம்) வெண்குஷ்டம் கருங்குஷ்டமுதலிய மேகரோகங்களைக் கண்டிக்கும். இதன்பருப்பைத் தயிரிலூரவைத்து எலிமிச்சம்பழச்சாற்றில் அல்லது காடியிற்குழைத்துத் தேகத்திற்பூசி யுலர்ந்தபின்பு சாணந்தேப்த்துக்குளித்துவரச் சொறி சிரங்கு முதலியது தீரும் ஆமணக்கு முத்திலெடுப்பதுபோல அல்லது வா துமைப்பருப்பிலெடுப்பதுபோல நீரடிமுத்திலெண்ணெ யெடுதுக் குடித்துவர இரத்தக் கெடுதியாலுண்டாகும் பெருவியாதி முதலிய ரோகங்கள்தீரும் (வி-தி) பித்தமதிகரிக்கும் ஒக்காளமுண்டாகும் (ப-ம்) நெய்பால் மாமிசமிவைகளை மிகுதியாகச்சேர்க்கவேண்டும் (ப-ல்) தாழம்வேர் பறங்கிச்சக்கை.

## நீலம் இதுவே நீலமருந்து.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் [பி ம்] அசுத்தஉதிரமும் அசுத்தஉணவுமாம்(சௌ-ம்)இரத்தவாந்தி இரத்தபீநச மிவைகளைநீக்கும் நாலு

நெல்லடைநீலத்தைச் சுத்தசலத்திற் கரைத்துக்குடிக்கக் கட்டிகளுந்திபோகும் குழந்தைகளின் கக்குவானை நீக்கும்; மார்நோயையடக்கும் சட்டிகளின்பேற்பூச உடைந்துபோகும், சரக்கொன்றை புளியோடு கலந்துபூச வீக்கம் தொல்லைப்பற்றிய புண்கள் படைமுதலியவைதீரும் இது அவுரியிலையிலிருந்து எடுக்கிற பதார்த்ததுக்குநீலமென்ற பெயர் சிலவருஷத்துக்குமுன் நீலத்தை சீமையில் காக்கைவலிமுதலிய நரம்பைப் பற்றிவருகிறரோகங்களுக்கு உபயோகப் படுத்தினதுண்டு இப்போதுஇதை கையாடுவதில்லை 20-கிறேன் முதல் படிபடியாய் 60 கிறைன் அளவுக்கு உயர்த்தி தினத்துக்கு 23-தடவை கொடுக்கலாம் [வி-தி] நரையீரலுக் குதவாது (ப-ம்)தேன் (ப-ல்) நாட்டுக்கோதுமை

## சுருமா இதுவே நிலாஞ்சனம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம்[பி-ம்] அசுத்த உதிரமும்அசுத்தவுணவுமாம் (சௌ-ம்) நரம்புகளுக்கு வலிவைகொடுக்கும், இரத்தமோடிவருவதை யடக்கும். புண்களை யாற்றும், துன்மாமிசத்தைத்தின்னுங்கண்களுக்கொளி கொடுக்கும் பெரும்பாடு இரத்தமூலமுதலிய இரததபோக்கை நிறுத்தும், இத்துடன் கஸ்தூரியுமுத்துஞ்சேர்த்துரைத்துக் கண்ணிலிட நேத்திரரோகங்களனைத்துந்தீரும் (வி-தி) அதிகவறட்சியுண்டாகும். நுரையீரலுக்குங் கீல்வாதத்திற்குமாகாது (ப-ம்) சவுக்காரத்திற்சுத்திசெய்து வாதுமைப்பிசின் சருக்கரை யிவைகளைச் சேர்க்கவும் (பல்)காரீயபஸ்பம்.

## நேர்வாளக் கொட்டை.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம்(பி-ம்) அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் (சௌ-ம்) இரத்தையும் வண்டலையும் பற்றியரோகங்களை நன்றாகக்கண்டிக்கும் வீக்கம் காமாலை கீல்வாதம் கால்நரம்புகளிணிசுப்பு இடுப்பின்வலி கல்லடைப்பு இவைகளை நீக்கும். இதைநன்றாகச் சுத்திசெய்து இதற்குச் சமவெடையாக ரோசாப்பூ உலர்ந்தநெல்லிக்காயின் மேற்றோல் அனிசூன் இவைகளைச்சேர்த்து எலுமிச்சம்பழச்சாறுவிட்டு மூன்று நாளரைத்துக் கடலை சமாணங் குளிகைகள்செய்துபெருஞ்சீரகக் கியாத்திற் கொடுக்க வருத்தமொன்றில்லாமல் சுகமாகப்பேதியாகும் (வி-தி) வயிறுவலிக்கும் நெஞ்செரியும் வாந்தியாகும் (பம்) மூ

ளை களை நீக்கிப்போட்டு, நெய்பால் எலுமிச்சம்பழச்சாறு இவைகளிற்
சுத்திசெய்யவேண்டும் (ப-ல்) மாஹூதாளு அல்லது சூரத்துச் சிவதை
வேர்,

## பஸ்பாயஜ்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த விரத்தமுங் குறைந்த
உணவுமாம் (சௌ-ம்) பேதியாகும் இரசத்தையும் வண்டலையும் பற்றி
யநீர்களைப் போக்கும் பால் குடிப்பதினாற் குடல்களிலுண்டாகும் கட்டு
களைப்பற்றிவரும் வயிறுப்பிசத்தை மாற்றும் குன்மங்களை யறுக்கும்
வண்டலினாலுண்டாகும் பெருவியாதி கீல்வாத முதலிய ரோகங்களை
நீக்கும் இதை பேதியாகிற வஸ்துக்களோடு சேர்த்துகியாழமிட்டுதேன்
கலந்துகுடிக்க நன்றாகப்பேதியாகும் ஷை ரோகங்களையுநன்றாககண்டிக்
கும் அனிசூன் அதிமதுர மிவைகளோடு சேர்த்துக்கியாழமிட்டு குடிக்
க இருமல் மூச்சடைப்பு சுவாசம் இவைகள் நீங்கும் இலங்கைப்பழத்
தோடு கியாழமிட்டு நித்தியங் குடித்துவர மூலரோகத்தைநீக்கும் இதில்
மூன்று கழஞ்சைக் கியாழமிட்டுச் சரக்கொன்றைப் புளியுந் துரிஞ்சபீ
னுஞ்சேர்த்துகுடிக்க மூலம் குன்மம் வயிற்றுநோய் காக்காய்வலி இவை
களை நாசமாக்கும் (வி-தி) மாபுக்குங் குண்டிக்காய்க்கு மாகாது(ப-ம்)
பரசியாவுஷான் நாட்டு கோதுமை திராட்சிப்பழ மிவைகளைச்சேர்த்து
கியாழமிட்டு குடிக்கவேண்டும் (ப-ல்) அப்கிமுன் அரைப்பங்கும் இந்து
ப்பு காற்பங்குஞ் சேர்த்துக்கொள்ளவும்.

## பவளம்

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த வுதிரமுங்குறை
ந்த உணவுமாம் (சௌ-ம்) இரத்தவாந்தி இரத்தபேதி பலவிதபயித்திய
ங்கள் காக்காய்வலி தீபனக்குறைவு கல்லடைப்பு மூலம் இவைகளைப்
போலொத்த ரோகங்கள் நீங்கும் பவளபஸ்பம்கழஞ்சு அரைவிளாம்பிசி
ன் கழஞ்சு கால் இவ்விரண்டையும் கோழிமுட்டை வெள்ளைக்கருவிற்
சேர்த்து சுத்த சலத்துடன் குடிக்க தேகத்துக்குள்ளிருந்து வெளிப்
படு மிரத்தத்தை நிறுத்தும், இருதயத்திற்கு வலிவைகொடுக்கும், இருத
யத்தில் உறைந்த விரத்தத்தைபிளக்கும் பவளபற்பத்தை ரிணங்களிற்பே
ரிற்போடத் துன்மாமிசத்தை யறுக்கும், இரத்தமோடிவருவதை நிறுத்
தும் கண்களிற்போட நேத்திரரோகங்களனைத்துந்தீரும், ரோகனேயஸ்
சான் என்னுந் தைலத்திற்சேர்த்துக் காதிற்குத்த காதடைப்பு செவி
டுந் தீரும் பவளத்தை குழந்தைகளிடுப்பிற்கட்ட நித்திரையில் மருண்

டமூவதை நீக்கும். நாலுடாங்கு பவளபஸ்பத்தை சிக்கஞ்சபீ னெனும் காடி ஷர்பத்திற்கலந்து மூன்றுநாள்குடிக்க, நரையீரலின் வீக்கத்தையும் அதில்விழுந்த கட்டுகளையும் நீக்குமென்று அமீனுதவுலாவென்பவர் சொல்லியிருக்கின்றார், சூரியன்சந்திரன் சுக்கிரன் இம்மூன்றுகிரகங்களும் ஒருராசியிற் சேர்ந்திருக்குங் காலத்திற் பொன்னில் வெள்ளியும் சமயெடையாகச் சேர்த்துருக்கி அதினால் மோதிரஞ்செய்து அதில்நல்ல பவளத்தைப் பதித்து விரலிலிட்டுக்கொண்டவர் யாவராலும் பூசிக்கப்படுபடுவரென்றும், யாதொரு விசனமுமில்லாதிருப்பரென்றும் சகலவித பொல்லாங்கினின்றும் நீங்குவனென்றும் பரீட்சையுள்ள சிசுபண்டிதர்கள் சொல்லியிருக்கிறார்கள் (வி-தி) குண்டிக்காய்க்காகாது ஒக்காளத்தை யுண்டாக்கும் (ப-ம்) வாதுமைப்பிசின் (ப-ல்) தம்மூல் அஃவயின் இதுவே இரத்தபோலம்.

## இரத்தினவகை.

இரத்தினங்களில் கெம்பு நீலம் புட்பராகம் கோமேதகம் இவைகளை நிரத்தினால் வெவ்வேறு பெயரினை யுடைத்தாயிருந்த போதிலும் ஒரேயினமாகவே இருக்கின்றன.

(சு-ம்) கெம்பும் புட்பராகமும் சாந்தமான் சூடுங் குளிர்ச்சியுமாய் நீலமும் கோமேதகமும் சூடும் வறட்சியுமாம் (பி-ம்)சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) இருதயத்திற்கும் சுகங்கொடுக்கும் தலைமூளைக்கு வலியை கொடுக்கும் அவைகளில் ஒருவராகனெடை பனிநீரிலுரைத்துக்குடிக்கக் காக்காய்வலி பயன் வீண்சிந்தை இருதயம் நடுக்கம் தாவூனென்னும் விஷக்கடி மூலம் விஷஜெந்துக்களின் கடிவண்டலைப்பற்றிய ரோகங்கள் நரம்பைப்பற்றிய இசிப்பு உவைகளைப்போக்கும். விஷக்காற்றைபகற்றும், நீத்துப்போன வுதிரத்தைச் சுத்திசெய்து தடிப்பாக்கும் இரத்த வாந்தியையும் விஷங்களையும் நீக்கும் தேகத்தின் அனலைக்காத்து ஆத்துமசத்தியை வளர்க்கும் இவைகளின் மோதிரங்களைத்தரித்திருக்க நினைத்தகருமமுடியும், மேற்படிதாவூனென்னும் வியாதியணுகாமற் காக்கும், இவைகளை வாயிலடக்க வாய்நாற்றம் தாகம் இவைகளை நீக்கும், இருதயத்திற்கு வலிவைகொடுக்கும், சந்தோஷமுண்டாகும், அவைகளைப்பொடிசெய்து கண்ணிலிடக் கண்ணொளி யதிகரிக்கும், நேத்திரரோகங்கள் வாராமற் காக்கும்.

## வயிரம்.

வயிரத்திற் பலநிறங்களுண்டு அவைகளில் வெண்மையே சிறந்தது.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம், சூடென்று சொல்லுவாருமுண்டு (சௌ-ம்) வயிரத்தை குளிசமாகக்கட்ட அச்சம் விசனமிவைகளை நீக்கி இருதயத்தை பலம்படுத்தும், வெற்றியுண்டாகும் பிரசவவேதனைநீங்கி விரைவிற் பிரசவமாகும், அறுகோணமாயிருக்கிற வயிரத்தை குளிசமாகக்கட்டக் காக்காய்வலி நீங்கும் (வி-தி) பற்களிற் றேய்க்கப் பல்லுடைந்துபோகும் வயிரத்தில் அணுவளவாவதுட்கொள்ளக் குடல் முதலிய உள்ளுறுப்புகளை யறுக்கும் (ப-ம்) பசுவின்பாலில் நெய் சேர்த்துக் குடித்து வாந்தி யெடுக்கவும்

## அகிக் இதுவே மெனியெனு மிரத்தினம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்தவிரத்தமுங் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) இதைப்பண்பித்து இரண்டு பணவெடைபஸ்பத்தை தனித்தாவது ஆப்பில் என்னுஞ் சீமையிலந்தைப் பழத்தின் பாணத்தோடாவது சாப்பிட இருதயத்திற்கு வலிமை கொடுக்கும், கிபகானென்னும் பயித்தியத்தை நீக்கும், ஒருவிதத்திலுமடங்காத பெரும்பாடு இரத்தவாந்தி இரத்தபீனிசம் இவைகளைக்கட்டும். கட்டிகளையுங்கற்களையுமுடைக்கும் கண்ணிலிட பூளையதிகரிக்கும். இப்பஸ்பத்துடன் முத்தும் பவளமுஞ்சேர்த்துப்பொடிசெய்துபற்களிற்றேய்க்க, வேரறுத்தசையும் பற்களுங்கெட்டிப்படும் ஈறுபலக்கும் ஈறிலிரத்த மோடிவருவதைநிறுத்தும் அகிக்க என்னுங் கல்லைக் குளிசமாகக்கட்டப் பகைவரின் கோபமடங்கும் ஷை கல்லின் மாமிசங்கழுவியநீர் நிறத்தைப்போலிருப்பதைக் குளிசமாகக்கட்டச் சகல விரத்தைப்பெருக்கையுங்கட்டும், முக்கியமாக பெரும்பாடு இரத்தபீநசம் இரத்தவாந்தி இவைகளை நிறுத்தும் இதின்மோதிரத்தைதரிக்க கிம்கான் என்னும் பயித்தியந்தீரும், பகைவரை யஞ்சச்செய்யும் மந்திரங்கள் பலிக்கும், பிரார்த்தனை கைகூடும், கள்ளர்களஞ்சுவார்கள், இத்துடன் கஸ்தூரியுங்கற்பூரமுஞ்சேர்த்து ஜெயித்தூனெண்ணெயிலுரைத்து, நெற்றியில்திலதமிட்டிருக்க, அரசர்முதலிய அதிகாரிகள் யாவரும் மேன்மைபடுத்திக் கொண்டாடுவார்கள் வசீகரமுண்டாகும் சகலசெந்துக்களும் நேசிக்கும், பைரோஜா என்னுங்கல்லுக்கு மிதுவேகுணமாம் (வி-தி) குண்டிக்காய்க்குதவாது (ப-ம்) வாதுமைப்பிசின் (ப-ல்) பவளம்.

## பைரோஜா என்னு மிரத்ினம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்தவிரத்தமும் குறைந்தவுணவுமாம் (சௌ-ம்) இதைத்தனியா அல்லது அனுபானங்களோடு தேனிலுரைத்துச்சாப்பிட்டுவர சந்தோஷத்தை கொடுப்பதோடு சிரசு மார்பு இரப்ஜப முதலிய உள்ளுறுப்புகள் இவைகளுக்கதிக சுகங்கொடுக்கும் நேத்திரரோகங்களனைத்தை நீக்கும் கற்களையுடைக்கும். இருதயத்திற்கு வலிமைகொடுக்கும், கிப்கான் என்னும் பயித்தியத்தை நீக்கும்பேதிகளை நிறுத்தும், உள்ளுறுப்புகளிலுள்ள புண்களையாற்றும், இதில் அரைவராகனெடை முதல் ஒருவராகனெடைவரையிற் சாரயத்திலுரைத்து குடிக்க சகல விஷங்களும்நீங்கும், இதில் ஒருவராகனெடையில்மூன்றிலொருபங்கைச் சலத்திலுரைத்து தேள்கொட்டின வாயிற்றடவ, அல்லதுட்கொள்ள உடனே விஷங் குளிர்ந்துபோகும், இதின் மோதிரந் தரித்திருக்கப் பகைவர்கள் போற்றுவார்கள். இடிவிலசிப்போகும்சலத்திலமிழவொட்டாது. விஷஜந்துக்களோடிப்போகும். இக்கல்லை என்னேரமும் பார்ப்பதினல் கண்களுக்கொளியதிகரிக்கும் மூன்றாம்பிறையை தரிசித்தவுடனே இக்கல்லைப்பார்ப்பதினற் பாக்கியமுண்டாகும். இக்கல்லையுரைத்து தேகத்திற் பூசிவர இளைத்து மெலிந்த தேகம்பருத்து வலுமைபெறும் (வி-தி) குண்டிக்காய்க்காகாது (ப-ம்) வாதுமைப்பிசின்.

## மரகதம்.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்தவிரத்தமுங்குறைந்தவுணவுமாம் (சௌ-ம்) தலைமூளை இருதயமுதலிய இராசவுறுப்புகளுக்கும் ஆத்துமாவிற்கும் வலிமைகொடுக்கும் சந்தோஷத்தை யுண்டாக்குப் பலவிதவிதனங்களை நீக்கும் ஆத்தும அனலைக்காக்கும் இரைப்பைக்கு வலிமையதிகரிக்கும், காக்காய் வலி கிப்காப் என்னும்பயித்தியம் பக்கசூலை மார்புவலி இரத்தவாந்தி இரத்தபீநசம் இரத்தபேதி காமாலை வீக்கம் விஷகடிகள் நீரடைப்பு கல்லடைப்பு ஈரலின்பலவீனம் இவைபோன்ற ரோகங்களை நீக்கும். பெருவியாதி எவ்வளவுமுதிர்ந்ததா யிருந்தாலும் நீங்கும் பாம்புமுதலிய ஜந்துக்களின்விஷந்தலைக்கேறி, உயிரடங்கினபோதிலும், உச்சியிற்கீறி எட்டுநெல்லெடை நல்லபச்சையைபொடிசெய்து, அதில்அமுக்க உடனே பிராணன்வரும் பச்சையைபொடிசெய்துதண்ணிலிட, நேத்திரரோகங்களனைத்துந்தீர்ந்தொளியுண்டாகும், பத்

சைக்கல்லை யென்னேரமும்பார்த்துவருவதால் சாலேசரம்நீங்கும், பச்சையைக்குளிச மாகவாவது மோதிரத்திற் பதித்தாவது தரித்துக்கோள்ளக் காக்காய்வலி காணுது, மேகரிணங்கள் முதலிய சகலரணங்களும் வாராது, இதைப்பற்றி அரசர் முதலிய கனவான்கள் குழந்தைகளுக்குப்பச்சைகல் லாபரணங்களைப் பூட்டுகிறார்கள், கன்னியராசியில் சூரியன் உச்சத்திலிருக்கும்போது இரண்டுகழிஞ்சு பொன்னும் இரண்டுகழிஞ்சு வெள்ளியுஞ் சேர்த்துருக்கி, மோதிரம்செய்து இதில்ஒருகழிஞ்சு நல்ல பச்சைக்கல்லைப்பதித்து விரலி லணியச் சகலரும் அஞ்சிக்கொண்டாடுவார்கள் நாடியகருமங்கள் கைகூடும், செல்வமதிகரிக்கும் விஷங்கள்முறியும், காக்காய்வலி முதலியரோகங்களும், பேய்முதலிய கிரகதோஷங்களு, மணுகாது பச்சைக்கல்லைத் தரித்திருப்பவர் தேகத்திற்ஈக்கள்மொய்க்காது, இதுவேநல்லபச்சைக்குப் பரிட்சையாம் (வி-தி) இல்லை (பு-ம்) இல்லை(ப-ல்) ஜபாஜத்.

## ஜபாஜத்என்னு மிரத்தினம்.

ஜபாஜத் என்னுங்கல்லும்மரகதமும் பொன்விளையு மிடத்தில் சனியுஞ் சந்திரனுஞ்சேர்த்து, பிரகாசிக்கும்போதுஉண்டாகின்றன, வென்றும் சூரியகிரணங்களா லவைகளுக்குஒளியுண்டாகின்றன் வென்றும் பூர்வீக பண்டிதராகிய அரஸ்த்தா தாலூது என்பவரால் சொல்லப்பட்டிருக்கின்றன.

(சு-ம்) குளிர்ச்சியும்வறட்சியுமாம் (பி-ம்) சுத்தவிரத்தமுங் குறைந்தஉணவுமாம் (சௌ-ம்) பச்சையின் குணங்க்ளியாவுமிதற்குமுண்டு கல்லடைப்பு நீரடைப்பு இரத்தவாந்தி அவைகளைநீக்கும்இதில் நித்தியம் அரைவராகனெடைசாப்பிட்டுவரப்பெருவியாதிநீக்கும். பெருவியாதியைக்கண்டிப்பதி லிதற்குமிஞ்சின மருந்தொன்றுமில்லை சந்திரம்மீனவிராசியிலிருக்கும்போது இந்தக்கல்லிற் குதிரையின் உருவஞ்செதுக்கி, மோதிரததிற்பதித்து, இடதுகையின் அணிவிரலிற் றரிகக, சந்தோஷமுண்டாகும் காககாய்வலிநீங்கும், பிரசவவேதனை நீங்கிவிரைவிற்பிரசவமாகும், சந்திரன் கற்கடகவிராசியி லிருக்கும்போது, இந்தக்கல்லை மச்சத்தினுருவஞ்செதுக்கி, ஈயத்தகட்டிற்குள்மடித்து வலையிற்கட்ட பாதாளததிலிருக் குமச்சங்களெல்லாம் வலைக்குள்ளகப்படும். இக்கல்லினுற் செய்தயாத்திரத்திற் சாராயங்குடிக்கப் போதையிராது (வி-தி) தாதுநஷ்டப்படும் (பு-ம்) தேன் (ப-ல்) பச்சை.

## மஹமன்சுருஃ பஹமன்ஸ்பேத்.

(சு-ம்) சூடுங்கொழுமையுமாம் (பி-ம்) சுத்தவிரத்தமுங் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) தாதுபுஷ்டியும் தேகபுஷ்டியுமுண்டாகும் தைரியமதிகப்படும் காற்றைர்கண்டிக்கும். இரசத்தைப்பற்றியரோகங்கள், கல்லடைப்பு, காமாலை, இவைகளைநீக்கும், இத்துடன் உப்பைச்சேர்த்துத் தேனிலரைத்து, முகத்திற்றடவ, மங்கு தேமல் படைமுதலியவைநீங்கி அழகுண்டாகும், தலைமயிரிற்பூச அதிகவாசனையுண்டாகும். குங்குமப்பூவுடன் சேர்த்தரைத்து யோனிக்குள்வைக்க கருப்பங்குளிரும் துர்கந்தம்நீங்கும். இதின்கிஷாயத்தில் வாதுமப்பருப்புஞ் சற்கரையுஞ்சேர்த்துக்குடிக்கத் தேகபுஷ்டியுண்டாகும் (வி-சி) சிறுநீர்ப்புகளுங் குதவாது (ப-ம்) அனிசூன்வாதுமைப்பிசின் (ப-ல்) ஒன்றுக்கொன்றும் இல்விரண்டில் மஹமன் சுருஃஅதிகவல்லமையுமுடையது சுருஃஎன்பதுசிகப்பு ஸ்பேத்என்பது வெண்மை.

## பனப்ஷா.

(சு-ம்) குளிர்ச்சியும் ஈரமுமாம் (பி-ம்) சுத்தவிரத்தமுங்குறைந்த உணவுமாம் (சௌ-ம்) பேதியாகும், பித்தரோகங்களைக்கண்டிக்கும்தாகத்தையடக்கும் உதிரக்கொதிப்புஉட்டினசுரங்கள் இருமல் மார்புதொண்டை இவை யுலர்ந்துபோதல், நீர்ச்சுருக்கு நீரடைப்பு சூட்டைப்பற்றியதலைநோய் சூலைபக்கவாதம் இருதயஅடக்கம் சலதோஷம் பீநசம் சிசுக்களின் காக்காய்வலி இவைகளைநீக்கும் இரண்டுமுதல் நாலுவராகனெடை பனப்ஷா சூரணத்தைச் சுத்தஜலத்திற் குடித்துவரப் பித்தபேதிகளைநிறுத்தும் மூன்றுகழிஞ்சு பனப்ஷா சூரணத்துடன்மேனு அல்லதுநாட்டுசசக்கரையைச் சமபாகங் கூட்டிச்சாப்பிடச் சுகமாகப் பேதியாகும். இத்துடன் குல்கந்துசேர்த்து சாப்பிடத் தொந்தசுரங்களைநீக்கும் குலேபன்ப்ஷா வென்னு மிதின்பூ சகலவிஷங்களையும் போக்கும். இதையரைத்தும்பற்றிட உட்டினத்தலைவலி, கண்வலி, சிசுக்களின் சூதகம்வெளிப்படல், இவைகலை நீக்கும், இதின்தைலத்திற்கு மிதுவேகுணம். (வி-தி) இருதயத்துக்குதவாது வயுறுபிடிக்கும், ஒக்காளமுண்டாகும் பொருமலுண்டாகும் (ப-ம்) அனிசூன் (ப-ல்) தாமரைப்பூ

## பறங்கிப் பட்டை.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் (பி-ம்) சுத்தவிரத்தமுங் குறைந்தஉணவுமாம் (சௌ-ம்) தலைமூளை முதலிய இராஜவுறுப்புகளுக்கும், வீர்

துவிளையுமுறுப்புகளுக்கும், ஆத்துமச்சூட்டிற்கும், அதிகவலிமைகொ டுக்கும் காற்றைக் கண்டிக்கும் கிரந்திபுண் வெள்ளைமுதலிய மேகரோ கங்களைநன்றாகக் கண்டிக்கும். வெண்குஷ்டங் கருங்குஷ்டம் படைகள் முதலிய தீராத ரோகங்களைத்தீரும் ஆனால் இதைச் சூரணமாக்கிஉ பயோகிப்பதைவிடக் கியாழமாக வுபயோகிப்பதி லதிக குணமுண்டெ ன்றும் உப்புப் புளிப்பு முதலிவைகளைவிடடுப் பத்தியத்துடன் சாப் பிடுவதில் குணத்தை விடக் குணக்கேட்டையே மிகுதியாகத் தருவதால் பத்தியமொன்று மில்லாமற் சாப்பிடுவதே நன்மையென்றும் அநேகப ண்டிதர்களா லொப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது; இரண்டுவராகனெ டைபறங்கிப்பட்டையை மெல்லியதாய்ச் சீவி ஒருவராகனெடை சீமை ரோஜாப்பூவுடனே சேர்த்துக் கியாழமிட்டு இரண்டுவேளையுங் குடித்து வருவதோடு ஒவ்வொரு வராகனெடை பரங்கிப்பட்டைச் சீவலைதா ம்பூலத்தோடு போட்டுக்கொண்டு சாரத்தை விழுங்கிவரவேண்டியது. இப்படிவருஷந்தோரும் ஒவ்வொரு மண்டலஞ் சாப்பிட்டுவர மேகரோ கங்களொன்று மணுகாது; இக்குணங்களேல்லாம் புதியபட்டைக்கேய ன்றிப் பழயபட்டைக்கில்லை, (வி-தி) அவபத்தியத்தினல் கைகால் பிடிப் புண்டாகும் (ப-ம்) பசுவின்பாலிற் சுத்திசெய்யவேண்டும். இதைச்சாப் பிட ஆரம்பிக்கும் போதே பத்தியமில்லாமல் சகலத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். ஆரம்பத்திற் சேர்க்காத பதார்த்தங்களை பின்புசே ர்க்கக்கூடாது (ப-ல்) கொய்யாகம் அன்னுமரம்.

## பனிநீர்,

(சு-ம்) சூடுங்குளிர்ச்சியுமாம். (பி-ம்-) சுத்தவிரத்தமுங்குறைந்தவு ணவுமாம். சௌ-ம்) பனிநீரைக் குடிப்பதினல் தலைமூளைக்கும் ஈரற் குலைக்கும், தேகத்திற்கும், அதிகவலிமை; கொடுக்கும். இருதயத்துடிப்பு நீங்கும்ஷர்பத்துகளுடன் சேர்த்துக்குடிபதாற் சந்தோஷமதிகரிக்கப்படு ம் பனிநீரைச் சுடவைத்து இளஞ்சூடாகக்குடிக்க, இரத்தவாந்தி மார்பு தொண்டை யிவைகளின் வறட்சி மூக்கில் நீர்வடிதல் வயிற்றுநோய் வ யிற்றுக்கடுப்பு ஈரலைப்பற்றியரோகங்கள் இவைகளைநீக்கும் பனிநீரை ஆ க்கிராணிப்பதாலும் பூசுவதாலும், சூட்டைப்பற்றியதலைவலி கண்ணை ப் மயக்கம்மூர்ச்சை இவைகள் தீரும். இருதயகமலத்திற்கும் தலைமூ ளைக்கும் வலிமை கொடுக்கும் (வி-தி) தாதுநஷ்டமுண்டாகும் மயிர்வெ ளுக்கும் (பு-ம்) தேன் கற்கண்டு (ப-ல்) இல்லை,

## பாதரசம்,

பாதரசம் அனேகதோஷங்களோடு கூடியிருப்பதாலும், சுத்தக்கிரமப்படி அத்தோஷங்களை நீக்குவ தரிதாகையாலும், உள்ளுக்குகொடுக்கும்; அவுஷதங்களோடு சேர்த்துக்கொடுக்கப்படாதென்றும் அவசியமாகக்கொடுக்கவேண்டியது, சிலதருணங்களில் மாத்திரம் பதரசத்தைத்தனியா யொருபக்குவமுஞ் செய்யாமல் உள்ளுக்குக் கொடுக்கலாமென்றும், செம்புமுதலிய தாழ்ந்தஉலோகங்களைப் பொன்னுக்குங்குணமுடைய பாதரச பஸ்பம் மனிதர் தேகத்திற்கும் உயர்ந்த குணங்களைத்தருமாகையால் அதைமாத்திரமே உள்ளுக்குக் கொடுக்கலாமென்றும், அவ்வுயர்ந்தகுணமில்லாத பாதரசபஸ்பம் மனிதர் தேகத்ற்கு எண்ணிறந்த தீங்கைத் தருமாகையால் எச்சமயத்திலும் உள்ளுக்குக்கொடுக்கப்படாதென்றும், வெளிச்சிகிச்சைகளுக்கு ஷைகிராமங்கள் வேண்டியதில்லையென்றும், வேண்டியபடி யுபயோகிக்கலாமென்றும், முன்னோர்கள் சொல்லப்பட்டிருக்கின்றது,

(சு-ம்)குளிர்ச்சியும் ஈரமுமாம் (பி-ம்) இல்லை (சௌ-ம்)குன்மவலியினா லதிகவேதனைப்படும்போது சாதாரணமாகச் சுத்திசெய்த ஒருபலம் பாதரசத்தைப் பற்களிற் படாமற் குழலின் வழியாகத் தொண்டையில் வார்த்தவுடனே அபானத்தின்வழியாக வெளிப்பட்டு, வயிற்றுவலியை நீக்கும். ஒருசேர்பாதரசத்தை சாதாரணமாகச்சுத்திசெய்து,கண்ணாடிப் பாத்திரத்தில்விட்டு, அதின்பேரில் அரைப்படி நல்ல சலத்தைவிட்டு, வாயைமூடி ஒருவாரம்வைத்தும் பின்புநித்தியம், காலாழாக்கு சலமிறுத்துக்குடித்துவிட்டு வேறேகாலாழாக்கு நல்ல சலத்தைஅந்த பாத்திரத்தில் வார்த்துவிடவும் இந்தப்படி நித்திவர சகலமேக ரோகங்களும் நீங்கும் சுத்திசெய்த ஒருபலம் பாதாசத்தை உழக்குப் பசுவின்பாலிற்சேர்த்துக்காய்ச்சிப் பாலைமாத்திர மிறுத்து குடிக்சவும் இந்தப்படிநித்தியம் அந்த பாத ரசத்திற்றானே பாலைசேர்த்துக் காய்ச்சி யிறுத்துக் குடித்துவரப் பசியும் தாதுபுஷ்டியுமதிகரிக்கும் பாதரச பஸ்பத்துடன் முலாம்பழவிரையும், கசப்பு வாதுமைபருப்புஞ் சேர்த்து, அரைத்து தேகத்திற் பூசச் சொறிசிரங்கு தினவு டை முதலியவை தீரும். (வி தி) வாய்வேக்காடு ஒக்காளம் கால்முடக்கு, வயிற்றுவலி, முதலியதுண்டாகும் (ப-ம்) சுத்திசெய்து புஷ்பிக்காமற் பச்சையாகக்குடிக்கவும் (பு-ல்) காரீயம்,

## பாஷாணங்கள்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ப்) அசுத்த வுதிரமும் அசுத்த வுணவுமாம் (சௌ-ம்) ரணங்களையாற்றும், எண்ணெயி லெரித்துப் பூச சொறிசிரங்கு தினவுமுதலியவை நீங்கும் (வி-தி) விஷமாம் (ப-ம்) ஆடு முதலிய மிருகங்களின் தோலைச்சுட்ட சாம்பலைச் சலத்திற் கரைத்துக் குடிக்கவும் (ப-ல்) ஒன்றுக்கொன்று பதிலாகும்.

## பாதுரன்சு போயா.

(சி-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்தவிரத்தமுங் குறைந்த வுணவுமாம் (சௌ-ம்) தலைமூளை முதலிய இராசவுறுப்புகளுக்கும் இரைப்பைக்கும் வலிமைக்கொடுக்கும், புத்திகூர்மையாகும். ஞாபகத்தைக் காக்கும், தீபனமுண்டாகும், மூச்சடைப்பு விக்கல் பயித்தியம் இவைகளை நீக்கும், இரசத்தையும் வண்டலைப்பற்றிய ரோகங்களைக் கண்டிக்கும் தலைமூளையின் கட்டுகளையுடைக்கும். இதனிலையை ஐந்துவராகனெடை முதல் பத்துவராகனெடைவரையிலரைத்து சாராயத்திற் கலந்துகுடிக்கவெறிணுக்கடி விஷப்பூச்சிகளின்கடி, இவைகளின் விஷங்களையாற்றும். இதன் கியாழத்தைக் கொப்பளிக்கப் பற்களின்வலிநீங்கும், இதையரைத்து பற்றிட கீல்வாதம் நீங்கும். பிறுஷ்டத்திற்காகாது (ப-ம்) விலாம்பிசின் குந்திரிக்கம் (ப-ல்) இரண்டுபங்குமட்டும் மூன்றிலிரண்டு பங்கு கொடிமாதுலம்பழத்தின் மேற்றோலுமாம்.

## பாலங்கு.

(சு-ம்) சூடுங்குளிர்ச்சியுமாம் (பி-ம்) சுத்தவிரத்தமும் அதிகவுணவுமாம் (சௌ-ம்) இருதயத்திற்கு வலிமைகொடுக்கும் பயித்திய ரோகங்களை நீக்கும்; இதைப்பனிநீரி லூறவைத்து தந்தக்கோழையிற் கற்கண்டுசேர்த்துக்குடிக்க, இரத்தபேதி இரத்தக்கடுப்பு இவைகளை நீக்கும் (வி-தி) இல்லை (ப-ம்) இல்லை (ப-ல்) திருநீற்றுப்பச்சைவிரை.

## பாத்ஜஹர்.

பாத்ஜஹரென்பது காட்டாடு காட்டுப்பெருங்குரங்கு இதைப்போலொத்த மிருகங்களின் பித்துப்பையிலும் அதற்கடுத்தவிடங்களிலு முண்டாகிற ஒருவித கல்லாம் இதுநீட்டும் வட்டமாயும் திரண்டும் பளபளப்பாயும் புரைபுரையாயும் மஞ்சட்கலந்த பச்சைநிறமாயுமிருக்கும்

இதைப்போல கட்டுவருக்கமுமுண்டு இதையறிவதற்கு ஊசியை சிவக்கக் காய்ச்சி அதிற்குத்திப்பிடுக்க மஞ்சள்நிறம் புகை காணுவதோடு ஊசிமுனையும் மஞ்சனித்திருக்குமாகில் சுயமென்னும் கறுத்திக் கூட்டென்று மறிக. இன்னமும் வெள்ளைச் சாம்பலிற்றேய்க்க பச்சை நிறமாகாது பாலிலுரைத்துக கலக்கப் பாலுறைந்து சிவப்பதும் சுயமாம்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்தவுதிரமுங்குறைந்த வ்ஷ்ணவுமாம் (சௌ-ம்) எல்லா தேசத்திற்கும் ஒத்திருக்கும், நாகப்பாம்பு முதலிய சகலவிஷஜெந்துக்களின் விஷங்களையும், தாவரஜங்கம விஷங்களையும் க்ஷணத்தில் முறிக்கும் தலைமூளை இருதயமுதலிய இராசவுறுப்புகளுக்கும் வலிவைக் கொடுக்கும்; ஆத்துமாவின் அனலைக் காப்பாற்றும் ஐம்புலன்களின் சத்தியை யதிகப்படுத்தும் விசனங்களை யாற்றும் சந்தோஷத்தை யுண்டாக்கும் தாதுவிருத்தியை யதிகப்படுத்தும், மோகத்தையுண்டாக்கும் தேகத்தின் அவயவங்களுக்கு பலன்கொடுக்கும் கில்வாதங்களை நீக்கும் இதின் மூன்றுகுண்டுமணி யெடையை நித்தியம் சாப்பிடுவதினுல் சகலவிஷங்களின் தோஷமும் விஷக்காற்றின் தீங்குகளுமணுகாது இதை கொத்தமல்லி இலைச்சாற்றிலுரைத்து பூச வீக்கங்கள் நீக்கும் பனிநீரி லுறைத்துப்பூசத் தாவூனென்னும் விஷககடிகள் கரையும் சாராயம் பன்னீர் சோம்பு கியாழ மிவைகளி லொன்றிலுரைத்துக் கடிவாயிற் பூசிக்கொஞ்ச முள்ளுக்குங்கொள்ளப் பாம்பு தேள் முதலிய ஜெந்துக்களின் விஷங்கள் உடனே நீங்கும். விஷமுண்டவர்களுக்கு இதையொரு பிங்கானில்வைத்து அதற்குமேல் இரண்டங்குலம் நிற்கும்படி பசுவின்பாலைக்கரந்து ஒரு ஜாமம்வைத்துத் பின்பு பாலைமாத்திரம் குடிக்கச் செய்தாலும் விஷமுறிந்துபோகும் இதை ஆறு குன்றிமணி யெடை முதல் பன்னிரண்டு குன்றிமணி யெடைவரையில் உள்ளுக்குக் கொள்ளலாம். அதற்கதிகப்பட்டாற் கொல்லும் (வி-தி) ஒட்டின தேகத்தோருக்கு வயிற்றுப் பிடுங்கலும், இரத்தபேதியும், ஒக்காளமுமுண்டாகும் (ப-ம்) குளிர்ச்சியான பதார்த்தங்களாம் (ப-ல்) பசுவின் மடியிலுண்டாகும் இஜருலஷீக் என்னும் கல் அல்லது பூமியிலுண்டாகும் பாத்ஜஹரே மஹதனி என்னுங்கல் அல்லது நல்ல நீரையுடைய மரகதம் அல்லது ஸபர்ஜத் என்னுங் கல்.

## பாத்ஜஹரேமஹதனி இது வே ஜஹா:மொஹரு.

இது இந்துதேயப் பருவதங்களில் அதிகமாக உண்டாகின்றதாயும் பலவித நிறங்களையும் நல்மணத்தையும் நல்ல சுவையையு முடை

யுதாயுமிருக்கின்றது அபினி அல்லது வேப்பிலையோடு சேர்த்தரைப்புதால் இவைகளின் கசப்பு நீக்குவதும் அவைகளை மென்றபின்பு இதைமெல்லக் கசப்புநீங்கி வாய் தித்திப்பதும், இதில் யிரண்டரிசிப் பிரமாணத்தை பாம்பின் வாயிலிடப் பாம்புசாவுவதும், இக்கல்லை யறிவதற்குப் பரீக்ஷையாமஜெந்து விஷம் பாஷாணவிஷம் மூலிகைவிஷ முதலிய சகல விஷங்களையு முறிற்கும மற்றைக் குணங்களெல்லாம் ஷைபாத்ஜஹறுக்குச்சொன்ன குணங்களேயாதலால் இங்கே விவரிக்க வேண்டியதில்லை சந்திரன் விருற்சிகவிராசியி லிருக்கும்போது, இக்கல்லில் தேளுருவங்கீறிப் பொன்மோதிரத்திற் பதித்து விரலிலிடத் டுதள்களோடிப் போகுமென்றும் விஷங்கலந்த சாதத்தில் கைவிட விஷமுறியுமென்றும் தேள்முதலிய விஷஜெந்துக்களாற் கடிக்கப்பட்டவர்களுக்கும், விஷமுண்டையவர்களுக்கும், மேற்படி மோதிரத்தை வாயிலிட விஷ முறியுமென்றும் அஜியா தாவூதென்பவராற் சொல்லப்பட்டிருக்கின்றது.

## பார்ஜகரேகன்பஷ்

## இதுவே நூள்ளம்பன்றியின் கல்லாம்.

இதை ஈரோப்பியர்கள் 1190-ம் ஆண்டில் கண்டுபிடித்தவர்கள். இது பிரமாணத்திலும் உருவத்திலுக் நிறத்திலும் ஜாதிச்காயைப்போலவே யிருக்கும் இதுபத்தாவி முதலிய தீபாந்தரங்களிலுண்டாகின்றது.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்)—(சௌ-ம்) இரசத்தைப் பற்றிய ரோகங்கள் அஜீரணம் குண்டிககாய் ஊத்தாம் பிள்ளை யிவைகளைப் பற்றிய ரோகங்கள் சன்னி விஷங்கள் இவைகளை நீக்குவதோடு குண்டிக்காய்க்கும் ஊத்தாம் பிள்ளைக்கும் வலிமைக் கொடுக்கும் இதை உபயோகிக்கும் விதம் ஒரு பாத்திரத்தில் இருபது கழஞ்சு முதல் நாற்பது கழஞ்சு வரையில் நல்ல ஜலத்தை வார்த்து அதில் இக்கல்லை மெதுவாகப் போட்டு ஒரு நிமிஷத்திற்குப் பின் எடுத்துவிட அச்சலத்திற் கசப்பேறும், அதை இரண்டு தடவையாக உள்ளுக்கு கொடுக்கவும். சீக்கிரத்திற் கசப்பேறுவது நல்லக் கல்லாம். கல்கத்தா தேசத்தில் சையத் மஹம்மது றஜாகான் சாயபு என்பவர் ஆரமனி தேயத்தவர்த்தகனிடத்திலே 4000-ரூபாவுக்கு நாலு கல் வாங்கினதாகவும் அதில் தனக்கொரு கல் கிடைத்ததாகவும் அதைமேற்சொன்ன ரோகருக்கு கொடுத்தும் பரிசித்ததல்லாமல் சிலவித்து சன்னி கண்டு உண

விழுந்திருந்த ஒரு பெண் பிள்ளைக்குக் கொடுத்துச் சௌக்கிய மடைந்த தாகவும் கிரந்தகர்த்தாவால் எழுதப்பட்டிருக்கின்றது கன்பஸ் என்பது முள்ளம்பன்றி.

## பி சி ன் க ள்.

(சு-ம்) சாந்தமாம் (பி-ம்) சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) விளாம்பிசின் கருவேலம்பிசின் புரசம்பிசின் ஆவாரம் பிசின் இவைமுதலிய பிசின்களுக்கெல்லாம் ஒரே குணமாம் முடல் மார்பு இவைகளுக்கு வலிமை கொடுக்கும், ஔஷதங்களின் வெப்பத்தை தணிக்கும். பேதி இருமல் மார்புநோய், நுரையீரலைப் பற்றிய புண் உவைகளுக்கு உபயோகப்படும் இதை நெய்யிற் பொரித்து சூரணஞ் செய்து சுத்தஜலத்திற் கொடுக்க பேதியைக்கட்டும், இரத்தமும் பெரும் பாடு முதலாகிய உதிரப்போக்கு வியாதிகளை நீக்கும், விளாம்பிசினைக் கோழிமுட்டை வெள்ளைக்கருவிற் குழைத்து நெருப்புபட்ட புண்ணிற் பூச ஆறும். பனிநீர் உரைத்துக் கண்ணிலிடக் கண்சிவப்பு மாறிக் குளி ர்ச்சியடையும் கற்கண்டு சேர்த்து இறுகக் காய்ச்சி உண்டைசெய்து வாயில் அடக்கி அதில் ஊறும் சாரத்தைவிழுங்க இருமல் நீங்கும் கபத் தையறுக்கும் புரசைபிசினைப்பசுவின்பாலிற் சேர்த்துக்காய்ச்சி நெய்யுஞ் சர்க்கரையுங் கலந்துகுடிக்கத் தாதுபுஷ்டியும் அழகுமுண்டாகும். இடு ப்புவலி நீங்கும். இது பிரசவித்த ஸ்திரீகளுக்குமிகவும் உபயோகப்படும் (வி-தி) கீழுறுப்புக் குதவாது (ப-ம்) வாதுமைப்பிசின் (ப-ல்) ஒன்றுக் கொன்று.

## பீ த ரோ க ணி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமும் குறைந்தவுண வுமாம் (சௌ-ம்) வாய்வுகளைக் கண்டிக்கும். கட்டிகளை யுடைக்கும். தோலை மிருதுவாக்கும், பளபளப்பை கொடுக்கும் அதை கியாழமிட்டு குடிக்க காமாலை வயிற்றுப்புடுங்கள் நீங்கும் அதைத் தேனில் உரைத் துப்பூசத் தேமல் முதலிய படர்தலைப் போக்கும் பற்களின் வலியை மாற்றும் நசியமிடக் கபாடத்தைப் பற்றிய மாசுகளை அறுக்கும், கண்ணி லிடக் கண்புகையை மாற்றும் (வி-தி) குண்டிக்காயிற்குதவாது (ப-ம்) தேன் (ப-ல்) மஞ்சள்,

## மணிப்புங்கு.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்த உதிரமும் அசுத்த வுணவுமாம் (சௌ-ம்) தீபனத்தையுண்டாகும் இரட்டை ஈரல் நரம்பு இவைகளுக்கு வலுவைக்கொடுக்கும், வாயுவைக்கண்டிக்கும். தாதுவிருத்திக்கும். அதன் இலைச்சாற்றால் வாதரோகங்கள் நாசமாம். சுரங்கள் மாறும் சிக்கஞ்சபீனில் சேர்த்துக்குடிக்க குன்மத்தைபோக்கும். அதன் வேரால் உதிரசிக்கல் நீங்கும். சுவாசம் பக்கசூலை இவைகளுக்கு உபயோகப்படும்

## புரசங்கொட்டை.

(சு-ம்) சூடும் குளிர்ச்சியும் (பி-ம், அசுத்த வுதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம் தீபனத்தையுண்டாக்கும் வாத பித்த ரோகங்களுக்கு உபயோகப்படும். அதன் பருப்பை சுத்திசெய்து நெய், பால்சருக்கரைசேர்த்து லேகியங் கிண்டிப் பிள்ளைகளுக்குக் கொடுக்க வயிற்றிலுள்ள கிருமிகளைக்கொல்லும் வயிறு சுத்தப்படும் (வி-தி) ஓக்காளிக்கும், வாந்தியாகும் (ப-ம்) நெய் பால் சருக்கரை (ப-ல்) குரோசானி ஓமம்.

## பூமிச்சருக்கரைக் கிழங்கு.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) வாய்வுகளைக்கண்டிக்கும், உதிரசிக்கல் அறும் விஷங்களைப்போக்கும் வயிற்றுவலி சில்வாதம் இருமல் காமாலை வீக்கம் பிசிவு இவைகளுக்கு உபயோகப்படும். சிக்கஞ்சபீனிற்கலந்து குடிக்க முறைக்காய்ச்சலைப் போக்கும், தேனிற்சேர்த்துக் கொடுக்க மூச்சடைப்பு நாட்பட்ட இருமல் இவைகளைப்போக்கும். பற்றுபோடக் கைகால் குடைச்சல்களை நீக்கும், ஜெயித்தூள் எண்ணெயில் எரித்துப்பூசப் பக்கவாதம் சூலை இவைகளும் காதிலிடக் காதுவலியும் குணப்படும், காடியில் அரைத்துப்பூத் மயிர் உதிர்வதை நிறுத்தும் இதன் தைலத்துக்கும் இதுவேகுணம் (வி-தி) நுரையீரலுக்கும் நீர்த்தாரைக்கும் உதவாது (ப-ம்) அனிசூன் (ம-ல்) அக்ராகாரம்.

## பூனைக்காலிவிரை.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) தாதுவளரும் தேகபுஷ்டி யுண்டாகும், உதிரச்சிக்கலை

யறுக்கும் இதை வெங்காயவிரை காரட்டுவிரையோடு சமமாகச்சோத்து ஆலம்பால் அல்லது அத்திப்பாலில் அரைத்து வேளைக்கு இரண்டு வராகனெடையாகப் பசுவின்பாலிற் றுழைத்து ஏழுநாள் சாப்பிட்த் தாதுவிர்த்திக்கும். இடுப்புவலி நீங்கும் (வி-தி) பவனவாயுவிற் குதவாது (ப-ம்) இலந்தைப் பழம் பல் துத்திவிதை நிலப்பனங்கிழங்கு காரட் என்பது இங்கிலீஷில் ஒருவித கிழங்கின்பெயர். பாரிசுபாஷையில் காஜ்ஜ யென்பர்.

## பெருங்காஞ்சொறி.

(க-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமுங்குறைந்தஉணவுமாம் (சௌ-ம்) தாதுவிருத்தியுண்டாம். மார்பையும் நுரையீரலையுஞ் சுத்தப்படுத்தும் நீரடைப்பு உதிரச்சிக்கல்களை நீக்கும். கட்டுகளைத்திறக்கும் அதன் இலையை யரைத்து மூக்கில்வைக்க உதிர பீனிசத்தைநிறுத்தும் யோனியிற்பூச உதிரச்சிக்கலைப்போக்கும், பெண்குறி வெளிபட்டதை உள்ளடக்கும் கட்டிகள்மேற் பூசக்கரைக்கும், உப்பிட்டரைத்து வெறி நாய்கடித்த புண்ணிற்பூச ஆறும். ஜெயிததூள் எண்ணெயில் எரித்துப்பூசக் காதுவலி முதுகுப்புண்தீரும். வாற்கோதுமைமாவுடன் சேர்த்து அரைத்துப் பலகாரவகைசெய்து சாப்பிட, நுரையீரலுக்குடிக்க இருமல்வீக்கம், மார்பைப்பற்றிய ரோகங்கள்தீரும், தாதுவிர்த்திக்கும் தேனி லுரைத்துப்பூசக்கோசகம்பெருக்கும்,பலமதிரிக்கும், கொப்பளிக்க உண்ணுக்கு வீக்கம்நீங்கும். (வி-தி) குண்டிக்காய்க்கும் குடலுக்கும் உதவாது (ப-ம்) விளாம்பிசின் வர்துமைப்பிசின் (ப-ல்) கிர்துமாறு

## பெருங்காயம்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்த உதிரமும் குறைந்தவுணவுமாம் (சௌ-ம்) சன்னி வாதரோகங்கள் சிரசிலேறிய குளிர்மை உதிரச் சிக்கல் சில்மாதம் பக்கவாதம் வெறிநாய்க்கடி காக்கைவலிதொண்டைக் கம்மல் அஜீரணபேதி கிருமி இவைகளுக்கு உபயோகப்படும் கோழிமுட்டையின் மஞ்சட்கருவிற் கூட்டிக்கொள்ள வரட்டிருமல் பக்கவலிகளை மாற்றும் வாலேந்திரபோலம் மிளகு இவைகளுடன் சேர்த்து கொடுக்க உதிரச்சிக்கலறும். எள்ளெண்ணெயில் எரித்துக் காதிலிட காதுவலிநீங்கும் (வி-தி) ஈரலுக்கும் தலைமூளைக்கும் உதவாது (ப-ம்) மாதுளம்பழச்சாறு (ப-ல்) ஜால்ஷிர்.

## பொன்.

(சு-ம்) சாந்தமாம்(பி-ம்)சுத்தஉதிரமும்சுத்தஉணவுமாம்(சௌ-ம்) இருதயத்துக்கும் பலங்கொடுக்கும், உத்தம அனலைக்காக்கும், சந்தோஷம் உண்டாம் பயம் அச்சம்பயித்தியம் மனநடுக்கம் மூலரோகம்பித்தம்வாடலைப்பற்றிய ரோகங்கள் குண்டிக்காயின் பலஈனம் இவைகளை மாற்றும். இதன் ரேக்குகளை நல்ல முத்துடன்சேர்த்துக்கொடிமாதுளம்பழத்திப்பில் அரைத்துச் சாப்பிட வெண்குஷ்டம் கருங்குஷ்டம் பெருவியாதி முதலிய மேகரோகங்கள் நீங்கும் கண்மருந்துகளோடு சேர்த்தரைத்து கண்ணிலிடக் கண்ணோய்கள் அனைத்தும்தீரும் இதனால் மோதிரமுதலிய ஆபரணங்கள் செய்து குழந்தைகளுக்கு அலங்கரிக்க அழுகைமருட்சி சிறுபிள்ளைவாதம் சண்ணைறுகுணப்படும். இதன் கம்பியால்காதுகுத்த காதுபுண்ணாகாது அதை தினந்தோறும் பார்த்துக்கொண்டிருப்பதால் விதனம் நீங்கிச் சந்தோஷமுண்டாம் இரும்பு செம்பு பாதரசம் கந்தம் பாஷாணங்களைச் சேர்க்காமல் பொன்னை மாத்திரம் பஸ்பஞ்செய்து சாப்பிடுவதினால் ஆயிசுவளரும், இதையொரு கடுக்காயைப்போற்செய்து இரவும் பகலும் வாயிலடக்கி யிருக்க ஞானபயித்திய முதலிய நீங்கா வெறிகள் நீங்கும்(வி-தி) நீர்த்தாரைக்குதவாது(ப-ம்) தேன் கஸ்தூரி (ப-ல்) கென்பு.

## பேதானு.

(சு-ம்) குளிர்ச்சியும் ஈரமுமாம் (பி-ம்) சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) இதைச் சலத்தில் ஊறவைத்து அதன் கோழையைகுடிக்க தொண்டைவறட்சி மார்புவறட்சி சூட்டைப்பற்றிய இருமல் வயிற்றெறிவு, பித்தசூடு கைகலெறிவு இவைகள் நீங்கும் வெய்யிலின் வெப்பத்தை யாற்றும் நெருப்புப் பட்டதின்பேரிற் பூச-எரிவந்தத்தைமாற்றும், கொப்பளிக்காமற் செய்யும், அதை மெல்வதினால் பற்கள் கூசுதலும் தொண்டைக்கம்மலும் நீங்கும், (வி-தி) தீபனங்குறையும்மந்தப்படும் (ப-ம்) சருக்கரை சோம்பு (ப-ல்) இஸ்போஹோல்விதை.

## பேஃகேஜுலாபா,

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் (பி-ம்) அசுத்தஉதிரமும் அசுத்தஉணவுமாம் (சௌ-ம்) பேதியாகும் நரம்பைப்பற்றிய மாசுகளைக் கண்டிக்கு

ம்வாயுவைப்போக்கும் தேகவலி கைகால் குடைச்சல் இடுப்பு நோய் இவைகளை மாற்றும், இதில் சூரணம் வாரகனெடை-½ மக்னிஸ்வாரகனெடை-1 வறுத்துத் தோல்போக்கிய காக்கட்டான் வித்தின் சூரணம் வராகனெடை-1 இவைகளைச் சேர்த்து நெய் அல்லது தேனிற் கலந்து சாப்பிடச் சொகுசாகப் பேதியாகும் (வி-தி) சூட்டை யதிகப்படுத்தும் (ப-ம்) புளியின் ஷர்பத்து அல்லது எலுமிச்சம் பழத்தின் ஷர்பத்து (ப-ல்) ரேவல் சீனி.

## பேத்மிஷ்க்கு.

(சு-ம்) சூடுங்குளிர்ச்சியுமாம். (பி-ம்) சுத்தஉதிரமுங்குறைந்த உணவுமாம். சௌ-ம்) தலைமூளைக்கும் இருதயத்துக்கும் வலிவைக் கொடுக்கும். சூட்டைத்தணிக்கும், தேகத்திலுள்ள ரோகங்களைநீக்கும்தேகபுஷ்டியுண்டாகும். தாதுவிர்த்திக்கும் தலைவலியையும் உதிரக்கொதிப்பையுமாற்றும், இதன் திராவகத்துக்கும் இதுவே குணமாம் (வி-தி) சொற்பச் சூடுண்டாம் (ப-ம்) பசுவின் நெய் (ப-ல்) தாமரைப்பூ.

## பொன்னுவாரை.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமுங் குறைந்தஉணவுமாம் (சௌ-ம்) கருங்குஷ்டம் வெண்குஷ்டம் படை தேமல் திமிர் வாத முதலிய மேகரோகங்களை நன்றாகக் கண்டிக்கும் சகலவஸ்துக்களின் விஷங்களையு முறிக்கும், ஆடு மாடு முதலிய மிருகங்களின் இருமலை போக்கும், இதன்வேரோடு மிளகுகூட்டியரைத்து விழுங்கப் பாம்புகடிவிஷம் உடனே தீரும், இதன்பச்சை வேரோடு சந்தனங்கூட்டியரைத்துப்பூசப் படைகள்மறையும், இதன் திராவகத்துக்கும் இதுவே குணமாம் வி-தி)சூடு அதிகரிக்கும் (ப-ம்) நெய்பால் மாமிசப்(ப-ல்)தாழம்பூ

## பொதினு.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமும் குறைந்தஉணவுமாம் (சௌ-ம்) வாயு காமாலை வீக்கம் விஷக்கடிஉதிரச்சிக்கல் இவைகள் நீங்கும் கருப்பத்தை விழிப்பண்ணும் ஒக்காளம் விக்கலைத் தணிக்கும் மார்பிலும் இரப்பையிலும் இருக்கும் மாசுகளைபோக்கும், இதின் ரசத்துக்கு மூன்றுபங்கு எலுமிச்சம்பழம் ரசங்கூட்டி, ஷர்பத்து காய்

ச்சிக் குடிக்கத் தீபனம் உண்டாகும். அதில் கொஞ்சம் கடுகுசேர்க்க லேபனம் அதிகப்படும், வாதரோகங்கள் அறும். (வி-தி) குடலுக்குத வாது (ப-ம்) வாதுமைப் பிசின் (ப-ல்) காட்டுப்பொதினு.

## மஞ்சட் கிழங்கு

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்த வுதிரமும் அசுத்த உண வுமாம் (சௌ-ம்) நேத்திரரோகங்களை யகற்றும். ஈரலின் கட்டை நீக் கும். காமாலை வீக்கம் அறும். காயங்களை ஆற்றும். இத்துடன் முருங் கையிலை சேர்த்து எண்ணெயில் வதக்கி பருக்கள்மேற்கட்ட விரைவிலு டைந்துபோகும் மஞ்சள் உஷ்ணகாரி கற்பவாத ஹரிஹாரி சுக்குக்கு இது தாட்சிவயத்து பொருமலுக்கு 520-கிறேன் வீதம் 2-ஆவரத்திற் கொடுக்கலாம் மஞ்சள் கட்டு புகையை ஆக்ருணித்தால் ஐலுப்பு நீங்கும் (வி-தி) இருதயத்துக்குதவாது (ப-ம்) எலுமிச்சம் பழச்சாறு, கொடி மாதுளம் பழச்சாறு (ப-ல்) பீதரோகணி.

## மரமஞ்சள்.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம்(பி-ம்) அசுத்த உதிரமும் அசுத்தஉண வுமாம் (சௌ-ம்) வாயுவையும் உதிரச்சிக்கலையும் நீக்கும். இத்துடன் கருஞ்சீரகம் சதகுப்பை சமனெடை சேர்த்துசூரணித்து, அதற்குமூன் றெடைப்படி வெல்லத்திற்கலந்து வேளைக்கு ஒருவராக னெடையாகச் சோம்புக் கிஷாயத்தில் ருது தினத்திற்கு முன் சுமார் மூன்றுநாள் முதல் ருதுகண்ட மூன்றுநாள்வரையில் சாப்பிடவும். இந்தப்படிமூன்று முறை சாப்பிட சூதகக்கட்டும் சூதகநோயும் நீங்கிக் கருப்பமுண்டாம். (வி-தி) சூடுஅதிகரிக்கும் வாந்தி ஓக்காளம் உண்டாம்(ப-ல்)எலுமிச்சம் பழசர்பத்து நாரத்தம்பழ சர்பத்து (ப-ல்) கறிமஞ்சள் குங்குமப்பூ.

## மாசிப்பத்திரி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமும்குறைந்தஉண வுமாம் (சௌ-ம்) வாயுவைக் கண்டிக்கும் நீரடைப்பையும் கல்லடைப் பையும் உடைக்கும் இரப்பைக்குடலிலுள்ள மாசுகளைப்போக்கும் மார் புநோய் இருமல் வயிற்றுக்கடுப்பு குடல் வாதம் குன்மம் இவைகளை நீக்கும். இதின் விதைகளுக்கும் இதுவே குணமாம் (வி-தி) குண்டிக் காய்க்கு உதவாது, (ப-ம்) கோழிக்கீரை விதை சல்லாது விதை(ப-ல்) திருநீற்றுப்பச்சை விதை.

## மருதோன்றி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமும்குறைந்தஉண வுமாம் (சௌ-ம்) முப்பது கழஞ்சு முத்தின மருதோன்றிவேறை 150 கழஞ்சு சுத்தசலத்தில் ஊரவைத்து ஐந்துலொருபங்காய்க்காய்ச்சி குடிக்கவும் இந்தப்படிபெருவியாதிகாணும் ஆரம்பத்தில் ஒருமண்டலங் குடிக்கத் தீரும், நாட்பட்ட பெருவியாதிக்கு இதற்குமிஞ்சின மருந்து வேறில்லை. இந்துக்கியாழத்தைநாளொன்றுக்கு 10-கழஞ்சாக 10(நாள்குடிக்கவிழுந்துபோன நகமும் சொத்தைவிழுந்த நகமும் புதிதாய்முளைக்கும். காமாலை கல்லடைப்பு நீரடைப்பு, உதிரச்சிக்கல்நீங்கும் வயிற்றில்மரித்தபிண்டம் வெளிப்படும். இதில் அறைக்கழஞ்சு குடிக்கக் குன்மப்வேரோடறும் வாய்கொப்பளிக்க வாய்வேக்காடும் வாய்ப்புண்ணும் ஆறும் இதின் இலையை ஊரவைத்துபூசப் புண்கள் ஆறும். இதின் இலையை ஆமணக்கிலைசாற்றில் அரைத்துப்பூச கால்வலி நீங்கும் நெற்றியில்பூசக் கண்வலி மாறும் இதை எள்ளெண்ணெயில் எரித்துப்பூச மயிர் வளரும் இதின் புஷ்பத்தை எண்ணெயில் எரித்துப்பூச கைகால்வலி குடைச்சல் சீல்வாதம், சிரசைப்பற்றிய ரோகங்கள் சகலமுந்தீரும் (வி-தி) தொண்டைக்கும் நரையீரலுக்கும் உதவாது (ப-ல்) வாதுமைப்பிசின் இஸ்போஹோல்விதையின் கோழை (ப-ல்) மருக்கொழுந்து.

## மால்கங்கணி இதுவே வாலுழுவை யரிசி.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம், (பி-ம்) அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் (சௌ-ம்) தலைமூளைக்கு வலிவுகொடுக்கும். புத்தியையும்ஞாபகசக்தியையும் அதிகப்படுத்தும் சீல்வாதம் கால்நரம்பிழுப்பு நரம்பை பற்றிய ரோகங்கள் சிரசைப்பற்றிய சயித்தியங்கள் தந்தரோகங்கள் இவைகளைக் குணப்படுத்தும் (வி-தி) சூட்டுடலுக்கு உதவாது(ப-ம்) வெளிச்சிகிச்சைக்கே யல்லாமல் உள்ளுக்கு கொடுக்கலாகாது.

## மிருதார்சிங்

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் (சௌ-ம்) இரணங்களின் துற்மாமிசத்தை யறுத்துச் சீக்கிரத்தில் ஆற்றிவிடும். இதைக் காடியில் ஊறவைக்கச் சுத்தியாகித் தித்திக்கும். பின்பு அதைப் பொடிசெய்து ஒரு பாத்திரத்தில் வைத்து அ

தற்குச்சரியெடை உப்பை சலத்திற்கறைத்து அதற்குமேல் இரண்டங்குலம் நிற்கும்படிவார்த்து நாள்ஒன்றுக்கு மூன்றுமுறை கலக்கவேண்டும் எட்டுநாளைக்கு ஒருமுறை அந்தச்சலத்தை மாற்றிவேறே சலத்தை விட்டுவேண்டும். இந்தப்படிசெய்து கொண்டுவர நாற்பதுநாளில்வெளுக்கும், இதைச் சுத்தசலத்திற் கரைத்து, அருந்துசெய்ய விஷபேதிகளை நீக்கும் தேகத்திற்பூசப் படைகளையும் நாற்றத்தையும் வியர்வையையும், சொறிசிரங்கு தினவுகளையும்நீக்கும். ரோஜாப்பூ எண்ணெயிற் கலந்து இருதயதானத்திற்பூச இருதயத்தைக் காக்கும். நெருப்பில்வெந்த புண்கள் எடுக்களுடன்மாற்றும். தேகத்தில் உதிரங்கட்டிக் கொண்டிருப்பதைக் கரைக்கும் காடிஅல்லது ஜெயித்தூன் எண்ணெயிற்கூட்டிக் கண்ணிலிடக் கண்மாசு அறும் இதற்துக் சமயெடை கந்தகஞ்சேர்த்துக் காடியில் அரைந்துப் பூச பருப்புகள் கொப்பளங்கள் நீர்க்கோர்வைதீரும், சுண்ணும்புடன் அரைத்துப்பூச வெளுத்ததோல் கறுக்கும் பாலிற் கரைத்துகுடிக்கக் கிருமிகள்சாகும். மிருதார் சிங்கியின் விவரணம் குணங்கள் இதை வெகுகாலமாய் உபயோகப்படுத்திவருகிறார்கள் இதுசிவப்பாயாவது பசுமையா யாவதுஇருக்கும் படைபடையாய்சேர்ந்திருக்கும் சலத்தில் கரையாது, சப்பென்றிருக்கும். கடைச்சரக்கில் இரும்புதாமிரம் மண்ணுஆகிய இவைகள் கலந்து இருப்பதும் உண்டு, செய்முறை ஈய மணலில்வெள்ளியாவது தங்கமாவது இருக்கும், அதையெடுக்க மூசையில் வைத்தூதுகிறபோது மிருதாரசிங்கு உண்டாகின்றது ஈயத்தில் அனல்காற்றுபட்டு உருக்கினல் மிருதார்சிங்கு உண்டாகும், உபயோகம் மிருதாரசிங்கையை எண்ணெயோடு சேர்த்துப்பிளாஸ்திரி செய்யபடும், இதைஉள்ளுக்கு உபயோகப்படுத்துகிறதில்லை, (வி-தி) நீரடைக்கும் வயிற்று வலிகாணும், மூச்சடைக்கும். இதில் இரண்டு வராகனெடை தின்னக்கொல்லும் (ப-ம்) வாந்திக்கிக் கொடுத்து தேகத்துக்குக்குளிர்ச்சிசெய்யவேண்டும்.

## மாசிக்காய்,

(சு-ம்) குளிர்ச்சியும்வறட்சியுமாம் (பி-ம்) சுத்தஉதிரமும் குறைந்த வுணவுமாம் (சௌ-ம் பெரும்பாடு வியர்வைப்பெருக்கு பெண்குறியின் ஈரம் இவைகளை வரட்டும். இதின்சூரணத்தில் கோழிமுட்டையின் மஞ்சட்கரு சேர்த்துக்கொடுக்கக் குடலின்புண்களும் நாட்பட்டபேதியுந்தீரும். இதைசலத்தில் உரைத்துப் பல்லவாயிற் பூச

அதில் உண்டாகும் புண்கள் ஆறும் பவளவாய்வெளிப்படுதல் உள்ளடங்கும், தேகத்திற்பூச நாற்றத்தைநீக்கும், கண்ணிலிடக் கண்ணிர்பெருக்கைமாற்றும் காடியில் உரைத்துப்பூசத் தேமல் படைகள் போம், அதைக்கியாழமிட்டுக் கொப்பளிக்கப் பலநோய் தீரும். ஈறு பலப்படும், இதின்சாம்பல் உதிரப்பெருக்கைநீக்கும், மாசிக்காய்க் குணங்கள் ஸைனிப்ஸ்என்னும்வண்டு இனத்தில் பெண்வண்டான துமாசிக்காய் செடியின் துளிரைத்துளைத்து, அதில் முட்டையிடும் அப்போதுதுளிரில் இருந்து ரசம்வடிந்து காய்போலக் கட்டிகொள்ளும் முட்டைபொரித்து குஞ்சுபெரியதாகி காயைத்துளைத்துக்கொண்டுவெளிப்பட்டுவிடும் காயின்மேல் காணப்படுகிற துவாரங்களுக்குக் காரணம் இதுதான். காய்உருண்டு பளுவர்ய் மேலே மேகளாய், இருக்கும் மாசிக்காயை எளிதிற் சூரணிக்கலாம் வாசனை இல்லை, துவர்ப்பாய் இருக்கும. இதில் டானிக் ஆஸிட் காலிக் என்கிற சத்துக்கள் இருக்கின்றன, துவாரமில்லாத காய்கள் நல்லென செய்கை சங்கோசனகாரி உபயோகம், அதிசாரபேதி ரத்தபேதி சீதசுரம் இவைகளுக்கு உபயோகப்பட்டு வருகின்றது, ஆனல் முக்கியமாய் வாய் கொப்பளிக்கிற ஜலமாயும் இன்ஜெக்ஷானுயும்செய்து உபயோகப்படுத்தப்படும். வெள்ளை கண்டு விழுகிறவர்களுக்கு மாசிக்காய்த் தூள் 20 கிறைன் இடைக்கு தினத்துக்கு 23-தடவை குடுக்கலாம், மாசிக்காய் பொடியை மூக்கில் நசியமிட்டால் இரத்த பீநசம் நிற்கும். அனிபி ஊமத்தை முதலியவைகளை விஷமிக்கும்படி சாப்பிட்டு விட்டால் இதைக்கொடுத்தால் மருந்தை முறித்துவிடும். 816-கிறென் கொடுக்கலாம். (வி-தி) நுரையீரலுக்கும் மார்புக்கும் உதவாது (ப-ம்) வாதுமைப்பிசின்(ப-ல்) மாதுளம்பழத்தின் மேற்றோள்.

## மிளகு.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (வி-ம்) சுத்த உதிரமும் குதைந்த உணவுமாம் (சௌ-ம்) வாயுவையும் சயித்தியத்தையும், கபத்தையும், ஏப்பத்தையும் நீக்கும், தீபனத்தையுமெழுப்பும், ஈரலுக்கும் இரப்பைக்கும். வலிமையைக் கொடுக்கும் கண்ணொளி யுண்டாம் (ப-ல்) நோயை நீக்கும். மிளகு உலர்ந்த காய்கள் மேல் தோலை நீக்கியதற்கு வெள்ளை மிளகு என்று பெயர். மிளகு காரமாயும் லாசனையாயும், இருக்கும் மிளகிலிருக்கிற சத்துக்கு பையிரீன் என்று பெயர்; மிளகு மசாலையுடன் சேர்க்கப்படுகின்றது. இதற்கு சுரத்தைக் கண்டிக்கிற குணம் இருக்கிற தென்றும் வருகின்றது. ஔஷதங்களுக் கிருக்கிற தூற்குண

த்தை மிளகு மாற்றிவிடும், பிரமேகத்துக்கு மிளகைக் கொடுக்கலாம், களிம்பாகச் செய்து எச்சிற் றழும்பிற்குத் தடவினல் குணமுண்டு மிளகு சத்துருவை ஞவுக்குப்பதிலாக முறைக்காய்ச்சலுக்கு உபயோகப்படுகின்றது. இதில் 20-கிறைன் அளவுக்குக் கொடுக்கலாம். மிளகுத்தூளில் 5-20 கிறைன் அல்லது இன்னம் அதிகமாய் அக்கினிமந்த ரோகத்துக்குக் கொடுக்கலாம், வாந்திபேதிக்கு மிளகு மாத்திரை மிளகு பெருங்காயம், அபினி வகை 1-க்கு 20-கிறைன் இவைகளைச் சேர்த்து 12-மாத்திரைக ளாக்கிக்கொள்ளவேண்டும். இதில் ஒரு மாத்திரையை அரைமணி நேரத்துக்கொருதரம் வாந்தியும் பேதியும்நிற்கிற வரையில் கொடுக்கவேண்டியது 7, 14—வயதுள்ளவர்களுக்கு அரை மாத்திரை கொடுக்கலாம் பங்காளத்தில் இந்த மாத்திரைகளை உபயோகித்து. அநேகருக்கு சொஸ்தமானதாய்க் கண்டிருக்கின்றது, சீதசுரத்துக்கு 49-கிறைன் மிளகு பெருங்காயம் 100-கிறைன் கழற்சிப்பருப்பு, இவைகளைத் தேன்விட்டு நன்றாய் இடித்து 30-மாத்திரைகளாய்ச் செய்து சுரமில்லாதபோது 2-மாத்திரை வீதம் தினத்துக்கு, 23-தடவை கொடுக்கலாம். குழந்தைகளுக்கு 1-அவுன்ஸ் மிளகுத்தூளை 1-அவுன்ஸ் பசுவின் நெய்யுடன் மிஸ்ரமித்து அந்தி சந்தி இரண்டுவேளையும் தடவிக் கொண்டுவர குணமாகும் பிரமேகத்துக்கு 10-கிறைன் மிளகுத்தூளைத் தேனில் கலந்து 2-தடவை கொடுக்கத் தீரும். (வி-தி) உஷ்ணதேகத்துக்குதவாது (ப-ம்) நெய் வெண்ணை (ப-ல்) சுக்கு திப்பிலி.

## மூத்து.

(சு-ம்) குளிர்ச்சியு வறட்சிமாம் (பி-ம்) சுத்த உதிரமும் சுத்த உணவுமாம் சரீரத்தின் அவயவங்களுக்கெல்லாம் வலிமையுண்டாக்கும். சந்தோஷமுண்டாம், வண்டலினல் உண்டாகும் பயம் அச்சம் விசனம் பயித்தியம் இவைகள் தீரும், ஈரலுக்கும் குண்டிக்காய்க்கும் பலத்தைக் கொடுக்கும், இருதயத்தைப்பற்றிய வலிகள் வாய் நாற்றம் கல்லடைப்பு நீர்ச்சுருக்கு காமாலை விஷப்பூ குஷ்டம் இவைகளுக் குபயோகப்படும். (வி-தி) நீர்த்தாரைக்கு உதவாது (ப-ம்) பவளம் (ப-ல்) முத்துச்சிப்பி.

## மூங்கி லுப்பு.

(சு-ம்) குளிர்ச்சியும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமும்குறைந்தவுணவுமாம் (சௌ-ம்) இருதயம் ஈரல் தீனிப்பை இவற்றின் உஷ்ண

ங்கள் பித்தவாந்தி இரத்தபேதி ஈரம் மூர்ச்சை மூலம் வாய்வேக்காடு இவைகளைக் குணப்படுத்தும், சிக்கஞ்சுபீனிற் சேர்த்துக் குடிக்க அச்சம் கிலி விசனம்போம். பனப்ஷாவின் எண்ணெயில் உரைத்துக் கண்ணிலிடக்கண்ணெரி அதிகப்படுத்தும் (வி-தி) நறையீரலுக்குதவாது தாது கஷ்டப்படும் (ப-ம்) தென்றாமி மஸ்தகி (ப-ல்) சந்தனம்.

## மூமியா.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பி-ம்) சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) இருதய பலமும் தாதுவிருத்தியு முண்டாகும் சுரங்கள் நாசமாகும் சயித்திபங்கள் வயிற்றுவலி விக்கல் பாரிசவாய்வு உதிரவாந்தி நீர்த்தாரைப் புண் நீர்ப்பெருக்கு விஷப்பூச்சிக்கடிகள் நாத்தடிப்புஇவைகளைச்சொஸ்தப்படுத்தும், காயங்கள் ஒடிந்த எலும்புகள் அறுக்கப்கட்ட சதைகள் இவைகளைக்கூட்டிவிடும், ரோஜாப்பூ எண்ணெயிற்கலந்துகாதில்வார்க்கக் காதுவலிசெவிடு நீங்கும். துளசிச்சாற்றில்உரைத்துச் சொரியிற்பூச சிரங்கைப்பற்றிய ரோகங்கள்தீரும். பாலிற்சேர்த்துக்குடிக்கத் தாதுவிருத்தி யுண்டாம். தேனில்உரைத்து நாவிற்றேய்க்கநாக்குளறல்மாறும், தேங்காய்எண்ணெயில் உரைத்து ஆண்குறியிற்பூசப் பூரிப்பு அதிகரிக்கும் (வி-தி) உஷ்ணதேகிக்குதவாது (ப-ம்) சிக்கஞ் சபீன் (ப-ல்) பஃருய்யஹறூத்,

## மெழுகு.

(சு-ம்) சாந்தமகம் (ப-ம்) சுத்தஉதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) கட்டிகளைக்கரைக்கும் புண்களையாற்றும் இதைஎண்ணெயில்உருக்கித் தேகத்திற்பூசச்சொறி சிரங்கு தினவுகளைப்போக்கி யழகையுண்டாக்கும், பசுவினெய்யில்உருக்கிச்சாப்பிட உதிரக்கடுப்பு வயிற்றுவலி மார்வலி இருமல் தொண்டைக்கம்மல் இவைகளைநீக்கும்குரலோசைநன்றாகும் (வி-தி) தீபனத்தையடக்கும் (ப-ம்) கோதுமைரொட்டி (ப-ல்) மொச்சைப்பருப்பின்மா.

## யானைத்தந்தம்.

(சு-ம்) சாந்தமாம் (பி-ம்) சுத்தஉதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) தந்தம் கழிஞ்சு 1, கற்கண்டு கழிஞ்சு 2, சேர்த்துமாதவி

டாய் கண்ட முதல்நாள் துவக்கிமூன்றுநாள் அல்லது ஏழுநாள்சாப்பிட கெர்ப்பம்தரிக்கும். இந்தபடியே யானைமூத்திரத்தை ஏழுதினம் குடிக்கமேற்சொல்லிய குணத்தையேதரும்.

## இரசகர்ப்பூரம்.

(சு-ம்) வறட்சியுமாம் (பி-ம்) அசுத்தஉதிரமும் அசுத்த உணவுமாம் (சௌ-ம்) சாதிலிங்கத்தின் குணங்களே இதற்குமுண்டு. இதைக் கட்டி கொப்பளம் முதலிய இரணங்களின் வெளிப்பிரையோகத்திற்கு உபயோகிக்கலாகும் உள்ளுக்குச் சாப்பிடாமலிருப்பது உத்தமமாம்.

## ருமிமஸ்தகி.

(சு-ம்)சூடும்வறட்சியுமாம் (பி-ம்) அசுத்தஉதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) தீனிப்பை முதலிய உள்ளுறுப்புகளுக்கும் கைகால் முதலிய அவையவங்களுக்கும் வலிமைகொடுக்கும் தீபனத்தை யெழுப்பும் வாயுஉதிரபேதி உதிரவாந்தி பெரும்பாடு இவைகளை நீக்கும் ஒருகழஞ்சு மஸ்தகியைப் பொடிசெய்து முக்கழஞ்சு சருக்கரைகூட்டி யிராத்திரியில் நித்திரைக்குப் போகும்போது சாப்பிட்டுக்கொண்டுவர த்தீனிபை குடல் இவைகளிலிருக்குங் குற்றங்களைநீக்கி யதிகசூணத்தைதரும் (வி-தி) நீர்த்தாரைக்கு உதவாது (ப-ம்) வாதும்மைபிசின் (ப-ல்)குந்திரிக்கும்.

## ரோஜாப்பூ.

(சு-ம்) சாந்தமானசூடும் கொழுமையுமாம் (பி-ம்) சுத்தஉதிரமும் குறைந்த உணவுமாம் (சௌ-ம்) மேபதிபாகும் வாதபித்த நீரைக் கண்டிக்கும் இருதயம் ஈரல் நுரையீரல் தீனிப்பை குண்டிக்காய் பவன்வாய் கருப்பை குடல் இவைகளுக்கு வலிவைக்கொடுக்கும் உதிரபேதி மூர்ச்சை சிபுகானென்னும்பயித்தியரோகம் உதிரவாந்தி வெள்ளை இவைகளைப்போக்கும் ரணத்தின் தசையை வளர்க்கும் கண்ணொளி யதிகரிக்கும். இதின்விரயை அரைத்துச்சாப்பிடப் பேதியைக்கட்டும் ரணங்களிற்பூச ஆற்றும். இதின்தைலத்துக்கும் இதுவேகுணம்.

## ரேவல்சீனி.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் .(பி-ம்) சுத்தஉதிரமும் குறைந்தஉணவுமாம் (சௌ-ம்) கட்டிகளைக்கரைக்கும். கட்டிகளை யுடைக்குப் நீர்க்க

ட்டு உதிரச் சிக்கல் வயிற்றிசம் வீக்கம் வயிற்றுக் கடுப்பு காமாலை இவைகளைக் கண்டிக்கும். தீபனத்தை யெழுப்பும் ரோஜாப்பூவிர் கவ ந்துகொடுக்க உதிரபேதியைக்கட்டும். சுரம் குண்டிக்காய் நீர்த்தாரை கம்பக்கர் இவைகளில் உண்டாகும்வலிக்கி மூலப்பவுத்திரம் கொடி ப்பவுத்திரம் புண் நளிர்சுறம் இவைகளைபோக்கும்; ஜாவஷீர் பஸ்பா யிஜ் கிராட்சிபழம் இவைகளிற் சேர்ந்துக்கொடுக்க குன்மம் உதிரவா ந்திகுணப்படும். புளிக்கடுக்காய் காரீகூன் சீமைக்கரியபோளம் இவை களிற்கலந்துகொடுக்கத் தலையைப்பற்றிய மாசுகள் சீதத்தாலுண்டா குந் தலைவலி பயித்தியம் இவைகளைபோன்ற அநேகரோகங்கள் நீங்கு ம் இதின்பாலுக்கும் மேற்சொன்ன குணங்களைச் செய்வதில் அதிகவ லிமையுண்டு காடி அல்லது எலிமிச்சம்பழச்சாற்றில் உரைத்துப்பூசத் தோலைப்பற்றிய சகலபடைகளும் எடுபட்டுபோம் (வி-தி) சீழ்உறுப்பு புகளுக்குதவாது (ப,ம்) விளாம்பிசின் (ப-ல்) ரோஜாப்பூ.

## ராஜ்வர்த்திககல்.

(சு-ம்) சூடும் வறட்சியுமாம் (பிம்) சுத்தஉதிரமும் குறைந்த உண வுமாம் (சௌ-ம்) இருதயத்துக்கு வலிமைகொடுக்கும்சந்தோஷத்தை யுண்டாகும் விசனத்தைப்போக்கும் வண்டலைப்பற்றிய வியாதிகள் பு ண்கள்உதிரசிக்கில் இவைகளும் கண்களைப்பற்றிய வியாதிகள்புண்கள்உ ந்தீரும் (வி-தி) தீனிப்பைக்கு உதவாது (ப-ம்) றூமிமஸ்தகி (ப-ல்) தீ னே அர்மனி.

## லவங்கப் பட்டை.

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் (பி-ம்) சுத்தஉதிரமும் குறைந்தஉண வுமாம் (சௌ-ம்) வாயுவைககண்டிக்கும். இராஜஉறுப்புகளுக்கும் தீனி ப்பைக்கும் பலங்கொடுக்கும் தேகச்சத்திகளைக் காக்கும் வாய்நாற்றத் தைமாற்றும் தாதுபுஷ்டியுண்டாகும் பயித்தியம்நரம்பைப்பற்றியரோ கங்கள் இசிவு பக்கவாதமுதலிய சகலரோகங்களுந்தீரும். இதன்தைல ம்சயித்திய வாதரோகங்களைப்போக்கும் (வி-தி) நீர்தாரைக் குதவாது (ப-ம்) வாதுமைப்பிசின் (ப-ல்) வால்மிளகு

## லவங்க பத்திரி

(சு-ம்) சூடும்வறட்சியுமாம் (பி-ம்) சுத்தஉதிரமும் குறைந்த உண வுமாம் (சௌ-ம்) உதிரச்சிக்கல் நீரடைப்பு கல்லடைப்பு காமாலை வீக்க

ம்வாயு இவைகளைபோக்கும் பால்சுரக்கும். ஆத்தும சத்தியைக் காக்கும். ஐம்புலன்களின் சத்திகளை யதிகப்படுத்தும் இதை நாவின்கீழ் வைக்கத் தெத்துவாயை நீக்கும் காடியில் உரைத்து அடிவயிற்றிற் பூச உதிரச்சிக்கலை மாற்றும். தேகத்திற்பூசக் கற்முழை நாற்றத்தைப் போக்கும். சட்டியின்மேற்பூசக் கட்டிகள் கரைக்கும் வி-தி நுரையீரலுக்கு நீர்த்தாரைக்கும் உதவாது ப-ம் றாமிமஸ்தகி ப-ம் சட்டாமாஞ்சில்.

## லவங்கப்பூ.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமும் குறைந்தவுணவுமாம் சௌ-ம் இராஜ உறுப்புகளுக்குப் பலங்கொடுக்கும் தீபனமும் தாதுபுஷ்டியுண்டாகும், வாந்தி ஒக்காளம் பயித்தியம் விசனம் வாய் நாற்றம் பக்கவாதம் முதலிய சீதளத்தைப்பற்றிய ரோகங்கள் தீரும். இதன் சூரணத்திற் புட்டிவெல்லங் கலந்து மாதவிடாய்க் காலங்களில் வேளைக்கு ஒரு வராகனெடையாக வழக்கமாகச் சாப்பிடுவதிற் கெர்பந் தரிக்கும். உதிரச்சிக்கலை யறுக்கும் லவங்கம் பாகம்-1-ரோஜாப்பூ குலேகாவ்ஜான் வகைக்குப் பாகம்-1½, பச்சை வெற்றிலை பாகம்-½, இவைகளைச் சேர்த்துத் திராகவகம் இறக்கிக்கொண்டு சாப்பிடச் சந்தோஷமுண்டாகும் தீபனமதிகரிக்கும் உள்ளுறுப்புகளுக்கு வலிமைதரும் வாதரோகங்கள் கடினமான சயித்திய ரோகங்கள் முதலிய சகலரோகத்துக்கும் உதவியாகும் வி-தி குடலுக்குங் குண்டிக்காய்க்கும் உதவாது ப-ம் வேலம்பிசின் ப-ம் லவங்கப்பட்டை சாதிப்பத்திரி.

## வங்கச்சிந்தூரம்.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் இதை ரோஜாப்பூ தைலத்திற் கலந்துபூச இரணங்களின் துன்மாமிசத்தையும் நாற்றத்தையும் போக்கி ஆற்றும் நெருப்பினால் வெந்த இரணத்தையும் ஆற்றும். இரணத்தில் ஒடி வருவதை நிறுத்தும் இதை ஆட்டுக்கொழுப்பிற் கலந்து அருந்தி செய்யக் குடலின் ரணத்தை யாற்றும் வி-தி இதை உள்ளுக்குக் கொடுக்க விஷமாகும் ப-ம் ஈயவெள்ளை.

## வசம்பு.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்தவுதிரமும் அசுத்தஉணவுமாம் சௌ-ம் தீனிப்பை ஈரலுக்குப் பலங்கொடுக்கும் கபத்தையும்

வாயுவையும் கண்டிக்கும். தீபனத்தை எழுப்பும் இதைத் தேனி லுரைத்து நாவிற்பூச நாவின் தடிப்பை நீக்கும். இதற்குச்சமம் குங்கு மப்பூ சேர்த்துக் குதிரைப்பாலிலுரைத்து வயிற்றிற்பூசக் கெர்ப்பத் தைக் காக்கும். இதன் சாம்பலைத் தேனிலுரைத்து நாவிற்றடவ வாந்தி ஒக்காளம் நீங்கும் வி-தி தலைமூளைக் குதவாது உதிரஞ்சுண்டும் ப-ம் சிக்கஞ்சபீன் ப-ம் சீரகம்.

## வாலேந்திரபோளம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தஉதிரமும் குறைந்த உணவு மாம் செள-ம் பேதியாகும், வாயுவைக்கண்டிக்கும், வயிற்றில் மரித்த பிண்டத்தை வெளிப்படுத்தும், உதிரச்சிக்கலை நீக்கும், ஜெயித்தூன் எண்ணெயில் அரைத்து வலது உள்ளங்காலிற்பூச அதிக லேபனமாம் காயங்கள் ஆறும், பற்களின் வலிநீங்கும் வி-தி நீர்த்தாரைக்குதவாது ப-ம் தேன் ப-ம் செகப்பு வாதுமைப்பிசின்.

## வால்மிளகு.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தவுதிரமுங்குறைந்த உணவு மாம் செள-ம் ஈரலிலும் குடலிலும் விழுந்த கட்டுகளை யுடைக்கும், நீரைச் சுத்தப்படுத்தும், கல்லடைப்பை யுடைக்கும், ஈரல் மண்ணீரல் தீனிப்பை இவைகளில் உண்டாகும் ரோகங்கள் தலைவலி பேதி இவை களைத் தீர்க்கும், வாயுவைக் கண்டிக்கும், குரல் ஓசையைச் சுத்தப்படுத் தும், வாய்நாற்றம் வாய்வேக்காடு ஈறலின்வலி இவைகளை நீக்கும். ஆட் டின் கொழுப்பில் அரைத்துப்பூசக் கட்டிகளுடையும் இதைமென்று ஆண்குறியிற் றடவிபுணர அதிக இன்பத்தைக் கொடுக்கும் வி-தி நீர்த் தாரைக்கு உதவாது ப-ம் றாமிமஸ்தகி ப-ம் ஏலம் லவங்கப்பட்டை.

## வில்வப்பழம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தவுதிரமுங் குறைந்த உணவு மாம் செள-ம் வாதபித்த ரோகங்கள் வாந்தி ஒக்காளம் மூலரோகம் இவைகளை நீக்கும், தீபனத்தை யெழுப்பும். தாதுபுஷ்டியுண்டாம், தீபனத்தை குடலுக்கு வலிவு கொடுக்கும் வி-தி மலத்தைக் கட்டும். உஷ்ணதேகத்துக்குத் தலைவலி யுண்டாம் ப-ம் கொத்துமல்லிவிரை.

## வெங்காரம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமும், அசுத்த உணவுமாம் சௌ-ம் வெள்ளி பொன் முதலிய லோகங்களை விரைவில் உருக்கும். கட்டிகளை யையச்செய்யும் மூலவிரணத்தையாற்றும் துன்மாமிசங்களைக் கரைக்கும். பல்நோய் ஈறு கரைவு இவைகளை நீக்கும். வெங்காரங்கரைத்த சலத்தில் இரும்பைச் சிவக்கக் காய்ச்சி துவைத்து மறுபடி சிவக்கக்காய்ச்சி எள்ளெண்ணெயிற் றுவையலிட்டு இரும்புக்குக் காந்தத்தின் குணம் உண்டாகும் வி-தி நஞ்சாம் உள்ளுக்குதவாது.

## வெடியுப்பு.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் கபத்தைப்போக்கும். கட்டுகளை யுடைக்கும் சல முதலிய பாணங்களைக் குளிரப்பண்ணும்; பேதியாகும்; இதில் ஒரு பங்கை நாலுபங்கு சர்க்கரையிற் சேர்த்துச்சாப்பிட நீர்க்கட்டு நீங்கும். இடுப்புவலி மாறும் வி-தி அதிக சூட்டைக்கொடுக்கும். குண்டிக்காய்க்குத் தொண்டைக்கும் உதவாது ப-ம் வாதுமைப்பிசின் ப-ம் இந்துப்பு.

## வெந்தயம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் சத்துக்களைப் பக்குவப்படுத்தும் வாயுவைக் கண்டிக்கும் உதிரச்சிக்கலை யறுக்கும் நுரையீரலுக்கு வலிமை கொடுக்கும் இதை நன்றாக வேகவைத்துத் தேன்விட்டுக் கடைந்து சாப்பிட்டுவர மல சுத்தியாகும். குடலைச் சுத்திசெய்யும் மார்வலி இருமல் மூலரோகம் உட்புண் இவைகளைப் போக்கும். இத்துடன் புளி சீமை அத்திப்பழம் திராட்சிப்பழம் இவைகளைச் சமவிடையாகச் சேர்த்துக் கிஷாயமிட்டுத் தேன்கலந்து குடிக்க மார்புவலி மூச்சடைப்புத் தீரும். இதைப் பாஸி யாவுஷான் என்னும் மயிர்ச்சிக்கிப் பூண்டோடு சேர்த்துக் கிஷாய மிறக்கி, இடுப்பில் வார்க்கப் பிரசவவேதனை சாந்தப்படும். வயிற்றில் மரித்த பிண்டமும் இரத்தமாசும் விரைவில் வெளிப்படும், இதைசீமை அத்திப்பழத்துடன் அரைத்துப்பூசக் கட்டிகள் உடையும். படைகள் மாறும். இத்துடன் வாதுமைப்பருப்பு கசகசா கோதுமை நொய் நெய் பால் சருக்கரை சேர்த்து லேகியங்கிண்டிச் சாப்பிடத் தேகபுஷ்டி யுண்டாகும் இடுப்புவலி தீரும் அழகு கொடுக்கும் வி-தி மந்திக்குந் தலைவலியும் மயக்கமும் உண்டாகும் ப-ம் சிக்கஞ்சபீன் அனிசூன் ப-ம் ஆளிவிரை.

## வெள்ளி.

சு-ம். சாந்தமான குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் இதின்குணமுங் கெண்பின் குணத்திற்கு ஒத்திருக்கும், இருதயத்திற்கு வலிமைதரும், சந்தோஷம் உற்சாகம் அதிகரிக்கும், கிபுகான் முதலிய பயித்தியம் பயம் உன்மத்தம் இருமல் வீக்கம் கல்லடைப்பு கசம் வாய்நாற்றம் இவைகளைப்போக்கும். கண்ணொளியை யதிகப்படுத்தும், இதன் ரேக்கு அல்லது அரபொடி கழஞ்சு-எ, ரசம் கழஞ்சு-க, வெள்ளைப்பாஷாணம் கழஞ்சு-க, நவாச்சாரங் கழஞ்சு-க, இவைகளைச் சேர்த்து வெள்ளைக்குன்றிமணி இலைச்சாற்றி லிடைவிடாமல் நாலுசாமம் அரைத்து பில்லைதட்டி, யுலரவைத்து, ஒரு முழப்புடமிடப் பஸ்பமாகும், இதைத்தேனில் அல்லது நெய்யில் வேளைக் கொருபணவெடை சாப்பிடத் தாதுபுஷ்டியும் லேபனமும் அதிகப்படும். சீரணசத்தி யதிகரிக்கும், சீதளங்களைப்போக்கும், கபத்தையறுக்கும், நெய் பால் மாமிசங்கள் இவைகளை வேண்டிய மட்டிற் சாப்பிடவும் வி-தி குட்டலுக்கு உதவாது ப-ம் வாதுமைப்பிசின்.

## வெள்ளைக் குங்கிலியம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் உதிரக்சிக்கலை நீக்கும், வயிற்றில் மரித்த பிண்டத்தை வெளிப்படுத்தும், கபாலத்தைச் சுத்தப்படுத்தும், மாவுல் அஸ்லோ:டுகூட்டி சாப்பிடக் காக்கைவலி வீக்கம் சுவாசமதிரும் சிக்கஞ்சபீனில் அல்லது சலத்திற்கலந்து சாப்பிடத் தேகத்தை இளைக்கச் செய்யும், இதைப் பொடிசெய்து பல்லிற்றேய்க்கப் பல்வலி தீரும், முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிடக் கண் ஒளியுண்டாம், சேர்வைகளிற் கூட்டியரைக்கப் பவுத்திர முதலாகிய விரணங்களையாற்றும்.

## வெள்ளைப்பூண்டு.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தஉதிரமுங் குளிர்ந்த உணவுமாம் சௌ-ம் வாய்வு உதிரச்சிக்கல் தீனிப்பையின் மாசு இவைகளை நீக்கும், கருப்பவதிகளுக்கு உதவும் இதை நெய்யில் வறுத்துச் சாப்பிட பால் சுரக்கும், வயிற்றுவலி உதிரக்கட்டுப்பு மூலவுதிரம் அசீரணம் இவைகள் நிற்கும், பாலில் வேகவைத்து சருக்கரை நெய்விட்டு லேகியங்கிண்டி நித்தியம் கொட்டைப்பாக்கு பிரமாணஞ் சாப்பிடக் கீல்வாதங்கள் வயிற்றுப்பொருமல் அசீரணம் இவைகள் நாசமாகும், தாது

விர்த்தியுண்டாம் வி-தி உட்டின தேகத்துக்குதவாது, உதிரத்தைச் சுட்டப்பண்ணும் ப-ம் பசுநெய் ப-ம் காட்டுவெங்காயம்.

## வேம்பு.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் இதன் ஈர்க்கு வாதபித்த ரோகங்கள் வாந்தி ஒக்காளம் இவைகளைப் போக்கும்; இதன் இலை சொறி சிரங்கு தினவுகளை மாற்றும் இதன் கொழுந்தை எள்ளெண்ணெயில் வதக்கி யுடையாத பருக்களின்மேல் வைத்துக்கட்ட உடனே உடைந்துபோம்-இதன் பட்டை முதலிய சமூலத்தைக் கியாழம் அல்லது திராவகமாயிறக்கி காயம் புண் முதலிய இரணங்களைக் கழுவச் சுத்தப்படும்-கிருமிகள் சாகும்-நாற்றம் அடங்கும் ஆறும் இதன் முத்தின இலைகளோடு கொஞ்சம் புழுங்கலரிசி சேர்த்து நன்றாக யிலைகள் மசியக்குத்தி இலையைப்புடைத்துவிட்டு, அரிசியைக் கருகவறுத்துக் கியாழமிட்டு நாலிலொருபங்காக் காய்ச்சிக் குடித்துவரக் கிராணி முதலிய சகல பேதிகளும் நிற்கும் இதன் முத்தின்பட்டையில் உப்பெடுத்துச் சகல சுரத்துக்குங் கொடுக்க குணப்படும் இதன் சமூலத்தை எட்டொன்றாய்க கியாழமிட்டு வடித்து அதற்கு எட்டிலொன்று எள்ளெண்ணெயிற் சேர்த்துச் சுண்டக் காய்ச்சிப்பூச ஆறாத ரணங்கள் ஆறும்.

## வெள்ளைச்செவ்வந்திப்பூ.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் காற்றைக்கண்டிக்கும்-நீரைப்பெருக்கும் உதிரச்சிக்கலை நீக்கும்-தலைமூளைக்கும் நரம்புகளுக்கும் வலிமை கொடுக்கும்-இதை வெந்நீரி லூறவைத்துக் குடிக்க வியர்வையுண்டாகும் சுரங்களை-மாற்றும்-நீரடைப்பு கல்லடைப்பு காமாலை குன்மம் கருப்பையின்வலி இவைகளை நீக்கும்-இதைச் சலத்திற் சேர்த்துக் காய்ச்சி ஸ்நானஞ்செய்யத் தேகத்திலுள்ள சகல நோய்களையும் நீக்கும்-இதை எள்ளெண்ணெயிற் சேர்த்து சூரியபுடத்திலூறிய தைலத்தைப்பூச மேற்சொல்லிய சகல வியாதிகளையும கண்டிக்கும்; இதின் முத்தினவேரி லொரு வராகனெடையைத் தேனில் உரைத்துச்சாப்பிடப் பிடிபடாத போகத்தை விளைக்கும், இதன் சமூலத்தைப் புகைக்க விஷப்பூச்சிகள் ஓடிப்போம் வி-தி தொண்டைவலி யுண்டாகும் ப-ம் தேன் மாதுளம்பழ ஷர்பத்து ப-ம் காவட்டம் புல்.

## இரவட்டம்புல்.

சு-ம் சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் வாயு மார்புவலி மூச்சடைப்பு ஙளிர்சுரம் கீல் வாதம் நரம்பிசிவு இவைகளை நீக்கும்-வயிற்றிலுள்ள கிருமிகளைக் கொல்லும் இதை வீட்டிற் றெளித்துவைக்கப் பூச்சிகளோடிப்போகும் இதை யரைத்துப்பூச தேள் குளவி முதலிய-விஷப்பூச்சிகளின் விஷம் நீங்கும். இதன் சாம்பலை ஆக்கிராணிக்கப் பீநசந்தீரும்-இதன் கியா முத்தில் தலைகழுவத் தலைவலிபோம்-இதின் ரசத்தை விளக்கெண்ணெ. யில் அல்லது முள்ளங்கித் தைலத்திற் சேர்த்துக் காய்ச்சிப்பூச அதிக விரைவில் மயிர்வளரும், மயிர் உதிர்வதை நிறுத்தும் வி-தி நுரையீர லுக்கும் தீனிப்பைக்கும் உதவாது ப-ம் தேன் வாதுமைப்பிசின் ப-ம் அப்சந்தீன் இதுவே மாசிபத்திரி.

## சுவர் முள்ளங்கி இதுவே சுவரொட்டி.

சு-ம், சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் உதிரச்சிக்கல் நீரடைப்பு நுரையீரலைப்பற்றிய சகல ரோகங்கள் நாட்டப்பட்ட இருமல் வீக்கம் காமாலை இவைகளை நீக்கும். வயிற்றில் மரித்த பிண்டத்தை வெளிப்படுத்தும் இதன் சாற்றிற் சருக் கரை சேர்த்துக் குடித்துவர ஸ்திரீகளின் வெள்ளையையும் மார்பு நோயையும் போக்கும். இதன் சாறு விராகனெடை ௪-ஜெயித்தூன் எண்ணெய் விராகனெடை ௩-சுத்தசலம் சேர்-அரை இம்மூன்றுஞ் சேர்த்துக் காய்ச்சிக் குடித்துவரக் கல்லடைப்பு குணப்படும் வி-தி குண்டிக்காய்க்கும் குடலுக்கும் உதவாது ப-ம் வாதுமைப்பிசின் ப-ம் அஞ்சிதான் அல்லது பெருலவங்கப்பட்டை.

## கொய்யாக்கம் என்னும் மரம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் உதிரமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் உதிரங் கெட்டதினால் பிறக்கும் வெண்குஷ்டம் கருங்குஷ்டம் பெருவியாதி மேகப்படைகள் மேகாணங்கள் கைகால் பிடிப்பு இரசம் வண்டல் இவைகளின் மாசுகளாய் பிறக்கும் பக்கசூலை பாரிசவாதம் நரம்பிசிவு முதலியவைகள் யாவும் நீங்கிவிடும்; புதிய கொய்யாக்கா மரச்சீவல் அல்லது வாட்பொடிக்கு ஐந்து எடை புதிய பறங்கிச் சக்கை கூட்டி இவ்விரண்டுக்கும் ஐந்து இடை ஷத்துரு அல்லது காவ் ஜபானென்னும் மூலிகையின் திராவகத்திற் கலந்து கெட்டியான

பீங்கான் அல்லது கண்ணாடிப் பாத்திரத்தில் வார்த்துக் காற்றுப் புகாமல் கார்க்கிட்டு நித்தியம் இரண்டுமுறை குலுக்கி காற்பதுநாள் சூரியபுடத்திலிட பக்குவப்படும் பின்பதை யொருபுட்டியி லிறுத்து வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு ரூபா யெடைமுதல் ஒன்றரை ரூபா யெடைவரையில் இருபத்தொருநாள் குடித்துவர மேற்சொல்லிய ரோகங்கள் தீரும். இதற்கு யாதொரு ஐயமுமில்லை பத்தியம் உப்பு புளிப்பு பருப்புவகை கீரைவகை குளிர்ந்தசல மிதுகளை நீக்கவும் ப-ம் நெய் பால் மாமிசம் இதுகளாகும் மற்றொன்றுமாகாது

## கோரோசனை.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் செள-ம் வாயு சலதோஷம் கல்லடைப்பு நீரடைப்பு உதிரச்சிக்கல் இவைகளை நீக்கும். இதை மூலைப்பாலி லுரைத்துக் கண்ணிலிடப் பிரகாசம் அதிகரிக்கும் மாசுகளை யறுக்கும் உமிழ்நீரி லுரைத்துப்பூச வெண்குஷ்டம் கருங்குஷ்ட முதலிய படைகள் பவுத்திரங்கள் புண்கள் இவைகள் நீங்கும். கொத்தமல்லி யிலைச்சாற்றில் உரைத்துப்பூச தேகத்தை யதிகரிக்கும் புண்களாறும் சிவப்பு முள்ளங்கிச்சாற்றி லுரைத்துக் கண்ணிலிடக் கண்ணீரொழுக்கை மாற்றும் பச்சை வெற்றிலைச்சாற்றில் உரைத்துக் குழந்தைகளுக்கு வார்க்கச் சலதோஷங்கள் நீங்கும். இதில் இரண்டு குன்றிமணியெடைச் சருக்கரை பானத்திற் கலந்து குடித்துக்கொண்டு பட்சிகள் மாமிசத்தைப் புசித்துவரப் பலவீனப்பட்ட தேகங்கள் வலுத்து இரும்பைப்போலாகும்-தேகம் பருக்கும்-கோரோஜனை பசு அல்லது எருதின் பித்தப்பையில் உண்டாகிற ஒருவிதக்கல்லு. இது எப்போதும் ஒரு பையில் அடங்கியிருக்கும் உ௩ புளியங்கொட்டைப் பரிமாணமாயிருக்கும் நிறம் மஞ்சள் பலர் வைத்திய சிகிச்சையில் இது மெத்த உபயோகப்படுகின்றது, க-கடுகு பரிமாணம் வெத்திலை ரசத்திலாவது, மூலைப்பாலிலாவது இழைத்துச் சுரம் சலிப்பு மாந்தம் முதலிய ரோகங்களுக்குக் கொடுப்பதுண்டு. கோரோசனை மாத்திரை செய்முறை கோரோசனை குங்குமப்பூ கர்ப்பூரம் ஏலம் கிறாம்பு கோஷ்டம் சாதிக்காய் அக்கிரா காரம் வகைக்குப் பலம் க-இவைகளைச் சந்தனக்கட்டையின் கஷாயம் விட்டு மைபோல் அரைத்துக் குன்றிமணிபோ லுண்டைசெய்து கொள்ளவேண்டியது; ரசசெந்தூரம் அப்பிரகம் இவைகள் கொடிய தாகைப்பால் நீக்கலாயிற்று, சண்பகப்பூ கஷாயம் குங்குமப்பூ கஷாயம்

நிமித்த முல்லை வைத்தியரத்னச் சுருக்கம் இங்கிலீஷ் வைத்தியத்தில் கோரோசனைப் பிரயோசனமான சரக்கு வி-தி சூட்டுத் தேகத்துக் குதவாது ப-ம் வாதுமைப்பிசின் ப-ம் பாத்ஜஹர்.

## நொச்சில்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமும் அசுத்த உணவு மாம் சௌ-ம் வாயுவையும் ரசத்தைப்பற்றிய ரோகங்களையும் உதிரச் சிக்கலையும் பாம்பு முதலிய விஷத்தையுமாற்றும், இதன் சாற்றைப் பற்றுபோடக் கட்டிகள் கறையும் வீக்கங்களிறங்கும் சீதளத்தால் உண் டாகும் தலைநோய் நரம்பிசிப்புகள் வலி இவைகள் நீங்கும். இதை வீட் டிற்றெளித்துலைக்க விஷப்பூச்சிகள் ஓடிப்போகும். இதன் பழுப்பை யரைத்துப் பற்றுபோட அண்டவாயு நீங்கும். வி-தி குண்டிக்காய்க் குதவாது விந்து நஷ்டமுண்டாகும் ப-ம் விளாம்பிசின் ப-ம் ஷஹதாஜ.

## வார் விளங்கம்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமுங் குறைந்த உணவு மாம் சௌ-ம் தலைமூளை ஈரல் முதலிய சகல உள்ளுறுப்புகளுக்கும் வலிமைகொடுக்கும். தீபனத்தை யெழுப்பும், கட்டுகளை நீக்கும். ஏப் பதறையுண்டாகும்-இதை ஜெயித்தூன் எண்ணெயில் உரைத்துத் தேள்கொட்டின வாயிற்பூச் உடனே குளிரும் வி-தி தொண்டைவலி யுண்டாம் ப-ம் ஜெயித்தூன் எண்ணெய் ப-ம் வால்மிளகு

## ஸலாஹறா.

இது மலைகளில் வாசஞ்செய்கிற வெள்ளாடுகளுக்கு மதமேறிக் கற்பாறைகளில் மதசலத்தைப் பெய்யும் அது உறைந்து கறுப்பாய் கிலேப்போலிருக்கும்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமும் அதிக உணவு மாம் சௌ-ம் அதிக மாசுகளினால் தேகத்திற் கெட்டுப்போன நாலுவித சத்துகளையுஞ் சுத்தப்படுத்தும், இதிலே நித்தியம் ஒருவராக னெடை யாகச் சிக்கஞ்சபீனிற் கலந்து, நாற்பதுநாள் குடிக்கக் குலைநோய் பெரு வியாதி முதலிய ரோகங்கள் சொஸ்தமாகும். பருக்களையுடைக்கும் கட்டிகளைக் கரைக்கும்.

## வ்ஷாஜீரு.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமுங் குறைந்த உணவு மாம் சௌ-ம் வாயு வயிற்றுப்பிசம் உதிரச்சிக்கல் நீரடைப்பு அஜீ

ரணம் வயிற்றுவலி வாயுவினுலெழுப்புஞ் சுவாசம் குண்டிக்காயிலும் நீர்த்தாரையிலும் உண்டாகும் மாசுகள் இவைகளைப்போக்கும். தீபனத்தையும் ஏப்பத்தையும் எழுப்பும் உடல் பருக்கும் வி-தி நரையீரலுக்குதவாது ப-ம் வாதுமைப்பிசின் தேன் ப-ல் அனிசூன் சீரகம்.

## பருத்தி.

சு-ம். சூடும் வறட்சியுமாம் சிலர் சூடுங் குளிர்ச்சியுமெனச் சொல்லியிருக்கிறார்கள் பி-ம் சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் இதன் இளம்பிஞ்சு கொழுந்து இவைகளின் சாற்றைக்குடிக்கப் பெரும்பாடு வியாதிநீக்கும், இதில் சருக்கரை சேர்த்துப் பாகுபதமாய்க் காச்சி வேளைக்கு இரண்டுபலங் குடிக்கப் பித்தம் பைத்திய மிவைகளைப் போக்கும், கருப்பந்தரிக்கும், புடிஷ்டியுண்டாகும், இதன் இலைச்சாற்றை வேளைக்கு ஒரு ஆழாக்கு குடிக்க அதிசாரபேதிகளை நிறுத்தும், இதன் சாற்றில் ரோஜாப்பூ எண்ணெய் கலந்துபூசக் காய் விறற்களில் உண்டாகும் வலிகளை மாற்றும், இதன் கியாழத்தில் உட்கார்ந்திருக்க அல்லது கால்கழுவக் கருப்பச்சுருக்கம் நீங்கி மலர்ச்சியுண்டாம், இதன் வேது பிடிக்கச் ஜலதோஷம் நீங்கும். இதன் சாம்பலை ரணங்களிற்றூவ உதிரம் ஓடுதலை நிறுத்தி ஆற்றும்-உலர்ந்த பருத்திக்கொம்பைக் காதிலேற்றி அதன் மறுபுரத்தைக் கொளுத்திவிடக் காதிலடைந்த மாசுகளும் சகல ரோகங்களுந் தீரும்-இதன் பருப்பை உஷ்ணதேகத்துக்குச் சிக்கஞ்சபீனிலும் சீதளதேகத்துக்கு லவங்கப்பட்டையிலுங் கொடுக்க, அதிக வலிவை யுண்டாக்கும், தாதுவிர்த்தியதிகப்படும், இதன் பருப்பு பருப்பின் தைலம் இளம்பிஞ்சிற்செய்யும் பானம் இவைகளுக்கெல்லாம் ஒரே குணமாம்.

## சாஸபிருஸ்

சு-ம்- சூடுங் குளிர்ச்சியுமாம் பி-ம் சுத்தஉதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ-ம் சாஸபிருஸ் மரத்தின் பட்டை மிகவுந் தடித்த கபத்தையறுக்கும் தடித்த நீர்களை இளக்கி லேசாக்கும்-மலத்தை இளக்கும்-வீக்கங்களைக் கரைக்கும்-வியர்வையை யுண்டாக்கும்-குடல்களிலுள்ள கட்டுகளை நீக்கிப் பலப்படுத்தும்-சூதககட்டுகளையும் நீர்க்கட்டுகளையும் நீக்கும் வயிற்றுக் கிருமிகளை நீக்கும்-பல்நோயை நீக்கும்-சாஸ்பிருஸ் மரத்தின் கியாழம் சுவாச ரோக முதலிய மார்பைபற்றிய ரோகங்களுக்கும் ஜலதோஷம் பீநசமிவைகளுக்கும் உண்மையாக முறிவாகச்

சொல்லப்படுகின்றது, ஜ[illegible]ளைநீருக் கொப்பாகிய நல்ல சலத்தைக் கொதிக்கவைத்து அதில் சாபிருஸ் மரத்துடன் கொஞ்சம் லவங்கப் பட்டை சேர்த்து ஊறவைத்துச் சாப்பிடப் பீநசம் சம்பந்தமான சகல நீரொழுக்கும் வேருடனற்றுப்போகும், எட்டு அல்லது பதினாறு வராகனெடை சாஸ்பிராஸ் மரத்தூளை முக்கால் அல்லது ஒருபடி நல்ல ஜலத்தில் ஊறவைத்து ஒவ்வொரு மணது குடித்துவரக் கீல்வாயு பிடிப்பு கெட்ட ஜுரங்கள் இவைகள் தீரும், வியர்வை யுண்டாக்கும் வி–தி சூட்டுடம்பிற்குப் பொருந்தாது ஆகையால் மிகச் சாக்கிரதை யோடு பிரயோகிக்கவேண்டும்.

## யுஷ்பே மகாபி இதுவே சீமை நன்னாரிவேர்.

சு-ம் சூடும் வறட்சியுமாம் பி–ம் சுத்த உதிரமுங் குறைந்த உணவுமாம் சௌ–ம் சீமை நன்னாரிவேர் வாய்வுகளைக் கண்டிக்கும்-நீரைப் பெருக்கும்-வியர்வையை யுண்டாகுக்கும்-கபாலத்தின் குளிர்ச்சியினுலுண்டாகும் அநேக ரோகங்களைக் கண்டிக்கும். தடித்த நீர்களை யிலே சாக்கும் கட்டியிருப்பதைக் கரைக்கும்-மார்பு இரைப்பை ஈரல் குண்டிக்காய் ஊத்தாம்பிள்ளை இவைகளிலுண்டாகும் ரோகங்களை நீக்கும் துண்டுகளாயரிந்து நறுக்கின சீமை நன்னாரிவேர் விராகனெடை 102-சுத்த ஜலம் படி அரை இதை யிரண்டுமணிநேரம் இளஞ் சூட்டில் வைத்தபின்பு வேரைப் பிழிந்தெடுத்து மறுபடி நறுக்கி மேற்படி கியாழத்திற் சேர்த்துக் காற்படியாகக் காய்ச்சி நன்றாகப்பிழிந்து வடிக்கட்டி நாளொன்றுக்கு அரையாழாக்கல்லது ஒரு ஆழாக்கு குடிக்க கீல்வாயு இடுப்புநோய் நீர் கோர்வை வெள்ளை கண்டமாலை வைசூரிகளின் விபத்து, மேகத்தலைநோய்கள், இரவிலுண்டாகும் நோவுகள், இவைகளை நீக்கும், சீரணத்தை பதிசப்படுத்திப் பசியை யுண்டாக்கும் நாட்பட்ட கடின ரோகங்கள் நீக்கும். முக்கியமாக உதிரத்தைச் சுத்தி செய்யும், மேகத்தினால் உளுத்துப் பலயீனப்பட்ட எலும்புகளைப் பலப்படுத்தும், சொறி சிரங்கு படை முதலிய தோலைப்பற்றிய ரோகங்களை நீக்கும், வைசூரிகண்டிக்கும் தாய்தந்தைகளிடத்திலும் செவிலித்தாயார்களிடத்திலும் சேர்ந்திருக்கும் குழந்தைகளின் சாப்பாட்டில் சீமை நன்னாரிவேர்த் தூளைச் சேர்த்துவர வைசூரி பாதையொட்டாது வி–தி சூட்டுடம்பிற்குப் பொருந்தாது ப-ம் வாதுமை நெய் பசுவின் பால் ப–ம் நாட்டு நன்னாரிவேர் இதை இங்கிலீஷில் சார்சபரில்லாவென்பர்-இவி வேசார் வேறென வழங்குகின்றது.

## நாதந்தி இதுவே அழுகண்ணி.

நாறந்தியின்யிலை கடலை யிலையைப்போற் சிறியதாயும், வழுவழுப் புள்ளதாயும், நாற்புறம் பூமியை நோயையும் பிற்புறம் ஆகாசத்த நோக் கியுமிருக்கும் அதினின்று சலமொழுகுவதைப்போற் றேற்றும்-இது நல்ல ருசியை யுடையதாகவும் கொஞ்ச முப்புக்கரித்து மிருக்கும்-இந்தச் செடி யடியிலிருக்கும் பூமி நசிவாய்க் கறுத்திருக்கும்-எறும்புக ளெப்போது மொய்த்துக்கொண்டிருக்கும்-உவர் நிலத்தில் மூளைக்கும்-இதி லிரண்டு ஜாதியுண்டு-அதிலொன்று ஒரு முழ உயரமு மற்றொன்று ஒருசாணுயரமு மிருக்கும் சு-ம் சூடுங் கெழுாமையுமாம் பி-ம் சுத்த விரத்தமும் சுத்த உணவுமாம் சௌ-ம் ஆதிவாரத்தில் கடகராசியிற் சந்திர னுச்சத்தி லிருக்கும்போது தன்னுடைய நிழல் செடியின்பேரிற் படாமல் பிடுங்கி ஐந்துநாளிராத்திரிகளில் பனியில் வைத்து பின்பு நிழலிலுலர்த்தி, வஸ்திரகாயஞ்செய்து, வேளைக்கு ஒருவராகனெடை சூரணத்துடன் சமபாகம் கற்கண்டும் தேனுஞ் சேர்த்துச் சாப்பிடத் தேக புஷ்டியுண்டாகும் பலமுண்டாகும். பசியதிகரிக்கும்-தாது புஷ்டி யுண்டாகும்-சகல ரோகங்களும் தீரும்-இதனாலொரு பொல்லாங்கும் வராது.

## தொட்டாற்சுருங்கி.

சு-ம். குளிர்ச்சியும் ஈரமுமாம் பி-ம் சுத்த உதிரமுஞ் சுத்த உணவு மாம் சௌ-ம் தொட்சுருங்கி காற்றைக்கண்டிக்கும் சத்துக்களைப் பக்கு வப்படுத்தும். கட்டுகளை யுடைக்கும் உதிரக்கெடுதிகளை மாற்றும் உதிரக்கெடுதியாலுண்டாகும் ரோகங்களை நீக்கும்-பித்தரோகங்களனைத் தையும் போக்கும், தொட்டாற்சுருங்கி சாற்றைப் பூச, ஆறுத ரிணங் களும் புரையோடுகிறரிணங்களும் ஆறும், சூரியன் கடகராசியில் இருக் கும்போது ஸ்நானம்செய்து பரிசுத்தனாய்த் தொட்டாற் சுருங்கி இருக்குமிடத்திற்குப் போய் மதுரமான வஸ்துக்களை நிவேதனம் செய்து பாங்கி சாம்பிராணியை யொத்த சனிக் கிரக சம்மந்த வஸ்துக் களை தூபங்கொடுத்து தன்னுடைய நிழல் செடியின்பேரில் படாமல் வேரோடு பிடுங்கி நிழலில் உலர்த்தி, சந்திரன் கடகராசியில் வரும் போது யிடித்து வஸ்திரகாயம் செய்து, ஒரு மிளகளவு சூரணத்தை அப்போது கறந்த பசுவின்பாலில் கலந்து தூலமூர்த தூல ஸனலாதன நமோ நமோ கவர் என்ற மந்திரத்தை ஏழுதரஞ் செபித்துக் குடிக்கவும் இந்தப்படி ஒருவாரம் குடிக்க வண்டலைப்பற்றிய சகல ரோகங்களும்

சகல நளிர் ஜுரங்களும்-சகல தொந்த ஜுரங்களும் தீரும். இரண்டு வாரம் குடிக்க மூல ரோகம் பகந்தர ரோகம் புறையோடுகிற ரிணங்கள் காமாலை இவைபோன்ற ரோகங்களனைத்துந் தீரும், மூன்றுவாரங் குடிக்க பெருவியாதிகள் குஷ்டங்கள் படைகள் பறங்கிப் புண்கள் இவைபோன்ற ரோகங்களனைத்துந் தீரும், இதை நித்தியங் குடித்து வருவதால் ஆன்ம சக்தி யதிகரிக்கும் இது இந்து சாத்திரிகளால் மிக ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. இதி லெழுதியிருக்கும் மந்திரம் பாரிசிலெழுதி யிருந்ததைப்பற்றி யுச்சரிப்பு பேதமிருக்கு மாகையால் தெரிந்தவர்கள் திருத்திக் கொள்ளவேண்டும்

## காச்சினூர் என்னுமரம்.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமும் சுத்த உணவுமாம் சௌ-ம் கச்சினூர் மலத்தைக்கட்டும் நீர்களை வறட்டும் இரைப்பைக்கும் குடலுக்கும் வலிமைதரும் - பேதியை நிறுத்தும். வயிற்றுக் கிருமிகளை நீக்கும் இரத்தத்தைச் சுத்திசெய்யும்-பித்தத்தை போக்கும் பெருவியாதி கண்டமாலை யிவைகளை நீக்கும்-கச்சினூர் மரப் பட்டையுடன் மாம்பழத்தைச் சமபாகமாய்க் கூட்டிக் கியாழமிட்டுக் குடிக்க இரத்தவாந்தி பெரும்பாடு ஊரிணங்கள் மலத்துவார வியாதிகள் இதுதீரும் ஷை பட்டையுடன் அகாகியா, குல்னூர், இதுகளைச்சமபாகங் கூட்டிக் கியாழமிட்டுக் கொப்பளிக்க, வாய்வேக்காடு தொண்டைப்புண் கண்டமாலை இதுகள் தீரும்-ஷை மரத்தின் மொக்குகளைக் கியாழ மிட்டுக் குடிக்கச் சூட்டினாலுண்டாகும் இருமல் மூலம் இரத்த மூலம் பேதி பித்தவியாதி இதுகள் தீரும்.

## ஜராவந்து என்னும் வேர்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமும் சுத்த உணவுமாம் சௌ-ம் ஜாரவந்தே தவீல் என்னும் ஜாரவந்தே முத்ஜரா என்று மிருவகைப்படும்-அது சகல விஷங்களையு முறிக்கும் இரத்தத்தைச் சுத்திசெய்து விருத்திபண்ணும் சரீரத்திற்குச் சௌக்கியத்தையும் பலத்தையுங் கொடுக்கும், வாயுக்களைக் கண்டிக்கும் இரத்தத்தினாலுண்டாகும் வியாதிகளை நீக்கும்-நீரைப் பெருக்கும், சட்டுகளை யுடைக்கும், உதிரச்சிக்கலை யறுக்கும், வயிற்றுக் கிருமிகளைக் கொல்லும், பேனை நீக்கும், கல்லைக் கரைக்கும், வாய்வு இசிவுகளை நீக்கும்-மார்பையு மீரலையுஞ் சுத்திசெய்யும், முகக்களை யுண்டாகும், ஜாரவந்தி லிரண்டு வாரக

னெடையைச் சாராயத்திற் குடிக்க விஷங்களை முறியும் மிளகுடன் சேர்த்துச் சாப்பிட உதிரச்சிக்கலை நீக்கும் கருப்பையைச் சுத்திசெய்யும் பிண்டத்தை விழச்செய்யும்-சிக்கஞ்சபீனுடன் சேர்த்துக் குடிக்க மண்ணீரலைச் சுத்தி செய்யும் ஒரு கழஞ்சைத் தேனிற் கொள்ளக் காக்கை வலி நீங்கும்-குடலுக்குப் பலங் கொடுக்கும்-கெட்ட சத்துகளை நீக்கும். ஈசாவென்பதுடன் சேர்த்துப் பூசக் குழிவிழுந்த ரிணங்கள் ஆறும் பற்றிடத் தேள் முதலிய விஷங்கள் தீரும்-கருப்பைக்கு கையின் ரிணங்களையாற்றும் காடியுடன் சேர்த்துக் குடிக்க மண்ணீரலுக்குப் பலங் கொடுக்கும் வி-தி ஈரலுக்கும் மண்ணீரலுக்கும் கெடுதிசெய்யும் பம் தேன் இதுகளில் ஜராவந்தே முத்ஜரா என்றும் சிறந்தது.

## பாம்பு.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம்அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் தேகத்தை யிறுக்கும் நீரையிழுக்கும் பாம்பின் கொழுப்பை கண்ணிரப்பைகளில் மையிடுவதுபோலிடக் கண்சிவப்பு நீர்முட்டல் கண்பூ கண்படலம் இதுகள் தீரும்-பார்வை தெளிவாகும்-பிடிப்பிற் றடவ பிடிப்பு நோய் நீங்கும் பாம்பு தானே யுரித்த தோலை வயிற்றில் அல்லது இடுப்பிற்கட்டச் சீக்கிரத்திற் பிரசவமாகும் ஷை தோலைப் பொடிசெய்து, அல்லது சாம்பலாக்கித் தடவத் தினவு நீங்கும்-மயிர் முளைக்கும் ஷை தோலை அங்க வஸ்திரம்போல் போட்டுக்கொள்வதாலும், கச்சைபாகக் கட்டிக்கொள்வதாலும், பாண்டு நீர்க்கோவை யிதுகள் தீரும்-நீரையிறக்கும், ஷை தோலின் பொடியும் வயல் நண்டின் பொடியு மொன்றாய்ச் சேர்த்து அறுபட்ட நரம்பின்மேற் றடவ நரம்பு கூடி யாறிப்போகும்-பொடியைத் தேய்க்க நரம்பைப் பலப்படுத்தும்-கண்களிற் படப்பட்ட காயங்களின்மேற் போடச் சீக்கிரத்திலாறும் ஷை தோலைப் பொடிசெய்து புதுக்காயத்தின் மேற் றூவ மூன்று தினத்திற் குணப்படும்-ஷை கஷாயத்தைத் தலையில் வார்க்கப் பேன் சாகும்-காதிற்குத்தக் காதுநோய் தீரும், கண்ணில் வார்த்துக் கழுவக் கண்ணோய்கள் தீரும்-வாய் கொப்பளிக்கப் பல்நோய் தீரும் பாம்பு கடித்த காயத்தில் பாம்பின் றலையை நறுக்கி வைத்துக் கட்டுவதாலும் பாம்பின் பிச்சைத் தடவுவதாலும் விஷந்தீரும், பாம்பின்தோலை யுரித்து விட்டுக் குடல் தலை வால் இவைகளை நீக்கிப்போட்டுக் கழுகிக் காய வைத்து இடித்து வஸ்திரகாயஞ்செய்து அரைவராக னெடைமுதல் ஒருவராக னெடைவரையில் சாராயத்தில் அல்லது லவங்கப்பட்டை

கஷாயத்திற் சாப்பிடச் சிலந்திவிஷம் பாஷாணவிஷம் குஷ்டுகள் விஷம் சுரங்கள் ஊழிக் காய்ச்சல் இவைகள் நீங்கும், வியர்வையை யுண்டாக்கும் கெட்ட நீர்களை யிறக்கும்-உதிரத்தைச் சுத்தி செய்யும்-நீரை யிறக்கும்-பாம்பின் ஈரலை யுலர்த்திப் பொடிசெய்து சாராயத்தில் அல்லது லவங்கப்பட்டைக் கஷாயத்திற் குடிக்கப் பிரசவ வேதனை நீங்கிச் சீக்கிரத்தில் பிரசவமாகும் பாவமானது சௌக்கியத்தை நிலைநிறுத்துவதற்கும் ஆயுளை விருத்தி செய்வதற்கும் ஆச்சரியமான மருந்தாக விருக்கின்றது.

## தேள்.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் சௌ-ம் பாரிசவாய்வினாற் சேர்த்துபோன கைகால்களில் நரம்பில்லாத விடத்தில் தேளைக் கொட்ட விடப்பாரிசவாயு நீங்கும் தேளை யுலர்த்திக் கொடுக்கின் முனையை நீக்கிப்போட்டுச் சூரணித்து அரைக்கால்வராக னெடைமுதல் அரைவராக னெடைவரையிற் றின்ன நீரை யிறக்கும்-பூநாகத்தைப்போலவே குண்டிக்காயிலும் ஊத்தாம் பிள்ளையிலுமுண்டாகிற மணலை வெளிப்படுத்தும்-கெட்டனீர்களைப் போக்கும் வியர்வை விடச்செய்யும்-தேள் கொட்டினதற்குத் தேளை நசுக்கிக்கட்ட விஷந்தீரும்-கசப்பு வாதுமை நெய்யில் அநேகந் தேள்களை உயிரோடு பிடித்துப்போட்டு ஊறவைத்து வைத்துக்கொண்டு உள்ளுக்குக் கொடுக்க வயிற்றுநோய் கல்லடைப்புநோய் இதுகள்தீரும்-குண்டிக்காயி லிருக்குமிடத்துக் கற்களை வெளிப்படுத்தும் ஊத்தாம் பிள்ளை யிருக்குமிடத்திற் பூச நீரையிறக்கும்-ஷை தைலத்தை மாத்திரமாவது வெங்காயத்தைச் சுட்டரைத்து தைலத்தில் குழைத்தாக கோசத்திற்பூச நீர்க்கட்டு தீர்ந்து நீரிறங்கும்-ஷை தைலத்தைத் தேள் கொட்டினவிடத்திற் பூச விஷந்தீரும் ஷை தைலத்துடன் தித்திப்பு வாதுமைநெய் அரைப்பங்குச் சுடவைத்து ஒருதுளி அல்லது இரண்டு துளி காதிற் குத்தினவுடனே காதுநோய் ஆச்சரியமாக நீங்கும், ஒரு ராத்தல் வாதுமைநெய்யில் பத்துத்தேளை யுயிருடன் பிடித்துப் போட்டு, அத்துடன் ரேவல் சீனி கோரைக்கிழங்கு கோவை வேர்ப் பட்டை ஜெந்தியானு வகைக்கு விராகனெடையாக நறுக்கிப்போட்டு, ஒருவாரம் வெய்யலில் வைத்துப் பின்பு பூசப் பாரிசவாதங்கள் தீரும்.

## பச்சைத்தவளை.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமும் சுத்த உணவுமாம் சௌ-ம் பச்சைத்தவளையின் மாமிசத்தை உப்பு எண்ணை

அல்லது வெண்ணெயுடன் தின்னச் சகல பாம்பு விஷமுந்தீரும், சாறு காய்ச்சிக் குடிக்க அஸ்திரம் க்ஷயம் நாட்பட்ட ரோகங்கள் தீராத இருமல் இவைகள் தீ ட், தேகபுஷ்டியுண்டாகும். நித்திரைபிடிக்கும், குளிர்ச்சியுண்டாகும் பச்சை தவளை யுயிருடன் வைத்துச் சாகிற வரைக்குங் கட்டிவைக்கப் பிளவைக் கட்டிகளின் விஷங்கள் நீங்கும், பிடிப்புகள் நீங்கும் கோபையடக்கும். வயிற்றிற்கட்ட வயிற்றுப் பிடுங்கள் தீரும். பச்சைத் தவளையைச் சலத்திலாவது காடியிலாவது கொதிப்பிட்டுக் கொப்பளிக்க பல்வலி நீங்கும், வைகாசி ஆனிஆடி இந்த மாதங்களிலொன்றில் நாற்பது பச்சை தவளைகளைப் பிடித்து வயற்றைப் பிளந்து ஈரல்களை யெடுத்துக் கோவிசு யிலையின்மேற் பரப்பிப் புதுச் சாடியில் வைத்துச் சிறுதீயில் வைத்து யீரமுலர்ந்தபின் பொடிசெய்து, ஆறுபங்காக்கி கடகராசியில் சூரியனுஞ் சந்திரனுஞ் சேருகிற தினத்தில் காலமே போஜனத்திற்கு முன் வெறும் வயிற்றில் ஒரு பங்கைச் சாராயத்திற் கலந்து குடிக்க மறுபடி யொன்றுங் குடிக்காமலிருந்து ஐந்து நாழிகைக்குப் பின்பு போசனஞ் செய்யவும் சாயந்தரத்திற் போசனமானபின்பு மற்றொரு பங்கைச் சாப்பிடவும், இந்தப்படி மற்ற நாலு பங்கையு மறுநாள் முதல் மூன்றுநாளுஞ் சாப்பிடத் தீராத காக்கை வலி முயல்வலி முதலிய சகலவலிகளுந் தீரும் பச்சைத்தவளையின் முட்டையைப்பூச உதிர்ச் சுத்து கண்டமாலை தீப்பட்ட புண் முதலியதுகள் தீரும், மலத்துவாரத்தில் வைக்க மூலவிரதம் நீங்கும், பச்சை தவளையைச் சாம்பலாக்கிக் காயங்கள் இரத்தபீநசம் இரத்தமூல முதலியதிற் றாவ உதிரம் நிற்கும்,

## விலாங்கு மீன்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமும் சுத்த உணவுமாம் சௌ-ம் விலங்கு மீனைத் தின்னத் தாதுபுஷ்டியுண்டாகும் காற்றைக்கண்டிக்கும்-இடுப்பினோய் தீரும் இடுப்புக்குப் பலமுண்டாகும், விருத்தாப்பியருக்குச் சுபாவமாயுண்டாகுங் குளிர்ச்சியை நீக்கும், விலாங்கின் கொழுப்பு காயங்களையுஞ் சிரங்கு முதலிய ரணங்களையும் ஆற்றும்-மயிரில்லாதவிடங்களிற் றடவ மயிர் முளைக்கும், ஷை கொழுப்பையுருக்கிக் காதிற்குத்தச் செவிடு தீரும். இதைத் தடவுவதினல் மூலவியாதி தீரும். விலாங்கின் தலையை யறுத்து இரத்தத்துடன் மறுக்களின்பேரில் வைத்துக் கட்ட மறு நைந்து விழுந்து ஆறிப் போகும் விலாங்கின் இரத்தத்தை சூடாறுமுன் சாராயத்திற் கலந்து

குடிக்கக் குன்ம முதலிய வயிற்றுநோய்கள் தீரும், விலாங்கின் ஈரலை பித்துப்பையுடன் சட்டியில் அல்லது ரொட்டி யடுப்பில் யீரம் வாள வறுத்துப் பொடிசெய்து, சாராயத்திற்கலந்து ஒருமிணறு குடிக்கப் பிரசவ வேதனை நீக்கிச் சுகப் பிரசவமாகும், விலாங்குமீனின் தோலை சுத்திக்கட்ட மூட்டுப் பிசகு நீங்கும் தோல் வயண்டுபோன தரையின் பேரிற் சுத்திக் கட்டத் தசைச்சுருங்காம லாறிவிடும்-ஷை தோலைப் பச்சையாகவாவது உலர்த்தியாவது உப்பிட்டுலர்த்தியாவது நெருப்பிற் போட்டுப் புகையைப் பிடிக்க மலத்துவாரம் வெளிப்பட்டதும் பெண்களுக்குக் கருப்பக்குதை வெளிப்பட்டதும் உள்ளடங்கும்.

## தேரை.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த உதிரமும் அசுத்த உணவுமாம் செள-ம் தேரையை ஆடிமாதத்திற் பிடித்துத் தலையை யறுத்துவிட்டு, குடலையும் நீக்கிப்போட்டு, நிழலுலர்த்தி, மைபோல் பொடிசெய்து, ஆறு அல்லது ஏழரை குன்றிமணியிடை சூரணத்தைச் சமபாகஞ் சர்க்கரையுடன் சேர்த்துக்கொடுக்கவும், இந்தப்படி மூன்றல்லது நாலுமுறை கொடுக்க நீர்க்கோர்வை பாண்டு இதுகள் நிராசையையடைந்து நிலையி லிருந்தபோதிலும், ஆச்சயமாக விசேஷமாக நீங்கும். வேகமான மருந்தாகையால் மூன்றல்லது நாலுநாள் இடையில் விட்டுக் கொடுக்கவேண்டும், தேரையை யுலர்த்தி அதிலுள்ள விஷம் நீங்கும்படி காடியிற் சற்றூரவைத்த பின்பு பக்கப் பளவையின்மேல் வைத்துக் கட்ட சுகமாகக் கரைந்து சொஸ்தமாகும்-இதைக் கட்டியிருக்கக் காற்றிறுவுண்டாகும் கெடுதியை நீக்கும். ஷைதேரையைக் காதின் பின்னால் வைத்தாலும் சூடேறுகிறவரையில் கையிற் கெட்டியாகப் பிடித்திருந்தாலும், அக்குளில் வைத்திருந்தாலும், கழுத்திற் றெங்கவிட்டாலும், இரத்தபீநசம் தப்பாமல் நிற்கும்; தேரையின் சூரணத்தையாவது அல்லது தேரையைச் சுட்ட சாம்பலைத் தூவ, இரத்தப் போக்குகளை நிறுத்தும். தேரை சுட்டசாம்பலைத் துணியில் முடிந்தாவது தேரையை யுலர்த்தியாவது இருதயத்தானத்திற் படும்படி கழுத்திற் கட்டிவைக்கப் பிரசவத்தினால், ஊதம்பிள்ளையின் வாய்கிழிந்து நிற்காமற் சிறுநீர் பெருகுவதை நிச்சயமாகக் குணப்படுத்தும், தேரையை யுலர்த்திப் பொடிசெய்வதை விடச் சாம்பலாக்குவதே யுத்தமம்-ஒன்றரை முத்தல் ஜெயித்தூன் எண்ணெயில் மூன்றல்லது நாலு தேரைகளை யுயிருடன் போட்டு ஒருமணிநேரம் கொதித்தபின்பு இறுத்து வைத்துக்கொண்டு தடவ, முகத்திலுள்ள புள்ளிகள் படைசள் வடுக்கள் முதலியதுந் தீரும், ஆருதரிணங்களாறும்.

கனை விரைவில்

## மூங்கில்.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்தவுதிரமும் குறைந வாம் செள-ம் வாயு உதிரச்சிக்கல் இவைகளைப் போக்கும் மூங்கிலிக் இலையை பிடித்து முள் தைத்தவிடத்தில் வைத்துக்கட்ட முள்வெளிப் படும் மூங்கில் இலையின் சாற்றிற் காடிசேர்த்துப் பூச இடுப்புவலி நீங்கும் தேன் சேர்த்துக் குடிக்க இருமலைப்போக்கும்; மூங்கிற் புரணி யுடன் கருஞ்சீரகம் மஞ்சள் சேர்த்துக் கியாழமிட்டுப் புட்டி வெல்லங் கூட்டிக் குடிக்கப் பிரசவித்த ஸ்திரீகளின் வயிற்றுச் சிக்கலை மாற்றும். இதன் சாம்பலை ரணத்தின்மேல்றாவ ஆறிப்போம் பல்விளக்கச் சுத்தி யாம்-மூங்கில் இலையின்மேலிருக்கும்-பனித்தண்ணீரைக் கண்ணிலிடக் கண்சிகப்பு நீங்கும் கூசுதல்மாறும் வி-தி நீரையீரலுக்குதவாது ப-ம் வாதுமைப்பிசின்

## தம்பலப்பூச்சி இதுவே இந்திரபோளம்.

சு-ம். குளிர்ச்சியும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் செள-ம் இந்திரகோபப் பொடியைத் தேனி லரைத்து ஒரு வாரம் குடிக்கப் பெரும்பாடு நிற்கும் ரணங்களிற்பூச ஆறும்-காடியில் அரைத்து ஒருவாரங் குடிக்கக் கருப்பந்தரிப்பதை விலக்கும்-எலும்பு முறிவதை யொன்றாகக் கூட்டிவைக்கும்-இதன் பொடியை மூதைத்திற் றாவ மூளவிரணம் ஆறும்-இதைச் சிவப்புப்பட்டில் முடிந்து கழுத்திற் கட்டத் தீராதசுரங்கள் தீரும் இதன் கியாழத்தைத் தலையில் வார்க்கப் பேன்கள் சாகும்-தலைமயிர் வளரும்-இதை உயிரோடு பிடித்து, நல்ல வெல்லத்தில் வைத்து உண்டைசெய்து, வருஷத்தில் ஒவ்வொரு வாரம் நித்திய மொன்றாக விழுங்க, மறுவருஷம் வரையில் தாது விருத்தி யதிகரிக்கும் ப-ம் பூநாகம்.

## கற்களின் வகை.

உலகத்திற் கற்களனேகவிதமாக விருக்கின்றன-அவற்றுள் வெண் ணிறத்தையுடைய கற்கள் குளிர்ச்சி அல்லது கொழுமையையுடைய தென்றும், செந்நிறத்தையுடைய கற்கள் சூடு அல்லது வறட்சியை யுடையதென்றும், மஞ்சள் நிறத்தையுடைய கற்கள் பித்தத்தை யுடையதென்றும், கறுப்பு அல்லது பச்சை நிறத்தையுடைய கற்கள் குளிர்ச்சியையும் வறட்சியையு முடையதென்றுஞ் சொல்லப்பட்டிருக் கின்றன, அவைகளிற் சில வருமாறு.

## ஹிஜறுன்னபி.

...றுன்னபியெனுங் கல் கொஞ்சம் பளபளப்பை யுடையதாயும், ...தி லுறைக்கப் பாலைப்போல் வெளுத்து மிருக்கும்-இதைப்பசுவின் பாலில் அல்லது சுத்தசலத்தி லுரைத்துக் குடிக்க, உதிரவாந்தி-பெரும்பாடு-இவைகளை நிறுத்தும்-குண்டிக்காயிலும்-ஊத்தாம் பிள்ளையிலும்-உண்டாகிற கற்களை கரைக்கும்-வயிற்றுப்புண்களை யாற்றும்-கண்ணிர் முட்டலை நீக்கும்-பற்றிய வீக்கங்களையும், பருக்களையுங் கரைக்கும்.

## ஹிஜரே அஸலி.

ஹிஜரே அஸலியெனுங் கல் சற்று வெளுத்தும், உரைக்க மஞ்சளாயுமிருக்கும்-இது புண்களையாற்றும்.

## ஹிஜரே முஷ்பஃ.

ஹிஜரே முஷ்பஃகெனுங் கல் குங்கும நிறமாயும், எளிதி லுடையத்தக்கதாயுமிருக்கும்-இதை முலைப்பாலி லுரைத்துக் கண்ணிலிட நேத்திர ரோகங்களனைத்துந் தீரும்.

## ஹிஜருல் யெஹூத்.

ஹிஜருல் யெஹூத்தெனுங் கல் சாம்பல் நிறமாயும் கொட்டிக்கிழங்கைப்போ லுருட்சியாயு மிருக்கும்-இது குண்டிக்காயிலும் ஊத்தாம்பிள்ளையிலு முண்டாகிற கற்களை நாசஞ்செய்வதன்றி, அவ்விடங்களிலுள்ள புண்களையும் ஆற்றும்.

## ஹிஜருல்கமர் இதுவே சந்திரகாந்தக்கல்.

ஹிஜருல் மகரெனுங் கல் பளுவற்றதாயும், சற்று வெளுத்து மிருக்கும்-இது காந்த மிரும்பை யிழுப்பதுபோல் வெள்ளியை யிழுக்கும், இதற்குப் பௌர்ணமி காலங்களில் ஒளிவும் வெண்மையு மதிகரிக்கும்-இது காக்காய்வலி கிப்கான் என்னு மிருதயத்துடிப்பு, இரத்த வாந்தி இவைகளை நீக்கும். இதைக் கறுப்பு வஸ்திரத்தில் முடிந்து கட்டியிருக்க வசீகரமுண்டாகும்.

## ஹிஜரே ஸப்வான்.

ஹிஜரே ஸப்வான் எனுங்கல் பளிங்கைப்போல வெளுத்தும், பளபளப்பாயு மிருக்கும்-ஆனால் மிருதுவாகவி ருக்கும்-இது உதிரவாந்தி

இரப்பையை பற்றிய உட்டினம் மோகவிகாரம் இவைகளை விரைவில் மாற்றும்.

### ஹிஜ்ரேகல்ப்.

கிஜரேகல்பெனுங் கல்லை நாய்கள் கண்டால் வாயினல் கவ்வித் தூரத்திலெறிந்து விடும் இதை யிவருக்கிடையிற் போட விரோத முண்டாகும்.

### ஹிஜரே ஸஜாயி.

கிஜரே ஸஜாயியெனுங் கல் கறுத்தும் துர்க்கந்தத்தை யுடையதாயுமிருக்கும், நெருப்பிற் கொளுத்தப் பற்றும்-தண்ணீர் தெளிக்கச் சுவாலை விட்டெரியும்-எண்ணெயைத் தெளிக்க அவியும், இதைக் குளிசமிடக் காக்கைவலி, கருப்பரோய், துஷ்ட மிருகங்களின் பொல்லாப்பு, இவைகள் நீங்கும்-இதைப் புகைக்க விஷஜந்துக்க ளோடிப்போகும்.

### ஹிஜரே யெயருபி.

கஜரே யெயருபியெனுங் கல் நந்தத்தைப்போ லிருக்கும். இது ரணங்கள் இரத்தவாந்தி இவைகளை நீக்கும், பற்களிற் றேய்க்கச் சுத்தியாகும் ஈறு பலப்படும்.

### ஸங்கேபிஸான்.

ஸங்கேபிசான் எனுங் கல் சிவந்தும் கறுத்தும் பளபளப்பாயுமிருக்கும். இதில் கத்தி முதலிய ஆயுதங்களைத் தீட்டக் கருக்குண்டாகும், இதைச் சலத்தி லுரைத்துப்பூச மயி ருதிர்வதை நிறுத்தும்-கொவைகளைத் தளராமற கெட்டிப்படுத்தும்-உதிரசிக்கலை நீக்கும் கண்ணிலிட வெள்ளை மாசு நீங்கும், இதை யிரும்பி லுரைத்துத் தலையுற்றிடவத் தலைமயிர் முறுக்காய் வளரும் இதிலொரு வராகனெடையைக் காடியிலுரைத்துக் குடிக்க காமாலை காக்கைவலி இதுகள் தீரும்-இதைச் செம்பிலுரைத்துப் பற்றிடக் கட்டிகளுடையும் ஜெயித்தான் எண்ணெயிலுரைத்து நெருப்புப்பட்ட புண்ணிற்பூச ஆறும்-கண்ணிலிட மாசுகள் தீரும் இத்துடன் வெங்காரஞ் சேர்த்துக் காடியிலுரைத்துப்பூச, பக்கப்பிளவை, கண்டமாலை முதலிய விரணங்கள் நீங்கும்.

### ஹிஜருல் ஹய்யா இதுவே விஷக்கல்.

ஹிஜருல் ஹய்யாவெனுங் கல் கறுத்தும் மஞ்சளாயும், சாம்பல் நிறமாயும், மூன்று வெள்ளைக்கோடுக ளுள்ளதாயுமிருக்கும் பாம்பு

கடித்த காயத்தில் வைக்க, விஷத்தை யிழுத்துவிடும். பின்பு பாலிற் போட விஷத்தை நீக்கும்.

## ஷாதனு.

ஷாதனுவெனுங் கல் இருண்ட சிவப்புமாம், துவரம்பருப்பு வடிவாயும், சலத்தி லுரைக்க சிவந்துமிருக்கும் இதில் ஐந்து குன்றிமணியெடையைச் சலத்தி லுரைத்துக் குடிக்க, பெரும்பாடு மூலவிருத்தம் முதலிய ரத்தப் போக்குகளை நிறுத்திவதில் இதற்கிணையான மருந்தொன்றுமில்லை-உடைந்த விந்துவைக் கெட்டிப்படுத்தும் நீரடைப்பை நீக்கும். வயிற்றுக்கடுப்பை யகற்றும். ஈளை இருமலைப்போக்கும் கோழி முட்டையின் வெள்ளைக்கருவி லுரைத்துப்பூசக் கணவீக்கம் நீங்கும், தீப்பட்ட புண்ணையாற்றும், முலைப்பாலி லுரைத்துக் கண்ணிலிடக் கண்ணோப் கண் எரிவு முதலிய நேத்திரரோகங்க ளனைத்துந் தீரும். கொத்தமல்லி யிலைச்சாற்றி லுரைத்துபபூச மூலப்புண் கிரந்தி யோனித் துவாரத்தின் வேக்காடு முதலிய புண்கள் தீரும்.

## கிஜருல்ஃகலக்.

கிஜருல்ஃகலக்கென்னும் கல்லைத் தேய்க்க, வெண்மையாயும் பளபளப்பாயும் இருக்கும். இதனாற் செய்த பாத்திரங்களிற் போசனஞ் செய்யச் சந்தோஷமுண்டாகும், பிணிகள் நீங்கும், திருஷ்டி தோஷம் நீங்கும், மேன்மையுண்டாகும்.

## மகக் இதுவே உரைகல்.

மஹக்கெனுங் கல் கறுத்துங் கனத்து மிருக்கும், இதின்பேரில் வாயினாலூதக் குங்குமவாடை வரும், பொன்னை வெள்ளியை யுரைக்க மாற்றுத்தெரியும், முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிட மாசுகளறும்.

## ஹிஜருத்தீக் இதுவே கோழிக்கல்.

ஹிஜருத்தீக்கெனுங் கல், இருண்ட வெண்மையாக விருக்கும் இது சேவலின் வயிற்றில் மொச்சைக்கொட்டை பிரமாண முண்டாகும் இதை வாயிலடக்கத் தாகமடங்கும், குளிசமிட அச்சம் நீங்கும்.

## கிஜருன்னூர்.

கிஜருன்னூரெனுங் கல் பலதிறமாகவிருக்கும், தட்டினால் நெருப்பு விழும், இதைத் துணியில் முடிந்து துடையிற்கட்ட உடனே பிரசவமாகும்.

## கிஜரேமஸாரு.

கிஜரேமஸாருவெனுங் கல் மனிதர்கள் ஊத்தாம்பிள்ளையி லுண்டாகும். இதைச் சலத்திலுரைத்துக் குடிக்கக் கல்லடைப்பை நீக்கும்

## கிஜரே அமாம் இதுவே புருக்கல்.

கிஜரே அமாமெனுங்கல் இநண்ட நிறமாகவிருக்கும்-இது புருக்களில் கூடுகளிலுண்டாகும் இதைச் சலத்திலுரைத்துப் பற்றிட யோனிப்புத்து பக்கப்பிளவை யிவைகள் நீங்கும்.

## கிஜருலஹறூத் இதுவே மீன்கல்.

கிஜருல்ஹறூத்தெனுங் கல் அதிக கெட்டியாயும் வெளுத்து மிருக்கும்-இது மச்சங்களின் சிரசிலுண்டாகும் இதைச் சலத்தி லுரைத்துக் குடிக்கக் கல்லடைப்பை நீக்கும்.

## ஸங்கேயேஷம்.

ஸங்கே யேஷமெனுங் கல் மிக்க கெட்டியாயும் பளபளப்பாயும் வெளுத்த பச்சை நிறமாயு மிருக்கும், இதைச் சலத்தி லுரைத்துக் குடிக்க, இரத்தவாந்தியை நீக்கும். இரைப்பைக்கு வலிவை கொடுக்கும் கற்களைக்கரைக்கும் தொண்டைவலியைப் போக்கும், வயிற்றுக்கடுப்பை நீக்கும்-உள்ளுறுப்புகளைக் காக்கும், தொடையிற்கட்ட உடனே பிரசவமாகும்-குளிசமிடப் பேய் பில்லி சூனியங்க ளணுகாது மகிமை யுண்டாகும்.

## கலைமான்.

சு-ம் சூடும் வறட்சியுமாம் பி-ம் அசுத்த வுதிரமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் கலைமான் கொம்பு கட்ட கரி கழஞ்சு க-ருத்திராகழஞ்சு க-இவ்விரண்டையும் பொடிசெய்து சேர்த்துத்தின்ன இரத்த பீநசம் அதிசாரபேதி, ஸ்ரீகளுக்கு வரும் வெள்ளை, இவைகளை நிறுத்தும் குன்மம் காமாலை குடல் ஊத்தாம்பிள்ளை யிவைகளைப்பற்றிய ரோகங்களுக்குத்தக்க அவுஷதங்களில் சேர்த்துக்கொடுக்க மேற்படி ரோகங்கள் நீங்கும் கலைமான் கொம்பை வெண்மையாகப் புடமிட்டுச் சலத்திற் சுத்திசெய்து காயவைத்துக் கண்களில் மைபோலிட்டுவர படலங்கள் நீர் முட்டல் புண் முதலிய சகல நேத்திரரோகங்களுந் தீரும், சுத்திசெய்யாத பற்பத்தைக் காடியிலுரைத்து, வெண்குஷ்டங் கருங் குஷ்டங்களின்மேரிற் பூசி வியர்க்கும் வரையில் வெய்யலி லுட்கார்ந

திருக்கச் சொஸ்தமாகும்-பசுவின் நெய்யிற் குழைத்துக் கைகால்களின் வெடிப்புகளிற் பூச வெடிப்புகள் நீங்கும்-அரைவராகனிடை தின்ன மண்ணீரலைப்பற்றிய ரோகங்கள் நீங்கும்-பற்களிற் றேய்க்கப் பற்களுறு திப்படும்-அடிவயிற்றில் அல்லது மூலைகளின்பேரிற் பற்றிட உதிரச் சிக்கலை நீக்கும்-காடியிற் சேர்த்துக் காய்ச்சிக் கொப்பளிக்கப் பற்கூச்சம் நீங்கும். கலைக்கொம்பைப் புகைக்க விஷப்பூச்சிக ளோடிப்போகும்-குளிசமிட வேதனை நீங்கிப் பிரசவமாகும்-சலத்திலுரைத்து மூன்று மிளகளவு தின்று விலாவிலும் பற்றிட விலாநோய் தீரும் மான் கொழுப்பை யுருக்கிப்பூச இசிவுகளைப் போக்கும்-மான் உதிரத்தை நெய் சேர்க்காமற் சுண்டி ஒருகளிஞ்சு தின்ன கட்டுப்பட்ட பேதிகளைக் கட்டும்-குடலின் புண்ணையாற்றும் இரத்தத்தைப் பச்சையாவது, சுண்டியாவது இரண்டு கழஞ்சு சாப்பிட, ஆபுதங்களா லுடலேறிய விஷங்களை முறிக்கும்-மாரெலும்பின் மூளையை பூச முடக்குகளை நீக்கும்-கோழி முட்டையின் மஞ்சட்கருவிற்கு [illegible]வே குணமாம்-மானின் எலும்பு தோல் வால் சதை முதலியவைகளை[illegible]க் தனித்தாவது சேர்த்தாவது சுருக்கிச் சாராயத்திற் குழைத்து [illegible]டிவயிறு அடித் தொடை தொடைசந்து முதலியவிடங்களிற் பூச கட்டு[illegible]பாத லேபனமுண்டாகும்-மானின் கடைக்கண்களிற் பீளைப்பைப்போற் கட்டும் பிசின் சகல விஷங்களையுமாற்றும் குழந்தை பிறந்தவுடன் பால் குடிப்பதற்கு முன் ஷை பிசின் ஒரு நெல்லெடையை மூலைப்பாலிலுரைத்து வார்க்க கறக் குழந்தையின் ஆயுள்வரையில் விடஜந்துக்கள் சேராவை யடையும் மானின் கோசத்தை யுலர்த்திப் பொடிசெய்து ஒருகழஞ்சு தின்ன நல்ல பாம்பு விஷம் கல்லடைப்பு இவைகளை நீக்கும் இலேபனத்திற் குரிய லேகியங்களிற் சேர்த்துச் சாப்பிட லேபன மதிகரிக்கும் - மானின் கோசம் தோல் எலும்பு கொம்பு முதலியவைகளைச் குளிசமிட்டு புயத்திற்கட்டப் பாம்பு முதலிய விஷஜந்துக்க ளணுகாது-மானின் பாலிற் செய்த சுண்ணுக்கட்டி தாதுவிருத்தியை யுண்டாக்கும்-இதை யுரைத்து ருதுஸ்நானத்திற்குப் பின்பு மூன்றுநாள் வரையிற் பெண்குறியிற் பூச மலடியாவள் வி-தி மானின் கோசத்தைத் தின்பதால் மயக்க முண்டாகும் ப-ம் வாதுமைப்பிசினியை பசுவினெய்யிற் கலந்து குடிப்பதும், தேனைக் காய்ச்சிக் குடித்து வாந்திசெய்வதும், பீல் ஹஜுரு என்னு மருந்தை இரண்டு டாங்குமுதல் அரைவராகனெடைவரையிற் சாராயத்திற் கலந்து குடிப்பதும் ஸ்தாபித்தும்ஃ என்னுங் கொட்டைகளின் பருப்பைத் தின்பதுமாம்.

## ஊர்க்குருவி.

சு-ம். சூடும் வறட்சியுமாம் பி-ம் சுத்த உதிரமும் குறைந்த உணவுமாம் சௌ-ம் ஊர்க்குருவியின் சதை மலத்தை யிளக்கும்-காற்றை விலக்கும்-தேகத்தைப் பருகப்பண்ணும்-ஊதித் தளர்ந்த தேகத்தை யிறுக்கி வலிமையுண்டாக்கும் தாதுக்களை வளர்ப்பதற்கும், விந்தூரச் செய்வதற்கும், லேபன முண்டாக்குவதற்கும், இதற்கிணையான தொன்றில்லை பக்கவாதம் பக்கசூலை இசிவு மகோதரம் காமாலை முதலியதற்கும் ஈரல் குண்டிக்கா யிவைகளின் பலவீனத்திற்கும், தாது கஷ்டத்திற்கும், நல்ல ஆகாரமாகவிருக்கின்றது-இதன் தோல் மந்தத்தை யுண்டாக்கும்-ஊர்க்குருவியைப் புணர்ச்சிக்காலத்திற் பிடித்துத் தலைமூளையை யெடுத்து வாதுமைநெய்யிற் பொரித்துத்தின்ன அமிர்தமான வீரிய புஷ்டி யுண்டாகும்-ஊர்க்குருவியி னிளங் குஞ்சுகளுடன் கோழிமுட்டையின் மஞ்சட்கருவைச் சேர்த்து ஜெயித்தூனெண்ணெயிற் பொரித்துத் தின்ன மாதர்க ளஞ்சும்படியான வீரியபுஷ்டி யுண்டாகும் ஊர்க்குருவி முட்டைக்கு மிதுவேகுணம் ஊர்க்குருவியின் தலைமூளையோடு கோழிமுட்டையின் மஞ்சட்கரு கூட்டித் தின்பதற்கு மிதுவேகுணமாம். ஊர்க்குருவியின் தலைமூளையைச் சாராயத்தி லிழைத்துக் குடித்துப் பெண்குறியிலும் பூசிவர விரைவிற் கருப்பந்தரிக்கும்-மலடிக்குப் பிள்ளை யுண்டாகும்-ஊர்க்குருவித் தசையி லதிகச் சூடிருப்பதால் வெங்காயத்தை யதிகமாகச் சேர்த்துப் பொரித்து மாதுளம்பழரசம் அல்லது சிக்கஞ்ஜபீனோடு சாப்பிடச் சூட்டைத் தணிப்பதுமல்லாமல், சீக்கிரத்திற் சீரணிக்கும்-ஊர்க்குருவியின் உதிரத்தை அதசெனும் பருப்பின் பாவிலூட்டிப் பிசைந்து, வில்லை தட்டி யுலர்த்தி வைத்துக்கொண்டு தேனிலுரைத்துக் கோசத்தின் முனையிற்பூசிப் புணரப் பெண்கள் மெய்மறந்து போவார்கள் ஷை உதிரத்தைக் கண்ணிற் குத்தக் கண்படலமாறும் ஊர்க்குருவியி னெச்சத்தை யுமிழ்நீரி லுரைத்துப் பருக்கள்மேற் பூச உடையும், ஊர்க்குருவியி னெலும்புகள் குடலுக்குப் பொருந்தாதாகையால் அதை நீக்கிப் போடவேண்டும் ஊர்க்குருவியி னிறகு சுட்ட சாம்பலை எதிலாவது குழைத்துக் கட்டிகள்மேற் பூசக் கரைந்து போகும்-ஊர்க்குருவியின் மலத்துவாரத்தி னிறகுகளைப் பிடுங்கிவிட்டுக் காதுத்துளையில் அம்மலத்துவாரத்திற் கைவைக்க உடனே காது நோய் தீரும் ஊர்க்குருவியின் தலைதவிர மற்றவிடங்களிலுள்ள மயிர்களை மெதுவாகப் பிடுங்கிவிட்டு, உயிருடன் காலிற் கயிறுகட்டி தேன்

கூண்டிற் கட்டிவைத்து வண்டுகள் கொட்டி யிறந்தபின்பு நல்லெண்ணெயிற் கருக வறுத்து எண்ணெயை வடித்துப்பூசக் கோசத்தின் கோணல் நிமிர்ந்து அதிக வலிமையுண்டாகும். ஊர்க்குருவியின் உப்புக்கண்டத்திற்கு நிற்காதபேதிகள் நிற்கும்-வி-தி சூட்டுடம்பிற்குப் பொருந்தாது ப-ம் புளி மாதுளம்பழம் சிக்கஞ்சபீன் இவை போன்றதுமாம்.

---

முகவுரையிற் சொல்லியிருக்கும் அசுபாவ சத்துக்களின் வேறுபாட்டை நீக்குதற் கேதுவாகிய (இதனடியிலெழுதும்) பதார்த்தங்களனைத்தும் இப் பதார்த்தகுண சங்கிரகத்தி லடங்கியிருப்பினு மவைகளங்கங்கு சிதறிகிடப்பதால், வேண்டும்பொழு தவைகளைத் தேடி யலைவுறும் மெளிதி லுணரும்படி யொருங்குசேர்த் தொகுத்தெழுதப்பட்டன.

க-வது மொஹறிதிலாத் சாந்தப்படுத்துதல்.

மொஹறிதிலாத்தென்பது சத்துக்களின் விகற்பங்களை நீக்கிச் சுபாகநிலையி லிருக்கவைப்பதாம்.

## உதிரத்தின் பெருக்கையும் நீர்த்தலையும் சாந்தப்படுத்தும் பதார்த்தங்கள்.

காஸிலிவிரை, காஸினிக்கீரை, பர்சேகஸஹறு, கொத்துமல்லிக்கீரை, சீமை ரோஜாப்பூ, உன்னாப், சந்தனம், ஷாத்துராக்கொட்டை கரந்தை, மருதோன்றியிலை, எலிமிச்சம்பழம், ஆலுபு காராப்பழம், பிரமதண்டு வேர்-கச்சினார், கருங்காலி, வேப்பிலை, கெப்பம்பூ காராட்டுக்கிழங்கு, தாமரைப்பூ, குலேபனப்பஷா, சிக்கஞ்சபீனே சாதா இவை போன்ற குளிர்ச்சியான பதார்த்தங்களனைத்தும் உதிரப் பெருக்கையும் நீர்த்தலையுஞ் சாந்தப் படுத்துவனவாம். ரோஜாப்பூவின் காம்புகளைக் களைந்து விரைகளை யுதிர்த்துவிட்டு, இதழ்களை மாத்திரமே அவுஷதங்களிற் பிரயோகிக்கவேண்டும்.

## உதிரத் தடிப்பையும் அழுகலையும் சாந்தப்படுத்தும் பதார்த்தங்கள்.

சிக்கஞ்சபீனே அஸலிமாருல் அஸஸ்மாவுல் உஜாஸ் புளிஷாத்தூரா சோம்பு எலுமிச்சம்பழம்போன்ற புளித்த பதார்த்தங்கள் இவைகள்போலவனவும், வண்டலைச் சாந்தப்படுத்தும் பதார்த்தங்களும் உதிரத்தடிப்பையும் அழுகலையுஞ் சாந்தப்படுத்துவனவாம்.

## பித்த விகற்பங்களைச் சாந்தப்படுத்தும் பதார்த்தங்கள்.

இஸ்போகோல் விரை, பேதானு, கோழி கீரைவிரை, காசினி விரை, தொக்மேகாஹூ வெள்ளரி விரை, முள்ளுவெள்ளரி விரை, கொத்துமல்லிக் கீரை, சந்தனம், கர்ப்பூரம், இவைபோன்ற பதார்த்தங்களும் மக்குஸேகாபூர் ஆலுபுகராப்பழ ஷர்ப்பத்து, எலுமிச்சம்பழ ஷர்ப்பத்து, தாமரைப்பூ ஷர்பத்து, சந்தனம் ஷர்பத்து, குலேபனப்ஷா ஷர்பத்து, இவைபோன்ற அவுஷதங்களும், பித்த விகற்பங்களைச் சாந்தப்படுத்துவனவாம், குர்ஸெனபது வடகம்.

## இரசத்தின் விகற்பங்களைச் சாந்தப்படுத்தும் பதார்த்தங்கள்.

சோம்பு, அனிஸூன், அதிமதுரம் சீரகம் லவங்கப்பட்டை, ஏலக்காய் சடாமாஞ்சில், கருஞ்சீரகம், கிராட்சிப்பழம், தொக்மேக்கித்து சிறு தத்திவிரை, இவைபோன்ற பதார்த்தங்களும், மஹஜூனே பாலாசிபா மஹஜூனே ஜஞ்ஜபீல், மஹஜூனேஸீர் ஜவாரிஷே ஜாலினூஸ் இவைபோன்ற அவுஷதங்களும், இரச விகற்பங்களைச் சாந்தப்படுத்துவனவாம் மஹஜூன் என்பதும் ஜவாரிஷ் என்பதும் லேகியம்.

## வண்டலின் விகற்பங்களைச் சாந்தப்படுத்தும் பதார்த்தங்கள்.

சிபிஸ்த்தான் காவ்ஜபான் அதிமதுரம் முலாம்பழவிரை சீமையத்திப்பழம் கிராட்சிப்பழம் அப்திமூன் இவைபோன்ற பதார்த்தங்களும் சிக்கஞ்சபீனே அப்திமுனி அனோஷ்தாரு மஹஜூனே ஸூருதயாக்கூத்தேபூ அல்லிஸீனு முபர்ரே தில்க்ஷா ஷருபே காவ்ஜபான் ஷருபேபாலக்கூ இவைபோன்ற அவுஷதங்களும் வண்டலின் விகற்பங்களைச் சாந்தப்படுத்துவனவாம். அனோஷ்தாரு என்பது போசனத்திற்கு முன்னாவது பின்னாவது நித்தியஞ் சாப்பிடுகிற லேகியம் யாகுகூத என்பது கெம்பு சேர்ந்த லேகியம், முபர்ரா என்பது உற்சாகமுண்டாக்கும், லேகியம். ஷருப் என்பது பானம்.

மொஹரிதிலாத் அல்லது சாந்த பதார்த்தங்கள்-மாசுகள் சேராமல் வெய்யல் காற்றுமழை பனி முதலிய காலபேதம், ஆகாரபேதம், செய்கைபேத முதலியதுகளாற் சடிதில் நான்கு சுபாவ சத்துக்களுக்கு முண்டாகும் விற்பங்களை நீக்கித் சுத்தஞ் சுபாவநிலையி லிருக்க வைப்ப

தாம். ஆதலால் மேற்சொல்லியிருக்கும் பதார்த்தங்களைத் தனித்தாவது சேர்த்தாவது தக்கபடி யுபயோகிக்கவேண்டும். இவைகள் மலத்தையுமிளக்கும்.

உ-வது முன்ஜிஜாத் பக்குவப்படுத்துதல்,

முன்ஜிஜாத்தென்பது மாசுகள் சேர்ந்து விகற்பித்த அசுபாவச் சத்துக்களைப் பிரித்துப் பக்குவப்படுத்துவாம்.

## பித்தத்தைப் பக்குவப்படுத்துங் கஷாயம்.

உன்னுப்-எ-குலேபனப்ஷா தாமரைப்பூ ஷாத்தூரு வகைக்கு வராகனெடை-உ சிதைத்த காசினிவிரை வராகனெடை-ந சிதைத்த காசினிவேர் வராகனெடை-உ சீமைரோஜாப்பூவினிதழ் வராகனெடை-உ இவைகளை யொன்றாகச் சேர்த்துக் குடிக்கத்தக்க பிரமாணத்துக்கு மூன்றுபங்கு சலம்விட்டு, மூன்றிலொன்றாய்க் கஷாயமிட்டுக் குடிக்க வேண்டும் அல்லது குடிக்கத்தக்க ஜலம்விட்டு சுய-நாழிகை யூறவைத்துக் குடிக்கவேண்டும். வஸ்துக்களின் சாரமுழுது மிறங்கவேணுமானல் சுய-நாழிகை யூறவைத்துக் கஷாயமிடவேண்டும். ஆனல் கஷாயமிடுவதில் அதிகச் சூடேறுகிறபடியால் உஷ்ண தேகத்துக்குப் பொருந்தாது இக் கஷாயத்துடன் சிக்கஞ்சபீன் துருஞ்சபீன் முதலிய பித்தசாந்தி வஸதுக்களைச் சேர்த்துக் குடிக்கலாம். இதிற் குறித்திருக்கும் வஸ்துக்களின் பிரமாணங்கள் நடுப் பிரமாணத்தையும் நடுவயதாயுமுள்ளவர்களுக்கே யாம் சிறுவயதாயும் சுட்கித்து மிருப்பவர்களுக்குக் குறைத்தும், தூலதேகமாயும் வயது முதிர்ந்து, மிருப்பவர்களுக் குயர்த்தியுஞ் சேர்த்துக்கொள்வ தல்லாமல் வஸ்துக்களை அதிகமாகவுஞ் சேர்க்கலாம் உஷ்ண தேகத்தை யுடையவர்களுக்குக் குளிர்ச்சியான வஸ்துக்களையுஞ் சேர்க்கலாம், சுத்த பித்தம் ந-நாளிலும் கலந்தபித்தம் ரு-நாளிலும் பக்குவமாகும் இதற்கு மேற்பட்டுங் கொடுக்கலாம்.

## இரசத்தைப் பக்குவப்படுத்துங் கஷாயம்.

விரைபோக்கிய திராக்ஷப்பழம்-கக சிதைத்த பெருஞ்சீரகம் வராகனெடை-உ மேற்றோல் சீவிச்சிதைத்த அதிமதுரம் வராகனெடை-ந சிதைத்த ஷிக்காய் வராகனெடை-உ பாசிபாவுஷான் வராகனெடை-ரு சீமை அத்திக்காய்-ரு ரோசாப்பூ வராகனெடை-ந இவைகளை முன்போற் கஷாயமிட்டு நல்ல குல்கந்தில் வராகனெடை-எ சேர்த்துக் குடிக்கவேண்டும். இத்துடன்-உ தோலா சிக்கன்ஜபீனைச் சேர்த்தால்

மிகவும் நல்லது ஆனால் இருமலிருந்தால் சேர்க்கலாகாது, பித்தங்கலந்து எரிப்பேரிய விரசத்திற்கு பித்தசாந்தி வஸ்துக்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். கடலையை வேகவைத்த ஜலம் இரசத்திற்கும் வண்டலுக்கும் பழஞ்சுரத்திற்கும் மிகவும் நல்லது புதியசுரத்துக் காகாது, இரச்சாந்தி வஸ்துக்களும் முன்ஜிஜாகவே சுத்த விரசம் ௩-அல்லது ௬-நாளிலும் கலந்த விரசம் ௬-நாளைக் கதிகமாகவும் பக்குவப்படும். ஆகையால் தகப்படி ஏறக்குறையக் குடிக்கவேண்டும்

## வண்டலைப் பக்குவப்படுத்துங் கஷாயம்.

சிபிஸ்த்தான் உ0 உன்னாப் ௰ காவ்ஜபான் வராகனெடை-உ பாதுரஞ்சுபோயா வராகனெடை-உ அதிமதுர வராகனெடை-ந உஸ்த்துகுதூஸ் வராகனெடை-உ ப்ரசிபாவுஷான் வராகனெடை-உ பெருஞ்சீரகம் வராகனெடை-உ ஷாத்துரா வராகனெடை-உ இவைகளை முன்போற் கஷாயமிட்டுக் கற்கண்டுங் குருஞ்சபீன் குல்கந்து இவைகளிலொன்றைச் சேர்த்துக் குடிக்கவேண்டும் இது சுத்த வண்டலுக்காம் வண்டலுடன் தீய்ந்த சத்துக்கள் சேர்ந்திருப்பதற்கு, அந்தந்த சத்துக்களுக்குச் சொல்லியிருக்கும் பதார்த்தங்களைக் கலந்து, சேர்த்துக் கொள்ளவேண்டும். தீய்தலென்பது அதிகச் சூட்டினால் சத்துக்கள் தீய்ந்து தடிப்பேறியதாம் இது ஏறக்குறைய ௰௩-தினத்திற் பக்குவப்படும்படி தடினமாகவிருக்கில் இரண்டு மூன்று முறை பிரயோகிக்க வேண்டும்.

## வேறு.

கருங்கடுக்காய்த் தோல் வராகனெடை-௰ பீஸ்பாபெஜ் வராகனெடை-௫ அப்திமுன் வராகனெடை-௬ ஙிலாவாரை உஸ்த்துகுதூஸ் வகைக்கு வராகனெடை-எ குலேசுருஃ வராகனெடை-௪ காவ்ஜபான் பாதுரஞ்சுபோயா வகைக்கு வராகனெடை-௬ அனிசூன் பெருஞ்சீரகம் வகைக்கு வராகனெடை-உ கடுகுரோகிணி டாங்கு-உ திருப்பூ தேஸ் பேத் வராகனெடை-க சுக்கு வராகனெடை அரை; இவைகளைக் கஷாயமிட்டு வடிகட்டிக்கொண்டு அஃகாரிஃகூன் கிஜரே அர்மனி கிஜரே லாஜவர்த்து கறுப்பு உப்பு வகைக்கு டாங்கு-உ இவைகளைப் பொடி செய்து சேர்த்துக் குடிக்கவேண்டும், இது வண்டல் நீரை யிறக்கும். இத்துடன் குமட்டிக்காய்ச் சதை சிபரே ஸொகோத்தரி இவைகளில்

கொஞ்சஞ் சேர்த்துக்கொண்டால் பேதி யதிகமாகும். அப்தி முனைத் துணியில் முடிந்து கஷாயத்திற் சேர்த்துக் காய்ச்சிப் பின்பு மூடிச் சைப் பிசைந்து பிசைந்து எடுத்துப் போடவேண்டும். எந்த கஷாயங் களிலும் அப்திமுனை இவ்விதமாகவே சேர்க்கவேண்டும்.

முன்ஜீயாத் அல்லது பக்குவப்படுத்தும் பதார்த்தங்கள் மாசுகள் சேர்த்து விகற்பித்த அசுபாவத்துக்களை வெளிப்படுத்துவதின் பொருட்டு அவைகளைப் பிரித்துச் சேர்ப்பதுமன்றி மலத்தையு மிறக்கும், இதை மூஸகிலாத் அல்லது பேதிக்குக் கொடுப்பதற்கு முன் கொடுக்க வேண்டும். அசுபாவச் சத்துக்களின் விகற்ப விபரங்களை முகவுரையிற் காண்க.

ங-வது முலையினத் இலகுபேதி.

முலையினத்தென்பது மலத்தை பிளக்கி வெளிப்படுத்துவதாம்.

## இலகுபேதி பதார்த்தங்கள்.

றாமிமஸ்தகி சரக்கொன்றைப் புளி காசினியிலை காசினிவிரை கோழிக்கீரைவிரை வெள்ளரி விரை மனத்தக்காளி பெருஞ்சீரகம் குல்கந்து சீர்கிஷத்து துருஞ்சபீன் உன்னுப் சிபிஸ்த்தான் குலேபனப்ஷா கொட்டைத் திராட்சிப்பழம் காவ்ஜபான் இவைபோல்வன இலகுபேதி யாக்குவனவாம்.

## இலகுபேதி முறைகள்.

றாமிமஸ்தகி வராகனெடை-க வெள்ளைச் சருக்கரை வராகனெடை-ரு இதுகளைச் சூரணித்துச் சாப்பிடப் பேதியாகும். சரக்கொன்றைப் புளியை வெந்நீரில் அல்லது பந்நீரிற் கரைத்து வடிக்கட்டியுங் குடிக்கலாம், சூட்டிகரித் திருந்தால் காசினியிலைச் சாறு அல்லது காசினிவிரை கோழிக்கீரை விரை வெள்ளரிவிரை முதலிய விரைகளை யரைத்துப் பிழிந்த பாலிற் கலந்து குடிக்கவும், குடலில் வீக்கமிருந் தால் மணத்தக்காளி யிலைச்சாற்றை முறித்துச் சேர்த்துக் குடிக்கவும். முன்ஜிஜ சேர்ந்திருக்க வேணுமானால் பெருஞ் சீரகத்தை யரைத்துப் பிழிந்தபாலும் குல்கந்தும் கூட்டிக் குடிக்கவும். சீர்கிஷத்தும் துருஞ்சபீனுஞ் சேர்த்துக் குடிக்க மலம் நன்று யிறங்கும். சரக்கொன்றைப் புளியின் வாசனையை மாற்ற பன்னீர் பெருஞ்சீரகம் உன்னுப் சிபிஸ்த்

தான் குலேபனப்ஷா கொட்டை திராட்சிப்பழம் காவ்ஜபான் இவை போன்ற வஸ்துக்களின் கஷாயத்திற் சேர்த்துக் குடிக்க வாசனை நீங்கும், சூட்டிகரித்திருக்கும்போது கஷாயங்களிற் கொடுக்கலாகாது, குடல் மெலிந்தவர்களுக்கும் கருப்ப ஸ்ரீகளுக்கும் மூப்பருக்கும் வாது மைநெய் அல்லது பசுநெய் சேராமற் கொடுக்கலாகாது; ஆனால் பால் குடிக்கிற குழந்தைகளுக்கு நெய் சேர்க்கவேண்டியதில்லை. சரக்கொன்றைப் புளியை தேகபுஷ்டியும் பலமுமுள்ளவர்களுக்கு வராகனெடை-௧௬-வரையிற் கொடுக்கலாம்; அதற்குமேற் கொடுக்கலாகாது சரக்கொன்றைப் புளி சேர்ந்ததற்கு முலேயனே முபாறக் என்று பெயர் முபாரக் என்பது மங்களகரமென்பது.

முலேயினுக் அல்லது இலகுபேதி பதார்த்தங்கள் இரைப்பையிலுங் குடலிலு மதைச்சேர்ந்த விடங்களிலுமிருக்கிற மாசுகளை யிறக்கும் இதனால் தேகத்திற் கொருகுறைவும் வராது, இது கருப்பஸ்திரிமுதல் சிசுவரையில் எல்லாத் தேகத்திற்கு மொத்திருக்கும் சுரங்களிலும் வீக்கங்களிலும் கொடுக்கலாம், முன்ஜிஜாத் அல்லது பக்குவ பதார்த்தங்களை யிதிற் சேர்த்திருப்பதால் மூறுஹி அல்லது பேதிமுறையிற் சொல்லுகிறபடி முன்ஜிஜ் கொடுத்தபின்பு கொடுக்கவேண்டுமென்பதும் அடிக்கடி கொடுக்கக் கூடாதென்பது மிதற்கில்லை. ஆனால் முன்ஜிஜ் கொடுப்பதினாற் குற்றமுமில்லை.

௪-வது முஸகிலாத் பேதி.

முஸகிலாத்தென்பது அசுபாவச் சத்துக்களையிறக்கும் பேதியாம்.

## பித்தத்தை நீக்கும் பேதி பதார்த்தங்கள்.

மஞ்சள் கடுக்காய்த்தோல் புளி துருஞ்சபீன் குலேபனப்ஷா மஹூமூதாஷாத்துரு ஆலுபுகாரா ரோஜாப்பூ சீர்கிஷத்சிஷுமக்கி கசூஸலிரை சரக்கொன்றைப்புளி அப்சந்தீன் லப்லாப்சிபர் இவைபோன்ற பதார்த்தங்கள் பித்தநீரை யிறக்குவனவாம்-இவைகளில் மஹமூதாவைச் சுத்தி செய்யாமற் சேர்க்கக்கூடாது இவைகளில் சிலது சத்தி குறைந்தும் சிலது சத்தி யதிகரித்து மிருப்பதால் தனியாயாவது கலந்தாவது தக்கபடி பிரயோகிக்கவேண்டும்.

## தொந்த பித்தத்தை நீக்கும் பேதி முறை.

மஞ்சட்கடுக்காய்த்தோல் வராகனெடை-௬ ஆலூசியா-கடு சிபிஸ் தான்-௨ம் ஷாத்துரு சிஷுமக்கி வகைக்கு வராகனெடை-௩ உன்னுப்

காசினிவிரை வராகனெடை-உ கசூலவிரை விராகனெடை ஒன்றரை ஷீர்கிஸ்த் அல்லது துருஞ்சபீன் அல்லது இரண்டும் விராகனெடை-ம முதல்-மரு வரையில் தகுந்தபடி சேர்த்துக் கொள்ளவும். பேதி நன்றாயாகாதென்று தோற்றினால் சரக்கொன்றைப் புளியையுஞ் சேர்த்துக் கொள்ளவும் கஷாயமாகவாவதும் ஊறவைத்தாவது குடிக்கவும் இது தொந்த பித்தநீரை யிறக்கும் சரக்கொன்றைப்புளி சேர்த்தால் வாதுமை நெய் அல்லது பனைப்ஷா பெண்ணெய் வராகனெடை-க சேர்த்துக் கொள்ளவும், ஒரு சத்தையே யிழுக்கும்படியான பேதியில்லை-ஆனால் பித்தநீரை யதிகமாக வெளிபடுத்துவதைப் பித்தபேதி யென்றும், இரசநீரை யதிகமாக வெளிப்படுத்துவதை யிரசத்தைநீக்கும் பேதியென்றும், வண்டல் நீரை யதிகமாக வெளிப்படுத்துவதை வண்டலை நீக்கும் பேதி யென்றுஞ் சொல்லப்படும். சுரத்தி னாரம்பத்தில் கடுக்காய் பேதி கொடுக்கலாகாது ஏனெனில் ஈரலைப்பற்றிய நீரை யிழுக்கும், ஆகையால் இரண்டு வாரத்திற்குப் பின்பு கொடுக்கலாம் கொடுக்க வேண்டியதாக நேரிட்டால் வாதுமை யெண்ணெயில் பிசறி பேதானு இஸ்போஹோல் முதலிய விரைகளின் கோழைகளிலாவது ஈரலுக்குப் பலங்கொடுக்கும் வஸ்துக்களின் கஷாயத்திலாவது கூட்டிக்கொடுக்கத் தீமை செய்யாது.

## இரசத்தை நீக்கும் பேதி பதார்த்தங்கள்.

சிவைச்சிவதைவேர் காக்கட்டான் விரை பேய்க்குமட்டிக் காய்ச்சதை ஃகாரிஃகூன் அப்புல்புமுலூக் பிஸ்பாஜ் சுரஞ்ஜான் ரேவல்சீனி சுக்குமைசாட்சி ஆமணக்கெண்ணெய் சரக்கொன்றைப் புளி கருஞ்சீரகம். ஹப்பே அயாரிஜ்ஃகாந்திரியூன் மாகிஜ்ஹாஜ்ஜிர் முல்ஃகஸக் தானுசிக்காய் இவைபோன்ற வஸ்துக்கள் இரசநீரை யிறக்கும் ஹப் என்பது மாத்திரை.

## தொந்த விரச நீரை நீக்கும் பேதி முறை

அயாரிஜபக்ரா திருப்பூ தைசுபேத் அப்புநீல் வகைக்கு வராகனெடை ஃகஃகாரிஃகூன் அனிசூன் வகைக்கு வராகனெடை-அரை பேய்க்குமட்டிக்காய்ச் சதை இந்துப்பு வகைக்கு டாங்கு-க இவைகளை யரைத்துப் பெருஞ்சீரகப் பாலிற் கரைத்துக் குடிக்கவேண்டும் இது தொந்த விரசத்தையிறக்கும் பேதியாம், ஃகாரிஃகூனை யிடிக்காமல் பிசைந்து வஸ்திரகாயஞ் செய்துக் கொள்ளவேண்டும்.

## இரசத்தைப்பற்றிய சுரங்களுக்கும் பழைய இருமல்களுக்குங் கொடுக்கும் பேதி முறை.

உன்னுப் சிபிஸ்த்தான் வகைக்கு-உய ஸுபாயெகுஷ்க் தாமரைப்பூ பனப்ஷா பரசியாவுஷான் பெருஞ்சீரகம் வகைக்கு வராகனெடை-ங கொட்டைபோக்கிய திராக்ஷப்பழம்-யரு காய்ந்த சீமையத்திக்காய்-எ மேற்புரணி சீவிய அதிமதுரம்-ச இவைகளை மூன்று ராத்தல் சலத்திற் சேர்த்து, ஒரு ராத்தலாகக் காய்ச்சி, வடிக்கட்டி, சரக்கொன்றைப் புளியில் கலந்து, துருஞ்ஜபீன் வகைக்கு வராகனெடை-ய சேர்த்துக் கரைத்து மறுபடியும் வடிக்கட்டி வாதுமையெண்ணெய் வராகனெடை-க சேர்த்துக் குடிக்கவேண்டும், இது இரசத்தைப் பற்றிய சுரத்தையும் பழைய இருமலையும் நீக்கும்.

## வேறு சூரணம்

திருப்பூதேஸ் பேதை யிடித்து வஸ்திரகாயஞ்செய்து, வாதுமையெண்ணெயிற் பிசறினது வராகனெடை-ங சுக்குத்தூள் வராகனெடை-க நம்மக்கேசுபேத் வராகனெடை-அரை இவைகளைக் குளிர்ந்த சலத்திற் சேர்த்துக் குடிக்கவும் பேதியாகும்-இதுவும் இரசத்தைப் பற்றிய சுரங்களையும் பழைய இருமல்களையும் நீக்கும், உப்பிற்கு பதிலாக வெள்ளைச் சர்க்கரை தோலா-உ சேர்க்கலாம். மஸ்தகியையுஞ் சேர்த்துக் கொள்ளலாம். உப்புந் திருப்பூதுஞ் சேராத மருந்துகளை வெந்நீரிற் சாப்பிடலாம்.

## வண்டலை நீக்கும் பேதி பதார்த்தங்கள்.

கறுப்புக் கடுக்காய்த்தோல் காபுலிக் கடுக்காய்த்தோல் நெல்லிக்காய் நிலாவாரை அப்திமூன் உஸ்துகுதூஸ் பாலங்கூ ஹஜரெலா ஜவர்த்து ஹஜரே அர்மனி இவைபோன்ற வஸ்துக்கள் வண்டல் நீரை யிறக்கும்.

## வண்டலை நீக்கும் பேதி முறை.

அயாரிஜ்பக்ரு வராகனெடை-ரு அப்திமூன் வராகனெடை-ய சுத்திசெய்த ஹஜரேலாஜவர்த வராகனெடை-எ ஹஜரே அர்மனி வராகனெடை-கூ ஸக்முனியா குமட்டிக்காய்ச் சதை கடுகு ரோகிணி வகைக்கு வராகனெடை-உ சடாமாஞ்சில் அனிசூன் வகைக்கு வராகனெடை-க இவைகளைக் கர்பிஸ்விரைப் பாலி லரைத்து, ஒரு பேதிக்கு வராகனெடை இரண்டரைதின்னப் பேதியாகும்-வண்டல்நீரை யிறக்கும்.

## வேறு சுத்த வண்டலுக்கு.

கருங்கடுக்காய்த்தோல் வராகனெடை பிஸ்பாயெஜ் வராகனெடை-ரு-அப்திமூன் வராகனெடை-கூ நிலாவாரை உஸ்துகுதூஸ் வகைக்கு

வராகனெடை-எ குலேசருக் வராகனெடை-ச காவுசுபான் பாதுாஞ்சு போயா வகைக்கு வராகனெடை-ந அனிசூன் பெருஞ்சீரகம் வகைக்கு வராகனெடை-உ கடுகுரோகணி டாங்கு-உ கிருப்பூதெஸபேத் வராகனெடை-க சர்க்கு வராகனெடை-அரை இவைகளைக் கஷாயமிட்டு வடிகட்டி காரிக்கூன் ஹஜரே அரமனுஹ்ஜரேலாற வர்த்த கறுப்பு உப்பு வகைக்கு டாங்கு-உ இவைகளைப் பொடிசெய்து சேர்த்து குடிக்கவும்-இது சுத்த வண்டல் நீரை யிறக்கும், குமட்டிக்காய்ச் சதை ஸிபரே ஸெநகோத்தரி இவைகளைக் கொஞ்சஞ் சேர்த்துக்கொண்டா லதிக பேதியாகும்.

முஸகிலாத் அல்லது பேதி பதார்த்தங்கள் தேகத்திற் பரவியிருக்கும் நரம்புகளிராநின்ற அசுபாவச் சத்துக்களைப் பிரித்திறக்கும் அதனல் சூடதிகப்பட்டு தேகச் சோர்வுண்டாகும், ஆதலால் குன்மரோகம் போன்ற முக்கிய காரணங்களில்லாமலும் அப்படி காரணங்க ளிருந்தாலும் வருடத்திற் கொருமுறைக்கு மேலும் கொடுக்கவேண்டியபோது முன்ஜிஜ் கொடுக்காமலும் பேதிக்குக் கொடுக்கலாகாது ஆனல் சுத்தியிற் கொடுக்கவேண்டியபோது முன்ஜிஜ் கொடுக்கவேண்டியதையும் இரவு-பகல்-மழை-பனியென்னுங் காமபேதத்தையும் பார்ககவேண்டுவதில்லை-பேதி மருந்து கஷாயமாக அல்லது ஊறியதாகவிருந்தால் அதின்மேல் வெந்நீர் குடிக்கலாகாது-அது பேதியைக்கட்டும், வயறு பிடுங்கினல் வெந்நீர் கொஞ்சங் குடிக்கலாம் மாத்திரை அல்லது சூரணமாகவிருந்தால் வெந்நீ ரகத்தியங் குடிக்கவேண்டும். அது பேதிக் குதவிசெய்யும் பேதியாகிக்கொண் டிருக்கும்போது குளிர்ந்தசலங் குடிக்கலாகாது. தாகமிருந்தால் புதிதாய் மொண்ட குளிர்ந்தசலங் கொஞ்சங் கொஞ்சமாய் குடிக்கலாம்-சூட்டுடம்பாயிருந்து தாகமதிகமாயிருந்தால் குளிர்ந்த சலஞ் சாப்பிடலாம்-ரோஜாப்பூ ஷர்பத்துக்கும் கோவாளம் சிவதைவேர் உப்பு சேர்ந்த மருந்துகளுக்குங் குளிர்ந்தசல மகத்தியங் குடிக்கவேண்டும், வெந்நீர் பேதியைக்கட்டும் வெகுட்டுதலினல் வாந்தியாகிற சுபாவத்தை யுடையவர்களுக்கு முழங்கைக்குமேல் வத்திரத்தாற் கட்டிவிட்டு மூக்கைப் பிடித்துக்கொண்டு குடிக்கவேண்டும்-பின்பு வாயைக் கொப்பளித்துவிட்டு பொதினு அல்லது வெற்றிலையை மெல்ல வாந்தியாகாது-எலரிசியை மெல்லுவது மிக நன்று-இதிலும் நிற்காததாயிருந்தால் முன்பு வாந்திக்குக் கொடுத்துப் பிறபு பேதிக்குக் கொடுக்கவேண்டும் பேதிக்குச் சாப்பிட்டபின்பு காற்றுப்படாமலும் நித்திரை செய்யாமலு மிருக்கவேண்டு கிதமி விரையைச் சலத்திற் சேர்த்துக் காய்ச்சி யிளஞ்சூடா யாறவைத்துக் கைகால் சுத்தி செய்வதால் ஆதனத்திற்கு மருந்துச் சூடு தாக்காது பேதிமருந்து தின்று பேதியாகாவி

ட்டால், அன்றைக்கே மறுபடியும் பேதிமருந்து சாப்பிடலாகாது, பேதியாகாமையினால் தொந்தரை யுண்டாகுமானால் ஆசனத்தில் ஷாபா வென்னுங் கிரியேத்துவதினாலும் அரூது செய்வதினாலும் மலத்தை வெளிப்படுத்தவேண்டும், அல்லது ஆலூபுகாரப்பழம் புளி சரக்கொன்றைப்புளி யிதுகளி லொன்றைக்கரைத்து வடிகட்டிக் கற்கண்டு சர்க்கரை தருஞ்சபீன் இதுகளிலொன்றைச் சேர்த்துக் குடிக்கப் பேதியாகும், அல்லது ஒரு வராகனிடை றாமிமஸ்தகியைப் பொடிசெய்து வெந்நீரிற் கொடுக்க மலத்தை நன்றாய் வெளிப்படுத்தும். பேதி மருந்து கடினமானதாகவிருந்து பேதியாகாமல் மயக்கமுண்டாகி அறிவழிந்திருந்தா லுடனே வாந்திக்குக் கொடுக்கவேண்டும், வாந்தியுமாகாவிட்டால் இரத்தம் வாங்க கூடுமாயிருந்தால், பாசலீ அகஹல் என்கிற நரம்புகளைக்குத்தி யிரத்தம் வாங்கவேண்டும் இதனால் விரைவிற் சுகுணமுண்டாகும், அதிக பேதியாகிக் குடலிலுந் தீனிப்பையிலுஞ் சூடேறியெரிப்புண்டானால் பேதானா இஸ்போஹோல்விரை யிவைகளின் கோழையைக் கொடுக்கத் தணியும் சுகுமார தேகத்துக்குத் திருநீற்றுப் பச்சை விரையை யூறவைத்துப் பன்னீருங் கற்கண்டுங் கூட்டிக் கொடுக்கச் சாந்தமாகும், இரண்டு நாழிகைக்குப் பின்பு லேசான ஆகாரங்கொடுக்கவும்-பேதி நன்றாயாகும்படி பேதி மருந்து கொடுக்கவேண்டும், இல்லாவிடில் இரத்தங்குத்தி வாங்குவதிற் போதுமான வரையி லிரத்தம் வாங்காததினால் வருங் குற்றமுண்டாகும்-பலசாலியா யிருந்தால், மறுநாளும் பேதிக்குக் கொடுக்கவேண்டும்-இதனாற் சத்துக்கள் நன்றாய் வெளிப்படும்-பலவீனமாயிருந்தால் தேகம் வரண்டு போகாமல் ஒரு நாள் இரண்டுநாள்விட்டு லேசான பேதிக்குக் கொடுக்கவேண்டும் பேதி நிற்காமலானால், தயிர் மோர் அல்லது கஞ்சித்தண்ணீருஞ் சாதமுஞ் சாப்பிட நிற்கும், அதிகச்சூடுஞ் சுரமு மிருந்தால், திருநீற்றுப் பச்சை விரை கோழிக்கீரைவிரை வெள்ளரிவிரை இவைகளை வறுத்துப் பொடி செய்து கொடுக்க நிற்கும். பித்த முதலிய மூன்று சத்துக்கள் சேர்வதாலன்றி இரத்தத்திற்குச் சுபாவத்தில் விகற்பமில்லாமையாலும் ஷெ சத்துக்களைப் பிரித்திறக்குவதே இரத்தத்திற்குச் சிகிச்சையாக விருப்பதாலும் முலையன்முன் ஜிஜ்முஸஹில் என்று மூன்றுவித சிகிச்சைகளும் இரத்தத்திற் விதிப்படவில்லை.

### ௨நு-வது ஷாபா கிரி.

ஷாபாவென்பது எந்தக்காரத்தாலாவது மல
மிறங்காதபோது ஆசனத்தி லேற்றுங் கிரியாம்.

### குன்மத்திற்குஞ் சுரத்திற்குந் திரி.

குலேகனப்ஷா வராகனெடை-உ குலேஃகித்மி வராகனெடை-ரு சீனமக்கி வராகனெடை-ரு இந்துப்பு வராகனெடை கொன்றைப்புளி நாட்டுச்சருக்கரை வகைக்கு வராகனெடை-ம இவைகளைச்சேர்த் தரைத்துத் திரி செய்துகொள்ளவும்.

### பேதிமக்குச் சாப்பிட்டுப்
### பேதியாகாம லிருப்பதற்கும் சூட்டடம்பிற்குந் திரி.

துருஞ்சபீன் வராகனெடை அரை-சவுக்காரம் ஃகித்துமி உப்பு வகைக்கு வராகனெடை உ சருக்கரை வராகனெடை ரு இவைகளை முன்போற் செய்துகொள்ளவும்.

### வேறு.

சவர்க்காரத்தை திரியாக்கி விளக்கெண்ணெய் அல்லது ரோஜாப் பூத் தைலத்தைத் தடவி ஆசனத்தில் குத்திவைக்க அதிசீக்கிரத்தில் மலத்தை வெளிப்படுத்தும்.

### சிறு குழந்தைகளுக்கும் மூப்பருக்கும் திரி.

தேன் மெழுகு வராகனெடை-உ உப்பு-பூரே அர்மணி வகைக்கு வராகனெடை அரை- இவைகளைச் சேர்த்துத் திரியாக்கி வெண்ணெய் தடவி ஆசனத்திற் புகுத்திவைக்க மலத்தை வெளிப்படுத்தும்

ஷபா அல்லது திரியானது மலக்கட்டை விரைவில் வெளிப் படுத்துவதாக விருக்கின்றது, ஆதலால் மலக்கட் டுண்டானபோது இலகுபேதி மருந்துகள் கொடுத்து வெளிப்படுத்துவதற்குத் தக்க காலதாமதத்திற் கிடமில்லாமலும் மேற்படி மருந்துகளைக் கொடுக்கக் கூடாமலும், ஆசூதுசெய்யக் கூடாமலு மிருக்கும்போது மிகவு முதவியானதாக விருக்கின்றது, ஆசூதுசெய்வது மிக நன்மை தருவதாக விருந்தாலும் இத் தேசத்தில் வழக்கமில்லாமையால் அதற்குச் சமமாகிய ஷாபா அல்லது திரியைமாத்திர மிங்கு சொல்லப்பட்டது, திரி அவரவர்கள் கையால் ஆறங்குல நீள மிருக்கவேண்டும் இதை யடிக்கடி யுபயோகிப்பதால் மூலரோகத்திற் கிடமாகும்.

### சு. வது முக்கையாத் வாந்தி.

முக்கையாத்தென்பது இரைப்பையிலுள்ள மாசுகளை வாந்தியின் வழியாக வெளிப்படுத்துவதாம்.

## வாந்தி முறை.

சிக்கஞ்சபீனே அஸலி கழஞ்சு-ம இந்துப்பு கழஞ்சு-உ முள்ளங்கிக் கிழங்குச்சாறு கழஞ்சு-மச இவைகளைக் கூட்டி வெந்நீரிற் கலந்து குடிக்க வாந்தியாகும்.

### வேறு.

உலர்ந்த தேற்றும்பழத்தின் மேற்றோல் அல்லது உலர்ந்த மாசக்காளான் காயின் உட்சதையை, சு-மாஷாமுதல் அ-மாஷாவரையில் பொடிசெய்து வெந்நீரிற் குடிக்க வாந்தியாகும்.

முக்கை அல்லது வாந்தி மருந்து கொடுப்பதற்கு முன்னாள் லேசான போசனஞ் செய்யவேண்டும். வாத தேகத்திற்கு வாந்திமருந்து வெறும் வயிற்றிற் கொடுக்கவேண்டும். உஷ்ண தேகத்திற்கு லேசான உளுந்துக் கஞ்சி யல்லது அரிசிக் கஞ்சியைக் கொடுத்துச் சற்று நேரத்திற்குப் பின்பு வாந்திமருந்து கொடுக்கவேண்டும், தேகத்தி லதிக சூடில்லாமலும் சுகமில்லாமலு மிருந்தால் அத்தர் முதலிய வாசனை எண்ணைகளைச் சரீரத்திற் பூசவேண்டும். வாந்தி நன்று யாகாவிட்டால், மூன்றுநாள் சுத்த ஜல ஸ்நானஞ் செய்வித்துப் பலவித சாதமும் கொழுத்த ஆட்டிறைச்சி சேர்ந்த சாதமுங் கொடுத்து வந்தபின்பு, வாந்தி மருந்து கொடுக்கவேண்டும் - குளிர்ந்த காற்றடிக்கும்போது சூடானவிடத்தி லிருக்கவேண்டும் வாந்தியாகும்போது கண்களின்மேல் வஸ்திரத்தைக் கட்டி வைக்கவேண்டும், நிமிர்ந்துட்கார்ந்து இடுப்பை யொருவன் பிடித்துக்கொண் டிருக்கச்செய்து வாந்தி செய்யவேண்டும். நின்றுகொண்டு வாந்திசெய்தால் மாசுகள் நன்றாய் வெளிப்படுமென்று சொல்வாரு முளர். ஒருநாளைக்குக் குடித்து விடக்கூடாது மறுநாளுங் குடிக்கவேண்டும், கூடாமையாயிருந்தால் ஒருநாள் விட்டுக் குடிக்க வேண்டும், உட்டின காலமாகவும் உட்டின தேகமாகவு மிருந்தால், வாந்தியானபின்பு குளிர்ந்த ஜலத்தால் முகத்தைக் கழுவிக்கொண்டு வெந்நீர் அல்லது காடிநீர் கலந்த சிக்கஞ்சபீனேக் கந்தி இவைகளால் வாய் கொப்பளிக்கவேண்டும்-குளிர்ச்சியான தேகத்தோருக்கு வெந்நீராலேயே முகங்கழுவிக்கொண்டு வெந்நீர் அல்லது சிக்கஞ்சபீனே அஸலி இவைகளால் வாய் கொப்பளிக்கவேண்டும்-பின்பு அகிற்கட்டை மிஸ்கால்-க அல்லது றாமிமஸ்தகி வராகனெடை-க பொடிசெய்து சர்க்கரை கலந்து கருப்பஞ்சாற்றில் அல்லது ஆப்பில்பழச் சாற்றிற் குடிக்க வேண்டும். அல்லது குல்கந்தும் இந்திரிபலேஸக்கீர் என்ற லேகியமுஞ் சேர்த்து, முன்போற் குடிக்கவேண்டும். வயிற்றுநோயல்லது கோளாறுண்டாகிற் கொழுத்துப் பருத்த சேவலின் சாற்றைக் குடிக்க நீங்கும்,

விக்கலுண்டாகில் வெந்நீரைக் கொஞ்சங் கொஞ்சமாய்க் குடிப்பதாலும் தும்மல்வரச் செய்வதாலும் நீங்கும் மார்புநோய் விலாநோய் வயிற்றுப்பு லிவைகளுண்டாகில், ரோகனே குல்ரோகனே பாபூனு போன்ற தைலங்களைத் தடவி வெந்நீரை யொற்ற நீங்கும்-தீனிப்பையில் மாசுக ளதிகமாகவிருந்தா லது வெளிப்படுகிறவரையில், இரண்டு மூன்றுமுறை வாந்திக்குக் கொடுக்கவேண்டும்-விஷமருந்துகளைத் தின்று விட்டபோது பாலும் நெய்யுஞ் சேர்த்துக் குடித்து, வாந்திசெய்ய வேண்டும் காடியுங் கற்கண்டுஞ் சேர்த்துக் காய்ச்சுவதை, சிக்கஞ்சபீனே அஸலியென்றுஞ் சொல்லப்படும் இத்திரிபலே ஸக்கீர் என்பது இலகு திரிபலாதி லேகியம் ரோகனேகுல் என்பது ரோஜாப்பூத் தைலம் ரோகனே பாபூனுவென்பது சாமந்திப்பூத்தைலம்.

## எ-வது முதிராத் நீர் பேதி.

முதிராத்தென்பது தேகத்திலுள்ள மாசுகளை

நீரின் வழியாக இரக்குவதாம்.

## குளிர்ச்சியான நீர் பேதி பதார்த்தங்கள்.

காசினிவிரை, வெள்ளரிவிரை, கோழிக்கீரை விரை, சுரைவிரை, அறுசங்கொட்டை, நெருஞ்சில்வேர், நெருஞ்சில்வித்து, மணத்தக்காளி, சிறுகீரை, முதலியன நீர்ப்பேதியாக்குங் குளிர்ந்த பதார்த்தங்களாம்.

## சூடான நீர்ப்பேதி பதார்த்தங்கள்.

சோம்பு-கர்பிஸ்-அனிசூன்-சதகுப்பை - ஓமம்-அன்னுசிப்பூ-லவங்கப்பட்டை-சதாபிலே சூபா சரக்கொன்றைக்காயின் மேலோடு பெருலவங்கப்பட்டை பரசியா வுஷான் பூமிச் சருக்கரைக் கிழங்கு குங்குமப்பூ, அஸாறான் சடாமாஞ்சில், கருஞ்சீரகம், பொதினு, கடலை யூறவைத்த நீர் முதலியன நீர்ப்பேதியாக்கும்-உட்டின பதார்த்தங்களாம்.

தேகத்திலுள்ள நரம்புகளி லிருக்கு மாசுகளை நீர்ப் பேதியா லிறக்குவது மிகநன்று. மாசுக ளதிகமாக விருக்கில், பேதிக்குக் கொடுக்காமல் அல்லது இரத்தங்குத்தி வாங்காமல் நீர்ப்பேதிக்குக் கொடுக்கப்படாது, ஈரலிலிருக்கும், மாசுகள் மேற்பாகத்தி லிருந்தால் நீர்ப்பேதிக்குக் கொடுப்பது நன்று; அடிப்பாகத்திலிருந்தால் பேதிக்குக் கொடுப்பது நன்று; பேதியாலும் நீர்ப்பேதியாலும் வியர்வைப் பெருக்கு நிற்கும்; வியர்வைப் பெருக்கால் பேதியும், நீருங்கட்டும், நீர்ப்பேதியால், நுணணிய மாசுகள் நீங்கும், கொழுமையைப் பற்றிய ரோகங்களுக்கு மாத்திரம் நீர்ப்பேதிக்குக் கொடுக்கலாம், ஆகையால் கீல்வாதம் பக்கவாதம் நீர்க்கோவை

இவைகள் நீர்ப்பேதியாற் றீருமென்று நிச்சயிக்கப்பட் டிருக்கின்றன. முன்ஜிஜ் கொடுக்காமல் நீர்ப்பேதிக்குக் கொடுக்கப்படாது.

## அ-வது அலக் அட்டை விடுதல்.

காரணமில்லாமலும் ௰உ-வயதிற்கு முன்னும் ௬௰-வயதிற்குப் பின்னும், சதுர்த்தசி பிரணையிலும் ஸ்நானஞ் செய்தபின்பும் அட்டை விடக்கூடாது, ஆனல் இரத்தம் குழம்பேறி யிருந்தால் ஸ்நானஞ்செய்த ஒருமணிநேரத்திற்குப் பின்பு விடலாம், பிரதமை திதியையிலும் காலையில் முதற்சாமத்திலும், அட்டைவிடுவது நன்று. மாசுகள் ஓரே அவயவற்றிற்றங்கி வீங்கியிருந்தாலும் நரம்பைக் குத்தி இரத்தம் வாங்காமல் அட்டை விடுகிறதிற் பயனில்லை, நரம்பைக் குத்தி இரத்தம் வாங்குவது அவசியமானதாக விருந்தாலு மித்தேசத்தில் வழக்க மில்லாமையாலதைக்குறித்துச் சொல்லவில்லை.

☞ சகல ரோகங்களையும் ரோக நிதானக்குறிகளா லின்ன ரோகமென் றறிந்துகொண்ட பின்பு, அடியிற் சொல்லுகிற குறிகளாலும், மூத்திரக்குறி நாடி முதலியதுகளாலும், இன்ன சத்தைப் பற்றியதென் றறிந்து உ௱௬-வது பக்கத்திற் சொல்லியபடி சுபாவ சத்துக்களுக்குச் சடுதியில் நேரிட்ட விகற்பங்களைப் பற்றியதாக விருக்கில், மொஹிதிலாத்து அல்லது சாந்த வஸ்துக்களை முன்னே கொடுத்து சாந்தப் படுத்தவேண்டும். அசுபாவ சத்துக்களின் லேசான விகற்பமாயும் இரைப்பையையு மதைச்சேர்ந்த விடங்களையும் பற்றியதாயு மிருக்கில், மூலையன் அல்லது இலகு பேதியை முன்னே கொடுக்கவேண்டும்; அல்லது முக்கை, அல்லது வாந்திக்குக் கொடுக்கவேண்டும், விகற்பித்த அசுபாவ சத்துக்கள் நரம்புகளி லேறியிருக்கில் முன்ஜீஜாத் அல்லது பக்குவப் பதார்த்தங்களை முன்னே கொடுத்து பிரித்திறக்கவேண்டும், ஷை சத்துக்கள் நரம்புகளிலே யிருக்கில் முன்ஜ அல்லது பக்குவப் படுத்துவதை கொடுத்து முஜஹில் அல்லது பேதிக்குக் கொடுக்கவேண்டும் முகிர்ராத் அல்லது நீர்ப்பேதிக்கும் கொடுக்கவேண்டும். இப்படி கிரமப்படி முன்னே கொடுத்தபின்பு, அந்தந்த ரோகங்களுக்குரிய, அவுஷதங்களைக் கொடுக்கவேண்டும்; அதனல் ரோகங்கள் சீக்கிரத்திற றீரும், அப்படி மொஹிதிலாத் அல்லது சாந்தப் பதார்த்தங்கள் முதலியதுகளைக் கிரமப்படி முன்னே கொடாமல், ஆரம்பத்திற்றனே அவுஷதங்களைக் கொடுத்தால் ரோகமுந் தீராமல் அவுஷதங்களும் வியர்த்தமாகும்; இதுவே யூநாநி வயித்திய சாத்திரத்திற் சொல்லியிருக்கும் சிகிச்சையின் ஆரம்பக்கிரமமாம். நரம்புகுத்தி, இரத்தம் வாங்குதல்,

அசூது செய்தல் மூத்திரப்பரீட்சை முதலியதுகளை இனிப் பதிப்பிக்கும் அசுவனிதேவர் ஆயுள் வேதத்திற் றெளிவாய்க் காணப்படும்.

## மேற்சொல்லிய அசுபாவச் சத்துக்களின் குறிகள்.

சரீரத்தைப் போஷிப்பதற் காதாரமாகிய சத்துக்கள் நான்காம் அவையாவன, இரத்தம் பித்தம் இரசம் அல்லது சிலேத்துமம் வண்டல் அல்லது வாதமாம்; அவற்றுள் இரத்தம் சூட்டுடன் கொழுமையும், பித்தம் சூட்டுடன் வறட்சியுமாம் இரசம் குளிர்ச்சியுடன் ரசத்தையும் வண்டல் குளிர்ச்சியுடன் வறட்சியையும் சுபாவ குணங்களாகப் பெற்றிருக்கின்றன இதுவுமன்றி, பாத வாயு அல்லது காற்றெனப தொன்றுண்டு அது நான்கு சத்துக்களினின்று மெழுகின்ற குளிர்ந்த ஆவியாக விருக்கின்றது. விசேஷமாய் வண்டலினின்றும்; இரசத்தினின்றுமே யுண்டாகின்றது. அக்துண்டாவதற்குக் காரணமாகிய சத்துக்களின் குணங்களையே பெற்றிருக்கின்றது, இச்சத்துக்களின் உயர்வு குறைவினால் சகல ரோகங்களு முண்டாகின்றன, அவைகள் மருந்தாலன்றித் தீராவாம்-அச் சத்துக்களின் குறிகள் வருமாறு சத்துக்களின் சுபாவ குணங்களின் வரலாற்றை முகவுரையிற் காண்க

## இரத்தம் அல்லது பித்தச்சூட்டின் குறி.

அதிகத்தாகம், எரிவந்தம் கண்கள் நாசிறுநீர் மலம் சருமம் இவைகள் சிவந்து அல்லது மஞ்சளாக விருந்தால் குளிர்ச்சியை விரும்புதல் இவைகள் சுபாவ இரத்தம் சுபாவப்பித்தம் இவைகளைப்பற்றிய சூட்டின் குறிகளாம்.

## இரத்தப்பெருக்கா லுண்டான சூட்டின் குறி.

தலை பாரித்தல் கொட்டாவி ஏப்பம் தலைமூளை வறளல் நாவுலரல் சோம்பல் வாயினிப்பு கண்கள் நா சிறுநீர் சருமம் இவைகள் சிவத்தல் சொறி சிரங்கு கட்டி கொப்புளமுண்டாதல் ஈரிலும மூக்கிலும் உதிரமோடல், அசதி அவயவங்களில் நோவு நாடி படபடத்திருத்தல் இவைகள் இரத்தப் பெருக்கைப் பற்றிய சூட்டின் குறிகளாம்.

## பித்தப்பெருக்கா லுண்டான சூட்டின் குறி.

கண்கள் நா சிறுநீர் கருமம்-இவைகள் மஞ்சள் நிறமாதல், அதிக தாகம், வாய்க்கசப்பு வாயுலர்தல் கண்ணெரிவு பார்வைமந்தம், தலைச் சுற்றல், நாச் சுறசுறத்தல் நாசி வறளல், தீபனக்குறைவு அரோசிகம் ஒக்காளம், திமிர்முறித்தல், நாடி படபடத்திருத்தல் இவைகள் பித்தப் பெருக்காலுண்டான சூட்டின் குறிகளாம்-பித்த வறட்சிக்குக் குக்குறிகளேயாம்.

## இரத்தக் கொழுமையின் குறி.

அவயவச் சோர்வு வண்டலின் குளிர்ச்சிக்கு சொல்லிய குறிகளுக்கு விரோதக்குறிகள் இவைகள் இரத்தக் கொழுமையின் குறிகளாம்.

## இரசம் அல்லது வண்டலின் குளிர்ச்சியின் குறி.

தாகமின்மை எரிவின்மை கண்கள் நா சிறுநீர் மலம் சருமம் இவைகள் கறுத்து அல்லது வெளுத்திருத்தல் இவைகள் சுபாவ இரசம் அல்லது வண்டலின் குளிர்ச்சிக் குறிகளாம்.

## இரசப்பெருக்கினு லுண்டான குளிர்ச்சியின் குறி.

ஆகாரக்குறைபு அசீரணம் மலப்போக்கு அதிக நித்திரை சோம்பல் கால்களில் வியர்வை உட்டினத்தை விரும்பல் தேக வெளுப்பு சருமங் குளிர்ந்துந் தளர்ந்தும் மிருதுவாய் மிருத்தல் புளியேப்பம் புலன்கள் குன்றல் வாயில் நீரோடல் மூக்கில் தெளிந்த நீரொழுதல் இவைகள் ரசப்பெருக்கின் குளிர்ச்சிக் குறிகளாம் ரசத்தின் ஈரத்திற்கு மிதுவே குறிகளாம்.

## வண்டலின் பெருக்காலுண்டான குளிர்ச்சியின் குறி.

தேக மிளைத்தலுடன் கறுத்தல் ரத்தம் சுண்டல், குலைநோய் பொய்ப்பசி சோம்பல் வறட்சி வயறுப்பல் சிறுநீர் எண்ணெய்போ லிறங்கல் மூலரோக முண்டாதல் கில்நோ யுண்டாதல் அதிக யோசனை, பித்தப் பெருக்கிற்குச் சொன்ன குறிகளுக்கு விரோதமான குறிகள் இவைகள் வண்டலின் பெருக்காலுண்டான குளிர்ச்சிக் குறிகளாம் வண்டலின் வறட்சிக்கு மிதுவே குறிகளாம்.

## வண்டல் அல்லது பித்தத்தாலுண்டான வறட்சியின்குறி.

தேகமிளைத்தல் வறவறப்பு மேனிகுறைவு உடம்புலர்தல் இவைகள் சுபாவ வண்டல் அல்லது பித்தவறட்சியின் குறிகளாம.

## மூத்திரக்குறி.

சிறுநீர் சிமை அத்திப்பழ நிறமாகவிருக்கில் இரத்தக்குறியென்றும், மாதுளம்பழமல்லது கொடிமாதுளம்பழ நிறமாகவிருக்கில் பித்தக் குறியென்றும், குங்குமப் பூவைப்போல வெளுத்த செவப்பாகவிருக்கில் ரசக்குறியென்றும், கறுத்த ரத்தநிறமாக அல்லது ஆகாய நிறமாக

விருக்கில் வண்டலின் குறியென்றும் செவந்திருக்கில் இரத்தக்கொதி ட்மன் குறியென்றும் மஞ்சள் நிறமாக விருக்கில் பித்த மதிகரித்த குறியென்றும், வெளுப்பாக விருக்கில் ரசமதிகரித்த குறியென்றும் கறுப்பாக விருக்கில் வண்டலதிகரித்த குறியென்றும் அறிக.

## சாத்தியக் குறிகள்.

நோயாளிக்கு புத்தி வார்த்தை கண்களின் பார்வை நித்திரை உரிசை தீபனம் இவைகளிற் குறைவில்லாமல் இயற்கையாகவிருப்பது சாத்தியக்குறிக ளென்றறிக.

## அசாத்தியக் குறிகள்.

மேற்சொல்லிய சாத்தியக் குறிகளுக்கு விரோதமான குறிகளும் கண்களிலொன்று சிறுத்தாவது மூடிக்கொண்டாவ திருத்தல் நெற்றியின்தோலிழுத்துக் கொண்டிருத்தல் காதுகளின் சொணைகள் கொங்கு வதோ டசைதல் மூக்கின் முனை யுயர்ந்து துளைக ளகன்றிருத்தல் மார்பிற் சூடதிகரித்தல், நெற்றியுங் காற்களுங் குளிர்ச்சியாதல் விரைவாக மூச்செறிதல், முகம் மஞ்சள் நிறமாதல் பார்வை மந்தப்படுதல். இவைகளும் சுரரோகத்திற் சிறுநீர் கறுப்பது அசாத்தியக் குறிகளாம் இக்குறிகளைக் கண்டபோது சிகிச்சையி னின்று விலகவேண்டும்.

கூ-வது முதிரார்த்தே ஹைஜ்.

## (உதிரச்சிக்கலை யெடுக்கும் பதார்த்தங்கள்)

பெரு லவங்கப்பட்டை சிறு லவங்கப்பட்டை, கருஞ்சீரகம் ஜகன் வாய் விளங்கும் சீமைச் சாமந்திப்பூ கோஷ்டம் வாள்மிளகு பரசியாவுஷான் பர்பியூன் ஜெந்தியானு ஓமம் சதாபிலை கோரைக்கிழங்கு குங்குமப்பூ அஸாரூன் கர்பிலீ காட்டுப்புகீனு குந்திரிக்கம் வாலேந்திரபோளம் பெருங்காயம் மிளகு சீரகம் அப்ஸந்தீன் அப்திமூன் சடாமாஞ்சில் காரிக்கூன் கறுப்புக்கடலை கடலை யூறவைத்த ஜலம் முதலிய பதார்த்தங்கள் சூதகக்கட்டை நீக்குவனவாம்.

ய-வது முகு வியாததேதி மாக்.

## தலைமூளைக்கு வலிமை கொடுக்கும் பதார்த்தங்கள்.

முத்து நெல்லிக்காய் தான்றிக்காய் அம்றாதுப்பழம் சேபுப்பழம் ரோசாப்பூ பன்னீர் நாரத்தம்பழம் பிந்துஸ்பருப்பு, கோரைக்கிழங்கு, இஞ்சி சடாமாஞ்சில் அகிற்கட்டை, அம்பர் கஸ்தூரி லவங்கம் வாய் விளங்கம் குந்திரிக்கம் சுரைவிரை சந்தனம் வாதுமைப்பருப்பு படசி

களினிறைச்சி ஆட்டின் தலைமூளை வெள்ளாட்டுப்பால் முதலிய பதார்த்தங்கள் தலைமூளைக்கு வலிமை தருவனவாம்.

யக-வது முகுவியாத்தேதில்.

## (இருதயத்திற்கு வலிமை கொடுக்கும் பதார்த்தங்கள்.)

அம்றாதுப்பழம் மாதுளம்பழம் கோரகப்பட்டு நெல்லிக்காய் கொடி மாதுளம்பழத்தின் மேற்றோல் எலிமிச்ச மொக்கு புளி சேபுப் பழம் சந்தனம் மூங்கிலுப்பு கிலேஅர்மனி கிலேமசுதாரம் முத்து பவழம் கர்ப்பூரம் காவ்ஜபான் கொத்துமல்லி ரோஜாப்பூ நாரத்தம்பழம் செந்தாமரைப்பூ கெண்பு இராஜவர்த்திக்கல் வெள்ளி பொன் பாலங்கூ பாதுறாஜ் கடுக்காய் உஸ்துகுதூஸ் பஹமன்சுருஃ பஹமன்சுபைது ஜெதுவார் கிச்சிலிக்கிழங்கு கோரைக்கிழங்கு பெரு லவங்கப்பட்டை ஜடாமாஞ்சில், ஷாகாகுல்மிசறி பிரஞ்சுமிஷ்கு அகில்கட்டை அம்பர் ஏலக்காய் சிறு லவங்கப்பட்டை குங்குமப்பூ பவளம் தாம்பூலம் முத்து கஹறுபா சீமை அத்திப்பழம் ஏலம் கஸ்தூரி கத்தீரா தாளிசபத்திரி லவங்கம் பிஸ்தாப்பருப்பு தாழம்பூ திராவகம் முதலிய பதார்த்தங்கள் இருதயத்திற்கு வலிமை தருவனவாம்.

யஉ-வது முகுவியாத் தேஜிகா.

## (ஈரலுக்கு வலிமைகொடுக்கும் பதார்த்தங்கள்.)

அப்ஸந்தீன் ஜாதிக்காய் கிச்சிலிக்கிழங்கு கோரைக்கிழங்கு லவங்கப்பட்டை அஸாரூன் பிஸ்தாக்கொட்டை றாமிமஸ்தகி ஏலக்காய் அகிற்கட்டை பாதுரஞ்சுபோயா திராட்சிப்பழம் க்ாசினி ரோசாப்பூ ஜரிஷ்க்கிஷாஷ்தா மாதுளம்பழம் பழைய தண்ணீர் முதலிய பதார்த்தங்கள் ஈரலுக்கு வலிமை தருவனவாம்.

யங-வது முகுவியாத்தேமேதா.

## (தீனிப்பைக்கு வலிமை கொடுக்கும் பதார்த்தங்கள்.)

நெல்லிக்காய் மாதுளம் விரை தான்றிக்காயின் மேற்றோல் சமாஃகென்னும் பழம் பிஹியென்னும் பழம் மூங்கிலுப்பு ரோசாப்பூ கடுக்காய் முறப்பா அஸாறான் மிளகு ஒட்டைப்பால் நாவற்பழம் கொடி மாதுளம்பழத்தின் மேற்றோல் பாலங்கூ ஜாதிக்காய் சிறு லவங்கப்பட்டை கிச்சிலிக்கிழங்கு அஷனு கோரைக்கிழங்கு பெரு லவங்கப்பட்டை லவங்கம் ஏலக்காய் குந்திரிக்கம் றாமிமஸ்தகி பொதீனு அகிற்

கட்டை பெட்டைக்கோழி அல்லது சேவலின் கற்குடல் முதலிய பதார்த்தங்கள் தீனிப்பைக்கு வலிமை கொடுப்பனவாம்.

௫௪-வது முருவியாத்தே இஷ்த்தியா.

## (தீபனத்துக்கு வலிமைகொடுக்கும் பதார்த்தங்கள்.)

எலுமிச்சம்பழச்சாறு, ஷை பழத்தோல் மிளகு சிக்கஞ்சபீனே பஸ்பர்ஜலி ஜரிஷ்க்கென்னும் பழம் காடி ரூமிமஸ்தகி கருஞ்சீரகம் இந்துப்பு ஏலக்காய் ஒட்டைப்பால் சுத்தஜலம் முதலிய பதார்த்தங்கள் தீபனத்திற்கு வலிமை கொடுப்பனவாம்.

௫௫-வது முஜிராததேமேதா.

## (தீனிப்பையின் சத்தியைக் குறைக்கும் பதார்த்தங்கள்.)

கிழங்கு வருக்கங்கள் இலந்தைப்பழம், ஆளிவிரை கல்யாணப் பூசனிவிரை இலைக்கறிகள் பெரும்பயறு தேங்காய்ப்பால் பழய சின்னுக் கட்டி கறுப்பெள் வடிகஞ்சி அதசெனும் பருப்பு வெந்நீர் இனித்த பலகாரங்கள் நெய் முதலிய மலத்தையிளக்கும் பதார்த்தங்கள் முதலிய பதார்த்தங்கள் தீபன சத்தியைக் குறைப்பனவாம்.

௫௬-வது முருவியாத்தே அமஸ்நான்.

## (பற்களுக்கு வலிமை கொடுக்கும் பதார்த்தங்கள்.)

தானுமாதுளம்பூ படிக்காரம் மான்கொம்பு சுட்டகரி தாசனப் பொடி கடுக்காய்தோல் பாக்கு அக்கபாகாரம் சமாஃகெனும்பழம் சீரகம் பன்னீர் கோரைக்கிழங்கு மாசிக்காய் ரூடிபஸ்தகி குந்திரிக்கம் ஏலம் மிளகு அன்னபேதி மூங்கிலுப்பு, சேராங்கொட்டை எலும்பு சுட்டகரி மஞ்சட்கடுக்காய்த்தோல் இரும்பரப்பொடி ரோஜாப்பூ மூக்குத்தூள் புகையிலை சுட்டகரி சந்தரஸ் வெள்ளைக் குங்கிலியம் அன்னுச்சிப்பூ மஞ்சட்பலகறை பூமிச்சருக்கரைக் கிழங்கு முத்து மகிழம்பட்டை காட்டுவாழை விரை கடநுரை புளியங்கொட்டை வாலேந்திரபோளம் கொறுக்கைவேர் பவளக்கொடி முதலிய பதார்த்தங்கள் பற்களுக் குறுதி தருவனவாம்.

௫௭-வது முஜிராத்தே அஸ்நான்.

## (பற்களுக்காகாத பதார்த்தங்கள்.)

ஓட்டைப்பால் முள்ளங்கிக்கிழங்கு பனிக்கட்டி பொட்டிலுப்பு சலம் புளித்த பதார்த்தங்கள் அதி கடுமையானவைகளைச் சாப்பிட்டு அல்லது குடித்தவுடன் குளிர்ந்த சலத்தைக்குடித்தல் மிகவும் குளிர்ந்த

பதார்த்தங்கள் பாதரசம் முதலியன பற்களைப் பலவீனப்படுத்தும் பதார்த்தங்களாம்.

௰எ-வது முகுவியாத்தேசெஷம்.

## (கண்ணொளியை யதிகப்படுத்தும் பதார்த்தங்கள்.)

நெல்லிக்காய் மஞ்சட்கடுக்காய்த்தோல் வாதுமைப்பருப்பு பெருஞ்சீரகம் முத்துச்சிப்பி சுட்டசாம்பல், கோராப்பட்டு சுட்டகரி அஞ்சனக்கல் சஹறபா பொன் வெள்ளி மிளகு கஸ்தூரி குங்குமப்பூ முத்து பஸ்பம் முதலிய பதார்த்தங்கள் கண்ணொளியை யதிகப்படுத்துவனவாம் இம் மருந்துகளைத் தங்கக்கம்பியாலும் காரீயக் கம்பியாலும் கண்ணிலிடவேண்டும்.

௰அ-வது முஜிராத்சேஷம்.

## (கண்ணொளியைக் குறைக்கும் பதார்த்தங்கள்)

கோவிசுக்கீரை காப்பிரி சல்லாதுக்கீரை மசூரிப்பருப்பு கந்தனு வெங்கின்றயிலே இவைகளை யதிகமாய்த் தின்று வருவதும் ஸ்திரி சையோக மதிகமாய்ச் செய்வதும் கண்ணொளியைக் குறைப்பனவாம்.

௰கூ-வது முகுவியாத்தே பா.

## (தாதுவிருத்திக்குரிய பதார்த்தங்கள்.)

செகப்பு முள்ளங்கிக்கிழங்கு காரட்டுக்கிழங்கு முள்ளங்கி கிழங்கு வெங்காயம் வெள்ளாட்டுப்பால் பசுவின்பால் நெய் பாற்சாதம் பாயசம், பேரீச்சங்காய் வாதுமைப்பருப்பு பிந்துஃ ஹப்பெசமனு பிஸ்தாஷல்ஃ கூஜா என்னும் பருப்புகள் சாலன்மிசரி ஷஃகாகுல்மிசரி போஜிதான் மிசறி கருஞ்சீரகம் நெருஞ்சிப்பழம் பஹமன்சபைது தூதரிசுருஃ தூதரிசுபைது தோல்போக்கிய எள்ஜர் தாலுவென்னும் பழம், நிலப்பனங்கிழங்கு தண்ணீர்விட்டான் கிழங்கு, அக்கராகாரம் றாமஸ்தக்கி தொஃமேபியாஜ் தொஃமெகஜர் தொஃமெஷல்கம் லவங்கப்பட்டை திப்பிலி கசகசா இருஞ்சிக்கு அஷ்னு அஸாறான் கிச்சிலிக்கிழங்கு பாஃகீலா கார்போகவரிசி இரும்புக்கிட்டம்ரே குமாகி ஷஃகன்கோர வருஷத்துக்கு மேற்படாத கொழுத்த ஆட்டுக்கடாவி னிறைச்சி கொழுத்த சேவலினிறைச்சி காடை கவுதாரிகளி னிறைச்சி புதிதாய்ப் பிடித்த நல்ல சலத்தின் மீன்கள் கோழிமுட்டை ஊர்க்குருவியின் றலைமூளை முதலிய பதார்த்தங்கள் சுக்கிலத்தைப் பெருக்குவனவாம், ஹப்பென்பது விரை நொஃம் யென்பது கொட்டை.

* முதிரார்த்தே ஹைஜ்முதல் முருகியாத்தேபா ஈறுகச் சொல்லப் பட்டவைகளுள் ஒன்றாகத் தனித்தேனும், பலவாகச் சேர்த்த தேனும் கஷாயம் லேகியம் சூரணம் ஷர்பத்து முதலிய அவுஷதங்களாக ரோகத் திற்குந் தேகத்திற்குந் தக்கபடிசெய் துபயோகிக்க, அவ்வவற்றிற்குச் சொன்ன குணங்களைக் கொடுக்கும்.

## தாதுநஷ்டம்.

ஆகாரங்களில் நின்று பிரிகின்ற சத்து அன்னரசமாம், அவ்வன்ன ரசத்தினின்று பிரிகின்ற சத்து இரத்தமாம், அவ் விரத்தத்தினின்று பிரிகின்ற சத்தே * சுக்கில சோணிதங்களாம், அச் சுக்கில சோணி தங்கள் ஆயுள் விருத்தி சந்தானவிருத்தி, பலம் காந்தி ஊக்கம் இவை முதலியவைகளுக் காதாரமாக விருக்கின்றன, அச் சுக்கில சோணிதத்தி னின்றெழுகின்ற ஆவியால் லேபன முதலிய காமக்குறிகளுண்டாகும் அவ்வாறே ஆகார சீரணகாலத்திற் றீனிப்பையினின்றெழும் ஆவியாலும் ஷெ குறிகள் அற்பமாக உண்டாகும் அது குழந்தைகள் முதலிய பாவ ருக்கும் நித்திரையிற் காணப்படும் ஆவியில் ஷெ சுக்கில சோணிதங்கள் தலைமூளை இருதயம் ஈரல் குண்டிக்காய் என்னு மிரசக் கருவிகளின் பலக்குறைவு முதலிய பல காரணங்களால் பலவீனப்படும்போது ஷெ ஆவி யெழாது அதனால் லேபன முதலிய குறிகளுமிராது. ஆனால் மேற்சொன்ன ஆகார ஜீரண ஆவியானது சுக்கில நரம்புங்களிற் பிர வேசிக்கும்போது ஷெ குறிகளுண்டாகும் அது சையோகத்திற் கிளைத்துக் குக்குடப் புணர்ச்சியாகும், இதற காரணங்களை யுணராமல் பல அவுஷதங்களைத் தின்று சூடதிகரித்து பல விரோதங்களை யடைந்து சுக்கிலத்தின் பலவீனத்தை நீக்குதற்கு பதிலாகப் பின்னும் பலவீனப் பட்டு, நிராசையை யடையாமல் தங்களுடைய சத்திகளைத் தாங்களே யறிந்து திருத்திக்கொண்டு மகிழ்வடையும்படி ஷெ காரணங்களைப் பற்றிய குறிகளையும் அவற்றிற்குப் பரிகாரங்களையுஞ் சுருக்கமா யடியி லெழுதப்படுகின்றன, அவை வருமாறு.

## இருதயத்தின் பலவீனத்தைப் பற்றிய தாதுநஷ்டக்குறி.

இருதயத்தின் பலவீனத்தால் சுக்கிலத்தின் சக்தி, குறையுமாகில் சம்போகத்திற் கெத்தளித்துக் குறிக ளொன்றோடொன்று சந்திக்கும் போது சோர்வடைந்து சுக்கிலம் வெளியாகிவிடும், இதற்குக் கொத்து மல்லிக்கீரை சாற்றிற் கற்கண்டு சேர்த்துக் காலையிற் குடித்து வருவதா லும் இரண்டு பணவெடை முத்தைப் பன்னீரி லரைத்து ஷெ சாற்றிற் கலந்து கற்கண்டு சேர்த்துக் குடித்துவருவதாலும் கோஷ்டாருமு பாரா

வேலூறவி என்ற முத்து சேர்ந்த லேகியங்களைச் தின்றுவருவதாலும் இருதயத்திற்குப் பலங்கொடுக்கும் பதார்த்தங்களைச் சேர்ப்பதாலும் இருதயத்திக்குப் பலமுண்டாகித் தாது நஷ்டம் நீங்கும்.

## தலைமூளையின் பலவீனத்தைப் பற்றிய தாது நஷ்டக்குறி.

தலைமூளையின் பலவீனத்தால் சுக்கில சத்தி குறையுமாகில் தாது விருத்தி யுண்டாயிருந்தும் சையோக விருப்பமற்றே யிருக்கும் சில வேளையில் விருப்பமிருந்தாலும் அதி சீக்கிரத்திற் சுக்கிலம் வெளியாகும்-இதற்கு ஆட்டுத் தலைமூளையைப் பசுவின்நெய் அல்லது வாதுமை நெய்யிற் பொரித்து நித்தியம் புசிப்பதோடு வாதுமைநெய்யை நித்தியஞ் சிரசிற் பூசிவருவதாலும் தலைமூளைக்கு வன்மைதரும் வஸ்துக்களைச் சேர்ப்பதாலும் தலைமூளைக்கு வலிமையுண்டாகித் தாதுநஷ்டந் தீரும்.

## (ஈரலின் பலவீனத்தைப் பற்றிய தாதுநஷ்டம்)

ஈரலின் பலவீனத்தால் சுக்கில சக்தி குறையுமாகில் அதிக விரைவில் இந்திரியம் வெளிப்படுவதுமன்றிச் சம்போகமான உடனே இந்த விடம்விட்டு எழுந்திருக்கச் சக்தியற்றுப்போகும்-இதற்குக் காராட்டுக் கிழங்கை மணலில் வாட்டிச் சாறுபிழிந்து கற்கண்டு சேர்த்துக் குடிப்பதாலு மக்கிழங்கை எந்தவித கறிகளாகவாவது பலகாரங்களாகவாவது தித்திப்பாவது செ- து தின்று வருவதாலும் புலவுகிச்சடி இவைகளைச் சாப்பிட்டு வருவதாலும் ஈரலுக்குப் பலங்கொடுக்கிற வஸ்துக்களைச் சேர்த்து வருவதாலும் அடியிற் சொல்லுகிற லேகியத்தை ஒவ்வொரு வேளை தின்று வருவதாலும் ஈரலுக்குப் பலமுண்டாகித் தாதுநஷ்டம் நீங்கும் (லேகியமுறை) காரட்டுவிரை சேர் அரை வெங்காயவிரை சேர் கால் சாதிக்காய் கிராம்பு லவங்கப்பட்டை வால்மிளகு சுக்குதிப்பிலி மிளகு வகைக்குத் தோலா-க இவைகளைத் தேன் சேர்த்து லேகியஞ் செய்து சாப்பிடவேண்டும்.

## குண்டிக்காயின் பலவீனத்தைப்பற்றிய தாதுநஷ்டக்குறி.

குண்டிக்காயின் பலவீனத்தால் சுக்கில சக்தி குறையுமாகில் சம்போகத்திற் கெத்தனிக்கும்போது பயங்கரமான ஓர் சத்தமானது தற்செயலாயக்காதில்விழக் கேட்டுப்பயந்து சோர்வடைந்துபோம் இதற்குச் சலத்திற் சியதானுசிப்பங்கான் இவைக ளிரண்டையுஞ் சமமாகச்

* புருஷர்களுக்குச் சுக்கிலமென்றும் ஸ்திரீகளுக்குச் சோணிதமென்றுஞ் சொல்லப்படுகிற சுக்கில தாது ஒன்றேயாதலால் தாது நஷ்டமென்பது அவ்விருவருக்கும் பொக்கும்.

சேர்த்துச் சலத்திற் கழுவி நிழலுலர்த்தி நெய்யில் வறுத்து தேனிற் கலந்து நித்தியமொரு வராகனிடையாக நாற்பது நாளைக்குச் சாப்பிடுவதாலும் குண்டிக்காய்க்குப் பலங்கொடுக்கும் வஸ்துக்களைச் சேர்த்து வருவதாலும் குண்டிக்காய்க்குப் பலமுண்டாகித் தாதுநஷ்டந் தீரும்.

## நரம்புகளின் பலவீனத்தைப் பற்றிய தாது நஷ்டக்குறி.

நரம்புகளின் பலவீனத்தால் சுக்கிலசத்தி குறையுமாகில் ஆண்குறி கோணி கோணியாரை முறைப்பா யிருப்பதுமன்றிப் பெரும்பாலும் லேபனமில்லாமலே யிருக்கும் சுக்கிலம் அதிகமாய் நீர்த்தும் வெளுத்து மிருக்கும் ஆண்குறி யடிசிறுத்தும் நுனிபருத்து மிருக்கும் இதற்கு மஹஜூனேஃகுப்சூல் அதீத் ஷறுபேபஞ்சூஷ் என்ற மருந்துகளைச் சாப்பிடுவதாலும் அக்கிரகாரத்தைப் பொடித்துச் சம்பங்கி யெண்ணெயிற்கலந்தும் முள்ளங்கி விரையை வெண்ணெயிலெரித்தும் நித்தியம் ஆண்குறியிற் பூசித் தேய்த்து வருவதாலும் நரம்புகளுக்கு பலமுண்டாகித் தாது நஷ்டந்தீரும்.

## அதிகச் சூட்டைப்பற்றிய தாது நஷ்டக்குறி,

அதிகச்சூட்டினுல் சுக்கிலசத்தி குறையுமாகில் லேபனமும் புணர்ச்சியுங் குறைந்திருக்கும், சுக்கிலம் அதிகமாக வெளிப்படும் மஞ்சள் நிறமாகவும் நீர்த்துமிருக்கும் வெளிப்பட்ட பின்பு எரிவந்த முண்டாகும் இதற்கு லுபேகபீர் மஹஜூனேபுசூரி ஷர்ப்பத் தேகாஸினி இவைகளைச் சாப்பிடத் தாது நஷ்டம் நீங்கும்.

## அதிக் குளிர்ச்சி வறட்சியைப் பற்றிய தாது நஷ்டக்குறி.

தேகத்தில் குளிர்ச்சியும் வறட்சியும் அதிகரித்ததினுற் சுக்கிலசத்தி குறையுமாகில் இந்திரியமும் லேபனமும் குறைந்திருக்கும் இதற்குக் கொழுத்த சேவலிறைச்சியின் பொரியலைக் கோதுமை ரொட்டியோடு நித்தியம் சாப்பிடுவதாலும் பாற்சாதம் பாயசம் ஷாகாகுல்மிசரி காரட்டுக்கிழங்கு இவைகளின் முறப்பா வாதுமைப் பருப்பு தேங்காய் பிஸ்தாப்பருப்பு பிந்துக்பருப்பு இவைகளை நித்தியம் சாப்பிடுவதோடு மாமிசபதார்த்தங்களில் சுக்கு லவங்கப்பட்டை ஜாதிக்காய் ஜாபத்திரி இவைகளைச் சேர்த்துச் சாப்பிடுவதாலும் ஹப்புல்பான் என்ற விரையைக் கஷாயமிட்டுக் குடிப்பதாலும் தாது நஷ்டந்தீரும்.

## அதிகரித்த சூடு வரட்சியைப் பற்றிய தாது நஷ்டக்குறி

சூடும் வறட்சியு மதிகரித்தால் சுக்கிலசத்தி குறையுமாகில் போகமும் லேபனமு மதிகரித்து விந்து குறைந்து வெளிப்படும் இதற்கு

கொடி முந்திரிப்பழம் சீமை யத்திப்பழம் இனிப்பு மாதுளம்பழம் மூலாம்பழம் இவை முதலிய கனிவருக்கங்களும் குல்கந்து நெல்லிக்காய் சுரைக்காய் கொடி மாதுளங்காய் சீமை இலந்தம்பழம் இவை போன்ற கனியின் முறப்பாக்களும் கோழுக்கீரை சுக்கான்கீரை புளியாரைக்கீரை முதலியவைகளும் ஆட்டின் தலைக்கறி, குற்றை வரால், உழுவை முதலிய நல்ல தண்ணீர் மீன்கள் சருக்கரை சேர்த்துக் காய்ச்சியபால் தாவுல்பசல் என்னும் வெங்காயம் ஷர்பத்து இவைகளும் சாப்பிடுவதால் தாது நஷ்டம் நீங்கும்.

## அதிக குளிர்ச்சி கொழுமையைப்பற்றிய தாதுநஷ்டக்குறி

தேகத்திற் குளிர்ச்சியுங் கொழுமையு மதிகரிக்கும் சக்கிலசத்தி குறையுமாகில் போகங்குறைந்து விந்து நீர்த்து அதிகமாய் வெளிப்படுவதோடு லேபனமுங் குறைந்துபோகும் இதற்கு சர்சனியா சர்வூனி இத்திரீபலெகபீர் ஷுபூபேகபீர் மஹருனே ஓாலுவி மஹருனே குசையத்து சாலும் முதலிய லேகியங்கள் இஞ்சி முறப்பா இவைகளைச் சாப்பிடுவதாலும் அரை வேகலாக வேகவைத்த கோழிமுட்டையுடன் லவங்கம் லவங்கப்பட்டை சேர்த்து, காடை கவுதாரி ஊக்குருவி புறா, இவைகளின் மாமிசத்தில் இஞ்சி மிளகு லவங்கப்பட்டை ஷர்ஜீரு கடுகு லவங்கம்-வால்மிளகு ஓமம் சீரகம் கடலைப்பருப்பு முதலியவைகளி லொன்றைக் கூட்டிச் சமைத்தும் சாப்பிடுவதாலும் தாது நஷ்டம் நீங்கும்.

* மேற்சொல்லிய குறிகளை நன்குயறிந்து அவ்வவற்றிற்குச் சொல்லிய அவுஷதங்களில் அவாவர்கள் தேகத்திற் கனுகூலமானதைச் சாப்பிட்டுத் தாது நஷ்டத்தை நிவர்த்திசெய்து கொள்ளவேண்டும்,

## தாதுபுஷ்டி சூரணம்.

ஷகாகுல்மிசரி போஜீதான்மிசரி சுரஞ்சான்மிசரி தூமஸ்த்தகி இவைகளைச் சமவெடையாகச் சேர்த்து, சூரணித்து, அதற்குச் சமவிடை கற்கண்டு கூட்டி நித்தியம் ஒரு தொலா சூரணத்தைப் பசும்பாலிற் சேர்த்து இராத்திரியிலே நித்திரை செய்யுமுன் சாப்பிட்டுவரத் தாதுபுஷ்டி யுண்டாகும்.

## இதுவுமது.

சாலன்மிசரி தொலா-ரு பஹ்மன்சுருக் பஹமன்சுபைது வகைக்குத் தொலா-௩ சுரஞ்சான்மிசரி தொலா-௧ கற்கண்டு தொலா-௪ இவைகளைச் சேர்த்துச் சூரணித்துப் பசும்பாலில் நித்தியம் க-தொலா சாப்பிடத் தாதுபுஷ்டியுண்டாகும்.

## இதுவுமது.

சாலன்மிசிரி வராகனிடை-உ றாமஸ்தகி வராகனிடை-க கற்கண்டு வராகனிடை-ரு இவைகளைச் சூரணித்துச் சேர்த்து வேளைக்கிரண்டு வராகனிடை சூரணத்தைப் பசுவின்பாலிற் சேர்த்துக் குடித்துவரத் தாதுபுஷ்டியுண்டாகும்.

## இதுவுமது.

குங்குமப்பூ ஜாதிக்காய் ஜாதிபத்திரி லவங்கம் இவைகளைச் சூரணித்துச் சமபாகமாய்ச் சேர்த்து வேளைக்கிரண்டு வராகனிடை சூரணத்தைப் பசுவின்நெய்யிற் குழைத்துத் தின்றுவரத் தாதுபுஷ்டி யுண்டாகும், மேற்சொல்லிய சூரணங்களைச் சாப்பிட்டு வருவதால் தாதுநஷ்டத்தால் மனச்சோர் வடைந்தவர்கட்கு மனக்களிப்பை யுண்டாகும்.

அவுஷத முறைகள்.

## சிகஞ்சபீனே சாதா.

நல்ல சீமைக்காடி ருத்தல்-க கற்கண்டு ருத்தல்-வ பன்னீர் பலம்-உ கற்கண்டைப் பாகுகாய்ச்சிப் பதமாக வருகிறபோது காடியைக் கொஞ்சங் கொஞ்சமாக விட்டுப் பின்பு பன்னீரையுமப்படியே விட்டுத் துழாவிப் பதத்திலிறக்கிப் புட்டியில்விட்டு வைத்துக்கொண்டு வேளைக்கொரு தொலா குடிக்கவேண்டும் இது பித்தத்தை நீக்கும் தாகத்தை யடக்கும் தீபனத்தை யுண்டாக்கும் நீரைப் பெருக்கும் உட்டின சுரங்களைப் போக்கும் கட்டிகளையுடைக்கும் உட்டின தேகத்திற்குப் பொருந்தியிருக்கும் இரத்தவாந்தி முதலிய இரத்தப் போக்குகளை நிறுத்தும் விஷபங்களைமாற்றும்.

## சிகஞ்சபீனே அஸலி.

ஒருபங்கு காடியும் இரண்டுபங்கு தேனுமாச் சேர்த்துப் பதமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு முன்போற் குடிக்கச் சலதோஷ முதலிய சிலேத்தும ரோகங்களை நீக்கும் இரத்தத்தைச் சுத்திசெய்யும்.

## சிகஞ்சபீனே புசூரிபாரீத்.

காசினிவிரை காசினிவேர் வகைக்கு வராகனிடை-எ கோழிக்கீரைவிரை தொக்மேக்கியாராயின் வகைக்கு வராகனிடை ரு இவைகளைச் சிதைத்துப் பட்டினம்படியால் ஒன்றரைப்படி சலத்திற் சேர்த்து நாலிலொன்றாக கஷாயமிறக்கி, அதற்கு நாலிலொன்று காடிசேர்த்து ஒரு ருத்தல் கற்கண்டு, சேர்த்துப் பதமாய்க்காய்ச்சி வைத்துக்கொண்டு முன்

போற் குடிக்கவேண்டும். இது ஈரலைப்பற்றிய கட்டுகளை யுடைக்கும் நீரைப்பெருக்கும். வீக்கத்தை இறக்கும் உட்டின சுரங்களைத் தணிக்கும், தாகத்தையடக்கும், பாரீத என்பது குளிர்ச்சியான தொக்மேக்யாரயின் என்பது இரண்டுவித வெள்ளரிவிரை யென்பதாம்.

## * சிகஞ்சபீனே புசூரி.

காசினிவிரை கர்பீஸ் சோம்பு அனிஸூன் வகைக்கு வராகனெடை-ரு சோம்புவேர் கர்பிஸ்வேர் வகைக்கு வராகனெடை-உ இவைகளைச் சேர்த்து முன்போற் கஷாயமிறக்கி கற்கண்டு சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி வைத்துக்கொண்டு முன்போற் குடிக்கவேண்டும் இது ஈரல் திணிப்பை நீர்த்தாரை இவைகளின் கட்டுகளை யுடைக்கும் வயிற்றைச் சுத்திசெய்யும் வீக்கத்தை யிறக்கும் தாகத்தை யடக்கும் ஹார் என்பது சூடான

* சிக்காஞ்ச பீன்களைச் சலத்துடன் சேர்க்காமற் குடிக்கப்படாது காடியை யுபர்த்துவதால் காரமுள்ளதாகவும் கற்கண்டை யுபர்த்துவதாற் சாந்தமாகவு மாகிவிடும்.

## ஷாபத்தே உன்னுப்.

சீமைக் காட்டிலந்தைப் பழங்களை ஒரு புதுப்பாண்டத்திற் போட்டு அது மறையும்படி சலம்விட்டூறவைத்துப் பிசைந்து வடிகட்டிக்கொண்டு அதில் மேற்படி பழத்திற் கிரண்டுபங்கு வெள்ளைச் சருக்கரை சேர்த்துப் பதமாய்க் காச்சிப் புட்டியில்விட்டு வைத்துக்கொண்டு வேளைக்கு ஒருவராகனெடைமுதல் இரண்டுவராகனெடைவரையிற் குடிக்கவேண்டும் இது சொறி சிரங்கு தினவுகட்டி கொப்புளம் முகத்திற்படரும். மாசுகள் மார்புநோய் இவைகளை நீக்கும். இரத்தக் கொதிப்பை மாற்றும்.

## ஷர்பத்தே அஞ்ஜீர்.

சீமை யத்திப்பழம் ராத்தல்-க கடலை ராத்தல்-அரை இவைகளைச் சேர்த்து ரு-ராத்தல் சலத்தில் அளிய வேகவைத்துப் பிசைந்து வடிகட்டிக்கொண்டு, அதில் லவங்கப்பட்டை கருஞ்சீரகம் லவங்கம் சடாமாஞ்சில் வகைக்கு வராகனெடை-க குங்குமப்பூ வராகனெடை-அரை இவைகளை நையபுடித்து வஸ்திரத்தில் முடிந்துபோட்டு மறுபடியுங் காய்ச்சி மேற்படி முடிச்சைப் பிசைந்து, பிழிந்தெடுத்துவிட்டு, அந்தக் கஷாயத்தில் தேன் ராத்தல்-க விட்டுப் பதமாய்க் காய்ச்சி வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு தொலாமுதல் இரண்டு தொலாவரையிற்

சாப்பிடவேண்டும். இது குண்டிக்காயிலும் ஊத்தாம் பிள்ளையிலு மிருக்கிற கெடுதிகளை நீக்கி வலிமை கொடுக்கும்-தாதுபுஷ்டியை யதிகப் படுத்தும் இடுப்புநோவை மாற்றும்.

## ஷர்பத்தே ஜகர்.

காரெட்டுக் கிழங்குச் சாறு ராத்தல்-க தேன் ராத்தல்-உ இவை களைச் சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி, வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு தொலா சாப்பிடவேண்டும்; இது இடுப்புநோவை மாற்றி இடுப்பிற்கு வலிமைகொடுக்கும், தாதுபுஷ்டியை யுண்டாக்கும் இத்துடன் வெங் காயச்சாறு வெங்காயவிரை முருங்கப்பூ முதலிய தாதுவிருத்தி பதார்த் தங்களைச் சேர்த்துச் செய்வாருமுண்டு.

## ஷர்பத்தே நீலூபர்.

நிழலிற் சற் றீரம்புலத்திய தாமரைப்பூ விதழ் சேர் க இதை நாலு சேர் சலத்தில் சும-நாழிகை, யூறவைத்து, நாலிலொன்றாய்க் காய்ச்சிப் பிசைந்து வடிகட்டி, இரண்டுசேர் வெள்ளைச் சருக்கரை சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி, வைத்துக்கொண்டு, வேளைக்கொரு தொலா முதல் இரண்டு தொலா வரையிற் சாப்பிடவேண்டும், இது சூட்டைப்பற்றிய தலைவலி பித்தசுரங்கள் இருமல் மார்புநோய் பக்கசூலை முதலிய ரோகங் களை நீக்கும்.

## ஷர்பத்தே குலேபனபஷா.

ஒரு சேர் குலேபனப்ஷா பூவை ஷை தாமரைப்பூ ஷர்பத்தைப் போலவே காய்ச்சி வைத்துக்கொண்டு வேளைக் கொருதொலா முதல் இரண்டுதொலா வரையிற் சாப்பிடவேண்டும்.-இது தலைநோய் கண்ணோய் குண்டிக்காயைப்பற்றிய வியாதிகள் மார்புவலி சூலை சுரம இருமல் இவைகளை நீக்கும், நீர்ச்சிக்கலை யகற்றும்-மார்பிலுள்ள கபத்தை யறுக் கும். மலசுத்தியாகும் வயிற்றிலுள்ள அசுபாவச் சத்துக்களையகற்றும்.

* ஷர்பத்துக்களைச் சுத்த ஜலத்திலாவது, பன்னீரிலாவது கலந்து குடிக்கவேண்டும்.

## மாவுல் அஸல்.

நல்ல தேன் பங்கு-க சுத்தசலம் பங்கு-சு இவ்விரண்டையுங் கூட்டிக் காய்ச்சி, நுரையை யெடுத்துவிட்டு, மூன்றிலொன்றாக விறக்கி வடிகட்டி வேளைக்கிரண்டு கரண்டி சாப்பிடவேண்டும் இது புளித்துப் போகுமாகையால் நித்தியம் காய்ச்சிக் கொள்ளவேண்டும் இது அவய வங்களுக்குக் கொழுமை கொடுக்கும் நீருகலை நீக்கும் நீர்த்தாரையிலும் ஊத்தாம்பிள்ளையிலு முண்டாகிற ரணங்களை யகற்றும். தீனிப்பைக்கு

* இது இந்துஸ்தானியில் கஜா என்றும் பாரிசில் காஜரி என்றும் இங்கிலீஷில் காரட் என்றும் பிராஞ்சில் கர்ரோத் என்றுங் கூறப்படும்.

வலிமை கொடுக்கும் தீபனத்தை வளர்க்கும் சிலேத்தும ரோகங்களையும் கீல்வாதங்களையும் நீக்கும்.

## தரீவுல் பசல்.

ஒருபங்கு வெங்காயச்சாறும் இரண்டுபங்கு தேனுமாகச் சேர்த்துக் காய்ச்சி பாகுபதத்தில் வடிகட்டி வைத்துக்கொண்டு, வேளைக்கு ஒரு தொலாமுத லிரண்டு தொலா வரையிற் சாப்பிடவேண்டும், இது அதிகச்சூடு வரட்சியா லுண்டான தாது நஷ்டத்தை மாற்றித் தாது புஷ்டியை யுண்டாக்கும்.

## மாவுல் உசூல்.

பெருஞ்சீரகம் கர்பீஸ் காசினி இவைகளின் வேர்ப்பட்டை பெருஞ்சீரகம் சர்பிஸ்விரை காசினிவிரை இவைகளைச் சமவிடையாகச் சேர்த்துக் கஷாயமிட்டுக் குடிக்க இரசத்தையும் வண்டலையும் பற்றிய கீல்வாதங்கள் பாதத்திலும் கால்விரல்களிலு முண்டாகிற நோவு இசிவு இவைகள் நீங்கும் இத்துடன் சீமைஅத்திப்பழம் திராட்சிப்பழம் தேன் இவைகளைச் சேர்த்தால் மிகு குணங்கொடுக்கும்.

## மதபுஃகே பனப்ஷா.

குலேபனப்ஷா பணவிடை-சு அதிமதுரம் பணவிடை-ரு பரசியாவுஷான் உஸ்துகுதூஸ் வகைக்குப் பணவிடை-உ திராட்சிப்பழம்-எ பன்னீர்ப்பூ பணவிடை ச கற்கண்டு தொலா-க இவைகளைச் சேர்த்து மூன்றிலொன்றுய்க் கஷாயமிறக்கி இரண்டுவேளையுங் குடிக்க தோஷம் இருமல் சுரம் இதுகள் தீரும் மத்புக் என்பது கஷாயம்.

## இதுவுமது.

குலேபனப்ஷா காசினிவிரை பன்னீர்ப்பூ வகைக்குக் கழஞ்சு-கூ-ம ஆலுபுகருப்பழம்-ரு சிபிஸ்தான்-எ இதுகளைச் சேர்த்து மூன்றிலொன்றாகக் கஷாயமிறக்கிச் சருக்கரை சேர்த்துக் குடிக்கப் பித்தத்தினலுண்டான சுரமுந் தலைவலியுந்தீரும்.

## அரக்கேஜர்.

நன்றாய்த்தேறின காரெட்டுக்கிழங்கு ராத்தல்-க வெந்தயம் பலம்-உ காரெட்டுக் கிழங்கின் உள் நரம்பை நீக்கிப்போட்டுச் சிறிதாயரிந்து வெந்தயத்துடன் சேர்த்துப் புதுப்பானையிற் போட்டு ச-ராத்தல் சலம் விட்டுப் பானை வாய்க்குச் சட்டிமூடிச் சீலைமண்செய்து மிருதுவான தீயில் வைத்துக் குழைய வேகவைத்துப் பின்பு நன்றாய்ப் பிசைந்து வடிகட்டி அதற்கு நாலிலொன்று தேன் சேர்த்து அதில் தூதரிசுரக் தூதரிசுபைது வகைக்கு வராகனெடை-ரு ஜாதிக்காய் ஜாதிபத்திரி

வராகனெடை-எ சிற்றரத்தை லவங்கம் வகைக்கு வராகனெடை-ந இவைகளைப் பொடிசெய்து சேர்த்து வாயைமூடி வெயிலில் வைத்துப் புளிப்பேறியபின்பு வாலையிற் சேர்த்துத் திராவக மிறக்கிக்கொண்டு வேளைக்கு ஒருவராக னெடைமுதல் நாலுவராக னெடைவரையில் இரண்டுபங்கு சுத்த சலத்திற் சேர்த்துக் குடிக்க, ஈரலுக்கும் இடுப்பிற்கும் பலங்கொடுக்கும் இடுப்புநோவை மாற்றும் அமிர்தமான தாதுபுஷ்டியையுண்டாக்கும் அர்க் என்பது திராவகம்.

## அர்க்கேசோப்சீனி.

பறங்கிச்சக்கை கழஞ்சு-ூா குலேகாவ்ஜபான் பாதுரஞ்சு பேர்யா சந்தனத்தூள் வகைக்குக் கழஞ்சு-ருய பங்கீர்ப்பூ செம்மரம் கொடிமாதுளம்பழத்தோல் கஷாகுல்மிசறி வகைக்குக் கழஞ்சு அ லவங்கப்பட்டை சடாமாஞ்சில் வகைக்குக் கழஞ்சு ஙய கோறைக்கிழங்கு சரஞ்ஜான் ஸாலிஜ்ஜேஹிக்தி சாலன்மிசரி அகிற்கட்டை வகைக்குக்கழஞ்சு-ய பஹமன்சருக் பஹமன்சுபைது வகைக்குக் கழஞ்சு-உய திருநீற்றுப் பச்சையிலை உலர்ந்த பொதினையிலை வகைக்குப் பிடி-க பன்னீர்ப்பூ-சருய விரைபோக்கிய திராட்சிப்பழம் கழஞ்சு-ூா அம்பர் கழஞ்சு-ந இவைகளையிடித்து வாலையிற்போட்டு இவைகளுக்கு ஆறுபங்கு சலஞ்சேர்த்துத் திராவக மிறக்கிக்கொண்டு வேளைக்கிரண்டு தொலா-திராவகத்துடன் பாலுஞ் சருக்கரையுஞ் சேர்த்து இரண்டுவேளையும் போசனத்திற்குப் பின்பு குடிக்கவேண்டும், இது சகல மேக ரோகங்களையும் போக்குவதோடு தேகபுஷ்டியையுந் தாது புஷ்டியையுங் கொடுக்கும்.

## குர்சேதபாஷிரே முலையன்.

மூங்கிலுப்பு பன்னீர்ப்பூ கிஷாவ்தா கோழிக்கீரைவிரை அதிமதுரப்பால் வகைக்கு வராகனெடை-டு கொத்துமல்லி வராகனெடை-ச வாதுமைப்பிசின் தாமரைக்கொட்டை சுரைவிரை வெள்ளரிவிரைமுலாம்விரை இவைகளின் பருப்பு வகைக்கு வராகனெடை-ந சந்தனம் வராகனெடை-கக இவைகளைச்சேர்த்து பங்கூவிரை அல்லது பேதகனுவிரையை யூறவைத்த கோழையிலரைத்து வடகஞ்செய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு, வேளைக்கு ஒருவராக னெடைமுதல் இரண்டு வராகனெடைவரையிற் றின்னவேண்டும், இத்துடன் ஆறுகுன்றியெடை குங்குமப்பூவும் மூன்றிகுன்றி யிடை கர்ப்பூரமுஞ் சேர்த்தால் மிக நன்று இது உட்டின சுரங்கள் தொந்தசுரங்கள் எலும்புருக்கிச்சுரங்கள் மூப்பருக்குண்டாகும் அஸதிசுரங்கள் வைசூரி நீர்ச்சுருக்கு அகிதாகம் வெப்பு மார்புநோய் பக்கசூலை உட்டின இருமல் உட்டினத்தாலுண்டா

கும் பக்கவாதங்கள் சூட்டினாலுண்டாகும் கட்டி கொப்புளம இவைக ளைநீக்கும் இந்தமுறையில் ஒன்பதுவராகனெடை தவளையிடாத முத் தைப் பன்னீரிலறைத்துச் சேர்த்தால் குர்சேதபாஷீரே லாலுவியெ ன்று சொல்லப்படும், குர்ஸ் என்பது வடகம்.

## குர்சேகாபூர்.

வெள்ளரிவிரை மூலாம்விரை இவைகளின் பருப்புபேதானுவகை க்கு வராகனெடை-ரு பன்னீர்ப்பூ அதிமதுரப்பால் மூங்கிலுப்பு வகை க்கு வராகனெடை-ரு விளாம்பிசின் சந்தனம் கிஷாஷ்தா வகைக்குவரா கனெடை-உ சோம்பு சூரத்துக்கர்ப்பூரம் வகைக்கு வராகனெடை-க இவைகளைச்சேர்த்துச் சுத்தசலம் விட்டரைத்துவடகஞ்செய்து நிழலு லர்த்தி வைத்துக்கொண்டு வேளைக்கு-½ வராகனெடைமுதல்-க வரா கனெடைவரையிற் றின்னவேண்டும். இது ஈரலைப்பற்றிய ரோகங்க ளையும் உட்டின சுரங்களையும் போக்குவதன்றி காமாலையை நன்றாய்க் கண்டிக்கும்.

## குர்சேகுலேகபீர்.

பன்னீர்ப்பூ கத்தீரர் கிஷாஷ்தா சோம்பு மூங்கிலுப்பு குங்குமப் பூ அதிமதுரம் சுரைவிரையின் பருப்பு வெள்ளரிவிரையின் பருப்பு இவைகளைச் சமவெடையாகச் சேர்த்துச் சோம்பு கஷாயத்தி லரைத் து வடகஞ்செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு வேளைக்கு ஒரு வராகனெடை தின்னவேண்டும், இது இரசத்தையும் வண்டலையுமப ற்றிய சகல சுரங்களையும்போக்கும், கபீர் என்பது மஹா.

## குர்சேகுலேசகீர்.

பந்நீர்ப்பூ வராகனெடை-சு சடாமாஞ்சில் கழஞ்சு-ச அதிமதுர ப்பால் வராகனெடை-க இவைகளைச்சேர்த்துச் சோம்புக்கஷாயத்தில ரைத்து வடகஞ்செய்து நிழ லுலர்த்திவைத்துக்கொண்டு, வேளைக்கு ஒருவராகனெடை தின்னவேண்டும். இதுவயிற்றுவலி சிலேத்தும சு ரங்கள் வயிற்றிலுள்ள மாசுகள் இவ்வகளை நீக்கும் சக்கீர் என்பதுலகு.

## குர்சேகஷ்கஷ்.

போஸ்த்துக்காய் கசகசா வகைக்கு வராகனெடை கO குலேலா லா வராகனிடை-ரு பஸாரில்பஞ்சு வராகனெடை-ரு அதிமதுரப்பால் கிஷாஷ்தா வகைக்கு வராகனெடை-உ விளாம்பிசின் வாதுமைப்பி சின் வகைக்கு வராகனெடை-க லவங்கப்பட்டை வராகனெடை-½ இவைகளைச்சேர்த்து கித்மிவிரையை யூறவைத்து சலத்திலரைத்துவட கஞ்செய்து நிழலிலுலர்த்திவைத்துக்கொண்டுவேளைக்கொருவராகனெ

டை தின்னவேண்டும் இது சலதோஷம் மார்ச்சளி குறற்கம்மல் இருமல் இரைப்புமுதலிய சகல மூச்சுவியாதிகள் விலாநோய் மார்படைப்பு இவைகளை நீக்கும்.

## சூபேலிகந்திரி.

கோழிக்கீரைவிரை ஊதேக்காம் ஹீல் அஸாரூண் றாமிமஸ்தகி சூரத்துக் கடுக்காய்த்தோல் பிறஞ்சுமிஷ்க் நார்மிஷ்க் ஜீரேகிர்மானி லவங்கப்பட்டை தவாலா மிளகுசுக்கு ஜாதிக்காய் ஏலக்காய் கர்ப்பூரம் மாதுளம்விரை வகைக்கு வராகனெடை-உ அம்பர் கஸ்தூரி வராகனிடை-க கற்கண்டு பலம் உக-இவைகளைச் சூரணித்துச் சேர்த்துவைத்துக்கொண்டு, வேளைக்கு இரண்டுவராகனிடை தின்னவேண்டும் இது தீனிப்பைக்குப் பலங்கொடுக்கும் காந்தியைத்தரும் சீரணசத்தியை வளர்க்கும், சந்தோஷத்தையுண்டாக்கும் அனலையடக்கும், பயம் சந்தேகம் மறதி வாய்நாற்றம் தேகநாற்றம் இவைகளை நீக்கும் (சூவெண்பது சூரணம்.)

## சூபேதின்.

இஸ்போஹோல்விரை திருநீற்றுப்பச்சை விரை கோழிக்கீரை விரை நிஷாஷ்தா வறுத்தவிளாம்பிசின் குலேஅர்மனி மூங்கிலுப்பு வறுத்தசுக்கான்கீரை விரை இவைகளைச் சரியிடையாகச் சேர்த்து வைத்துக்கொண்டு வேளைக்கு ஒருவராகனிடைமுதல் இரண்டுவராகனெடைவரையிற் சாப்பிடவேண்டும் இது பித்தபேதிகளையும் இரத்தக்கழிச்சலையும் சீக்கிரத்தில் நிறுத்தும்.

## சூபேரேவந்து.

ரேவல்சீனி வராகனெடை-உ ஹப்பேபல்சான் அகிற்கட்டை பிஸ்தாக்கொட்டையின் மேலோடு லவங்கம் பன்னீர்ப்பூ கொத்துமல்லி சோம்பு வகைக்கு வராகனிடை-க இவைகளைச் சூரணித்துச்சேர்த்து வைததுக்கொண்டு காலையில் மூன்றுபணவிடை சாப்பிட வேண்டும் இது பித்தசுரங்கள் வாதசுரங்கள் நீராதபழஞ்சுரங்கள் வீக்கம் நீர்க்கோவை இவைகளை நீக்கும்.

## சூபேகாக்நஜ்.

பசுவின்பால் வேகவைத் துலர்த்திய யானை நெருஞ்சில் வராகனிடை-கஉ கசகசா வறுத்தகட்லை வகைச்கு வராகனிடை-ரு குரோசானியோமம் நிஷாஷதா எள் காசினிவிரை கிலேஅர்மனி தாதுமாதுளம்பூ வகைக்கு வராகனிடை-க சஹருபா மூங்கிலுப்பு முள்ளங்கிவிரைவகைக்கு வராகனிடை-½ தம்முல் அகவயின் குங்குமப்பூ வகைக்கு

வராகனிடை-வ காக்னஜ் வராகனிடை-௪ இவைகளுக் காலெடை வெள்ளைச்சருக்கரை இவைகளைச் சூரணித்துச் சேர்த்து, வேளைக்கு அரை தொலா சாப்பிடவேண்டும் இது நீர்ச்சுருக்கு பிரமியம் இவைகளை நீக்கும்.

## அனோஷ்தாரு.

பன்னீர்ப்பூ வராகனிடை-௬ கோரைக்கிழங்கு வராகனிடை-௫ அஸாருன் சடாமாஞ்சில் றாமிமஸ்தகி லவங்கம் வகைக்குவராகனிடை-௩ தாளிசபத்திரி குங்குமப்பூ கோழிக்கீரை ஏலக்காய் ஏலரிசி சாதிக்காய் சாதிப்பத்திரி வகைக்கு வராகனிடை-௨ பாலிற் சுத்திசெய்த நெல்லிமுள்ளி பலம்-௨௪-தேன் பலம்-௭௨ சரக்குகளை வெயிலிலுலர்த்தி வத்திரகாயஞ்செய்து, தேனைக்காய்ச்சி நுரையை எடுத்துவிட்டு, மேற்படி சூரணத்தைச் சேர்த்து, லேகியபதமாய்க் கிளறி வைத்துக்கொண்டு, வேளைக்கிரண்டு கழஞ்சிடை போஜனத்திற்கு முன்னுவது பின்னுவது சாப்பிடவேண்டும் அன்றியும் இம்முறையில் பாதுரஞ்சுபோயா லவங்கப்பத்திரி துளையிடாத முத்து வகைக்கு வராகனிடை-௨ சேர்ப்பாருமுண்டு இது தலைசூளை இருதயம் ஈரல் குண்டிக்கா இவைகளுக்குப் பலங்கொடுக்கும், கிப்கான் என்னு மீரல் குண்டிக்கா இவைகளுக்குப் பலங்கொடுக்கும், கிப்கான் என்னும் உன்மத்த ரோகத்தைத் தீர்க்கும், சந்தோஷத்தை யுண்டாக்கும் மேனி கொடுக்கும் வாய்நாற்றம் வியர்வை நாற்றம் இவைகளை நீக்கும், தீபனத்தைத்தரும்.

## மஹருனே பலாஸிபா.

சுக்கு திப்பிலி மிளகு லவங்கப்பட்டை நெல்லிமுள்ளி தான்றிக்காய்த்தோல், சித்திரமூலம் ஜாவங்தே முத்ஜரா சாலன்மிசரி அரக்கேபா பூனுமகேஸ்தொக் மேஷல்க்கூஜா முத்தினதேங்காய் வகைக்கு வராகனிடை-௨ தொக்மேபாபூனு வராகனிடை-௫ திராட்சிப்பழம் வராகனிடை-௩௰ தேன் பலம்-௰அ சரக்குகளை முன்போல் வத்திரகாயஞ் செய்து, தேனை முன்போற் காய்ச்சிச் சேர்த்து, அரக்கேபா பூனுவென்கிற சாமந்திப்பூத் திராவகத்தையுஞ் சேர்த்துப் பதமாகக்கிளறி வைத்துக்கொண்டு வேளைக்கு ஒருவராக னிடைமுத லிரண்டுவராக னிடைவரையிற் சாப்பிடவேண்டும். இது தீனிப்பைக்கு வலிமை தரும் தீபனத்தை வளர்க்கும் சிலேத்தும நீரை யிறக்கும் நீரைப்பெருக்கும் இளைப்புநோய் குண்டிக்காய்நோய் கீல்நோய் இவைகளை நீக்கும் இருதயத்திற்கு வலிமைதரும் தாதுபுஷ்டியைத் தரும் பற்களை யிறுக்கும் தைரி

யத்தையும் உற்சாகத்தையு முண்டாக்கும் மேனிதரும் மறதியைநீக்கும் மூப்பருக்கு மிகவனுகூலத்தைத்தரும் வாய்நாற்றத்தை மாற்றும் இம் மருந்தை அமிர்தமென்று சொல்லப்படும் அன்றியும் இம் முறையில் குந்திரிக்கம் எள் வாதுமைப்பருப்பு வகைக்கு வராகனிடை-ம சுத்தி செய்த அரப்பொடி அல் ஜாா ஜாதிக்காய் ஜாதிபத்திரி வகைக்கு வராக னிடை-க சேர்ப்பாருமுண்டு.

## மஹருனே புசூரி.

தொக்மேகஜர் தொக்மேஷல்கம் வெங்காயவிரை முள்ளங்கி விரை தொக்மே ஹல்லியூன் சதகுப்பை தொக்மே ஜர்ஜீர் ஹப்பேஞ்ஞா பாகி பார் ஹப்பூஜலம் ஹப்புல்குல் போஜீதான் கிஸ்த்தேசல்லு சுக்குலிபேத் திப்பிலி காயம் ஹரப் இவைகள் சமவிடை இவைகளனைத்திற்கு மூன்றிடை தேன் சரக்குகளை முன்போல் வத்திரகாயஞ்செய்து தேனை முன்போற் காய்ச்சிச் சேர்த்து லேகிய பதமாக கிளறி வைத்துக் கொண்டு, வேளைக்கு $\frac{1}{2}$-வராக னிடைமுதல் க-வராக னிடைவரையிற் சாப்பிடவேண்டும். இது அதிக சூட்டைப்பற்றிய தாது நஷ்டத்தை நீக்கித் தாதுபுஷ்டியை யுண்டாக்கும் இதை ஹுபூபேகபீர் என்ற லேகி யத்திற்கு பதிலாகச் சாப்பிடலாம்.

## ஜவாரிஷே ஜாலினூஸ்.

சடாமாஞ்சில் பெருலவங்கப்பட்டை லவங்கப்பட்டை சிற்ற ரத்தை லவங்கம் சுக்கு திப்பிலி மிளகு கோரைக்கிழங்கு சூதேபல்ஸான் அஸாரூன் கோஷ்டம் ஜாாயிநா குங்குமப்பூ மவ்ரீத வகைக்கு வராக னிடை-ம றூமிமஸ்தகி வகைக்கு வராகனிடை-ரு இவைகளனைத்திற்கு மூன்றிடை வெள்ளைச்சருக்கரைப் சரக்குகளை முன்போல் வத்திர காயஞ்செய்து சருக்கரைப் பாகுகாய்ச்சிப் பதமாக வரும்போது மேற் படி சூரணத்தைச் சேர்த்துப் பதமாகக் கிளறி வைத்துக்கொண்டு, வேளைக்கு வராகனிடை உ-முதல் வராகனிடை ரு-வரையிற் போசனத் திற்கு முன்னுவது பின்னுவது சாப்பிடவேண்டும், இது உள்ளுறுப் புகளுக்கும் பலங்கொடுக்கும், வாய்நாற்றத்தை மாற்றும் காற்றைக் கண்டிக்கும், ஊத்தாம்பிள்ளையின் குளிர்ச்சியா லுண்டாகும் நீர்ப் பெருக்கைமாற்றும், தாதுபுஷ்டியைத்தரும், பயித்தியங்களை நீக்கும், குளிர்ச்சியைப்பற்றிய தலைவலி இருமலை நீக்கும், மூலநோய் பாதநோய் கால்விரற்களி னிசிவு படைகள் கல்லடைப்பு முதலிய நீர்த்தாரை

ரோகங்க ளிவைகளை நீக்கும் மயிரை வெளுக்காமற் காக்கும் இருபத்தொருநாள் சாப்பிடவேண்டும்.

## ஜவாரிஷே உத்திரிஜ.

கொடிமாதுளம் பழத்தோல் வராகனிடை-கரு ஜாதிக்காய் கோழிக்கீரை விரை லவங்கம் சுக்கு சிற்றரத்தை மிளகு வகைக்கு வராகனிடை-½ கஸ்தூரி வராகனிடை-வ இவைகளுக்கு மூன்றிடை தேன் சரக்குகளை வஸ்திரகாயஞ் செய்து தேனைமுன்போற் காய்ச்சிச் சேர்த்துப் பதமாய்க் கிளறிவைத்துக்கொண்டு வேளைக்கு வராகனிடை-½ முதல் வராகனிடை க-வரையிற் சாப்பிட வேண்டும், இது தீனிப்பைக்குப் பலங்கொடுக்கும், தீபனத்தைவளர்க்கும், வாய்நாற்றத்தை மாற்றி வாசனையை யுண்டாக்கும், வயிற்றுநோயைத் தீர்க்கும்.

## ஜலூக்கேகஷ்.

கசகசா போஸ்டுகாய் வகைக்கு வராகனிடை-கரு இவ்விரண்டையுஞ் சேர்த்து, நாலுபங்குசலம்விட்டு, ஒருபங்காய்க் கஷாயமிறக்கி அதில் ஒரு ராத்தல் தேன்சேர்த்துக் காய்ச்சி, நீர்சுண்டி வரும்போது, வாதுமைப்பருப்பு சுரைப்பருப்பு அதிமதுரப்பால் வகைக்கு வராகனிடை-ரு இவைகளைப் பன்னீரிலரைத்துச் சேர்த்துக் கூழ்போற் கிளறிவைத்துக்கொண்டு, வேளைக்கு ஒரு தொலாமுத லிரண்டுதொலாவரையிற் சாப்பிடவேண்டும், இது மார்பின்புண் குடலின் புண் இவைகளையாற்றும் இரத்த வாந்தியை நிறுத்தும். குளிர்ச்சியைப்பற்றிய இருமலை நீக்கும்

## ஜர் ஊ னி.

செகப்பு முள்ளங்கிவிரை காரெட்டுவிரை கர்பிஸ் சதகுப்பை ஓமம் சோம்பு காபிசின்வேர் வெள்ளரிவிரை முலாம்விரை வகைக்கு வராகனிடை-ரு அக்கரகாரம் கோழிக்கீரைவிரை றூமிமஸ்தகி அகிற்கட்டை வகைக்கு வராகனிடை-ரு சாதிபத்திரி லவங்கம் திப்பிலிமூலம் வகைக்கு வராகனிடை-உ அம்பர் வராகனிடை-க இவைகளைத்திற்கு மூன்றிடைதேன் சரக்குகளை வஸ்திரகாயஞ்செய்து, தேனை முன்போற் காய்ச்சிச் சேர்த்துப் பதமாய்க்கிளறி வைத்துக்கொண்டு, வேளைக்கு வராகனிடை-க முதல்வராகனிடை-உ வரையிற் சாப்பிட வேண்டும், இது இடுப்பிற்கும் குண்டிக்காய்க்கும் தீனிப்பைக்கும் வலி

மைதரும், சிலேத்தும நீரைப்போக்கும், வாய்காற்றத்தை மாற்றும், வாய் நீரொழுக்கை யடக்கும், தாற்றைக்கண்டிக்கும், ஊத்தாம்பிள்ளை யிலுண்டாகிற மணலைநீக்கும், விந்தூறச்செய்யும்.

## பஞ்ஜூஷ்.

காபுலிக்கடுக்காய் மஞ்சட்கடுக்காய் கருங்கடுக்காய் தான்றிக்காய் இவைகளின் தோல் நெல்லிமுள்ளி சித்திரமூலம் சடாமாஞ்சில் சுக்கு மிளகு கோரைக்கிழங்கு வகைக்குப்பலம்-க சுத்தி செய்த அரப்பொடி பலம்-ம இவைகளுக்கு மூன்றிடைதேன் சரக்குகளை வஸ்திரகாயஞ்செய்து, முன்போல் தேனைக்காய்ச்சி சேர்த்துக்கிளறி வைத்துக்கொண்டு வேளைக்கு வராகனிடை-க முதல்வராகனிடை ந-வரையிற் சாப்பிடவேண்டும், அன்றியும் அரப்பொடிக்குப் பதிலாக இரும்பைக் காய்ச்சி யடிக்கும்போது உதிருகின்ற பொடியைச் சேர்ப்பாருமுண்டு, இது தீனிப்பைக்கு வலிமைதரும், மூலரோகத்தைநீக்கும், தாதுபுஷ்டியைத் தரும். மேனியையுண்டாக்கும். சுக்கிலம்விரைவில் வெளிப்படுத்துவதை நிறுத்தும்.

## ஹப்பே அம்பர்.

அம்பர் குங்குமப்பூ ஜின்னுக்கட்டி கஸ்தூரி லவங்கம் சிற்றரத்தை சாலன்மிஸரி றாமிமஸ்தகி இவைகளைச் சமவிடையாகச் சேர்த்துச்சலத்திலரைத்து, மிளகளவுமாத்திரைகள் செய்து, நிழலிலுலர்த்திவைத்துக் கொள்ள வேண்டும்-இதைத் தின்பதாலும் வாயிலடக்குவதாலும் லேபனமும் சுக்கில ஸ்தம்பனமு முண்டாகும் புணர்ச்சி நீடிக்கும், வாய்க்கு வாசனையைத்தரும், நல்லுருசியுள்ளதாக விருக்கும்.

## ஹப்பேஜெதுவார்.

ஜெதுவார் மாயேஷாதரே அராபிலவங்கம் பூஸ்பாஸ் வகைக்கு வராகனிடை-உ ஜாதிக்காய் சிற்றரத்தை றாமிடீஸ்தகி சாலன்மிசரிகிச்சிலிக்கிழங்கு கர்பிஸ் வகைக்கு வராகனிடை-ச இவைகளைப் பன்னீரிலரைத்துக் கடலையளவு மாத்திரைசெய்து, நிழலுலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

## இதுவுமது.

சிற்றரத்தை குங்குமப்பூ மஸ்தகி குந்திரிக்கம் கிச்சிலிக்கிழங்கு, சடாமாஞ்சில் திப்பிலிலவங்கப்பட்டை வெள்ளைமிளகு தாவாலா வால்மிளகு ஜாதிபத்திரி சோம்பு ஜாதிக்காய் சாலன்மிசரி அனிசூன் அஸா

ரூன் குலேசுருக்கி வகைக்கு வராகனிடை-க அபினிவராகனிடை-உ ஜெதுவார்கள்தூரி அம்பர் வகைக்கு டாங்கு-க தங்கரேக்கு-ரு வெள்ளிரேக்கு-ம இவைகளைப் பன்னீரிலரைத்து, கடலைப்பிரமாண மாத்திரைசெய்து, நிழலுலர்த்திவைத்துக் கொள்ளவேண்டும், இவைகளைத் தின்றாலும் வாயிலடக்கினாலும் லேபனமும் சுக்கிலத் தம்பனமு முண்டாகும், தபனமு முண்டாகும் தாதுபுஷ்டி யுண்டாகும் சலதோஷம் நீங்கும்.

## மூபரேதிக்ல்குஷா.

துளையிடா தமுத்து மூங்கிலுப்பு கஹ்ருபா காவ்ஜபான் கிலேஅர்மனி வகைக்குவராகனெடை-உ கஸ்தூரி வராகனெடை-உ இவைகளுக்கு மூன்றிடை தேன் முத்தைப் பன்னீரிலரைத்துக்கொண்டு, சரக்குகளைவஸ்திரகாயஞ்செய்து, தேனைமுன்பேரற்காய்ச்சிச்சேர்த்துக் கஸ்தூரியையுஞ் சேர்த்துப்பதமாய்க் கிளறி வைத்துக்கொண்டு வேளைக்குக்கழஞ்சு-க முதல்-உ வரையிற்றின்னவேண்டும். இது இருதயத்திற்குவலிமைதரும்-அதிககுளிர்ச்சிகொழுமையைப்பற்றியதாது நஷ்டந்தீரும் சூட்டைப்பற்றிய உன்மத்தந்தீரும்.

## தாவுல்கவுக்.

உலர்ந்த யானைநெருஞ்சிற்காயைப் பச்சையானை நெருஞ்சிற் காய்ச்சாற்றில் நாலைந்துவிசை யூறவைத் துலர்த்திச் சூரணித்துப் பாலுஞ் சருக்கரையுஞ் சேர்த்து, லேகியமாகக் கிளறிச் சாப்பிட்டுவரச்சுக்கிலம் பெருகும்.

## முறப்பா.

சாஞ்சான் ஆப்பில்பழம் காரட்டுக்கிழங்கு நிலப்பனைக்கிழங்கு இவைகளிலொன்றைத் தோலைச்சீவிப்போட்டு, ஊசியாற்குத்திச் சலத்தில் அவிய வேகவைத்துச் சலத்தையிறுத்துவிட்டுச் சருக்கரைப்பாகிற்சேர்த்துப் பக்குவமாய்க் காய்ச்சிவைத்துக்கொண்டு சாப்பிடத் தாதுபுஷ்டியுண்டாகும்.

## கமிரேமாவாரீத்.

பன்னீரிலரைத்த முத்துதொலம் பொடியாகத்தரித்த கோராப்பட்டுதொலா-ச குலேசுருக்கோழிக்கீரைவிரை வகைக்குதொலா-உ வெ

ள்ளிரேக்கு தங்கரேக்கு வகைக்கு வராகனிடை பாஷா-உ பன்னீர் சேர்-வ கற்கண்டுசேர்-ரு கற்கண்டைப் பாகுகாய்ச்சிப் பதமாகவரும் போது குலேசுருக் கோழிக்கீரைவிரை யிவைகளை ஸ்திரகாயஞ்செய் துசேர்த்து, மேற்படிமுத்தையும் பட்டையுஞ்சேர்த்துக்கிளறிப் பின்பு தங்கரேக்கு வெள்ளிரேக்குகளை ஒவ்வொன்றாய்ச் சேர்த்துப் பின்பு பன்னீரைக் கொஞ்சங்கொஞ்சமாகவிட்டுப் பதமாகக்கிளறி வைத்துக் கொண்டு வேளைக்கு ஒருகழஞ்சுமுதல் இரண்டுகழஞ்சுவரையிற் சாப்பி டவேண்டும். இது ஆற்றும்சத்தியைவளர்க்கும் தீபனத்தையதிகப் படுத்தும், தீனிப்பைக்குப்பலங்கொடுக்கும் தாதுபுஷ்டியைத்தரும் உட் டிணரோகங்களனைத்தையுந் தீர்க்கும்.

☞ (நஜரி) என்னும் சரீரசாத்திரத்திற் சொல்லப்படுகின்ற உடற்கூறு, நாடிப்பரீக்ஷை, மூத்திரப்பரீக்ஷை முதலியவைகளையும் (அமலி) என்னும்ரோக நிதான நூற்களிற் நேசாதிபாதமீறாகச் சொல் லப்பட்ட ரோக நிதானங்களையும் சிகிச்சாக்கிரமங்களையு மிகவறிந்து இ ந்த (பதார்த்தகுணவிளக்க சாரசங்கிரகம்) என்னுஞ்சாத்திரத்திற்சொ ல்லப்பட்ட பதார்த்தங்களுள் ஆகாரபதார்த்தங்களை சதா போசனத்திற் கும் அவுஷதபத்தியங்களுக்கும் உடமையாகித்துக் கொண்டு அவுஷதப தார்த்தங்களை (க்கருபாதீன்) என்னும் அவுஷதவருக்கச் சாத்திரநூற் களிற் சொல்லப்படுகின்ற கிரமப்படி பலவித அவுஷதங்களாகச்செய்து போசனித்து ரோகங்களை நிவர்த்திசெய்து கொள்வதுமன்றி, வயித்தி ய சாத்திரங்களுட் புகலுகின்ற விதிவிலக்குகளை யுணர்ந்து, வழுவாது நடப்பவர்கள் ஆயுள் ஆரோக்கிய சந்தான விருத்திகளையடைந்து இவ் வுலகத்தில் சுகமாக வாழ்வார்கள்.

பதார்த்தகுணவிளக்க சார சங்கிரகம்

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

# பதார்த்தங்களின் வகுப்பு அகதிராதி.

* இவ்வகராதியுள் ஒருபெயருக்கே வேறு பெயர்களும் தமிழ்ப் பெயர்களுக்குப் பாரிசுப்பெயர்களும், பாரிசுபெயர்களுக்குத் தமிழ்ப் பெயர்களும் சிலபெயர்களுக்குப் பொருள்களுமெழுதப்படுகின்றன.


| பெயர். | பக்கம். |
|---|---|
| அ | |
| அரிசிமாவின்ரொட்டி | 25 |
| அண்டங்காக்கைக்கறி | 40 |
| அன்னுசிப்பழம் | 58 |
| அத்திப்பழம் | 62 |
| அவரைக்காய் | 63 |
| அத்திக்காய் | 68 |
| அத்திப்பிஞ்சு | ,, |
| அருநெல்லிக்காய் | ,, |
| அறுகீரை | 72 |
| அத்திக்கீரை | 75 |
| அக்ரோட்டென்னும்பருப்பு | 79 |
| அகிற்கட்டை | 106 |
| அகலீ ஹுல்மூலுக் | ,, |
| அக்கரகாரம் | ,, |
| அசாறான் | 107 |
| அஷக் | ,, |
| அதிமதுரம் | 108 |
| அப்ஸந்தீன் | ,, |
| அபினி | 109 |
| அப்திமூன் | ,, |
| அப்பிரேகம் | 111 |
| அம்பர்-மீனம்பர் | 112 |
| அரத்தை | ,, |
| அரக்கு | 113 |
| அரிதாரம் அல்லது இாளகம் | ,, |
| அமுக்கிராக்கிழங்கு | 170 |
| அகீக் இதுவே எமனியென்னு மிரத்தினம் | 179 |
| அழுகண்ணி-றாதந்தி | 211 |
| அட்டைவிடுதல் | 237 |
| அசாத்தியக்குறிகள் | 240 |
| அதிகச்சூட்டைப்பற்றிய தாது நஷ்டக்குறி | 246 |
| அதிகுளிர்ச்சி வறட்சியைப்பற்றிய தாதுநஷ்டக்குறி | ,, |
| அதிகுளிர்ச்சி கொழுமையைப்பற்றிய தாதுநஷ்டக்குறி | 247 |
| அதிகரித்தசூடு வறட்சியைப்பற்றிய தாதுநஷ்டக்குறி | 246 |
| அவுஷதமுறைகள் | 248 |
| அரக்கேகஜர் | 251 |
| அரக்கேசோப்சீனி | 252 |
| அனேஷ்தாரு | 255 |
| ஆ | |
| ஆட்டினிறைச்சி | 29 |
| ஆட்டின்தலையிறைச்சி | ,, |
| ஆட்டின்தலைமூளை | ,, |
| ஆட்டின்கண்ணிறைச்சி | ,, |
| ஆட்டின்கழுத்திறைச்சி | ,, |
| ஆட்டின்மார்பிறைச்சி | 30 |
| ஆட்டின் இருதயகமலத்தினிறை | ,, |
| ஆட்டின் நுரையீரல் | ,, |
| ஆட்டீரல் | ,, |
| ஆட்டின்நாவிறைச்சி | ,, |
| ஆட்டின்மண்ணீரல் | 31 |
| ஆட்டின்குடல் | ,, |
| ஆட்டின்கொழுப்புக்குடல் | ,, |

| பெயர். | பக்கம் |
|---|---|
| ஆட்டின்குண்றிக்காய் | 31 |
| ஆட்டின்கொழுப்பு | ,, |
| ஆட்டின்பீசன் | 32 |
| ஆட்டின்கால்கள் | ,, |
| ஆட்டுக்குட்டிஇறைச்சி | 34 |
| ஆட்டெலும்புகுளிருச்குழ்லே | 40 |
| ஆமைமுட்டை | 42 |
| ஆட்டெலும்பிரசத்தின்கஞ்சி | 43 |
| ஆட்டுகாலினிரசத்திற்காய்ச்சிய கஞ்சி | 44 |
| ஆட்டுதலையினிரசத்திற்காய்ச்சிய | ,, |
| ஆட்டின்குண்டிக்காயினிரசத்திற்காய்ச்சிய கஞ்சி | ,, |
| ஆகாப்பசுவின்பாலின்குணம் | 47 |
| ஆண்ப்பால் | 50 |
| ஆகாயகக்கரிக்காய் | 63 |
| ஆளிவிரை | 82 |
| ஆட்டின்பொரித்தஇறைச்சி | 88 |
| ஆற்றுநீர் | 91 |
| ஆலுவென்னும்பழத்தின் பான | 9 |
| ஆமணக்கு | 114 |
| ஆலூபுகாஹாரு | ,, |
| ஆற்றுத்தும்மட்டிக்காய் | 115 |
| ஆப்னூஸ் அல்லது கருங்காலி | ,, |
| ஆல் ஒருவிதப்பூண்டு | ,, |
| ஆற்றுநண்டு வயல்நண்டு | 164 |

இ

| பெயர். | பக்கம் |
|---|---|
| இராப்பசுவின்பாற்குணம் | 48 |
| இனிப்புக்கொடிமுந்திரிப்பழம் | 52 |
| இனிப்புஇலந்தைப்பழம் | 54 |
| இனிப்புமாம்பழம் | 55 |
| இனிப்புநாவற்பழம் | ,, |
| இனிப்புநார்த்தம்பழம் | 56 |
| இனிப்புசேப்புப்பழம் | 57 |
| இனிப்புக்கமலிளிம்பூச்சிப்பு | 58 |
| இனிப்புமாதுளம்பழம் | 59 |
| இனிப்புஅம்றாதுப்பழம் | ,, |
| இனிப்புப்பிசியென்னும்பழம் | 60 |
| இஸ்போஹோல்விரை | 83 |
| இஞ்சி | 87 |
| இறைச்சிகளின்ஷோர்பா | ,, |
| இனிப்புமாதுளம்பழத்தின்பானம் | 93 |
| இஸ்பாஞ்ஜி | 116 |
| இஞ்சி | , |
| இரும்பு | 164 |
| இரத்தினவகை | 178 |
| இரசகற்பூரம் | 199 |
| இரசத்தின்விகற்பங்கள் சாந்தப்படுத்தும் பதார்த்தங்கள் | 225 |
| இரசத்தைப்பக்குவப்படுத்தும் கஷாயம் | 226 |
| இலகுபேதிபதார்த்தங்கள் | 228 |
| இலகுபேதிமுறைகள் | ,, |
| இரசத்தைநீக்கும் பேதிபதார்த்தங்கள் | 230 |
| இரசத்தைப்பற்றிய சுரங்களுக்கும்பழைய இருமலுக்குங்கொடுக்கும் பேதிமுறை | 231 |
| இரத்தம் அல்லது பித்தசூட்டிகுறி | 238 |
| இரத்தப்பெருக்காலுண்டான சூட்டின்குறி | ,, |
| இரத்தக்கொழுமையின்குறி | 239 |
| இரசம் அல்லது வண்டலின்குளிர்ச்சியின்குறி | ,, |
| இரசப்பெருக்கினாலுண்டான குளிர்ச்சியின்குறி | ,, |
| இருதயத்திற்கு வலிமைகொடுக்கும்பதார்த்தங்கள் | 241 |
| இருதயத்தின் பலவீனத்தைப்றியதாதுநஷ்டக்குறி | 244 |

ஈ

| பெயர். | பக்கம் |
|---|---|
| ஈரலுக்கு வலிமைகொடுக்கும் பதார்த்தங்கள் | 241 |
| ஈரலின் பலவீனத்தைப்பற்றிய தாதுநஷ்டம் | 245 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| **உ** | |
| உழுந்துமாவின்றொட்டி | 25 |
| உடும்பிறைச்சி | 35 |
| உள்ளான்கறி | 38 |
| உலர்ந்தசீமையத்திப்பழம் | 53 |
| உலர்ந்தபேரீச்சம்பழம் | ,, |
| உளுந்து | 76 |
| உருளைக்கிழங்கு | 85 |
| உப்பிட்டுலர்ந்த யிறைச்சியின் பொரியல் | 88 |
| உப்பிட்டுப்பொரித்தகருவாடு | 89 |
| உஸ்துகுதூஸ் | 116 |
| உப்பு | 117 |
| உரத்தின்பெருக்கையும் நீர்த்தாரையையுஞ் சாந்தப்படுத்தும் பதார்த்தங்கள் | 224 |
| உதிரத்தடிப்பையும் அழுகலையுஞ் சாந்தப்படுத்தும்பதார்த்தங்கள் | ,, |
| உதிரச்சிக்கலைஎடுக்கும் பதார்த்தங்கள் | 240 |
| **ஊ** | |
| ஊர்க்குருவிக்கறி | 37 |
| ஊர்க்குருவிமுட்டை | 41 |
| ஊற்றுநீர் | 91 |
| ஊமத்தம்வித்து | 118 |
| ஊர்க்குருவி | 223 |
| **எ** | |
| எருமைமாட்டிறைச்சி | 33 |
| எருமைப்பால் | 48 |
| எலுமிச்சம்பழம் | 56 |
| எள்ளு | 78 |
| எலுமிச்சம்பழத்தின்பானம் | 96 |
| எள்ளுத்தைலம் | 98 |
| எட்டிக்கொட்டை | 119 |
| எருக்கிலை | 120 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| **ஏ** | |
| ஏலக்காய் | 120 |
| ஏலரிசி | 121 |
| **ஒ** | |
| ஒட்டை இறைச்சி | 34 |
| ஒட்டைப்பால் | 49 |
| **ஓ** | |
| ஓமம் | 121 |
| **க** | |
| கடலைமாவின்றொட்டி | 25 |
| கம்புமாவின்றொட்டி | 26 |
| கப்பு | 28 |
| கழுதையிறைச்சி | 34 |
| கலைமானிறைச்சி | 35 |
| கடம்பையிறைச்சி | ,, |
| கருங்கோழிஇறைச்சி | 36 |
| கவுதாரிக்கறி | 37 |
| கருங்குருவிக்கறி | 38 |
| கருங்கொக்குக்கறி | 39 |
| கபாப்என்கிறபொரித்தஇறைச்சி | 40 |
| கருமைசெம்மை மாதர்களுன் முலைப்பால்குணம் | 47 |
| கழுதைப்பால் | 49 |
| களாப்பழம் | 61 |
| கல்யாணப்பூஷணிக்காய் | 62 |
| கக்கரிக்காய் | 63 |
| கண்டங்கத்தரிக்காய் | ,, |
| கருவேப்பிலை | 75 |
| கடலை | 77 |
| கசப்புவாதுமைப்பருப்பு | 78 |
| கருப்புகசகசா | 80 |
| கருவாத்துக்கிழங்கு | 86 |
| கரிநெருப்பில் வறளச்செய்தஇறைச்சி | 89 |
| கருணைக்கிழங்கு | 85 |
| கடல்நீர் | 92 |
| கம்பிளிப்பூச்சிப்பழத்தின்பான | 94 |
| கசகசாவின்பானம் | ,, |

| பெயர். | பக்கம். |
|---|---|
| கசகசாவின்றைலம் | 97 |
| களிப்பாக்கு | 100 |
| கரும்பு | ,, |
| கற்கண்டு | 102 |
| கருப்பஞ்சாற்றினிறக்குஞ் சாராயம் | 164 |
| கஞ்சா | 121 |
| கடுக்கு | 122 |
| கடுக்காய்களின்பொது | 123 |
| கடுகுரோகணி | 126 |
| கண்டங்கத்தரி | ,, |
| காரியபோளம் | 127 |
| கருஞ்சீரகம் | 128 |
| கர்பிஷ்யிதுவே அஜூமுத் | 129 |
| கள்ளிகளின்பொது | 132 |
| கற்பூரம் | 134 |
| கலைமான்கொம்பு | 135 |
| கஹருபா | 138 |
| கழற்காய் | 167 |
| கத்தக்காம்பு | 168 |
| காசினுர் என்னும்மரம் | 212 |
| கற்களின்வகை | 217 |
| கலைமான் | 221 |
| கண்ணொளியை யதிகப்படுத்தும் பார்த்தங்கள் | 243 |
| கண்ணொளியைக் குறைக்கும் பதார்த்தங்கள் | ,, |
| கமிரேமர்வாரீத் | 259 |
| **கா** | |
| கார்ப்பச்சரிசிச்சாதம் | 22 |
| கானங்கோழிக்கறி | 36 |
| காடைக்கறி | 37 |
| காக்கைமுட்டை | 42 |
| காராம்பசுவின்பாற்குணம் | 47 |
| காய்களின்வகை | 62 |
| காட்டுப்பாகற்காய் | 65 |
| காட்டுச்சல்லாதுக்கீரை | 70 |
| காப்பிரிசல்லாதுக்கீரை | ,, |

| பெயர். | பக்கம். |
|---|---|
| காயத்தானியவகை | 75 |
| காப்பிக்கொட்டை | ,, |
| காபுலிக்கடுக்காய் | 125 |
| காந்தம் | 130 |
| காளான் | ,, |
| காக்குநஜ் | 135 |
| காடி | ,, |
| காரீக்கூன் | 136 |
| காரீயம் | ,, |
| கர்வி | 137 |
| காவுஜபான் | 138 |
| காட்டுவெங்காயம் அல்லதுநரிவெங்காயம் | 139 |
| **கி** | |
| கிச்சிடிச்சாதம் | 23 |
| கிஷ்முஷப்பழம் | 53 |
| கிணற்றுநீர் | 91 |
| கித்தாமிஇதுவேசீமைத்துத்தி | 131 |
| கிஜரேஅமாம்இதுவேபுறுக்க | 221 |
| கிஜருன்னுர் | 220 |
| கிஜரேமஸான | 221 |
| கிஜருஹகத்இதுவேமீன்கல் | ,, |
| **கு** | |
| குறம்பாட்டிறைச்சி | 33 |
| குதிரையிறைச்சி | 34 |
| குயிற்கறி | 39 |
| குதிரைப்பால் | 49 |
| குள்ளப்புடலங்காய் | 64 |
| குத்துவசலைக்கீரை | 72 |
| குளிர்ந்தநீர் | 92 |
| குபாசி, இதுவேசிறுதுத்தி | 131 |
| குக்கில் | 137 |
| குங்கிலியம் | 139 |
| குசும்பாப்பூ | ,, |
| குங்குமப்பூ | 140 |
| குந்திரிக்கம் | 141 |
| குன்மத்திற்குஞ்சுரத்திற்குந்தி | 234 |
| குளிர்ச்சியானநீர்பேதிபதார் | 236 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| குண்டிக்காயின் பலவீனத்தைப் பற்றியதாதுஸஷ்டக்குறி | 245 |
| குர்சேதபாஷீரேமுஜேலயன் | 252 |
| குர்சேகாபூர் | 253 |
| குர்சேகுலேகபீர் | ,, |
| குர் சேகுசேகீர் | ,, |
| குர்சேகஷ்கஷ் | ,, |
| கே | |
| கேழ்வரகுமாவின்றெட்டி | 26 |
| கேழ்வரகு | 28 |
| கொ | |
| கொடியாட்டினிறைச்சி | 32 |
| கொசுவுள்ளானகறி | 38 |
| கொக்குக்கறி | 39 |
| கொழுத்தஆட்டிறைச்சியின் இரசத்தில்காச்சியகஞ்சி | 45 |
| கொள்ளுக்கஞ்சி | ,, |
| கொய்யாப்பழம் | 56 |
| கொடிமாதுளம்பழம் | 57 |
| கொட்டாஞ்சிப்பழம் | 61 |
| கொம்புப்பாவற்காய் | 65 |
| கொத்தவரைக்காய் | 66 |
| கொத்தமல்லிக்கீரை | 70 |
| கொடிவசளைக்கீரை | 72 |
| கொள்ளுப்பருப்பு | 77 |
| கொட்டைப்பாக்கு | 99 |
| கொடிமுந்திரிப்பழச்சாராயம் | 104 |
| கொட்டைக்கரந்தை | 141 |
| கொடிவேலி | 142 |
| கொத்துமல்லிவிதை | ,, |
| கொய்யாக்ச்ம்என்னுமரம் | 206 |
| கோ | |
| கோதுமைமாவின்றெட்டி | 24 |
| கோதுமைத்தவிட்டின்றெட்டி | ,, |
| கோதுமைப்புளித்தறெட்டி | ,, |
| கோதுமைநொய்றெட்டி | 25 |
| கோதுமை | 26 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| கோவேறுகழுதை யிறைச்சியின் குணம் | 34 |
| கோழிக்குஞ்சு | 36 |
| கோரையுள்ளான்கறி | 38 |
| கோழிமுட்டை | 41 |
| கோழிக்குஞ்சுஇரசத்தின்கஞ்சி | 44 |
| கோவைப்பழம் | 61 |
| கோவிசுக்கீரை | 70 |
| கோழிக்கீரை அல்லதுபருப்புக்கீரை | 71 |
| கோட்டம் | 143 |
| கோரைக்கிழங்கு | ,, |
| கோரோசனை கேள | 207 |
| கௌலா என்னும்பழம் | 61 |
| ச | |
| சம்பாபச்சையரிசிச்சாதம் | 27 |
| சம்பாநெல் | 22 |
| சம்பங்கோழிக்கறி | 36 |
| சம்பா அரிசிக்கஞ்சி | 42 |
| சர்க்கரைகும்மட்டிப்பழம் | 60 |
| சல்லாதுக்கீரை | 70 |
| சதகுப்பைக்கீரை | 73 |
| சதாபிலே | ,, |
| சல்லாதுவிரை | 81 |
| சமைதத ஆட்டிறைச்சி | 89 |
| சந்தனபானம் | 95 |
| சதாபிலேயின்பானம் | ,, |
| சரிகைவஸ்திரம் | 89 |
| சருக்கரை | 101 |
| சருமுனையா அல்லதுமசூழுத | 143 |
| சடாமாஞ்சில் | 144 |
| சதகுப்பை | ,, |
| சந்தனம் | 145 |
| சரக்கொன்றைப்புளி | ,, |
| சவுக்காரம் | 146 |
| சவ்வரிசி | ,, |
| சவ்வாது | ,, |
| சன்னலவங்கப்பட்டை | 147 |

| பெயர். | பக்கம் |
|---|---|
| **சா** | |
| சாமை | 25 |
| சாதிலிங்கம் | 148 |
| சாம்பிராணி | 168 |
| சாஸ்பிராஸ் | 209 |
| சாத்தியக்குறிகள் | 240 |
| **சி** | |
| சிட்டுக்குறிவிக்கறி | 38 |
| சிற்றீச்சம்பழம் | 58 |
| சிறுவள்ளிக்கிழங்கு | 86 |
| சிறுகுழந்தைகளுக்கு மூப்பருக்கு ந்திரி | 234 |
| சிகஞ்சபீனேசாதா | 248 |
| சிகஞ்சபீனே அஸலி | ,, |
| சிகிஞ்சபீனேபுசூரிபாரீத் | ,, |
| சிகிஞ்சபீனேபுசூரி | 249 |
| **சீ** | |
| சீமையத்திப்பழம் | 52 |
| சீத்தாப்பழம் | 58 |
| சீமையத்திப்பழத்தின்பானம் | 96 |
| சீந்திற்கொடி | 151 |
| சீரகம் | 152 |
| சீனக்காரம் | 153 |
| **சு** | |
| சுரைக்காய் | 62 |
| சுக்கான்கீரை | 72 |
| சுரைவிரை | 81 |
| சுரஞ்சான்மிசரி | 84 |
| சுத்தநீர் | 91 |
| சுக்கான்கீரையின்பானம் | 93 |
| சுரக்காய்வித்தின்தைலம் | 97 |
| சுண்ணாம்பு | 99 |
| சுக்குபீஞ்சு | 154 |
| சுவர்முள்ளங்கிசுவரொட்டி | 206 |
| சுருமாஇதுவேகிலாஞ்சனம் | 176 |
| சுபூபேதிகந்திரி | 254 |
| சுபூபேதின் | ,, |
| சுபூபேரேவந்து | ,, |
| சுபூபேகாக்னஜ் | ,, |
| **சூ** | |
| சூரத்துநிலாவாரை | 150 |
| **செ** | |
| செம்மறியாட்டினிறைச்சி | 32 |
| செம்மறியாட்டுப்பால் | 49 |
| செங்கீரைத்தண்டு | 71 |
| செம்முள்ளங்கி | 86 |
| **சே** | |
| சேவலிறைச்சி | 35 |
| சேமக்கிழங்கு | 85 |
| சேபென்னும்பழத்தின்பானம் | 93 |
| சேங்கொட்டை | 155 |
| **சோ** | |
| சோளமாவின்ரொட்டி | 26 |
| சோளம் | 27 |
| **ட** | |
| டாயில்க்கறி | 39 |
| **த** | |
| தயிர்க்கஞ்சி | 43 |
| தண்டுக்கீரை | 71 |
| தக்காளிமணத்தக்காளி | 196 |
| தம்பலப்பூச்சிஇதுவேஇந்திரபோளம் | 217 |
| தலைமூளைக்கு வலிமைகொடுக்கும் பதார்த்தங்கள் | 240 |
| தலைமூளையின் பலயீனத்தைக்கொடுக்கும்பதார்த்தங்கள் | 245 |
| **தா** | |
| தாமரைப்புஷ்பத்தின்பானம் | 94 |
| தாழம்பூவின்பானம் | 95 |
| தாம்பூலம் | 98 |
| தாமரைப்பூ | 156 |
| தாழம்பூ | 157 |
| தாளிசபத்திரி | ,, |
| தான்றிக்காய் | ,, |
| தாதுவிருத்திக்குரிய பதார்த்தங்கள் | 243 |
| தாதுநஷ்டம் | 244 |
| தாதுபுஷ்டிசூரணம் | 247 |
| தாவுல்பசல் | 251 |
| தாவுல்கஸக் | 259 |

| பெயர். | பக்கம். |
| --- | --- |
| தினையரிசி | 28 |
| திருபுத்இதுவேசிவதைவேர் | 158 |
| திருப்புலிமூலம் | ,, |
| திப்பிலி | 159 |
| திருநீற்றுப்பச்சை | ,, |
| திராக்ஷப்பழம் | 160 |
| தீ | |
| தீவுதிராட்சப்பழம் | 53 |
| தீனிப்பைக்கு வலிமைகொடுக்கும் பதார்த்தம் | 241 |
| தீனிப்பையின் சத்தியைக்குறைக்கும்பதார்த்தம் | 242 |
| து | |
| தும்பையாட்டினிறைச்சி | 33 |
| துவரை | 76 |
| துத்திவிரை | 82 |
| துத்திநாகம் | 160 |
| துத்தி | 161 |
| துருசு | 162 |
| துளசி | ,, |
| துரிஞ்சபீன் | 163 |
| தூ | |
| தூதுளங்காய் | 65 |
| தூதரிஸ்பேத்தூதரிசுருஃ | 163 |
| தெ | |
| தென்னங்கள் | 103 |
| தே | |
| தேங்காய் | 66 |
| தேயிலை | 74 |
| தேன் | 102 |
| தேன்கலந்துசெய்யுஞ்சாராய | 104 |
| தேள் | 214 |
| தேரை | 216 |
| தொ | |
| தொட்டாற்சுருங்கி | 211 |
| தொந்தபித்தத்தை நீக்கும் பேதி முறை | 229 |

| பெயர். | பக்கம். |
| --- | --- |
| தொந்தவிரச நீரைநீக்கும் பேதி முறை | 230 |
| ந | |
| நருவிலிப்பழம் | 62 |
| நண்டுக்கல் | 163 |
| நத்தை | 170 |
| நவச்சாரம் | 171 |
| நறுவிலிக்காய் | ,, |
| நன்னாரிவேர் | 172 |
| நரம்புகளின் பலவீனத்தைப்பற்றி யதாதுநஷ்டக்குறி | 246 |
| நா | |
| நாட்டுக்கோதுமைரொட்டி | 25 |
| நாட்டுக்கோதுமை | 27 |
| நாரைக்கறி | 39 |
| நாட்டுக்கோதுமையரிசிக்கஞ்சி | 42 |
| நாட்டுக்கோதுமை ஆல்பாக்குதிராட்சப்பழமிவைகள் சேர்த்துக்காச்சியகஞ்சி | 45 |
| நாரத்தம்பழத்தின்பானம் | 92 |
| நாட்டுச்சருக்கரை | 101 |
| நார்வஸ்திரம் | 105 |
| நாகேசர் | 172 |
| நாகப்பூச்சி இதுபூநாகம் | 178 |
| நாயுருவி | ,, |
| நி | |
| நிலைப்பனங்கிழங்கு | 85 |
| நிமிளை | 174 |
| நிலைப்பனங்கிழங்குமுறப்பா | 175 |
| நிஷாஷ்தா இதுமேவ கோதுமை சத்து | 174 |
| நீ | |
| நீர்க்காக்கைக்கறி | 40 |
| நீர்முள்ளிவிரை | 82 |
| நீரடிமுத்து | 175 |
| நீலம்இதுவேநீலமருந்து | ,, |
| நு | |
| நுரைப்பீரக்கங்காய் | 64 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| நெ | |
| நெல்லிக்காய் | 59 |
| நெருஞ்சில்விரை | 81 |
| நே | |
| நேர்வாளக்கொட்டை | 176 |
| நேரச்சில் | 208 |
| ப | |
| பசுவின்பாற்சாதம் | 23 |
| பசுவின்தயிர்ச்சாதம் | ,, |
| பழையரொட்டி | 24 |
| பள்ளையாட்டிறைச்சி | 33 |
| பசுமாட்டிறைச்சி | ,, |
| பசுவின்கன்றினிறைச்சி | ,, |
| பச்சைப்பயறு அல்லது உளுந்துப்பயறுக்கஞ்சு | 43 |
| பச்சையரிசிக்கஞ்சி | 45 |
| பாற்றைதீரின் முலைப்பாலின் குணம் | 47 |
| பசுவின்பாற்பொதுக்குணம் | ,, |
| பசுக்களின்பாற்குணம் | ,, |
| பசுப்பசுவின்பாற்குணம் | 48 |
| பன்னிஇதுவேபன்றி | 50 |
| பசுவின்நெய் | ,, |
| பசுவின்வெண்ணெய் | ,, |
| பசுவின்பாலேடு | 51 |
| பசுவின்சீப்பால் | ,, |
| பசுவின்தயிர் | ,, |
| பசுவின்புளித்தயிர் | ,, |
| பலாப்பழம் | 54 |
| பயற்றங்காய் | 65 |
| பச்சைமுளகாய் | 66 |
| பசுவின்மோர் | ,, |
| பலாக்கா | 67 |
| பலாப்பிஞ்சு | ,, |
| பச்சைப்பயறு | 76 |
| பட்டாணி | 77 |
| பனிக்கட்டிநீர் | 90 |
| பனங்கள் | 103 |

| பெயர். | பக்கம். |
|---|---|
| பற்பலதானியங்களால்செய்யும் சாராயம் | 104 |
| பற்பலகனிகளிலும்செய்யும் சாராயம் | 105 |
| பட்டுவஸ்திரம் | ,, |
| பருத்தி | 209 |
| பஸ்பாயஜ் | 177 |
| பவளம் | ,, |
| பஹமன்சுரும்ப அமனஸ்பே | 182 |
| பனப்ஷா | ,, |
| பறங்கிப்பட்டை | ,, |
| பனிநீர் | 183 |
| பச்சத்தவளை | 214 |
| பற்களுக்கு வலிமைகொடுக்கும் பதார்த்தங்கள் | 242 |
| பற்களுக்காகாதபதார்த்தங்கள் | ,, |
| பஞ்ஜாவ்ஷ் | 258 |
| பா | |
| பாற்கஞ்சி | 43 |
| பாலங்கூ | 83 |
| பாசியாவுஷான் | 121 |
| பாதரசம் | 184 |
| பாஷாணங்கள் | 185 |
| பாதுரஞ்சிபோயா | ,, |
| பாலங்கு | ,, |
| பாத்ஜஅர் | ,, |
| பாத்ஜஹரேமஹதனி இதுவேஜகர்மொகரூ | 186 |
| பாத்ஜஹரேகனபஸ் | 187 |
| பாம்பு | 213 |
| பி | |
| பிஸ்தாவென்னும்பருப்பு | 79 |
| பிந்துருப்பருப்பு | ,, |
| பிஹிஎன்னும்பழத்தின்பா | 93 |
| பிசின்களின்பொது | 188 |
| பித்தவிகற்பங்களைச் சாந்தப்படுத்தும் பதார்த்தங்கள் | 226 |

| பெயர் | பக்கம். |
|---|---|
| பித்தத்தைப்பக்குவப்படுத்தும் கஷாயம் | 226 |
| பித்தத்தைநீக்கும்பேதிபதார்த்தங்கள் | 225 |
| பித்தப்பெருக்காலுண்டான சூட்டின்குறி | 238 |
| பீ | |
| பீர்க்கங்காய் | 64 |
| பீர்க்கங்காயின்மேற்றோல் | ,, |
| பீதரோகணி | 188 |
| பு | |
| புழுங்கலரிசிச்சாதம் | 22 |
| புலாவுச்சாதம் | 23 |
| புறாக்கறி | 30 |
| புறாமுட்டை | 41 |
| புறாக்குஞ்சியினிரசத்தின்கஞ் | 14 |
| புலிப்பால் | 50 |
| புளிப்புகொடிமாதுளம்பழம் | 32 |
| புளிப்புஇலந்தைபழம் | 54 |
| புளிப்புப்பாம்பழம் | 55 |
| புளியம்பழம் | ,, |
| புளிப்புநாவற்பழம் | ,, |
| புளிப்புநாரத்தம்பழம் | 57 |
| புளிப்புச்சேப்புப்பழம் | ,, |
| புளிப்புக்கம்பிளிப்பூச்சிப்பழம் | 58 |
| புளிப்புமாதுளைப்பழம் | 59 |
| புளிப்புஅம்றாதுப்பழம் | ,, |
| புளிப்புபிஹியென்னும்பழம் | 60 |
| புளிப்புமாங்காய் | ,, |
| புடலங்காய் | 64 |
| புளியங்காய் | 68 |
| புளியாரைக்கீரை | 72 |
| புளிப்புமாதுளைப்பழத்தின்பா | 93 |
| புகையிலை | 100 |
| புரசங்கொட்டை | 189 |
| பூ | |
| பூநொய்க்கஞ்சி | 45 |
| பூசனிக்காய் | 62 |
| பூமிசருக்கரைகிழங்கு | 189 |

| பெயர் | பக்கம் |
|---|---|
| பூனைக்காலிவித்து | ,, |
| பெ | |
| பெட்டைக்கோழிஇறைச்சி | 36 |
| பெரும்பயறு | 77 |
| பெருஞ்சீரகம்இதுவேசோ | 156 |
| பெருங்காஞ்சொறி | 190 |
| பெருங்காயம் | ,, |
| பே | |
| பேரீச்சம்பழம் | 190 |
| பேரீச்சம்பழத்தி லிருக்குஞ் சாராயம் | 104 |
| பேதாறு | 191 |
| பேஃகேஜலாயா | ,, |
| பேத்மிஷக்கு | 192 |
| பேத்மிஷக்கு | 192 |
| பேதிக்குச்சாப்பிட்டுப் பேதியாகாமலிருப்பதற்குத்திரிபை | 234 |
| பை | |
| பைரோஜாஎன்னுமிரத்தினம் | 180 |
| பொ | |
| பொரிக்கஞ்சி | 45 |
| பொம்பிளிமாசிப்பழம் | 57 |
| பொதீனா | 74 |
| பொறித்தமீனிறைச்சி | 89 |
| பொரித்தகோழிஅல்லது சாவலிறைச்சி | ,, |
| பொதினாஇலையின்பானம் | 96 |
| பொன் | 191 |
| பொன்னாவாரை | 192 |
| பொதீனா | ,, |
| போ | |
| போஜிதான்மிஜரி | 84 |
| ம | |
| மயில்முட்டை | 41 |
| மகிழம்பூ | 50 |
| மணத்தக்காளி | 67 |
| மணத்தக்காளிக்கீரை | 74 |
| மசூரென்னும்பயறு | 77 |

| பெயர் | பக்கம். |
|---|---|
| மச்சங்கள் | 90 |
| மயிர்வஸ்திரம் | 105 |
| மஞ்சட்கடுக்காய் | 124 |
| மட்டிப்பால் | 138 |
| மரக்காளான் | 169 |
| மரகதம் | 180 |
| மணிப்புங்கு | 189 |
| மஞ்சட்கிழங்கு | 193 |
| மரமஞ்சள் | ,, |
| மருதோன்றி | 794 |
| மஹக் இதுவேஉரைகல் | 220 |
| மதுபுஷ்கேபனப்ஷா | 251 |
| மஹாருனேபலாஸபா | 255 |
| மஹாருனேபுசூரி | 256 |
| **மா** | |
| மானிறைச்சி | 34 |
| மாங்காய் | 69 |
| மாம்பிஞ்சு | ,, |
| மாசிப்பத்திரி | 193 |
| மாக்கங்கணிஇதுவேவாலுழுவையரிசி | 194 |
| மாசிக்காய் | 195 |
| மாவுல் அசல் | 250 |
| மாவுல் உசூல் | 151 |
| **மி** | |
| மிதிபாகற்காய் | 64 |
| மிளகாய் | 65 |
| மிருதாரசிங்கி | 194 |
| மிளகு | 196 |
| **மீ** | |
| மீன்முட்டை | 42 |
| **மு** | |
| முத்துச்சோளம் | 28 |
| முயலிறைச்சி | 35 |
| முலைப்பால் | 46 |
| முலைப்பால்பொதுக்குணம் | ,, |
| முலாம்பழம் | 61 |
| முள்ளிக்காய் | 66 |
| முருங்கைக்காய் | 63 |
| முருங்கைப்பிஞ்சு | ,, |
| முளைக்கீரை | 71 |
| முள்ளங்கிகீரை | 81 |
| முள்ளங்கிக்கிழங்கு | 86 |
| முத்து | 197 |
| முபர்ரேதில்கிஷா | 259 |
| முறப்பா | ,, |
| **மூ** | |
| மூங்கிலுப்பு | 197 |
| மூமியா | 194 |
| மூங்கில் | 217 |
| மூத்திரக்குழி | 239 |
| **மெ** | |
| மெழுகு | 198 |
| மேற்சொல்லிய சுபாவ சத்துக்களின்குறிகள் | 238 |
| மொச்சைக்கொட்டை | 76 |
| **மோ** | |
| மோர்சாதம் | 23 |
| மோர்கஞ்சி | 43 |
| **யா** | |
| யானைத்திப்பிலி | 158 |
| யானைத்தந்தம் | 198 |
| **யி** | |
| யிரவட்டம்புல் | 186 |
| **ரா** | |
| ராமசீத்தாப்பழம் | 61 |
| ராஜவர்த்திக்கல் | 200 |
| **ரே** | |
| ரேவல்சீனி | 199 |
| **ரோ** | |
| ரோகஸ்தர்களுக்குஷோர்பா | 88 |
| ரோஜாப்புஷ்பத்தின்பானம் | 95 |
| ரோஜாப்புஷ்பத்தின்தைலம் | 97 |
| ரோஜாப்பூ | 199 |

| பெயர் | பக்கம். |
|---|---|
| **ல** | |
| லவங்கப்பட்டை | 200 |
| லவங்கப்பத்திரி | ,, |
| லவங்கப்பூ | 201 |
| **வ** | |
| வாகசிசி | 27 |
| வண்டலைப்பக்குவப்படுத்தும் கஷாயம் | 227 |
| வள்ளிக்கிழங்கு | 85 |
| வஸ்திரம் | ,, |
| வயிரம் | 178 |
| வங்கச்சிந்தூரம் | 201 |
| வசம்பு | ,, |
| வண்டலின் கற்பங்களைச் சாந்தப்படுத்தும் பதார்த்தங்கள் | 225 |
| வண்டலை நீக்கும் பேதி பதார்த்தங்கள் | 231 |
| வண்டலை நீக்கும் பேதிமுறை | ,, |
| வண்டலின் பெருக்கினால் உண்டான குளிர்ச்சியின் குறி | 239 |
| வண்டலின் அல்லது பித்தத்தால் உண்டான வாட்சியின் குறி | ,, |
| **வா** | |
| வான்கோழிக்கறி | 36 |
| வாத்துக்கறி | 37 |
| வாணம்பாடிக்கறி | ,, |
| வாத்துமுட்டை | 41 |
| வாதுமைப்பருப்புச் சாரவிரை வெள்ளரிவிரை கசகசா இவைகளைக் கூட்டி காய்ச்சிய கஞ்சி | 46 |
| வாழைப்பழம் | 54 |
| வாளவரைக்காய் | 63 |
| வாழைக்காய் | 67 |
| வாழைப்பிஞ்சு | ,, |
| வாதுமைப்பருப்பு | 78 |
| வாதுமைப்பருப்பின் தைலம் | 97 |
| வாலேந்திரபோளம் | 202 |
| வால்மிளகு | ,, |
| வாய்விலங்கம் | 203 |
| வாந்திமுறை | 235 |
| **வி** | |
| விச்சலிக்கறி | 37 |
| விளாம்பழம் | 54 |
| வில்வப்பழம் | 202 |
| விலாங்குமீன் | 215 |
| **வெ** | |
| வெள்ளாட்டிறைச்சி | 32 |
| வெள்ளாட்டுப்பால் | 48 |
| வெள்ளரிக்காய் | 63 |
| வெண்டைக்காய் | 66 |
| வெந்தயக்கீரை | 73 |
| வெள்ளைக்கீரை | ,, |
| வெள்ளைக்கசகசாவிரை | 80 |
| வெள்ளரிவிரை | ,, |
| வெங்காயவிரை | 81 |
| வெந்தயவிரை | 83 |
| வெங்காயம் | 87 |
| வெள்ளுள்ளி | ,, |
| வெந்நீர் | 92 |
| வெள்ளைச்சாறுவேளை | 169 |
| வெங்காரம் | 203 |
| வெடியுப்பு | ,, |
| வெள்ளைதயம் | ,, |
| வெள்ளி | 204 |
| வெள்ளைக்குங்குலியம் | ,, |
| வெள்ளைப்பூண்டு | ,, |
| வெள்ளைச்செவ்வந்திப்பூ | 205 |
| **வே** | |
| வேளைக்கீரை | 73 |
| வேறுசூரணம் | 231 |
| வேறுசுத்தவண்டலுக்கு | ,, |

| பெயர் | பக்கம். |
|---|---|
| **ஸ** | |
| ஸலாஹா | 208 |
| ஸங்கேபிஸான் | 219 |
| ஸங்கேயெஷம் | 221 |
| **ஷ** | |
| ஷர்பத்தேஉன்னு | 249 |
| ஷர்பத்தேஅஞ்சீர் | ,, |
| ஷர்பத்தேகஜா | 250 |
| ஷர்பத்தேநீலூபர் | ,, |
| ஷர்பத்தேகுலேப்பஷா | ,, |
| ஷகாகுல்மிஜரி | 84 |
| **ஷா** | |
| ஷாத்துரா | 129 |
| ஷாஸபரம் | ,, |
| ஷாஜீரு | 208 |
| ஷாதனு | 220 |
| **ஜ** | |
| ஜயித்தூன்தைலம் | 97 |
| ஜபாஜதஎன்னுமிரத்தினம் | 181 |
| ஜவாரிஷேஜாலினூஸ் | 256 |
| ஜவாரிஷே உத்திரிஜ் | 257 |
| ஜஹூம்மேககஷ்கஷ் | ,, |
| ஜாஊனி | ,, |
| **ஜி** | |
| ஜின்னுகட்டி | 52 |
| **ஜூ** | |
| ஜூன் | 154 |

| பெயர் | பக்கம், |
|---|---|
| **ஜூ** | |
| ஜூஸ்மக்கி | 154 |
| **ஜெ** | |
| ஜெந்தியானு | 155 |
| **ஹ** | |
| ஹப்பேஜலம் | 110 |
| ஹப்பேசும்னு | ,, |
| ஹப்பேபல்ஸான் | ,, |
| ஹப்புல்பான் | 117 |
| ஹப்புல்கஜரு | ,, |
| ஹலீயூன் | ,, |
| ஹப்பேஅம்பர் | 258 |
| ஹப்பேகஜதுவார் | ,, |
| **ஹி** | |
| ஹிஜறுன்னபி | 218 |
| ஹிஜரேஅஸலி | ,, |
| ஹிஜரேமுஷ்பம் | ,, |
| ஹிஜருல்எகூத | ,, |
| ஹிஜருல்கமர்இதுவேசந்திர காந்தக்கல் | ,, |
| ஹிஜரேஸப்வான் | ,, |
| ஹிஜரேகல்ப் | 219 |
| ஹிஜரேயெயறுயி | ,, |
| ஹிஜருல்ஃய்யா இதுவேவிசுக்கல் | ,, |
| ஹிஜருல்தீக்இதுவேகோழிக் | 220 |
| ஹிஜருல்கலக் | |
| ஹிஜரேஅமாம்இதுவேபுறுக் | 221 |


பதார்த்தங்களின் வகுப்பு

அகராதி அட்டவணை,

முற்றிற்று.